வெளியீடு 10-9-1999

Issued 10-9-1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT


திங்கட்கிழமை, நவம்பர் 23, 1998 - தொகுதி 60 - எண் 1

Monday the 23rd November, 1998—Volume 60 - No. 1



V211,31'N98.
N98.60.1.
221798.



*... பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

...ssembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

393/2000

**23-11-1998**

## உள்ளடக்கம்

பக்கங்கள்


தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் — i-vii

Personnel of the Government of Tamil Nadu — ix-xiii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் — xv-xviii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) — xix-xxx

**1. இரங்கற் குறிப்புகள்—**

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு — 1 - 4

**2. வினாக்கள்-விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் — 4 - 52

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் — 53 - 465

(பட்டியல்கள் 1 முதல் 6 வரை)

**3. தகவல் கோரல்—**

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை — 465

(ஆ) காஞ்சிபுரம் இரயில்வே விழாவில் காஞ்சி சங்கராச்சாரியார்கள் முன்னிலை வகிப்பதாக அழைப்பிதழ் தந்துள்ளது — 466-473

**4. அறிவிப்புகள்—**

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் — 473

(ஆ) 1998-99ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல் — 486

(இ) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் — 487

| | பக்கங்கள் |
|---|---|
| 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— | |
| (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 473- 474 |
| (ஆ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 474 - 475 |
| (இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 475 - 476 |
| (ஈ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 476 |
| (உ) தமிழ்நாடு ஊராட்சிகள் ஐந்தாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 477 |
| (ஊ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 477 - 478 |
| 6. 1998-99 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை — அளித்தல் | 478 - 486 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 487 - 498 |


221798

V211,31 N98 N98.60.1



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் — நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | .. | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள். |
| 2. கல்வி அமைச்சர் | .. | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப் படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**
*வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.*

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
*பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.*

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
*போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
*நெடுஞ்சாலைகள் மற்றும் துறை முகங்கள்.*

10. தமிழ் ஆட்சிமொழி தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
*தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.*

11 .உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:**
*உணவு, விலைக்கட்டுப்பாடு மற்றும் குடிமைப்பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.*



12. பால்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
*பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.*

13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
*தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளை (வஃப்)*

14. சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
*சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.*

15. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்.என்.கே. பெரியசாமி:**
*கைத்தறி, துணித் தொழில்.*

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர். கே. பன்னீர்செல்வம்:**
*பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.*

| | | |
|---|---|---|
| 17. வனத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** *வனம், சின்கோனா மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.* |
| 18. வீட்டு வசதித் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** *வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.* |
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.* |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.* |
| 21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** *கால்நடைப் பராமரிப்பு.* |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** *மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.* |



| | | |
|---|---|---|
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** *ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.* |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்* |
| 25. கதர்த் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** *கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.* |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** *மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.* |

---

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR -- Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister | .. **The Hon. Kalaignar M.Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. Minister for Education | .. **The Hon. Prof. K. Anbhazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. Minister for Health and Electricity | .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. Minister for Revenue | .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. Minister for Rural Development and Local Administration | .. **The Hon. Thiru Ko. Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha Kiruttinan:** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms and Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

| | |
|---|---|
| **21. Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | ..**The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | ..**The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | ..**The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | ..**The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | ..**The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |

---



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

*மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்*

**பேரவைத் துணைத் தலைவர்**

*மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி*

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. ரா. சேதுநாதன்
2. திரு. கு. மனோகரன்
3. திரு. வ. வேலுசாமி
4. திரு. சி. ஞானசேகரன்
5. திரு. நா. பெரியசாமி
6. திரு. முகம்மது கோதர் மைதீன்

**செயலாளர்**

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி. பி.எல்., | .. கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ. பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி. பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ, | .. குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன் பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | . துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல்.. | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர். |

| | | |
|---|---|---|
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள் எம்.ஏ., பி.லிட். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர். |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர். |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ.ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 21. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ. பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| 24. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 26. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன் எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 29. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 31. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ. பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

36. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்

37. திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

38. திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. தலைமை நிருபர்

39. திரு. தி. உமாபதி, பி.ஏ. .. தலைமை நிருபர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன் திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என்.ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. பவானிசாகர்

18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்

19. ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். .. வில்லிவாக்கம்

20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு

22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு

24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

29. இராசன், திரு. வி.பி. .. ராஜபாளையம் (செ.வ.)

30. இராசேந்திரன் என்கிற தீரன் திரு. ஆ. .. ஆண்டிமடம்

31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி

32. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை

33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்

34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்

35. இராமச்சந்திரன், திரு. மா .. திருவோணம்

36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்



38. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு

39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்

40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி

41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்

42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி

43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

44. உதயசூரியன், திரு. தா .. சங்கராபுரம்

45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

46. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி

47. கணேசன், திரு. சே.சி. .. ஜெயங்கொண்டம்

48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

51. கருப்புசாமி, திரு. டி .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

56. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. .. நாங்குநேரி

57. கிருஷ்ணன், திரு. சீ.வெ. .. வேடசந்தூர்

58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

| | | |
|---|---|---|
| 59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. | குத்தாலம் |
| 60. குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 61. கும்மிடிப்பூண்டி வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 62. குழந்தை தமிழரசன், திரு. | .. | விருத்தாசலம் |
| 63. கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 64. கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |
| 65. கோபு, திரு. சி. | .. | அணைக்கட்டு |
| 66. கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 67. கோவிந்தன், திரு. ப. | .. | தாரமங்கலம் |
| 68. கோவிந்தன், திரு. வெ. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 69. சக்ரபாணி, திரு. ஆர். | .. | ஒட்டன்சத்திரம் |
| 70. சண்முகம், திரு. கோ. | .. | திருப்பத்தூர் |
| 71. சண்முகம், திரு. சி. | .. | ஆலந்தூர் |
| 72. சண்முகம், திரு. ம. | .. | கிணத்துக்கடவு |
| 73. சந்தானம், திரு. வா. | .. | சோழவந்தான் |
| 74. சந்திரசேகரன், திரு. சி. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 75. சந்திரசேகரன், திரு. துரை. | .. | திருவையாறு |
| 76. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 77. சம்பத், திரு. ஏ.ஜி. | .. | முகையூர் |
| 78. சரஸ்வதி, திருமதி ஆர். | .. | தாராபுரம் (செ.வ.) |
| 79. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |



| | | |
|---|---|---|
| 80. சாமிநாதன், திரு. மு.பெ. | .. | வெள்ளகோவில் |
| 81. சிங்காரவேலு, திரு. வி.பி. | .. | வால்பாறை (செ.வ.) |
| 82. சிவபுண்ணியம், திரு. வை. | .. | மன்னார்குடி |
| 83. சிவராமன், திரு. ஆர். | .. | திருப்பத்தூர் |
| 84. சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 85. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. | பனமரத்துப்பட்டி |
| 86. சிவானந்தம், திரு. ஆர். | .. | ஆரணி |
| 87. சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. | திருத்தணி |
| 88. சின்னய்யா, திரு. வெ. | .. | திருமயம் |
| 89. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. | விருதுநகர் |
| 90. சுகவனம், திரு. இ.ஜி. | .. | பர்கூர் |
| 91. சுடலைமுத்து, திரு. அ. | .. | போடிநாயக்கனூர் |
| 92. சுதர்சனம், திரு. டி. | .. | பூந்தமல்லி |
| 93. சுந்தரம், திரு. க. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 94. சுந்தரம், திரு. ந. | .. | காரைக்குடி |
| 95. சுந்தரம், திரு. பி.ஆர். | .. | ராசிபுரம் |
| 96. சுந்தர், திரு. கே. | .. | உத்திரமேரூர் |
| 97. சுப்பராயன், திரு. கே. | .. | திருப்பூர் |
| 98. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி | .. | திருவள்ளூர் |
| 99. சுப்பிரமணி, திரு. பி.என். | .. | ஆற்காடு |

100. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

101. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

102. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி

103. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

104. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

105. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

106. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

107. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

108. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை

109. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்

110. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

111. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி

113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)

114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்

115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்

116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்

117. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)

118. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை

119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி

120. தங்கவேல், திரு. அல .. சேலம்-2



121. தண்டபாணி, திரு. சி.டி. .. கோயம்புத்தூர் மேற்கு

122. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி

123. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)

124. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு

125. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி

126. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1

127. தனபால், திரு. வி.ஜி. .. குடியாத்தம்

128. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்

129. திரைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)

130. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி

131. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி

132. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்

133. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)

134. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்

135. துரைமுருகன், திரு. .. காட்பாடி

136. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி

137. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)

138. நடராசன், திரு. ஆ. .. பேரூர்

139. நடராஜன், திரு. த. .. செஞ்சி

140. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்

141. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)

142. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
143. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
144. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
145. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு... நெல்லிக்குப்பம்
146. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
147. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. ந. .. பேரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
161. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)



162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
163. பெரியசாமி, திரு. ஐ. .. ஆத்தூர்
164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
165. பெரியசாமி, திரு. என்.கே.கே... ஈரோடு
166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
171. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ்... நிலக்கோட்டை
173. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
174. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
175. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
180. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
181. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
182. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்

183. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
184. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
185. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
186. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
187. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
188. முகம்மது இஸ்மாயில் திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
189. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
190. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
191. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
192. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
193. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
194. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
195. மனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
196. மூக்கப்பன், திரு. இரா .. சின்னசேலம்
197. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
198. மோனகதாசன், திரு. கோ. .. பூம்புகார்
199. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
200. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
201. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
203. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி



204. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
205. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
206. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
207. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
208. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
209. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
210. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
212. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
213. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
214. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
215. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
216. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
217. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. வீரபாண்டி
218. வீரப்பன், திரு. கே.கே. .. கபிலர்மலை
219. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
220. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
221. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
222. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
223. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். .. காவேரிப்பட்டினம்
224. வெங்கிடு, திரு. ஜி.பி. .. கோபிச்செட்டிப்பாளையம்

225. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)

226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

227. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்

228. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு

229. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)

230. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி

231. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ்.. திருச்செந்தூர்

233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி

234. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

235. ஆன் டி மாண்டி, திருமதி .. நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**கார்த்திகை 8, வெகுதான்ய – திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 நவம்பர் 23, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:***

'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்

மடிதற்றுத் தான்முந் துறும்'.

தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்குத் தெய்வச் செயல் எனக் கூறப்படும் இயற்கையின் ஆற்றல்கூட வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணைபுரியும்.

## 1. இரங்கற் குறிப்புகள்

***முன்னாள் உறுப்பினர்கள் மறைவு***

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் இ.ஆர். கிருஷ்ணன் அவர்கள் 13-5-1997 அன்றும், மேடூரி நாகேஸ்வர ராவ் அவர்கள் 13-1-1998 அன்றும், எ. பட்டாபி நாயுடு அவர்கள் 28-4-1998 அன்றும், வி. கிருஷ்ணசாமி படையாச்சி அவர்கள் 31-5-1998 அன்றும், ஆச்சியூர் எம். மணி அவர்கள் 30-6-1998 அன்றும், வி.பி. சாரங்கபாணி அவர்கள் 23-7-1998 அன்றும், எம். செல்லமுத்து அவர்கள் 24-7-1998 அன்றும், திருமதி சு. குப்பம்மாள் அவர்கள் 31-8-1998 அன்றும், டி.சி. திம்மராய கவுண்டர் அவர்கள் 17-9-1998 அன்றும், கே.டி. ராஜு அவர்கள் 29-9-1998 அன்றும், கே. ராஜமாணிக்கம் அவர்கள் 19-10-1998 அன்றும், எல். ஆனந்தன் அவர்கள் 3-11-1998 அன்றும், வி.எம். தேவராஜ் அவர்கள் 11-11-1998 அன்றும், மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. இ.ஆர். கிருஷ்ணன் அவர்கள்

சேலம்-2 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. மேடூரி நாகேஸ்வர ராவ் அவர்கள் அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் குண்டூர், பொது ஊரகத் தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1946 ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டு வரை நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எ. பட்டாபி நாயுடு அவர்கள் காவேரிப்பட்டிணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை திறம்படப் பணியாற்றியுள்ளார்.

திரு. வி. கிருஷ்ணசாமி படையாச்சி அவர்கள் புவனகிரி தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை நன்கு பணியாற்றியுள்ளார்.

திரு. ஆச்சியூர் எம். மணி அவர்கள் நாங்குநேரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. வி.பி. சாரங்கபாணி அவர்கள் விழுப்புரம் தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். செல்லமுத்து அவர்கள் திருவாரூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தொடர்ந்து இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, முறையே 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திருமதி சு. குப்பம்மாள் அவர்கள் அன்றைய வட ஆற்காடு மாவட்டம் போளூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை நல்ல முறையிலே பணியாற்றியுள்ளார்.



திரு. டி. சி. திம்மராய கவுண்டர் அவர்கள் வேலூர் மாவட்டம் நாட்ராம்பள்ளி தொகுதியிலிருந்து இரண்டு முறை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1967 முதல் 1971 வரையும் மற்றும் 1971 முதல் 1976 வரையும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே.டி. ராஜு அவர்கள் ஈரோடு தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை செம்மையாகப் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. ராஜமாணிக்கம் அவர்கள் ஆடுதுறை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை சிறப்புறப் பணியாற்றியுள்ளார்.

திரு. எல். ஆனந்தன் அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை கள்ளக்குறிச்சி தனித் தொகுதியிலிருந்தும், 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை ரிஷிவந்தியம் தனித் தொகுதியிலிருந்தும் அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. வி.எம். தேவராஜ் அவர்கள் வேலூர் தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையும், 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையும் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும் 1972 ஆம் ஆண்டு முதல் 1978 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

முற்பகல் 9-35

சட்டமன்ற உறுப்பினராக இல்லாவிட்டாலும் நீண்ட பல ஆண்டுகளாக மேலவை உறுப்பினராக இருந்த, அகில இந்திய ஃபார்வர்ட் பிளாக் கட்சியின் அகில இந்தியத் தலைவர் திரு. அய்யணன் அம்பலம் அவர்கள் கடந்த 30-10-1998 அன்று ஒரு கோர விபத்தில்

அகால மரணம் அடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு, மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகளுக்கு அப்புறம்தான் ஒத்திவைப்புத் தீர்மானம். உட்காருங்கள். இதுகூடத் தெரியாமல் சட்டமன்றத்தில் இருக்கிறீர்களே!

வினா எண் 1, திரு. செங்கை சிவம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1—

**குளிர்சாதனப் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்**

***12973—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைக்கு அருகே அயல்நாட்டு நிறுவனத்தின் உதவியுடன் குளிர்சாதனப் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னைக்கு அருகே அயல்நாட்டு நிறுவனத்தின் உதவியோடு குளிர்சாதனப் பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மட்சுஷிட்டா கம்பெனியால் இருங்காட்டுக்கோட்டையிலே உள்ள சிப்காட் வளாகத்தில் நிறுவப்பட்டு வருகிறது. 12-9-1997 அன்று இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இத்திட்டம் இந்த ஆண்டு இறுதியில் உற்பத்தியைத் தொடங்கும்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் முதலீடு எவ்வளவு? 1996-ல் கழக அரசு அமைந்த பிறகு எந்தெந்தப் புதிய தொழிற்சாலைகளுக்குத் தொழில் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு உள்ளன? அவற்றில் எவையெவை உற்பத்தியைத் தொடங்கியுள்ளன என்பதைத் தங்கள் மூலமாக முதல்வரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்டுள்ள இந்த இருங்காட்டுக்கோட்டை சிப்காட் வளாகத்தில், இங்கே குறிப்பிடப்பட்ட இந்தத் தொழிலுக்கு ரூ.59.40 கோடி திட்டச் செலவு என்று கூறப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட மற்றொரு கேள்விக்கு இந்தத் தொழிற் பூங்காவில் இருங்காட்டுக்கோட்டையில் 1829 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இதிலே 16 நிறுவனங்களுக்கு 726.68 ஏக்கர் நிலம் மேம்படுத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

1. ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட்
2. மட்சுஷிட்டா எலெக்ட்ரிக் இண்டஸ்டிரியல் கம்பெனி லிமிடெட்
3. லுமாக்ஸ் சாம்லிப் இண்டஸ்டிரீஸ் லிமிடெட்
4. மார்க்கியூப் இந்தியா பிரைவேட் லிமிடெட்
5. ஜெ.பி.எம். சங்கு பிரைவேட் லிமிடெட்
6. இல்ஜின் ஆட்டோமேட்டிக் பிரைவேட் லிமிடெட்
7. ஜே.கே.எம். டேரிம் ஆட்டோமேட்டிக் லிமிடெட்
8. டைனமேடிக் டெக்னாலஜீஸ் லிமிடெட்
9. சாரதா மோட்டார் இண்டஸ்டிரீஸ் லிமிடெட்

10. மான்டோ பிரேக் சிஸ்டம்ஸ் இந்தியா லிமிடெட்

11. போஸ் ஹுண்டாய் ஸ்மல் மேனுபேக்சரிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட்

12. பி.எச். சி. மேனுபேக்சரிங் லிமிடெட்

13. டாங்கிவிஷன் இண்டஸ்டிரியல் கம்பெனி லிமிடெட்

14. கோவிமா வுட் பிளாண்ட் லிமிடெட்

15. ஆர்சிஸ் இன்ஜினிரிங் பிரைவேட் லிமிடெட்

16. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்

ஆகிய இந்த 16 நிறுவனங்களில் இப்போது 11 நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகே அயல்நாட்டு நிறுவனத்தின் உதவியுடன் தயாரிக்கும் குளிர்சாதனப் பெட்டியை, பணக்கார மக்கள் பயன்படுத்தவதோடு மட்டுமல்லாது ஏழையெளிய, நடுத்தர மக்களும் பயன்படுத்திடும் அளவில், குறைந்த விலையில் தயாரித்து மக்களுக்கு விநியோகிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதனப் பெட்டியைப் பெரும்பாலும் பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் பயன்படுத்துகிறார்கள். என்றாலும்கூட, ஏழைகளும் குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்ட ஐஸ்கிரீம், ஐஸ் புரூட் போன்ற அந்தப் பதார்த்தங்களை இன்றைக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழில் தொடங்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு வெளிநாட்டிலிருந்து பல தொழில் அதிபர்களை அழைத்து இங்கே நாம் தொழில் தொடங்கிக் கொண்டிருக்கிறோம். அந்தத் தொழிற்சாலைகளின் முன்னாலே, இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அல்படுத்தாவிட்டால் போராட்டம் நடத்துவோம் என்று சில பேர் அறிவித்து இருக்கிறார்கள். அதன்மூலமாக வெளிநாட்டு முதலாளிகளுக்கு, நம்முடைய தமிழகத்திலே தொழில் தொடங்குவதற்கு தயக்கம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறதே; அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.



***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** தலைவர் அவர்களே, வெளிநாட்டிலிருந்து இங்கே வருகின்ற தொழிலதிபர்களை இவ்வாறெல்லாம் நாம் மிரட்டினால் அவர்கள் இட ஒதுக்கீட்டிற்கு வேறு இடம் பார்த்துக் கொள்வார்கள், வேறு மாநிலத்தில்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதனப் பெட்டியிலிருந்து வெளிவரும் Chloroflouro Carbon என்கின்ற வேதியியல் வாயு Ozone மண்டலத்தை ஓட்டை செய்து பாதிக்கும் என்று சொல்கிறார்கள். அதைத் தடுக்கின்ற முறையில், மாற்றியமைக்கின்ற முறையில் வேறு வேதியியல் முறை கண்டறியப்பட்டிருப்பதாகவும் தொழில் வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி வேறு வகையான, Ozone மண்டலத்தைப் பாதிக்காத வேறு வகையான வேதியியல் முறையைப் பயன்படுத்தி இந்தக் குளிர்சாதனப் பெட்டிகள் தயாரிப்பதை அரசு உறுதி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** தலைவர் அவர்களே, இதைப் பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை. இந்தக் கேள்வியை மையமாகக் கொண்டு அதுபற்றி அரசு விவரங்களை அறியும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. பி. வெங்கடசாமி.

***Thiru B. Venkatasamy:*** Hon. Speaker Sir, Hon. Chief Minister has read out the list of industries started in Irungattukottai. May I know from the Hon. Chief Minister the investment made in the Irungattukottai Industrial Complex?

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** தலைவர் அவர்களே, இந்த இருங்காட்டுக்கோட்டைப் பூங்காவில் பல தொழிற்சாலைகள் அமைகின்றன. ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ஒரு இன்வெஸ்ட்மெண்ட் என்கின்ற முறையிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. இங்கே

குறிப்பிடப்பட்ட இந்தத் தொழிலுக்கு 59.40 கோடி ரூபாய். எல்லாவற்றையும் சேர்த்து, எல்லாத் தொழில்களும் அமைந்த பிறகுதான் அதைப் பற்றிக் கூற முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருங்காட்டுக்கோட்டையில் அமைய இருக்கக்கூடிய இந்தத் தொழிற்சாலையிலே, முதலாவதாகப் பல்வேறு தொழிற்சாலைகளிலே நடுத்தர, ஏழை, எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய வகையிலே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையிலே இட ஒதுக்கீட்டு முறையை அமலாக்கம் செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள் இங்கே எழுப்பினார்கள். இட ஒதுக்கீடு என்கின்ற அளவுக்கு நிபந்தனை போட்டு ஒதுக்கப்படாவிட்டாலும்கூட, இந்தப் பகுதியிலே எல்லாம் ஏறத்தாழ இட ஒதுக்கீட்டு முறை அமலாக்கப்பட்டு இருக்கிறது என்று எண்ணத்தக்க வகையிலே, அந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் அதிலே இன்றைக்கு வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ். எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நாட்டிலே மிகப் பிரச்சினையாக இருப்பது - 4 மாநிலத் தேர்தல் நடைபெறுகின்ற இந்த நேரத்திலே மிகப் பிரச்சினையாக இருப்பது - விலைவாசி உயர்வு. காய்கறிகளுடைய விலைவாசி உயர்வு மிகக் குறிப்பாகச் சொல்லப்படுகின்றது. குறிப்பாக, வெங்காயத்தை எடுத்துக் கொண்டால் அது ஒரு பெருங் காயத்தை, ஆளுகின்ற மத்திய அரசுக்குத் தந்திருக்கிறது. எனவே, காய்கறிகள் அழுகாவண்ணம் விளைபொருள் விளைகின்ற இடத்திலோ அல்லது சேமிக்கின்ற இடத்திலோ குளிர்பதனக் கிடங்குகள் (Cold Storage) அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 மாநிலத் தேர்தல்களுக்கும் வெங்காயத்திற்கும் முடிச்சுப் போட்டு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். பொதுவாக, அழுகும் பொருள்கள் கெடாமல் - மேலும் கெடாமல் - இருப்பதற்கு இந்தக் குளிர்சாதனப் பெட்டிகளைப் பயன்படுத்துகின்றார்கள் என்ற அந்த உண்மையை மாத்திரம்தான் நான் இப்போது விளக்க முடியும். 4 மாநிலத் தேர்தலுக்கும், வெங்காயத்திற்கும் சம்பந்தம் உண்டா என்பது 25 ஆம் தேதிக்குப் பிறகுதான் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லிய பதிலிலிருந்து இந்த ஹுண்டாய் தொழிற்சாலையில் நிறைய கார்கள் உற்பத்தி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. ஒரு நாளைக்கு எவ்வளவு கார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன? அந்த காரினுடைய விலை என்ன? இந்தக் கார்கள் இப்போது வெளிநாட்டிற்குக் அனுப்பப்படவிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. அது உண்மையா?

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வாங்கப் போகிறீர்களா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கேள்வி குளிர்சாதனப் பெட்டியைத் தயாரிக்கும் அந்தத் தொழிற்சாலையைப் பற்றியது. அக்காள் அவர்களுக்கு காரிலே அக்கறை இருக்குமேயானால், தனிக் கேள்வி போட்டால் அது பற்றிப் பதில் சொல்ல எனக்கும் வசதியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1998 நவம்பர் 23

2—

## காக்கிச் சீருடை பயன்படுத்துதல்

***19604—திரு. ப. கோவிந்தன்:***

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறைக்கு காக்கிச் சீருடை நிர்ணயிக்கப்பட்டு உள்ளதால், மற்ற துறையினர் காக்கிச் சீருடையைப் பயன்படுத்தாமல் தடுக்க அரசு தடை விதிக்குமா?

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவல் மற்றும் பாதுகாப்புத் துறையினரின் சீருடைகளை மற்ற அமைப்புகள் பயன்படுத்துவதைத் தடை செய்து, இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் (இ.பி.கோ.) 140 மற்றும் 171-ல் ஏற்கெனவே விதிகள் உள்ளன. அவைகளின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

***திரு. ப. கோவிந்தன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காக்கிச் சட்டை காவல் துறைக்கு என்பதை உறுதிப்படுத்தும் வகையிலே மற்ற துறையினர்கள் அந்தக் காக்கிச் சட்டையை அணிவதைத் தடுக்கச் சட்டம் உள்ளது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். நடைமுறையில், காக்கிச் சட்டை காவல் துறைக்குத்தான் என்பதை அமல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** தலைவர் அவர்களே, என்னுடைய பதிலில் ஏற்கெனவே அதற்கான விதிமுறை, சட்டம் இருக்கிறது, விதிகளும் உள்ளன என்பதைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால், சிலபேர் இந்த உடைகளை அணிகிற நேரத்தில் ஒன்றிரண்டு சிறு மாற்றங்களைச் செய்து தப்பித்துக்கொள்ள முனைகின்றார்கள். அதுவும் இந்த விதிகளின்படி முறையாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. வை. சிவபுண்ணியம்.

***திரு. வை. சிவபுண்ணியம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசுத் துறையைச் சேர்ந்த பல நிறுவனங்களிலே



1998 நவம்பர் 23]

பணிபுரிகிறவர்களும் இந்தக் காக்கிச் சட்டையைப் பயன்படுத்துகிறார்கள். அதேபோல, போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த ஊழியர்களும் பயன்படுத்துகிறார்களே, அவைகளும் தடை செய்யப்படுமா? அதேபோல, இந்தக் காவல் துறைப் பணியாளர்கள் தேர்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு கடந்த வாரம் அறிவிக்கப்பட்டதே, அது முடிவு பெற்றுவிட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** தலைவர் அவர்களே, இந்தச் சட்டையைப் பொறுத்தவரையில் நிறமல்ல முக்கியம். அவர்கள் எப்படி இந்தச் சட்டையைத் தைத்து, எப்படி அணிகிறார்கள் என்பதுதான் முக்கியம். பொதுவாக, காவலர்களைப் பொறுத்தவரையில், அரைக்கைச் சட்டை, முழுக்கால் சட்டை, கருநீல சர்ஜ் தொப்பி, பழுப்பு நிறத் தோல் இடைக்கச்சை, கருநிறத் தோல் ஷூக்கள் என்று காவலர்களைப் பொறுத்தவரையில் இருக்கிறது. ஆய்வாளர்கள்/ உதவி ஆய்வாளர்களைப் பொறுத்து, முழுக்கைச் சட்டை, முழுக்கால் சட்டை, காக்கி கேபர்டின் பீக் தொப்பி, பழுப்புநிறத் தோல் இடைக்கச்சை, பழுப்புநிறத் தோல் ஷூக்கள். இந்தியக் காவல் பணி அலுவலர்களைப் பொறுத்தவரையில், இந்தியக் காவல் பணி (சீருடை) விதிகளின்படி சீருடை அணிய வேண்டும் என்று இருக்கிறது. அதைப்போலவே, பெண் காவலர்களுக்கும் காக்கி நிற முழுக் கை புஷ்கோட்டும், முழுக்கால் சட்டையும், கருநிறத் தோல் ஷூக்களும், காக்கி பெரெட் தொப்பியும் வழங்கப்படுகின்றன. மகப்பேறு காலங்களில் பெண் காவலர்கள், காக்கி டெரிக்காட்டன் புடவையும், காக்கி டெரிக்காட்டன் ரவிக்கையும் அணிய அனுமதிக்கப்பட்டு அரசு செலவில் அவை வழங்கப்படுகின்றன. சிறப்புக் காவல் படையில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கு ஆண்களைப் போன்றே சீருடைகள் வழங்கப்படுகின்றன. இதைத் தொடர்ந்து கேட்ட அடுத்த கேள்வி, காவலர்கள் தேர்வு, சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்வு குறித்த கேள்வியாகும். அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. சி. ஞானசேகரன்.

***திரு. சி. ஞானசேகரன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 140 மற்றும் 171 இன்படி மற்ற துறையைச் சேர்ந்தவர்கள் யாரும் காவல் துறையைப் போன்ற உடையைப் பயன்படுத்தக் கூடாது

என்று சட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், சட்டம் ஏட்டளவில்தான் இருந்து கொண்டிருக்கிறது. காவல் துறையினரைப் போன்றே இப்போது சமூகத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாகச் சிலபேர் காவல் துறையினருக்கு உறுதுணையாக Traffic regulation-க்கு வருகிறார்கள். அவர்களும் சப்-இன்ஸ்பெக்டரைப் போலவே உடை அணிகிறார்கள். அதேபோல, இப்போது Security Bureau என்று நிறைய வந்துவிட்டிருக்கின்றன. பல தொழிற்சாலைகளில், அவர்களையெல்லாம் பார்த்தால், ஒரு சாதாரண கான்ஸ்டபிள், ஹெட்-கான்ஸ்டபிளைவிட மேலாக ஒரு சப்-இன்ஸ்பெக்டரைப் போலவே எல்லா செக்யூரிட்டி ஆட்களும் தெரிகிறார்கள். ஆகவே, அதற்கு வித்தியாசம் தெரியாமல் சில நேரங்களிலே impersonation செய்து அவர்களும் இன்ஸ்பெக்டரைப் போல, சப்-இன்ஸ்பெக்டரைப் போல நடித்து, பல குற்றங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே சட்டம் இருந்தும்கூட, 140 அல்லது 171 பிரிவுகளின்படி நம்முடைய காவல் துறை எவர் மீதாவது வழக்குத் தொடுத்திருக்கிறதா? இதுவரை ஏதாவது வழக்கு நடந்து, யாராவது தண்டனை பெற்றிருக்கிறார்களா? சட்டப்படி ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பெண் காவலர்களுக்கு, ஏற்கெனவே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர், பேன்ட், ஷர்ட் எல்லாம் போடுவதற்குப் பதிலாக அவர்களுக்கு அழகான தோற்றம் உடைய புடவைகளையே கொடுத்துவிடலாம் என்று சொன்னார்கள். முதல்வர் அவர்களும் பரிசீலிக்கலாம் என்று சொன்னார்கள். அது மேற்கொள்ளப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள் காவல் துறையிலே உள்ளவர்களைப் போலவே சீருடைகளைப் பயன்படுத்துவதாக, உறுப்பினர் சொல்லுவது மாத்திரமல்ல, பல புகார்களும் அரசுக்கு வந்துள்ளன. அந்த அடிப்படையில் இந்தியத் தண்டனைச் சட்டம் 171(அ)-விற்குத் திருத்தம் செய்வது பற்றி அரசு பரிசீலித்தது. ஆனால், இறுதியாக இந்த நிகழ்வுகளில் நடவடிக்கை எடுக்க ஏற்கெனவே இந்தியத் தண்டனைச் சட்டம் (இ.பி.கோ.), Indian Official Secrets Act ஆகியவற்றில் போதுமான வழிமுறைகள் உள்ளதால் அதன்படி நடவடிக்கை எடுத்தால்



போதுமானது என்று தீர்மானிக்கப்பட்டது. அனைத்துக் காவல் துறை சார்நிலை அலுவலர்களுக்கும் இதுகுறித்து தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு, எச்சரிக்குமாறு கூறப்பட்டிருக்கின்றது.

பெண்களுக்கு, பெண் காவலர்களுடைய உடை பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூறிய யோசனை பற்றி என்ன முடிவு எடுத்தீர்கள் என்று அவர்கள் கேட்டார்கள். அதிலே அவர் காட்டியிருக்கின்ற அக்கறைக்காக நான் நன்றி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நானும் - முதலமைச்சரும் - எதிர்க்கட்சித் தலைவரும், திருமதி பொன்னம்மாள் அவர்களும் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் குழு, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஒரு நாள், அந்த இருவருக்கும் வசதிப்படுகின்ற நேரத்திலே, அவர்களைக் கேட்டறிந்து, கூடி முடிவை விரைவிலே அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய காக்கிச் சட்டை, காவல் துறை உருவாக்கப்பட்ட காலத்திலேயிருந்து நீடித்துக் கொண்டிருக்கின்றது. காக்கிச் சட்டை என்றாலே பொது மக்களுக்கு ஒரு அலர்ஜியாகத் தற்போது தென்படுகிறது. அந்தக் காக்கிச் சட்டையை மாற்றி, மக்கள் காவல் துறையைப் பார்க்கின்றபோதே ஒரு நல்ல நோக்கத்தோடு பார்ப்பதற்கும் வழி வகுக்கக்கூடிய வகையிலே இருக்க வேண்டும். மேலும் உண்ணக்கூடிய உணவும், உடுக்கக்கூடிய உடையும்கூட மனிதர்களுடைய மனநிலையை மாற்றுவதற்கான சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. எனவே, appealing-ஆக, கவர்ச்சியாக என்று இருப்பதைவிட்டு, எளிமையாக இருக்கக்கூடிய வகையிலே அந்த உடை மாற்றியமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1969 ஆம் ஆண்டு வரையிலே தமிழ்நாட்டுக் காவலர்களுக்கு ஒருவிதமான உடை இருந்தது. 1969இல் கோபால்சாமி, ஐ.சி.எஸ்., அவர்களுடைய தலைமையிலே தமிழ்நாடு அரசு அன்றைக்குக் காவல் துறைக்கு ஒரு குழு அமைத்து, அதனுடைய பரிந்துரையின்படி காவல் துறையினுடைய சீருடையிலே பல மாற்றங்கள் செய்யப்பட்டன. காவலர்கள் அணிந்திருந்த சிவப்புத் தலைப்பாகைக்குப் பதிலாக சர்ஜ்

தொப்பிகள் அணியும் மாற்றம் அப்போது கொண்டுவரப்பட்டது. 1974 ஆம் ஆண்டில் காவலர்கள் அரைக் கால் சட்டையிலிருந்து முழுக்கால் சட்டை அணியும் மாற்றமும் அப்போது இந்த அரசால் கொண்டுவரப்பட்டது. அவர்களுக்குப் பருத்தி காக்கி ஆடைகளுக்குப் பதிலாக டெரிகாட்டன் சீருடை வழங்க 1984 ஆம் ஆண்டு ஒரு மாற்றம் கொண்டுவரப்பட்டது. இப்போது நிறத்தையே மாற்றலாமா என்ற ஒரு யோசனையை மாண்புமிகு உறுப்பினர் இங்கே வெளியிட்டார்கள். அவ்வளவு விரைவிலே நிறம் மாற வேண்டாம் என்று நான் இந்த நேரத்திலே கூறி அமைகின்றேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. சி. வேலாயுதன்.

***திரு. சி. வேலாயுதன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தனியார் ஸ்தாபனங்களினுடைய காவலர்கள் மட்டுமல்ல, சில வாத்தியக் குழுவினர்கூட காவல் துறையைப் போல காக்கி உடை அணிகிறார்கள். அதுமட்டுமல்ல, ஸ்டார் என்று சொல்வார்களே, அதனைக்கூட ஒன்று, இரண்டு என்று அணிந்திருக்கின்றார்கள். எனவே, குறைந்தபட்சம் அந்த ஸ்டாரையாவது மாற்றி, எந்த நிறுவனமும் ஸ்டார் அணியக் கூடாது என்ற ஒரு நிலையை ஏற்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

இன்னொன்று, காவலர்களுக்கு ஒரு வருடத்திற்கு எவ்வளவு சீருடைகளுக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்கின்றது? கொடுக்கக்கூடிய அந்தப் பணம்கூட அவர்களுக்குப் போதுமானதாக இல்லை, சற்று அதிகரிக்க வேண்டும் என்று சொல்கின்றார்களே, அதைப் பரிசீலித்து, அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** தலைவர் அவர்களே, சீருடைக்குப் பண வசதி போதுமானதல்ல என்றால் அதைப் பற்றி ஆய்ந்து முடிவு எடுக்கப்படும். நிறுவனங்களுக்கு ஸ்டார்களிலே வித்தியாசம் வைக்கமுடியுமா என்று கேட்டார்கள். ஸ்டார்களிலே வித்தியாசங்கள், நிறுவனங்களிலே அமைக்க இயலாது. ஆனால், காவல் துறையிலே ஒரு குறிப்பிட்ட பணியாற்றுகின்றவர்களுக்கு இத்தனை ஸ்டார்கள் என்ற வகையிலே அணிந்துகொள்வதற்கான உரிமை அளிக்கப்படுகின்றது. அதிலே எந்த மாற்றமும் இப்போது செய்வதற்கு இல்லை.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. கே. சுப்பராயன்.



*முற்பகல் 9-55*

***திரு. கே. சுப்பராயன்:*** பேரவைத் தலைவர் அவர்களே, உடலில் அணிய வேண்டிய அடையாளக் குறியீடுகளைப் பற்றி மட்டுமே நாம் அதிகம் பேசிக் கொண்டிருக்கிறோம். காவல் துறை உண்மையில் உள்ளத்தில் அணிய வேண்டிய சமயச் சார்பின்மை, சமூக நீதி, சமத்துவம் என்ற உள்ளத்திற்கான ஆபரணங்களை அணிவிப்பதற்கு உரிய ஆக்கபூர்வான நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து எனக்கு முழுக்க உடன்பாடான கருத்துத்தான். ஆனால், இப்பொழுது நாம் பேசிக் கொண்டிருப்பது உடையைப் பற்றி மாத்திரம்தான்: உள்ளத்தைப் பற்றி வேறொரு நேரத்திலே பேசலாம்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 3, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*3—*

**ராஜன் தோட்டம் விளையாட்டுத் திடலுக்கு கூடுதல் வசதி**

****7053–திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:***

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, ராஜன் தோட்டம் விளையாட்டுத் திடலின் நான்கு புறமும் பார்வையாளர்கள் மாடம் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அவ்வாறான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மயிலாடுதுறையிலே இருக்கிற ராஜன் தோட்டம் ஒரு பெரிய மைதானம். மாவட்ட, மாநில அளவில் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப் போதுமான இட வசதி உள்ள ஒரு இடம். அந்த இடத்தில் வினாவிலே குறிப்பிடப்பட்டிருக்கிற சுற்றுச் சுவர் ஒரு தொண்டு நிறுவனம் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் நிறைவேற்ற முன் வந்திருக்கிறது. எனவே, அரசின் சார்பில் பார்வையாளர்கள் மாடம், உடற்பயிற்சி நிலையம் இவற்றை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சரவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொண்டு நிறுவனம் சுற்றுச் சுவர் அமைத்துத் தர முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கிற செய்தி எனக்குப் புதிதாகக் கிடைக்கிற தகவல் ஆகும். மற்றொன்று, எந்த ஒரு உடற்பயிற்சிக்கான விளையாட்டுத் திடல், ஒரு ஸ்டேடியத்திற்கான கட்டடம் அமைக்கப்பட வேண்டுமானாலும் அதனுடைய மொத்தச் செலவில் 50 விழுக்காடு செலவை மத்திய அரசு விளையாட்டுத் துறைக்காக ஒதுக்கவேண்டும். அப்படி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிற மாவட்டத் தலைநகரங்களிலே அமைக்க வேண்டிய விளையாட்டு ஸ்டேடியங்களுக்கான தொகைக்கேகூட கேட்டிருக்கிற அனைத்துக்கும் இன்னும் அவர்களுடைய அனுமதி கிடைக்கவில்லை. எனவே, மாவட்டத் தலைநகரமாக இல்லாத மயிலாடுதுறையில் இதற்காக நிதி ஒதுக்குவதற்கு இயல்பான வாய்ப்பு ஏதும் இல்லை.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது புறநகர்ப் பகுதியில் மட்டும் அமலாக்கப்பட்டு வரும் நமக்கு நாமே திட்டத்தை மாநகராட்சி எல்லைக்குள்ளும் அமலாக்க அரசு முன் வருமா என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சர் தெரிவிக்க வேண்டுமாறு தங்கள் மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 4, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.



4–

**நமக்கு நாமே திட்டத்தின்கீழ் மகளிர் கலைக் கல்லூரி**

****15304—திரு. பி. இராசமாணிக்கம் :***

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

நமக்கு நாமே திட்டத்தின்கீழ் மகளிர் கலைக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவ்வாறான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

***திரு. பி. இராசமாணிக்கம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரம் திட்டம் போன்ற சிறப்பான திட்டங்களெல்லாம் இந்தியாவிலே தமிழகத்தில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட திட்டங்களிலே ஒன்றுதான் நமக்கு நாமே திட்டம். நமக்கு நாமே திட்டத்திலே குளங்கள் வெட்டலாம்; பள்ளிக்கூடங்கள் கட்டலாம்; தார்ச் சாலை போடலாம். அந்த அடிப்படையிலே ஒரு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா? அப்படி முன்வந்தால் ஒரத்தநாடு தொகுதியின் சார்பில் அரசினுடைய பங்குத் தொகையைப் பொதுமக்கள் சார்பாக கட்ட நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, அரசு இதைப் பரிசீலிக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்கு நாமே திட்டம் என்பது 4-லே ஒரு பங்குச் செலவை மக்கள் ஏற்றுக் கொண்டு, 4-லே 3 பங்குச் செலவை அரசு அனுமதித்து ஒரு காலச் செலவாக ஏற்று—one time expenditure--அந்த முறையில் நிறைவேற்றப்படுவதாகும். கல்லூரி நடத்துவது என்பது தொடர் செலவு மட்டுமல்ல; ஆண்டுக்கு ஆண்டு வளரும் செலவினமாக அமைவது. எனவே, நமக்கு நாமே திட்டம் என்ற அடிப்படையில் கல்லூரியோ, பள்ளியோ ஏற்படுத்துவது என்பது இயலாத காரியம்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. குழந்தை தமிழரசன்.

*முற்பகல் 10-00*

***திரு. குழந்தை தமிழரசன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை அளவில் கலைக் கல்லூரிகள் தொடங்குவதை நாம் நிறுத்தி வைத்திருந்தாலும்கூட, இப்போது பெண்களிடையே படிக்கின்ற ஆர்வம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. பெண்களுடைய கல்வியை முன்னேற்றுவதற்காக நம்முடைய தமிழக அரசு மிகுந்த முயற்சி எடுத்து வருகின்ற இந்தக் காலகட்டத்தில், பெண்கள் கலைக் கல்லூரி மட்டுமாவது அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்துள்ளபடி விருத்தாசலம் நகரத்தில், விதிவிலக்கு அளித்து பெண்கள் கலைக் கல்லூரி அரசால் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி முதலீட்டிற்கும், நிதிச் செலவிற்கும் விதிவிலக்கே கிடையாது. எனவே, விலக்களித்தாலும்கூட, அந்தச் செலவை ஏற்றுக்கொண்டால்தான் நடத்த முடியும். மற்றும் ஒன்று, ஆண்களுக்கான கல்லூரிகள் அனைத்திலும், மகளிருக்கு தகுந்த அளவு இட ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. எல்லா ஆண்கள் கல்லூரிகளிலும் மகளிருக்கு இடம் அளிப்பதன் மூலமாக மகளிர் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 5, திரு. லா. சந்தானம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

*5—*

### பொது மருத்துவமனையில் பணியாளர்கள் நியமனம்

****7845 — திரு. லா. சந்தானம்:***

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-*

*வாடிப்பட்டி அரசு பொது மருத்துவமனையில் போதிய பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?*

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





வாடிப்பட்டியில் செயல்பட்டு வந்த ஆரம்பச் சுகாதார நிலையம் தற்போது அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு, தேவையான பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

***திரு. லா. சந்தானம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடிப்பட்டியில் இருப்பது ஒரு தாலுகா மருத்துவமனை. தாலுகா மருத்துவமனைக்குரிய மருத்துவர்களும், செவிலியர்களும் மற்றும் சுகாதார உதவியாளர்களும் இல்லை என்பதை நான் மருத்துவமனைக்குச் செல்கின்ற நேரத்திலே கூறினார்கள். இது சென்ற ஆண்டு விடுக்கப்பட்ட கேள்வி. அதற்குப் பின்னர் இந்தப் பதவிகளெல்லாம் நிரப்பப்பட்டு இருக்கின்றனவா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அந்தப் பதவிகளெல்லாம் நிரப்பப்பட்டு, அந்த மருத்துவமனையில் 26 படுக்கைகள் கொண்ட வார்டும் கட்டி முடிக்கப்பட்டு, பரிசோதனைக்கூடம், நுண்கதிர் படப்பிடிப்புக்கூடம் ஆகியவையும் முடிக்கப்பட்டுள்ளன. பணியாளர்கள் வரிசையிலே ஆய்வுக்கூடம்-நுட்புணர்வுத் தரம்-3 மற்றும் நுண்கதிர் படப்பிடிப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்த, பகுதி-2 திட்டத்தின்கீழ் ஆவன செய்து வரப்படுகிறது.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 6, திரு. ச. அழகிரி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

*6—*

### வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்

****13819—திரு. ச. அழகிரி:***

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மேட்டூர் மின் பகிர்மானத்தில் 12,000 வீடுகளுக்கும், தர்மபுரி மின் பகிர்மானத்தில் 9,000 வீடுகளுக்கும் மின் இணைப்பு இதுவரை வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?*

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1998—99 ஆம் ஆண்டில் மின் இணைப்பு வழங்கப்படும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 7, திரு. மீ. அ. வைதியலிங்கம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

*7-*

**வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்**

****17551—திரு. மீ.அ. வைதியலிங்கம்:***

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ரூபாய் 87.72 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீட்டில் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகம் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் நிதியாண்டிற்கு ரூ.35.08 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

***திரு. மீ.அ. வைதியலிங்கம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அலுவலகம் எந்த இடத்தில், எவ்வளவு பரப்பளவில் அமைக்கப்பட இருக்கிறது? இதோடு அரசுக் கருவூலமும் சேர்த்து அமைக்கப்பட இருக்கின்றதா என்பன போன்றவற்றைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகம் ரூ.87.72 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக, 1998-99 ஆம் நிதியாண்டில் ரூ.35.08 இலட்சத்திற்கு ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்திற்கான நிலம், கடப்பேரி கிராமம், சர்வே எண் 141/3-ல் 0.30.0 ஹெக்டேர் தேர்வு செய்யப்பட்டு, பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.



***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 8, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

*8-*

**நாகப்பட்டினத்தில் பாதாளச் சாக்கடை**

****13032—திரு. ஜி. நிஜாமுதீன்:***

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

நாகப்பட்டினத்தில் பாதாளச் சாக்கடை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினத்தில் பாதாளச் சாக்கடை கட்டும் திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

***திரு. ஜி. நிஜாமுதீன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மிகவும் பழமையான நகரமாகும். தெருக்கள் மிகக் குறுகிய நிலையில் உள்ளதால், இரு பக்கங்களிலும் சாக்கடைகள் கட்டுவதற்குப் போதிய இடம் இல்லாத நிலை இருக்கிறது. மேலும் அந்தப் பகுதி கடற்கரையை ஒட்டிய நகரமாக இருக்கிறது. அதனால் மண் அதிகமாக அந்தச் சாக்கடையில் சேர்ந்து அடைத்துக்கொள்கின்றது. இதைக் கருத்தில் கொண்டு கடந்த காலத்திலே ஆங்கிலேயர் ஆட்சியிலே அங்கு ஒரு பகுதியிலே பாதாளச் சாக்கடை அமைத்து இருக்கின்றார்கள். ஆகவே, நடைமுறைச் சிக்கலைப் போக்குவதற்காகவும், அந்நகரம் மேலும் வளர்ச்சி அடைவதற்காகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

தயவுசெய்து இதைக் கருத்தில் கொண்டு அந்த நகரத்திற்குப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அனுமதிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க வேண்டுமா என்ற வினாவை எழுப்பி, அதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டு, நகராட்சி மன்றம் 3 ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து, அதன்படி கேட்டபோது, அதற்கான தகுதியும் கடன் வாங்குகிற நிலையும் அதற்கு இல்லாத காரணத்தாலும், பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பதற்கு வெகு நீண்டகாலத்திற்கு அதிகப்படியான தொகை செலவழிக்கவேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், கடன் பெறுவதும் கஷ்டமாக இருப்பதையொட்டி, அது தற்போது பரிசீலிக்கப் படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 9, திரு. வெ. கோவிந்தன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

9—

### பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***19189—திரு. வெ. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



**திரு. வெ. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம் 51 ஊராட்சிகளைக் கொண்டது. குடியாத்தம் வட்டத்தில் 25 ஊராட்சிகளும், வாணியம்பாடி வட்டத்தில் 26 ஊராட்சிகளும் அடங்கி இருக்கின்றன. வாணியம்பாடி வட்டத்தில் உள்ள ஊராட்சிகளுக்கெல்லாம் தலைமையிடமான பேரணாம்பட்டுக்கு வருகின்றபோது, பல்வேறு தடங்கல்கள் ஏற்படுகின்றன. அரசு நலத் திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்துவதற்குரிய சூழ்நிலை இல்லை. ஊராட்சி ஒன்றியமும் அதை இரண்டாகப் பிரிப்பதற்குத் தீர்மானம் போட்டு இருக்கிறது. ஆகவே, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து கைலாசகிரியை மையமாகக் கொண்டு ஊராட்சி ஒன்றியத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டுதான் உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேர்தல் நடைபெற்று, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தற்போது பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்களுடைய பதவிக்காலம் 5 ஆண்டு காலம். இந்த 5 ஆண்டு காலத்தில் 2 ஆண்டு காலம்தான் முடிவுற்று இருக்கிறது, இன்னும் 3 ஆண்டு காலம் இருக்கிறது. இதற்கிடையில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழுமேயானால் சட்டச் சிக்கல்கள் ஏற்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும். எனவேதான், இப்போது இருக்கிற இப்படிப்பட்ட கோரிக்கைகளை எல்லாம் அரசு ஏற்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறது; அடுத்த தேர்தல் வருகிற நேரத்தில் அதைப்பற்றி முடிவு எடுக்கலாம் என்று அரசு கொள்கையாக ஏற்று இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

10—

### விவசாயிகளுக்குக் கதிரடிக்கும் களம் அமைத்தல்

***15881—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளுக்குக் கதிரடிக்கும் களம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1998 நவம்பர் 23

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்ட விவசாயிகளுக்குக் கதிரடிக்கும் களம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் வேளாண்மை நிலங்கள் அதிகம் நிறைந்து இருக்கின்ற காரணத்தினால், விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை சாலைகளிலே போடுவதன் மூலமாகப் போக்குவரத்து தடைபடுகிறது; விபத்துக்கள் ஏற்படுகின்றன; இரு வாகனங்கள் செல்ல இடம் இல்லாத அளவிற்கு இருப்பதனால் சில விபத்துக்கள் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதனால் பெரிய பாதிப்புகளும் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. இந்தச் சூழ்நிலையை அரசு பரிசீலனை செய்து வருவதால், கதிரடிக்கும் களம் எந்த ஆண்டு நிறைவேற்றப்படும். எந்தத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96 ஆவது ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் 6 உலர் களங்கள் அமைப்பதற்காக, ஒரு ஊராட்சிக்கு ஒரு பரிசு என்ற வகையில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஊராட்சிக்கு 50 ஆயிரம் ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டது. இந்த 50 ஆயிரம் ரூபாயைப் பணமாகத் தராமல், அந்த ஊராட்சியில் உலர் களம் அமைப்பது என்று முடிவு எடுத்து அமைக்கப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட 140 ஊராட்சி ஒன்றியங்களில் அதிக நெல் மகசூல் பெறும் சிறந்த ஊராட்சிக்குப் பரிசு வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்படும் ஊராட்சிக்குப் பரிசுத் தொகையாக 50 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டு அத்தொகையைக் காசாக அளிக்காமல் உலர் களங்களாக அமைத்துக் கொடுக்க ஆணையிடப்பட்டது. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டத்தின்கீழ் 23 உலர் களங்கள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.



1998 நவம்பர் 23]

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சிவராமன்.

**திரு. ஆர். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை முழுமையாக உணர்ந்து திட்டப் பணிகளைச் செய்துகொண்டிருக்கின்ற நமது அரசு, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இதுபோன்ற களம் அமைக்க முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 50 ஆயிரம் ரூபாயை நெல் மகசூல் அதிகமாகத் தரக்கூடிய கிராமத்திற்கு அளிப்பது என்று சொன்னேன். அதனைத் தொடர்ந்துதான் நமது முதலமைச்சர் அவர்கள் 1997-98 ஆவது ஆண்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின்மூலம் இதுபோன்ற உலர் களங்களை அமைக்கலாம் என்று அனுமதித்து, தமிழகத்திலே 60 உலர் களங்கள் அமைக்கப்பட்டன. ஒரு உலர் களம் 1,50,000 ரூபாய் செலவில் 20 மீட்டருக்கு 20 மீட்டர் என்ற அளவில் பெரிய களமாக அமைத்துத் தர முதலமைச்சர் அவர்கள் அனுமதித்து அந்த 60 உலர் களங்களும் 1997-98-லே அமைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 1998-99 ஆம் ஆண்டில், அதாவது நடப்பாண்டில் ஒரு களம் 1,75,000 ரூபாய் என்ற மதிப்பீட்டில் 100 உலர் களங்கள் அமைக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளுவர் மாவட்டங்களில் 10 களங்களும், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் 10 களங்களும், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் 10 களங்களும், சேலம், நாமக்கல் மாவட்டங்களில் 10 களங்களும், தர்மபுரியில் 3 களங்களும், கோயம்புத்தூரில் 3 களங்களும், ஈரோட்டில் 3 களங்களும், திருச்சி, கரூர், பெரம்பலூர் மாவட்டங்களில் 4 களங்களும், புதுக்கோட்டையில் 2 களங்களும், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் 30 உலர் களங்களும், மதுரை, திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் 4 உலர் களங்களும், இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்களில் 5 களங்களும், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 4 களங்களும், கன்னியாகுமரியில் 2 களங்களும் ஆக 100 உலர் களங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

***திரு. அ.வ. அப்துல் நாசர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்குடி ஒன்றியப் பகுதி, காட்டுமன்னார்குடியிலிருந்து முட்டம், ஆயக்குடி மற்றும் எய்யலூர் ஆகிய பகுதிகளுக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், காட்டுமன்னார்குடியிலிருந்து இரண்டு வழிகள் செல்கின்றன. அந்த இரண்டு வழிகளிலும் அரை மணி நேரத்திற்கு ஒருமுறை பேருந்து இயக்கப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் அறுவடைக் காலங்கள் வந்துவிட்டால் அந்தப் பகுதி மற்ற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுவிடுகிறது. போக்குவரத்து எந்த வழியிலும் செல்ல முடியாத அளவிற்கு விவசாயிகள் தங்களுடைய அறுவ்டை நெல்லை ரோட்டில் போட்டு பணிகளைச் செய்கிறார்கள். அதனால், போக்குவரத்து நடைபெற முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, இதற்கு முன்னுரிமை அளித்து காட்டுமன்னார்குடி ஒன்றியத்திற்காக உலர் களங்கள் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:*** இப்பொழுது வேளாண்மைத் துறையின் மூலம் அமைத்துத் தரப்படக்கூடிய அந்த விவரங்களைத் தந்திருக்கிறேன். ஒவ்வொரு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் தங்களுடைய பகுதிகளில் உலர் களம் தேவை என்று கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, நிதிநிலைமையை அனுசரித்து கூடுதலாக இதுபோன்ற பகுதிகளில் அமைக்க அரசு பரிசீலிக்கும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. ப. மோகன் கந்தசாமி.

***திரு. ப. மோகன் கந்தசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் வெங்காயம் ஏராளமாக விளைகிறது. சென்ற ஆண்டே அதற்கு ஒரு கிடங்கு வேண்டுமென்று கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பரிந்துரை செய்தார்கள். ஆனால் அந்தத் துறையிலிருந்து இதுபோன்ற களங்களுக்குத்தான் குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தருகிறோம்; அழுகும் பொருட்களுக்கு இதுவரையில் இல்லை; Technical knowhow இல்லை என்று எழுதியிருக்கிறார்கள். ஆனால், குஜராத் மாநிலத்தில் அந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் வெங்காயத்திற்கு என்று தனியாகக் கிடங்கு அமைத்திருப்பதாக சுற்றுலா சென்ற என்னுடைய விவசாய நண்பர்கள் தெரிவித்தார்கள். எனவே, அமைச்சர் அவர்கள்



மீண்டும் இதைப் பரிசீலித்து என்னுடைய தொகுதியான பொங்கலூர் தொகுதிக்கு ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலர் களம் அமைப்பது என்பது நெல் மற்றும் சிறு தானியங்கள் போன்றவைகளைப் பயிரிடுவோர்களின் வசதிக்காகத் தான். குளிர்பதனக் கிடங்கு, பழ வகைகள் போன்ற அழுகும் பொருட்களுக்குத் தேவை என்று கேட்பவர்களுக்காக அமைக்கப்படுகின்றது. வெங்காயத்திற்காக ஒரு குளிர்பதனக் கிடங்கு வேண்டுமென்று இப்போதுதான் மாண்புமிகு மோகன் கந்தசாமி அவர்கள் கேட்கிறார்கள். அவர் வேண்டுமானால் குஜராத்திற்குச் சென்று, அங்கே அதை எப்படி நடைமுறைப் படுத்துகிறார்கள் என்று அறிந்து, அதுகுறித்து அதற்கான திட்டத்தோடு அரசுடன் பேச முன்வந்தால், அரசு அதைப் பரிசீலிக்கும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** திரு. மு.பெ. சாமிநாதன்.

***திரு. மு.பெ. சாமிநாதன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம், குளங்கள், குட்டைகள் தூர் வாரப்படுகின்றன. மேலும் புதிய குட்டைகளும் அமைத்துத் தரப்படுகின்றன. அதேபோல, விவசாயிகளுக்குத் தேவையான உலர் களங்கள் அமைத்துத் தந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு அவை குறைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தின் மூலம், விவசாயிகளின் தேவைக்காகக் களங்கள் அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:*** அதைப் பற்றித் தனியாகக் கேள்வி எழுப்பவும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. வி.பி. இராசன்.

***திரு. வி.பி. இராசன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை மூலம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆண்டுக்கு ஒரு ஏரி சீர்படுத்துவதற்காக ரூ.10 இலட்சம்

ஒதுக்கித் தந்து, அந்தத் திட்டம் செம்மையாக நடைபெற்று வருகிறது. அதுபோல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் ஆண்டொன்றுக்கு ஒரு தொகுதிக்கு இரண்டு உலர் களங்கள் அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:*** மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை விற்பனைக் கூடங்கள் மூலமாகக் கட்டப்படுகின்ற உலர் கலங்களின் அளவு 70 அடிக்கு 70 அடி என்று இருக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. கிராமப்புறங்களில் அந்த அளவுக்கு இடவசதி கிடைக்கும் சூழ்நிலை இல்லாத இடங்களில், 70 அடிக்கு 70 அடி என்ற பரப்பளவின் நீள அகலம் மாறுபடலாம் என்ற அளவுக்கு விதியைத் தளர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலர் களம் பெரிய அளவிலே இருக்க வேண்டுமென்றுதான் கேட்பார்களே தவிர, சிறிய அளவிலே இருக்க வேண்டுமென்று யாரும் கேட்கமாட்டார்கள். ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்தில் ரூ.50,000/- செலவு செய்வதுகூட, 10 மீட்டருக்கு 10 மீட்டர் என்று சிறிய அளவில் இருக்கிறது. அறுவடையாகும் நெல் கட்டுகளை அதிலே போட்டு அடிப்பது, அல்லது இரண்டு பேர் அதைப் பயன்படுத்துவது என்றால்கூட, அதில் இடவசதி போதாது என்பதால் இந்த ஆண்டுகூட அதுபோல் அந்தத் திட்டத்தில் ஒதுக்கப்படக்கூடிய நிதியை 20 மீட்டருக்கு 20 மீட்டர் நீள அகலத்தில் அதை அமைக்க வேண்டுமென்று துறைக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பெரிய அளவில் இருப்பதுதான் விவசாயிகளுக்குப் பயன் உள்ளதாக இருக்கும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 11, திரு. எஸ்.எஸ். பொன்முடி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.



***11—***

**சிறுவாணி அணைக்கட்டு நீரின் மூலம்**
**குளம் குட்டைகளை நிரப்புதல்**

****3918—திரு. எஸ். எஸ். பொன்முடி:***

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுவாணி அணைக்கட்டிலிருந்து பருவ காலங்களில் நிரம்பி வழியும் நீரின் ஒரு பகுதியை, நொய்யல் ஆற்றில் கொண்டு வந்து, பேரூர், சிங்காநல்லூர், பல்லடம் மற்றும் திருப்பூர் தொகுதிகளில் குளம், குட்டைகளை நிரப்ப அரசு முன் வருமா?

***மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறுவாணி அணையிலிருந்து பருவகாலங்களில் நிரம்பி வழியும் நீர் கேரள மாநிலத்திற்கே செல்கிறது. எனவே, மேற்படி நிரம்பி வழியும் நீரின் ஒரு பகுதியை நொய்யல் ஆற்றிற்குத் திருப்பிவிடுதல் தொடர்பாக, கேரளம் மற்றும் தமிழ்நாடு அரசுகள் அளவில் பேச்சுவார்த்தைகள் நடத்தி, கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்படுமேயானால், பின்னர் மேற்படி நீரை நொய்யல் ஆற்றிற்குத் திருப்பிவிடுதல் குறித்துப் பரிசீலிக்கப்படும்.

***திரு. எஸ்.எஸ். பொன்முடி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவாணி அணை கட்டப்பட்ட காரணத்தால், நொய்யல் ஆற்றில் தண்ணீர் வரத்து குறைந்துவிட்டது. மேலும் அந்த அணைக்கட்டு நிரம்பி வழிகின்றபோது, தண்ணீர் கேரளப் பகுதிக்குச் சென்றுவிடுகிறது. அணைக்கட்டிலிருந்து சுத்திகரிப்புக்குத் தண்ணீரைத் திறந்துவிடுகின்ற குழாயை மாற்றியமைக்கும்போது அதில் குடிநீருக்குப் போக அதிகப்படியான நீரை நொய்யல் ஆற்றுக்குக் கொண்டுவரமுடியும். அப்படித் கொண்டுவருகிறபோது ஏற்கெனவே பாசன வசதி பாதிக்கப்பட்டுள்ள 72 சதவீத நிலங்களை புதிய விளைநிலங்களாக மாற்றமுடியும். அந்த மாற்றத்தைச் செய்துமுடிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:*** கேள்வியின் மையக் கருத்து, பருவமழைக் காலங்களில் சிறுவாணி அணையில் நிரம்பி வழிகிற நீரை நொய்யல் ஆற்றுக்குத் திருப்ப முடியுமா என்பது. நொய்யல் ஆற்றுக்கும்

தென்மேற்குப் பருவக்காற்று மழை மூலமாகத்தான் தண்ணீர் கிடைக்கிறது.

*முற்பகல் 10-20*

அதே தென்மேற்குப் பருவக் காற்றின் போதுதான் சிறுவாணிக்குத் தண்ணீர் கிடைக்கிறது. இரண்டுக்கும் ஒருசேர மழை பெய்கிறபோது, அங்கே மிகுதி வெள்ளம் இருக்கிறபோது, நொய்யல் ஆற்றிலும் மிகுதி வெள்ளம் இருக்கிறது. ஆகவே, அந்தத் தண்ணீரைத் திருப்ப வேண்டிய அவசியம் இல்லை. அப்படித் திருப்பினாலும் இங்கே அது பயன்படாது. இரண்டாவது, சிறுவாணி ஆறு கீழ்பவானியில் கலக்கிறது. அதன்கீழ் வருகின்ற கீழ்பவானி பாசன ஆயக்கட்டுதாரர்கள் தங்களுடைய பாசனம் பாதிக்கப்படும் என்று கருதலாம். அடுத்து, அது மேற்கு நோக்கிப் பாய்கின்ற ஆறாகும். அந்த ஆற்றுத் தண்ணீரைத் திருப்ப வேண்டுமானால் கேரள மாநிலத்தோடு பேச வேண்டும். இப்போது இருக்கின்ற பிரச்சினைகளே அதிகமாக இருக்கின்றன. அடுத்து, அப்படியே ஒத்துக்கொண்டாலும் மறுபடியும் ஒரு P.A.P.ஐப் போல மலைகளைக் குடைந்து தண்ணீரைக் கொண்டுவர வேண்டும். இவ்வளவுக்கும் மேலாகச் சொல்ல வேண்டுமானால், கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் சிறுவாணி ஆற்றுத் தண்ணீர் குடிநீருக்காக கோயம்புத்தூருக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால், கோயம்புத்தூரின் வளர்ச்சிக்கு ஏற்ப அந்தத் தண்ணீர் போதவில்லை என்று சொன்னார்கள். எனவே, பில்லூரிலே ஒரு அணை கட்டி அங்கிருந்து தண்ணீரைக் கொண்டுவருகிறார்கள். கடந்த 10 ஆண்டு காலத்திலே கணக்கிட்டுப் பார்த்தால் சிறுவாணி ஆற்றிலே அதிகமான வெள்ளம் வந்ததாகத் தெரியவில்லை.

இருக்கின்ற நிலைமையைப் பார்க்கின்றபோது, பல்லடம், அவிநாசி, பெருந்துறை, காங்கேயம் ஆகிய பகுதிகளில் இருக்கின்ற தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்குவதற்கு உண்டான ஒரே ஒரு வழி பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றுவதுதானே தவிர, இவ்வாறு தண்ணீரைத் திருப்பிக்கொண்டு வருவதால் அந்தப் பகுதியின் தண்ணீர்ப் பஞ்சம் தீர்க்கப்படும் என்பது அவ்வளவு சாத்தியமாகத் தெரியவில்லை.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 12, திரு. ஏ. கோதண்டம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.





*12—*

**சென்னை-காஞ்சிபுரம் பேருந்தினை மீண்டும் இயக்குதல்**

***15568—திரு. ஏ. கோதண்டம்:***

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏற்கெனவே இயங்கி, கடந்த ஆட்சியில் நிறுத்தப்பட்ட, தடம் எண் 78 சென்னை—காஞ்சிபுரம் பேருந்தினை அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலம் மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இது ஒரு சுற்றுத் தடமாகும். பயணிகளின் விகிதாச்சாரம் குறைவாக இருந்ததால் இது நிறுத்தப்பட்டது. மேலும், பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. எனவே, இத்தடத்தை மீண்டும் இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

***திரு. ஏ. கோதண்டம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிக்கும் சென்னைக்கும் தடம் எண் 78 ஓடிக்கொண்டிருந்தது. இத்தடம் வாலாஜாபாத், ஒரகடம், திருப்பெரும்புதூர், சோமங்கலம், குன்றத்தூர் வழியாக சென்னைக்கு ஓடிக்கொண்டிருந்தது. இந்தத் தடம் எண் 78 கடந்த ஆட்சியாளர்களால் நிறுத்தப்பட்டது. காஞ்சிபுரம் தலைநகரம் என்பதால் பொதுமக்கள் நேரடியாகச் செல்வதற்கு ஏற்றவகையில் மீண்டும் அந்தத் தடம் எண் 78-ஐ இயக்க அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடம் எண் 78 காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு, வாலாஜாபாத், திருப்பெரும்புதூர், குன்றத்தூர், போரூர் வழியாக இயங்கியது. வருவாய்க் குறைவு காரணமாக இப்போக்குவரத்துக் கழகம் ஆரம்பிப்பதற்கு முன்பே, அதாவது பெரியார் போக்குவரத்துக் கழகம் என்ற அன்றைய போக்குவரத்துக் கழகம் இருக்கும்போதே, அது நிறுத்தப்பட்டிருக்கிறது. 1-4-1992-ல் போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோதே இத்தடம் இயக்கப் படவில்லை. ஆகவே, 1992-ல் நிறுத்தப்பட்ட இத்தடத்தை மீண்டும் இயக்குவதற்கு சாத்தியம்

இல்லை. மேலும், இது சுற்று வழித்தடமாக இருக்கிறது. சென்னையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு நேரடியாக பல வழித்தடங்கள் இருக்கின்றன. வழியிலே உள்ள ஊர்களிலிருந்து காஞ்சிபுரத்தை இணைக்கும்; சென்னையை இணைக்கும் பல்வேறு வழித்தடங்கள் இருக்கின்றன.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 13, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

*13 —*

**சிறுவந்தாடு-காஞ்சிபுரம் பேருந்து வசதி**

***15588- - திரு. ச. அழகுவேலு:***

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுவந்தாடு-காஞ்சிபுரம் நேரடி பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காஞ்சிபுரத்திற்கு நேரடி பயணிகளின் விகிதாச்சாரம் குறைவாக இருப்பதால் இவ்வழித்தடத்தை இயக்கக்கூடிய நிலைமை நிலவவில்லை.

***திரு. ச. அழகுவேலு:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவந்தாடு, காஞ்சிபுரத்தைப் போல, பட்டு உற்பத்தியிலே மிகச் சிறந்த நகரம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அவர்களுடைய உற்பத்திப் பொருட்களை நேரடியாகக் கொண்டு செல்வதற்கு பேருந்து வசதி இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுவந்தாடு விழுப்புரத்திற்கு அருகிலுள்ள



ஒரு சிற்றூர் ஆகும். சிறுவந்தாடு-விழுப்புரத்திற்குப் பல்வேறு வழித்தடங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 50-க்கும் மேற்பட்ட பேருந்துகள் சிறுவந்தாடு-விழுப்புரத்திற்கு இருக்கின்றன. விழுப்புரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு 37 வழித்தட வண்டிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தச் சிற்றூரிலிருந்து நேரடியாக காஞ்சிபுரத்திற்குப் பேருந்து இயக்குகின்ற சாத்தியக் கூறுகள் இல்லை.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. எஸ். ஆர். சிவலிங்கம்.

***திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராப்புற மக்களின் நலன் கருதி, போக்குவரத்து வசதி இல்லாத பகுதிகளில் வாழும் கிராமப்புற மக்களும் போக்குவரத்து வசதி பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு 'Mini Bus' திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதனால் சில மாவட்டங்களில் உள்ள கிராமப்புற மக்கள் பயன்பெறுகிறார்கள். ஆனால், சில மாவட்டங்களில் தனியார்கள் அந்த நல்ல திட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, தடையாணை பெற்றிருக்கிறார்கள். இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அந்தத் தடையாணையை விரைவில் நீக்கி கிராமப்புற மக்கள் மகிழ்ச்சி அடைகின்ற வகையிலே இதனைச் சீர்செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மினி பஸ் திட்டம் பற்றி கடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களால் விவாதிக்கப்பட்டது. தமிழகத்தில் ஏழு மாவட்டங்களில் மட்டும் இத்திட்டத்திற்கு எதிராக சிலர் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றிருக்கிறார்கள். அந்தத் தடையாணைகளை விலக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 14, திரு. சைதை கா. கிட்டு, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

14-

## விசைப் படகுப் போக்குவரத்து இயக்குதல்

***7475—திரு. சைதை கா. கிட்டு:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலிருந்து மகாபலிபுரம் செல்ல இரண்டு சாலைகள் இருந்தும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதைத் தவிர்த்திட பக்கிங்காம் கால்வாய் வழியாக மகாபலிபுரம் வரை விசைப் படகுப் போக்குவரத்து விடப்படுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பக்கிங்காம் கால்வாயை அகலப்படுத்தி, ஆழப்படுத்த, மத்திய அரசின் உதவியுடன் சீர் செய்து படகுப் போக்குவரத்து ஏற்படுத்த திட்டம் வகுக்கப்பட்டு, அதற்கான குறிப்பு மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் அங்கீகாரம் பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

**திரு. சைதை கா. கிட்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரை செல்லும் பக்கிங்காம் கால்வாயில் தூர் வாரும் பணி நடைபெறுவதாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் மூலமாக அறிகிறேன். தூர் வாரும் பணி நடைபெற்றதற்குப் பின்னால், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மகாபலிபுரம் வரை விசைப்படகுப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படுமா, ஆமெனில், எப்போது ஆரம்பிக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங்காம் கால்வாய், கூவம் ஆறு, அடையாறு ஆகிய மூன்று ஆறுகளையும் தூர் வாரி, ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, அழகுபடுத்துகிற திட்டத்திற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். அது இப்போது செயல்பட த்தொடங்கியிருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு ஹட்கோ நிதியுதவி செய்வதற்கு முன் வந்திருக்கிறார்கள். ஆனால், அந்தத் திட்டம் கார்ப்பரேஷனுக்குள்ளே



மட்டும், மாநகராட்சிக்கு உள்ளே இருக்கிற அந்தப் பகுதிக்கு மட்டும் செயல்பட உள்ளது. அந்தப் பகுதியில், பக்கிங்காம் கால்வாயில் ஏற்கெனவே ஆகாய இரயில் பாதைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, அந்தக் கால்வாயின் மையப்பகுதியில் இரயில் போக்குவரத்து இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால், நகரத்திற்குள்ளே இந்தக் கால்வாய் ஆழப்படுத்தப்பட்டாலும், அகலப்படுத்தப்பட்டாலும், அழகுபடுத்தப்பட்டாலும் அதிலே படகுப் போக்குவரத்து விடமுடியாது. சென்னையை அடுத்த அடையாற்றிலிருந்து மரக்காணம் வரை பக்கிங்காம் கால்வாயைத் தூர் வாரி படகுப் போக்குவரத்து விடலாம் என்பதுதான் இப்போது இருக்கக்கூடிய திட்டம். அதற்கு மத்திய அரசினுடைய உதவியை நம்முடைய அரசு கேட்டிருக்கிறது. மத்திய அரசு, ஐந்தாண்டுத் திட்டத்திலே அதைச் சேர்த்து, அதற்குரிய நிதி ஒதுக்கப்படுமானால் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மாமல்லபுரம் வரையில் சுற்றுலாப் பயணிகளைக் கவருகின்ற வகையிலே இன்றைக்கு ஏராளமான சுற்றுலாத் தலங்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, இந்தப் பக்கிங்காம் கால்வாய்த் திட்டத்தை விரைவுபடுத்துகின்ற வகையில், உலக வங்கியிடமிருந்து கடன் பெற்றாவது, உடனடியாக ஆழப்படுத்தி, அதனைச் சீரமைக்க அரசு முன்வருமா, அப்படிச் சீரமைத்து அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறபோது, அந்தக் கால்வாய்க்கு 'மாமல்லன் கால்வாய்' என்று பெயர் சூட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இந்த Inland Waterways-ல், அந்தக் கால்வாயைத் தேவையான அளவிற்கு ஆழப்படுத்துவது, அகலப்படுத்துவது, தூர் வாருவது, அழகுபடுத்துவது ஆகிய பணிகள் பொதுப் பணித் துறையைச் சார்ந்தவை. இவ்வளவு காரியங்களும் செயல்பட்ட பிறகு, அதிலே விசைப் படகு விடுவதுதான் என்னுடைய துறையைச் சார்ந்தது. ஆகவே, உலக வங்கியினுடைய உதவி பெறப்படுமா என்பதற்கான விளக்கங்களையெல்லாம் பொதுப்

பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பது நல்லது என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங்காம் கெனாலை சீரமைப்பதற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, போக்குவரத்து வசதி செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க நன்றி. பக்கிங்காம் கெனாலில் தூர் எடுத்ததன் காரணமாக, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த மழைக் காலத்தின்போது, வெள்ளச் சேதத்திலிருந்து, மிகப் பெரும் அபாயத்திலிருந்து சென்னை மாநகரம் காப்பாற்றப்பட்டது. மேலும், வடக்கு பக்கிங்காம் கெனால் என்பது எங்களுடைய பகுதியிலே ஓடுகிறது. கடந்த காலங்களிலே ஆந்திராவிலிருந்து அத்தியாவசியப் பொருள்கள் - உப்பு, கருவாடு, விறகு, அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்கள்-அத்தனையும் வடக்கு பக்கிங்காம் கால்வாயிலிருந்து கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து மரக்காணம் வழியாகச் சென்றன. ஆகவே, அதே நிலையில் இப்போதும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவிற்கு வாருங்கள்.

**திரு. செங்கை சிவம்:** அதே நிலையை ஏற்படுத்த, இந்த 300 கோடி ரூபாயில் அந்தத் திட்டமும் அடங்கியிருக்கிறதா அல்லது சேர்த்துக்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் பேரவையின் முன்னனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 300 கோடி ரூபாய் என்பதே படகுப் போக்குவரத்திற்காக அல்ல. சென்னைக்குள் இருக்கக்கூடிய மூன்று ஆறுகள், கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், அடையாறு, இந்த மூன்றையும் அழகுபடுத்துகிற ஒரு முயற்சி; அதிலே படகுப் போக்குவரத்து என்பது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது,



சென்னையிலிருந்து ஆந்திரா வரையிலே இருக்கக்கூடிய பக்கிங்காம் கால்வாயை, படகுப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்துகிற கேள்வி ஆகும். இன்றைக்கு இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். "To a question, he said Rs.408 crores had been allocated during the Ninth Plan for developing the Inland Water Transportation (IWT) in the country. Besides, it was proposed to develop an IWT network from the Buckingham Canal in Chennai to Ongole in Andhra Pradesh. The Rs.210 crores project would be entrusted to the private sector." என்று செய்தி வந்திருக்கிறது. அது உண்மையாக இருக்குமானால் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

*15-*

### தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுதல்

***7673—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தென்காசி - மதுரை நெடுஞ்சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தென்காசி - மதுரை நெடுஞ்சாலையினைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றும் திட்டம் மைய அரசிற்குப் பரிந்துரை செய்யப்பட்டது. தற்போது மைய அரசானது இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு 125 கி.மீ. நீளமுள்ள இந்தச் சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றிட இசைவு அளித்துள்ளது. இதற்கான மைய அரசின் அரசிதழ் அறிவிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை-தென்காசி சாலையினைத் தேசிய நெடுஞ்சாலையாக ஏற்றுக்கொண்டதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அந்தச் சாலையிலுள்ள நான்கு முக்கிய நகரங்களில் புறவழிச் சாலைகளை அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையாக இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின் அறிவுரையோடு தமிழ்நாட்டிலேயிருந்து 2,700 கி.மீ. சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலைகளாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நாம் கோரிக்கை வைத்தோம். அதிலே, 1200 கி.மீ. அளவுக்கு மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதிலே இந்தச் சாலையும் வருகிறது. ஆனால், அதற்குரிய அறிவிக்கை (Notification) வர வேண்டும். அது வந்தபிறகு, இந்தச் சாலையை மேம்படுத்துகிறபோது, இப்போது ஒரு புதிய உத்தியாக எல்லா நகரங்களிலேயும் புறவழிச் சாலையை அமைக்கின்ற ஒரு ஏற்பாடு நடைபெறுகிறது. அது அப்போது கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளை மாநில அரசு அறிவிக்கின்றபோது, தேசிய நெடுஞ்சாலைகளில் வேலைகள் சரிவர நடப்பதற்கு, மத்திய அரசு போதுமான நிதியை மாநில அரசுக்கு வழங்கி வருகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய தேசிய நெடுஞ்சாலைகளுக்கு இதுவரையில் போதிய அளவு நிதி ஆதாரம் மத்திய அரசிடமிருந்து கிடைக்கவில்லை என்பது உண்மைதான். அதைப் பெறுவதற்கான முயற்சியில், மாண்புமிகு முதலமைச்சருடைய ஆலோசனையின்பேரில், நான் டெல்லிக்குச்



சென்று, அந்தத் துறை அமைச்சரோடும் அதிகாரிகளோடும் ஒரு நீண்ட கலந்துரையாடலை நடத்தி, இப்போது நம்முடைய தமிழகத்தினுடைய கோரிக்கையின் பெரும் பகுதி ஏற்றுக்கொள்ளப்பட்டு நிதி ஆதாரமும் வழங்குவதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். சில திட்டங்களில் சிக்கல் இருந்தது; அந்தச் சிக்கல்களையும் பேசித் தீர்த்திருக்கிறோம். அதிலே மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுடைய பகுதியில் அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு, உறுதிப்படுத்துவதற்கு, நேர்ப்படுத்துவதற்குத் தேவையான நிதி ஆதாரம் கேட்கப்பட்டிருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்பு, மத்திய அரசினுடைய தரைவழிப் போக்குவரத்துத் துறை அதிகாரிகள், அந்தச் சாலையை முழுமையாகப் பார்வையிட்டு, முழுவதையும் செப்பனிடுவதற்கு, சீர் செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டைச் செய்வதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் தேவையான நிதி பெறப்படும்; திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தமிழகத்திலுள்ள எந்தெந்த நெடுஞ்சாலைகளை, தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்ற மத்திய அரசுக்கு நமது அரசு கோரிக்கை வைத்திருக்கிறது; அவற்றில் கடலூர் - சித்தூர் நெடுஞ்சாலையும் உள்ளடங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1996-97 ஆம் ஆண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியின் மூலமாக, தமிழ்நாட்டில் மேலும் 561 கிலோ மீட்டர் சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இப்போது, மீண்டும் 2700 கிலோ மீட்டர் சாலைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டோம். அவற்றில் 1200 கிலோ மீட்டர் சாலைகளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. நாம் கேட்டிருந்த 2700 கிலோ மீட்டர் சாலைகளில், கடலூர் - சித்தூர் சாலையும் வருகிறது. அது இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மீண்டும் வலியுறுத்துவோம். எதிர்காலத்தில் அதுவும் பெறப்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***16–***

**திருக்கோயில்களைப் புதுப்பித்தல்**

****2972 — திரு. குத்தாலம் பி. கல்யாணம்:***

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, திருமணஞ்சேரி, திருவேள்விக்குடி மற்றும் வழுவூர் திருக்கோயில்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குத்தாலம் தொகுதி, திருமணஞ்சேரி, திருவேள்விக்குடி, வழுவூர் ஆகிய திருக்கோயில்களின் திருப்பணி வேலைகள் நடந்து வருகின்றன.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணஞ்சேரியைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அங்கு சென்று அந்தத் திருக்கோயிலைப் பார்வையிட்டு, அவர்களுடைய துறையின் சார்பில் நடைபெறவேண்டிய வேலைகள் நடைபெறுவதற்கான உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள். அதேபோல், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், அந்தக் கோயிலுக்குத் தேவையான மற்றைய வேலைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடித்துக் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயிலுக்கு மட்டும் 13 வகையான திருப்பணி வேலைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இசைவு அளிக்கப்பட்டுள்ளது. அதற்காக ரூ.8 இலட்சத்து 10 ஆயிரம்



ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் விரைவாக முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்.

**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவில்களைப் புதுப்பிக்கின்ற பணிகளில், சில பணிகளை அரசு ஏற்காத நிலையில் இருக்கின்ற திருக்கோவில்களுக்கு, இறைப்பணிக் குழுக்கள் மூலம் நன்கொடைகள் பெற்று, அப்பணிகளைச் செய்து குடமுழுக்குச் செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற 36,253 கோயில்களிலே, எந்தெந்தக் கோயில்களுக்கெல்லாம் 12 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றனவோ, அவை அனைத்திற்கும் குடமுழுக்குச் செய்ய வேண்டுமென்ற பொதுவான ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான், அவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப் படுகின்றன. அதேநேரத்தில், அவற்றிற்கு ஒதுக்கப்படுகின்ற தொகையை, அரசு ஓரளவிற்குத்தான் ஒதுக்க முடியும். எடுத்துக்காட்டிற்குச் சொல்ல வேண்டுமானால், இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் பி. கல்யாணம் அவர்கள் கேட்ட கேள்வியில் குறிப்பிட்ட ஒரு கோவிலுக்கு 500 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால், வருவாய் என்று பார்த்தால், 60 ஆயிரம் ரூபாய் என்றுதான் இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட நிலையில் அந்தக் கோவிலுக்கு நிறைய நிதியை அரசிடமிருந்து ஒதுக்க வேண்டிய தேவை ஏற்படுகிறபோது, அது இயலாமல் போகிறது. அதனால்தான், திருப்பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் வாயிலாக நன்கொடையாளர்களை அணுகி தொகை திரட்டப்பட்டு, திருப்பணி வேலைகளை நடத்த வேண்டியிருக்கிறது. முறையாக அந்தக் கோவில்களில் திருப்பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, இங்கே இசைவு பெறப்பட்டு, பிறகு அவர்கள் பொது மக்களிடமிருந்து நன்கொடைகள் திரட்டி, அந்தப் பணிகளை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரக்கூடிய ஆண்டில் இதுபோன்று புதுப்பிக்கப்படக்கூடிய ஆலயங்கள் என தமிழகத்தில் மொத்தம் எத்தனை ஆலயங்களை அரசு எடுத்துக் கொள்ளும்? அவற்றில் கன்னியாகுமரியைப் பொறுத்தமட்டில் ஏதாவது ஆலயங்கள் இருக்கின்றனவா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துத் தெரிந்துகொள்ள தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதி மதம் கடந்த நிலை உருவாக வேண்டுமென்று, சமத்துவபுரம் காணுகின்ற இந்த நாளிலே, சாதி மதம் அற்ற கோயில்களை உருவாக்க அரசு முனையுமா என்பதை அறிய விரும்புகிறேன். அமெரிக்காவிலே தாமரைத் திருக்கோவில் (Lotus Temple) என்று, எந்தச் சமயத்தைச் சார்ந்தவரும், எந்த மதத்தைச் சார்ந்தவரும் தொழலாம் என்ற ஓர் அருமையான கோவிலைத் தோற்றுவித்திருக்கிறார்கள். கடந்த வாரம், தமிழக முதலமைச்சர் அவர்கள்கூட, அருகில் இருக்கின்ற கடற்கரைப் பூங்காவிலே உலக அமைதி திருக்கோவில் ஒன்றைத் திறந்து வைத்து வந்திருக்கிறார்கள். அங்கே ஒளிவழிபாட்டைப் பற்றி அவர்கள் மிகவும் பெருமையாகப் பேசியிருக்கிறார்கள். அத்தகைய ஓர் உயரிய நோக்கத்தோடு, எல்லா மதத்தவரும், எல்லா சமயத்தவரும் தொழக்கூடிய வகையிலே, ஒரு திருக்கோவிலை இந்தத் தருணத்திலே அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இந்து சமய அறநிலையத் துறை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபடி அனைவரும் வணங்கக்கூடிய ஒரு பொதுக் கோயிலை உருவாக்க



வேண்டுமென்று சொன்னால் அதைப் பள்ளிப்பட்டு தொகுதியில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தொடங்குவாரானால் நாங்கள் எல்லாம் வந்து முழுமையாக ஆதரித்து எல்லாச் சமயங்களைப் பற்றியும் பேசுவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிக் குழுக்கள் எல்லாம் அமைக்கப்பட்டுப் பல்வேறு கோவில்களில் வேலைகள் நடைபெற்றிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், திருப்பணியைப் பார்வையிடுவதற்குப் போதுமான அளவிற்குப் பொறியாளர்கள் இல்லாத காரணத்தினால் அந்தப் பணி மிகமிகத் தாமதமாகிக் கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? எதிர்காலத்தில் கோடிக்கணக்கான ரூபாய்க்கு மேலாகச் செலவு செய்து திருப்பணி செய்யக்கூடிய திருக்கோவில்களில் விரைவாக அந்த வேலையைச் செய்வதற்கு ஏற்ற வகையில், அந்த வேலை முடியும் வரை தனிப்பட்ட முறையில் பொறியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென்று அமர்த்தப்படுகின்ற பொறியாளர்கள் அனைவரும் பொதுப் பணித் துறையினரால் அயல்பணி அடிப்படையில் வழங்கப்படுகிறார்கள். இதிலே ஏற்கெனவே 13 இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன என்பதை நாங்கள் அறிவோம். அதனடிப்படையில் பொதுப் பணித் துறைக்கு அதுகுறித்து மடல் எழுதி விரைவில் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகவே பொறியாளர்களை அந்தத் துறை அனுப்பினால்தான் பொருத்தமாக இருக்குமே தவிர, நாமாகவே பொறியாளர்களை அமர்த்திக்கொள்வது பொருத்தமாக இராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும் நம்முடைய உறுப்பினருடைய கருத்து சிந்திக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

*17—*

**கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு நிலுவைத் தொகையினை வழங்குதல்**

***10137—திரு. ஆர். சக்ரபாணி:***

*மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டுக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து பால் பணம் உறுப்பினர்களுக்கு சரிவர பட்டுவாடா செய்யப்படாமல் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், உறுப்பினர்களுக்கு பணம் எப்பொழுது கிடைக்கும்?*

***மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) அறியும்.

(ஆ) 1996 ஏப்ரல் வரையிலான காலத்தில் சுமார் 2 கோடி ரூபாய் அளவிற்கு பட்டுவாடா பாக்கி இருந்தது. ஒன்றியத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்தின் விளைவாக பால் பணம் பட்டுவாடா 120 நாட்கள் வரை நிலுவையில் இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்றபின் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக 40 நாட்கள் என்ற அளவிற்கு அது குறைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மாதம் 13-11-1998 மற்றும் 14-11-1998 ஆகிய தேதிகளில் 50 இலட்ச ரூபாய் இணையத்திலிருந்து ஒன்றியத்திற்கு முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. மீதி நிலுவைத் தொகையை விரைவில் பட்டுவாடா செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

***திரு. ஆர். சக்ரபாணி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்ட பால் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக பால் உற்பத்தியாளர்களுக்கு முந்தைய ஆட்சியில் பல மாதங்களுக்கு ஒருமுறைதான் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. நமது அரசு பொறுப்பேற்றவுடன் இப்போது அந்தக் கால இடைவெளி குறைக்கப்பட்டு மாதம் ஒருமுறை பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. எங்களது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தனியார் நிறுவனங்கள் அந்த பால் உற்பத்தியாளர்களிடம் பால் வாங்குகிறார்கள். அந்தத் தனியார் நிறுவனங்கள் வாரம் ஒரு முறை அந்த உற்பத்தியாளர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்கிறார்கள். அதனால் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பால் ஊற்றுகின்ற அந்த விவசாயிகள் எல்லாம் இப்போது அந்தத் தனியார் நிறுவனங்களை நாடிச் செல்வதால் திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே பால் வரவு குறைந்துள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கி அந்த உற்பத்தியாளர்களுக்கு வாரம் ஒரு முறை பணம் கொடுப்பதற்கு முயற்சி செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



***மாண்புமிகு திரு. க. சுந்தரம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் ஒன்றியம், மதுரை ஒன்றியத்திற்கு பால் வழங்கிய வகையிலே தரப்படவேண்டிய நிலுவைத் தொகையான 50 இலட்ச ரூபாயைப் பெற்றும், மத்தியக் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடனாகப் பெற்றும் வாரம் ஒரு முறை பால் பணம் பட்டுவாடா செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. இரா. மணிமாறன்.

***திரு. இரா. மணிமாறன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால்வளத் துறையானது நல்ல வருமானத்தில் இலாபகரமாக நடைபெற்றுக்கொண்டிருந்ததுதான். கடந்த ஆட்சிக் காலத்திலே ஏகப்பட்ட தவறுகள் நடந்ததன் காரணமாக நஷ்டம் ஏற்பட்டது. நீங்கள் 2 கோடி ரூபாய் கொடுத்து விவசாயிகள் இப்போது பயன் பெற்றிருக்கிறார்கள். மேலும் 50 இலட்ச ரூபாய் கொடுப்பதற்கு முயற்சி செய்திருக்கிறீர்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவுக்கு அந்த ஒன்றியம் கீழ் நோக்கிச் சென்றதற்குக் காரணம் என்ன என்பதை அறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த நடவடிக்கை விரைந்து எடுக்கப்பட்டு ஒன்றியத்திற்கு ஏற்பட்ட அந்த நஷ்டம் ஈடுசெய்யப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. க. சுந்தரம்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூடிய விரைவில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 18, திரு. வ. அன்பழகன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***18—***

**சார்பு நீதின்றங்களில் சிறு வழக்குகள் தொடருதல்**

****7069—திரு. வ. அன்பழகன்:***

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சார்பு நீதின்றங்களில் ரூ.5001/-லிருந்து ரூ.20,000/- வரை சிறு வழக்காகத் தொடர உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், முன்போல் வழக்குத் தொடர்பவர் விரும்பினால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை உயர் நீதிமன்றத்தின் 17-7-1997 நாளிட்ட ஆணையின்படி, ரூ.5,000/- முதல் ரூ. 20,000/- வரை உள்ள சிறு வழக்குகள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலேயே தொடரலாமென்பதால், முன்போலவே வழக்குத் தொடர்பவர்கள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (D.M.C.) வழக்கு தாக்கல் செய்யலாம்.

*முற்பகல் 10-45*

***திரு. வ. அன்பழகன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வினா தொடுத்திருந்த நேரத்திலே அப்படிப்பட்ட நிலைமை இருந்தது. தற்போது அதை மாற்றியமைத்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, கடந்த கூட்டத் தொடரிலே மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் புதிய சார்பு நீதிமன்றங்களை உருவாக்கப்போவதாகவும் அறிவித்தார்கள். அதிலே, செய்யாரிலே ஒரு சார்பு நீதிமன்றத்தை அறிவித்து அரசாணையும் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு முடியும் தருவாயில் உள்ள நிலையில், எப்போது அந்தச் சார்பு நீதிமன்றம் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:*** இது பற்றித் தனிக் கேள்வி போடவும். அதைப் பற்றியக் குறிப்பு எதுவும் என்னிடத்தில் தற்போது இல்லை.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 19, திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***19—***

**அருப்புக்கோட்டை தொகுதியில் தொழிற்பேட்டை**

****14928—திரு. தங்கம் தென்னரசு:***

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

***திரு. தங்கம் தென்னரசு:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அருப்புக்கோட்டை தொகுதி தொழில் வளத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே இத்தகைய தொழிற்பேட்டைகள் அமைக்க ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. அதுமாத்திரமல்லாமல், சமீபத்திலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், தென் மாவட்டங்களிலே பெருமளவில் தொழிற்சாலைகள் தொடங்க வேண்டுமென்ற முக்கியமான முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த முக்கியமான முடிவைச் செயல்படுத்துவதற்கு ஒரு முன்னுதாரணமாக, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பவள விழா ஆண்டிலே, அரசு தொடங்க இருக்கக்கூடிய 50 தொழிற்பேட்டைகளில் ஒன்றினை, தொழில் வளத்தில் மிகவும் பின்தங்கிய அருப்புக்கோட்டைத் தொகுதியிலே அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் 50 இடங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, அந்தத் திட்டத்தில் இதுவரை 17 இடங்களிலே அவற்றை அமைப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்படி, அருப்புக்கோட்டையிலே விரைவிலே தொழிற்பேட்டையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டிருக்கின்ற தொழிற்பேட்டைகள் செயல்படாமல் இருப்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் அறிவார்களா? உதாரணமாக, இராமநாதபுரம் பக்கத்தில் ஒரு தொழிற்பேட்டையும், பரமக்குடிக்குப் பக்கத்தில் ஒரு தொழிற்பேட்டையும் கட்டி முடிக்கப்பட்டு இரண்டு, மூன்று ஆண்டுகளாகியும் எந்தவிதமான செயல்பாடும் இல்லாமல் இருப்பதை அறிவார்களா? அதேபோல, எத்தனை இடங்களில் தொழிற்பேட்டைகள் கட்டி முடிக்கப்பட்டு யாரும் அனுபவிக்காமல் அல்லது யாருக்கும் ஒதுக்கப்படாமல் இருக்கின்றன என்பதை நம்முடைய அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப்போல, இராமநாதபுரம் மாவட்டத்திலே, இராமநாதபுரத்திற்கு அருகில் கீழநாச்சி கிராமத்திலே 10 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டு, அவற்றில் 4 விற்பனை செய்யப்பட்டு இருக்கின்றன. 6 தொழிற்கூடங்கள் இன்னும் விற்பனை செய்யப்படவில்லை. அதேபோல, உரப்புளியிலே 12 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டு, அந்த 12 தொழிற்கூடங்களுமே இதுவரை விற்பனை செய்யப்படாத நிலையிலே இருக்கின்றன. பரமக்குடியிலே கட்டப்பட்டிருக்கின்ற 20 தொழிற்கூடங்கள் முழுமையுமாக விற்பனை செய்யப்பட்டுவிட்டன. உரப்புளியிலே இருக்கின்ற அந்தத் தொழிற்கூடங்கள், நீண்ட நெடுங்காலமாக விற்பனை செய்யப்படாத நிலையிலே இருக்கின்ற தொழிற் கூடங்கள். இவற்றை சலுகையின் அடிப்படையிலே, ஏலத்தின் அடிப்படையிலே, இன்னும் சொல்லப் போனால், வட்டியை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ அந்த அளவிற்குக் குறைத்து, கிராமங்களிலே தொழில் வளர்ச்சி வரவேண்டும் என்பதற்கான அடிப்படையில் விற்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் எனது உசிலம்பட்டித் தொகுதியும் தொழில் ரீதியில் மிகவும் பிற்பட்ட தொகுதியாக இருப்பதால், அங்கு அரசு தொழிற் பேட்டையை அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். அதுமட்டுல்ல அங்கு தொழிற் பேட்டையை அரசு அமைக்க ஏதுவாக அங்குள்ள தாசில்தார், ஆர்.டி.ஓ. இவர்கள் மூலம் நிலமும் தயார் செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிடுவதாகவும் உறுதியளித்துள்ளார்கள். இந்நிலையில் உசிலம்பட்டி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன் வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இது வரையிலே மொத்தம் 17 இடங்களிலே நான் நேரடியாகச் சென்று பார்வையிட்டு, அந்த இடங்களை எடுத்து தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கும் அல்லது தொழில் மனைகள் அமைத்து ஆங்காங்கே வழங்குவதற்குமுரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். உசிலம்பட்டியும் அதிலே அடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 50 தொழிற்பேட்டைகள் புதியதாகத் தமிழகத்தில் ஆரம்பிக்கப்படும் என்று கூறினார்கள். அதற்கிணங்க, நானும் அவரிடம் ஒரு மனு கொடுத்திருந்தேன். இராசிபுரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி என்றும் அங்கே

ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்றும் கோரினேன். அமைச்சர் அவர்களும் பரிசீலிக்கப்படும் என்று கூறினார்கள். ஆனால், முதற்கட்டப் பணியிலே இந்த வேலை நடக்கவில்லை என்று நான் கேள்விப்பட்டேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து, பரிசீலனை செய்து, இராசிபுரத்தில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-50*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பரிசீலிக்கப்படும் என்று சொன்னது உண்மைதான். 50 தொழிற்பேட்டைகள் அமைக்கின்ற திட்டத்தை, கடந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் அறிவித்து அதற்குரிய நடவடிக்கைகளை எல்லாம், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் எடுத்து வருகிறது. கடந்த காலத்திலே இருந்த நட்டத்தையெல்லாம் போக்கி, இலாபத்திற்குக் கொண்டு வந்து, தன்னுடைய நிதியிலே அந்த இடங்களை விலைக்கு வாங்கி-அரசு நிலமாக இருந்தால் அதற்குரிய பணத்தைச் செலுத்தி அதற்குப் பின்னால்தான் தொழிற்கூடங்கள் அமைக்கின்ற பணியை மேற்கொள்ளவிருக்கிறது. எனவேதான், முதலிலே என்னுடைய பதிலிலே, ஏற்கெனவே, 50 தொழிற்பேட்டைகளில், 17 இடங்கள் இன்றையதினத்திலே ஆய்வு செய்யப்பட்டு முடியும் தருவாயில் இருக்கின்றன என்பதைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** திரு. அ.வ. அப்துல் நாசர்.

***திரு. அ.வ. அப்துல் நாசர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திலே காட்டு மன்னார்குடி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய ஒரு பகுதி. அந்தப் பகுதியிலே சிட்கோ மூலமாக ஒரு தொழிற்பேட்டை தொடங்குவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டது. ஆனால், இதுவரை தொடங்கப்படவில்லை. விரைந்து, அந்தப் பகுதியிலே ஒரு தொழிற்பேட்டையைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்



***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திலே, வடலூர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பேட்டைகளில் கட்டப்பட்டிருக்கின்ற தொழிற்கூடங்கள் முழுமையாக விற்பனை செய்யப்பட்டுவிட்டன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** வினா எண் 20, திரு. பி.என். சுப்பிரமணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

***20—***

**டெல்லிகேட் பகுதியினைச் சுற்றுலாத்தலமாக்குதல்**

****8589—திரு. பி.என். சுப்பிரமணி:***

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், ஆற்காடு நகரத்தில் முதன்முதலாக ஆங்கிலேயர் படையெடுத்த இடமான டெல்லிகேட் பகுதியைச் செப்பனிட்டு சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

***மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், ஆற்காடு நகரத்தில் முதன்முதலாக ஆங்கிலேயர் படையெடுத்த இடமான டெல்லிகேட் பகுதியைச் செப்பனிட்டு, சுற்றுலாத் தலமாக்க செயற்குறிப்பு இத்துறையில் ஏதுமில்லை.

***திரு. பி.என். சுப்பிரமணி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு நகரத்தை மையாக வைத்து ஆண்ட முஸ்லீம் வாரிசுகளின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு, வியாபார உரிமை ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட ஆங்கிலேயர்கள், தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட இராபர்ட் கிளைவ் தலைமையில் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் பாலாறு பக்கத்தில் உள்ள டெல்லிகேட் பகுதியில் முதன்முதலில் படையெடுத்தார்கள். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், உலகத்திலுள்ள பல நாடுகளிலிருந்தும் மக்கள் அந்த டெல்லிகேட் பகுதியைப் பார்க்க

வருகிறார்கள். அந்த இடம் மிகவும் பழுது அடைந்துள்ளது. அந்த இடத்தைப் புதுப்பித்து, சுற்றுலாத் துறை மூலமாக அங்கே ஓர் உணவு விடுதி மற்றும் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர்கள் முதன்முதலாகப் படையெடுத்தது என்பது ஒன்றும் பெருமைக்குரிய விஷயம் அல்ல. எனவே, அங்கே நினைவுச் சின்னம் தேவையில்லை (மேசையைத் தட்டும் ஒலி)என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் @

## (முதல் பட்டியல்)

*1—*

### ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் விவரம்

***வினா 6410—திரு. நா. பெரியசாமி:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கஸ்தூரிபாளையம் ஊராட்சி, வடமுகம் காங்கேயம் பாளையத்தில் ஆரம்பப் பள்ளி இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், இதில் பணிபுரிய ஆசிரியர்கள் உள்ளார்களா?

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) ஆம்.

(ஆ) காங்கேயம் பாளையம் தொடக்கப் பள்ளியில் ஓர் ஆசிரியர் நியமிக்கப்பட்டு 24-7-1997 முதல் பணிபுரிந்து வருகிறார்.

---

@ இதில் வரும் பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



*2—*

### உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம்

***வினா 10308—திரு. ப. கோவிந்தன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளாரில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

அரசாணை நிலை எண் 506, பள்ளிக் கல்வித் துறை, நாள் 15-12-1997-ல் சேலம் மாவட்டம், வெள்ளார், மேச்சேரி ஒன்றியம், தாரமங்கலம் தொகுதி, அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.4 இலட்சம் ஒதுக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

*3—*

### உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

***வினா 11210—திரு. மா. இராமச்சந்திரன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கிளாமங்கலம் வடக்கு கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கிளாமங்கலம் வடக்கு கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 1997-98 ஆம் நிதி ஆண்டில் பகுதி 1 திட்டத்தின்கீழ் 2 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடம் கட்ட ரூ.4 இலட்சம் நிதி ஒதுக்கி, அரசாணை நிலை எண் 506, பள்ளிக் கல்வித் துறை, நாள் 15-12-1997-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது. பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளரிடம் வகுப்பறை கட்டும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4—

### தொடர்கல்வி நிலையத் தொடர்பாளர்களுக்கு மீண்டும் பணி

***வினா 12401—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முறைசாரா மற்றும் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் தொடர்கல்வி நிலையத் தொடர்பாளர்களுக்கு மதிப்பூதியம் நிர்ணயித்து மீண்டும் பணி வழங்க அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

1,363 தொடர்கல்வி மையங்கள் நடுவண் அரசின் முழு நிதி உதவியுடன் 1988 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தன. இம்மையங்களை வழி நடத்துவதற்குத் தொடர்பாளர்கள் நியமிக்கப்பட்டு மாதம் ரூ.200 வீதம் மதிப்பூதியமாக வழங்கப்பட்டது. அறிவொளி இயக்கத்தின் தொடர்ச்சியாக தொடர்கல்வி இயக்கம் முடிவுறும் தருவாயில் வளர்கல்வி மையங்கள் அமைப்பது என்றும் பழைய தொடர் கல்வி மையங்களை 31-3-1996 உடன் மூடிவிடுமாறும் மத்திய அரசினால் அறிவுரை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்த 1,363 தொடர்கல்வி மையங்களும், 31-3-1996 உடன் அரசாணை (நிலை) எண் 262, கல்வி, நாள் 29-3-1996-ன்படி மூடிவிடுமாறு அறிவிக்கப்பட்டது. வளர்கல்வி மையங்கள் தொடக்கப்படும்போது மத்திய அரசின் அறிவுரையின்படி தொடர்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். அப்போது தகுதியின் அடிப்படையில் தொடர்பாளர்களை நியமிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

5—

### நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுதல்

***வினா 14036—டாக்டர் ஆ. ஞானசேகரன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியம் கணக்கன்குப்பம் கிராமத்தில் இருக்கும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

வரும் கல்வி ஆண்டில் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரி கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

6—

### கன்னட நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

***வினா 14096—திரு. ச. இராஜ ரெட்டி:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, கர்நாடக எல்லையிலுள்ள கும்மனாபுரம் கிராமத்தில் உள்ள கன்னட நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

நடுநிலைப் பள்ளியை நேரிடையாக மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த இயலாது. வரும் கல்வி ஆண்டில் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமேயானால், உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

7—

### நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

***வினா 14120—திரு. க. மணிவர்மா:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, அண்டம்பள்ளம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1998 நவம்பர் 23

*விடை—*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதி அண்டம்பள்ளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை 1998-99 ஆம் கல்வி ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரிப் பெறப்பட்ட கருத்துரு, உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

*8—*

**பொறியியற் தொழிற்கல்வி தொடங்குதல்**

***வினா 15327—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அரக்கோணம் நகரில் அரசின் சார்பில் பொறியியற் தொழிற்கல்வி (பாலிடெக்னிக்) தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*விடை—*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*9—*

**மின் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம்**

***வினா 7625—திரு. பி. இராசமாணிக்கம்:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கோட்ட மின் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு கட்டப்படுமா?



1998 நவம்பர் 23]

*விடை—*

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாட்டில் மின்வாரிய செயற் பொறியாளர் அலுவலகம் அமைப்பதற்குக் கட்டடம் கட்டப்படவுள்ள இடத்தில் உள்ள மண்ணின் தன்மையறிய மண் பரிசோதனையின் முடிவு மண்டலப் பொறியியல் கல்லூரியிலிருந்து பெறப்பட்டுள்ளது. கட்டடத்தின் மதிப்பீடு தயாரிக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் விரைவில் கோரப்பட உள்ளன.

*10—*

**புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் விவரம்**

***வினா 9555—திரு. இ. கணேசன்:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சாரத் துறையில் 1996-97-ல் புதிய மின் உற்பத்தித் திட்டங்களினால், உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தின் அளவு எவ்வளவு?

(ஆ) ஆம் எனில், அந்த மின் உற்பத்திக்கு சராசரி ஒரு யூனிட்டுக்கு ஆகும் செலவு எவ்வளவு?

*விடை—*

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:***

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் 1996-97 ஆம் ஆண்டில் புதிய மின் திட்டங்கள் எதுவும் இயக்கப்படவில்லை. எனவே, 1996-97-ல் புதிய மின் திட்டங்களால் மின்சாரம் எதுவும் உற்பத்தி செய்யப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

11—

### அனல் மின்சாரம் தொழிற்சாலை தொடங்குதல்

***வினா 12669—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பகுதிகளில் கிடைக்கும் தேங்காய் நார்க் கழிவு மற்றும் தென்னையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு அனல் மின்சாரம் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா?

***விடை—***

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:***

தேங்காய் மட்டை, ஓடு மற்றும் தென்னைக் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் இத்துறையின் பரிசீலனையில் இல்லை. இவ்விதமான மின் நிலையங்களை அமைக்கத் தனியார் நிறுவனங்கள் முன் வருமானால் தமிழக அரசும், தமிழ்நாடு மின்சார வாரியமும் எல்லா உதவிகளும் செய்யத் தயாராக உள்ளன.

12—

### மின்சாரம் சீராக வழங்க நடவடிக்கை

***வினா 13194—திரு. ஆர்.ஆர். சேகரன்:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் காடையாம்பட்டி வட்டாரத்தில் குறைந்த அழுத்த மின்சாரம் விநியோகிக்கப்படுவதால் மின் சாதனங்கள் பழுதுபட்டு விவசாயிகள் பெருத்த நஷ்டமடைவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மின்சாரம் சீராக வழங்க அரசு ஆவன செய்யுமா?



***விடை—***

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:***

(அ) சேலம் மாவட்டத்தில் காடையாம்பட்டி வட்டாரத்தில் குறைந்த அழுத்த மின்சாரம் விநியோகிக்கப்படுவதாகவோ, அதனால் மின்சாதனங்கள் பழுதுபட்டு விவசாயிகள் பெருத்த நஷ்டமடைவதாகவோ, மின் நுகர்வோரிடமிருந்து எவ்விதமான புகார் மனுவும் இதுவரையில் பெறப்படவில்லை.

(ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டாரப் பகுதிக்கு மேட்டூர் மின்விநியோக வட்டம், ஓமலூர் கோட்டத்திற்குட்பட்ட தும்பிப்பாடி துணை மின் நிலையத்திலிருந்து தொப்பூர் 22 கிலோ வோல்ட் மின்னூட்டியின் மூலம் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி காடையாம்பட்டி வட்டாரத்தில் குறைந்த அழுத்த மின்சாரம் விநியோகிக்கப்படுவதாகவோ, அதனால் மின்சாதனங்கள் பழுதுபட்டு விவசாயிகள் பெருத்த நஷ்டமடைவதாகவோ, மின் நுகர்வோரிடமிருந்து எவ்விதமான புகார் மனுவும் இதுவரையில் பெறப்படவில்லை. இருப்பினும், காடையாம்பட்டி வட்டாரத்திற்குட்பட்ட பகுதியில் 1997 ஆம் ஆண்டில் நேரடி ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்ட அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(1) கொங்குப்பட்டி, தொப்பூர் பகுதிகளில் 1 பேஸ் 2 கம்பிகள் இருந்ததை ரூ.85,295 மதிப்பீட்டில் 3 பேஸ் 4 கம்பிகளாக மாற்றப்பட்டு, வீட்டு மின் இணைப்புகள் மற்றும் தெரு விளக்குகளுக்கு மின் விநியோகம் சீராக்கப்பட்டுள்ளது.

(2) கண்டகாப்பட்டி பகுதியில் 50 கே.வி.ஏ. மின் மாற்றி 63 கே.வி.ஏ. திறனுள்ளதாக ரூ.97,740 மதிப்பீட்டில் உயர்த்தப்பட்டு விவசாய மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன.

(3) எனத்தூர் பகுதியில் புதியதாக 63 கே.வி.ஏ. மின் மாற்றி ஒன்று ரூ.2,91,175 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, அப்பகுதியில் விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் விநியோகம் சீராக்கப்பட்டுள்ளது.

(4) சுருட்டப்பட்டி கிராமத்தில் 63 கே.வி.ஏ. மின் மாற்றி ஒன்று ரூ. 2,89,450 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு, விவசாயப் பம்பு செட்டுகளுக்குச் சீரான மின்சாரம் அளிக்கப்பட்டு வருகிறது.

(5) மேலும், கஞ்சநாயக்கன்பட்டி பகுதியில் மின்சாரம் சீராக வழங்குவதற்கும் புதிய 63 கே.வி.ஏ. மின் மாற்றி ஒன்று அமைக்க ரூ.2,26,365 மதிப்பீட்டில் அனுமதி பெறப்பட்டு, மின் மாற்றி அமைப்பதற்கான விஸ்தரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(6) அதேபோன்று, பேனில்பேட்டை கிராமம், பெத்தேல் பாலம் அருகில் புதிய 63 கே.வி.ஏ. மின் மாற்றி ஒன்று ரூ.1,66,545 மதிப்பீட்டில் அமைக்கும் பணி முடிவுற்று அப்பகுதியில் சீரான மின்சாரம் வழங்கப்பட உள்ளது.

(7) நடுப்பட்டி பகுதியில் ஒரு 63 கே.வி.ஏ. மின் மாற்றிக்கு ரூ.1,40,995 மதிப்பீட்டில் அனுமதி பெறப்பட்டு விஸ்தரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே, காடையாம்பட்டி வட்டாரத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சீரான மின்சார விநியோகம் அளிக்கப்பட்டு வருகின்றது.

*13—*

**சிமெண்ட் மின் கம்பம் தயாரிக்கும் மையம் அமைத்தல்**

***வினா 13826—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி துணை மின் நிலையத்தில் சிமெண்ட் மின் கம்பம் தயாரிக்கும் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?**

***விடை—***

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி துணை மின் நிலையத்தில் சிமெண்ட் மின் கம்பம் தயாரிக்கும் மையம் அமைக்கும் உத்தேசம் இல்லை. சேலம் மாவட்டம், எடப்பாடி துணை மின் நிலையம் மேட்டூர் மின் பகிர்மான வட்டத்திற்கு உட்பட்டது. மேட்டூர் மின் விநியோக வட்டத்திற்குத் தேவையான பி.எஸ்.சி. மற்றும் ஆர்.சி.சி. சிமெண்ட் மின் கம்பங்கள் மேட்டூரிலேயே நீண்ட காலமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. மற்றும் பி.எஸ்.சி. 7.5 மீட்டர், 8.0 மீட்டர், ஆர்.சி.சி. 9.14 மீட்டர் கம்பங்கள் மாதம் ஒன்றுக்குச் சராசரியாக 700 தயாரிக்கப்பட்டு வருகிறது. சிமெண்ட் மின் கம்பங்கள் தயாரிப்புக்கும், கம்பங்களின் உறுதிப்பாட்டிற்கான ஊற வைக்கத் தேவையான நல்ல நீர்வளம், ஆண்டு முழுவதும் உள்ளது. மேலும் இந்நிலையில் தயாரிக்கப்படும் சிமெண்ட் மின் கம்பங்கள் இம்மின் விநியோகத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவில் உள்ளது.





*14—*

**மின் அழுத்தக் குறைவைப் போக்குதல்**

***வினா 14336—திரு. கே. ரவி அருணன்:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குலசேகரப்பட்டி கிராமத்திலுள்ள மின் அழுத்தக் குறைவைப் போக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

***விடை—***

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குலசேகரப்பட்டி பகுதிக்கு சுரண்டை 66/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து மேலப்பாவூர் 11 கி.வோ. மின் பாதையின் மூலமாக மின்சாரம் விநியோகிக்கப்படுகின்றது. இதன் ரெகுலேசன் 10.4 சதவீதம். மேலும் குலசேகரப்பட்டி கிராமத்திற்கு மின்சாரம் மேலப்பாவூர் எஸ்.எஸ். 8/63 கே.வி.ஏ., மின் மாற்றி மூலமாக விநியோகிக்கப்படுகின்றது. இக்கிராமத்தில் நிலவிவரும் தாழ் மின் அழுத்தத்தைச் சீர் செய்வதற்கு கூடுதலாக ஒரு 63 கே.வி.ஏ. மின் மாற்றி அமைப்பதற்குத் தேவையான மதிப்பீடு சுமார் ரூ.2,00,000 செலவில் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணி நவம்பர் 1998 இறுதிக்குள் முடிக்கப்பட்டு மின்சாரம் சீர் செய்யப்படும்.

6-A

[1998 நவம்பர் 23

15—

## எம். ஆர். ஐ. ஸ்கேன் வசதி

**வினா 16647—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மருத்துவமனைகளில் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) சென்னையில் உள்ள அரசினர் மருத்துவமனை எதிலும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி இல்லை.

(ஆ) வினா எழாது.

16—

## செவிலியர், தனியார், அரசு பயிற்சிக் கல்லூரிகள் விவரம்

**வினா 16758—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயங்கி வரும் செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் எத்தனை?

(ஆ) தனியார் பயிற்சிக் கல்லூரிகள் எத்தனை?

(இ) அரசு பயிற்சிக் கல்லூரிகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

| | | |
|---|---|---|
| (அ) செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் | — | 28 |
| (ஆ) தனியார் பயிற்சிக் கல்லூரிகள் | — | 27 |
| (இ) அரசு பயிற்சிக் கல்லூரி | — | 1 |



1998 நவம்பர் 23]

17—

## சார்பு அலுவலகம் புதுப்பித்தல்

**வினா 7531—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியிலுள்ள கிராம சார்பு அலுவலகம் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அதைப் புதுப்பித்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மாநிலத்தில் உள்ள பழுதடைந்த சாவடிகளைப் புதுப்பித்துக் கொடுக்கும் நடவடிக்கை ஆய்வில் உள்ளது.

18—

## புயல் மழையினால் ஏற்பட்ட சேதம் விவரம்

**வினா 13791—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996 ஆம் ஆண்டில் புயல் மழையினால் ஈரோடு மாவட்டத்தில் ஏற்பட்ட சேதம் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அது நிதியளவில் எவ்வளவு? மாநில அரசு வழங்கிய நிவாரணம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் 1996 ஆம் ஆண்டு 1-10-1996 முதல் 28-12-1996 வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் 304 மி.மீ. மழையே பெய்துள்ளது. இது இயல்பான மழை அளவான 318

மி.மீ.-ஐக் காட்டிலும் 14 மி.மீ. குறைவாகும். எனவே, 1996 ஆம் ஆண்டில் புயல் மழையினால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக ஈரோடு மாவட்டம் கருத்தில் கொள்ளப்படவில்லை. அதனால் சேத மதிப்பீடு செய்யும் அவசியம் எழவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

*19—*

**வீட்டுமனை வழங்குதல்**

***வினா 13838—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கண்ணந்தேரி கிராமத்திலுள்ள ஏழை மக்களுக்கு வீட்டுமனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கிராமத்தினர் கொடுத்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை நிலுவையில் உள்ளன?

***விடை—***

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கண்ணந்தேரி கிராமம், ச.எண் .102-5, எல்.எப். ரோடு என வகைப்பாடு செய்யப்பட்ட நிலத்தில் 12 குடும்பங்கள் குடிசை போட்டுள்ளனர். பிரஸ்தாப நிலம் நெடுஞ்சாலைத் துறைக்கு, சாலை அமைக்க கல் இருப்பு வைத்துக்கொள்ள ஒப்படைக்கப்பட்டுள்ளதால், இந்நேர்வில் நெடுஞ்சாலைத் துறையினர் நிலத்தை கிராம நத்தமாக நில மாறுதல் செய்ய ஆட்சேபணை தெரிவித்துள்ளனர். தகுதியான வேறு நிலம் தேர்வு செய்து இவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*20—*

**வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்**

***வினா 16013—திரு. குழந்தை தமிழரசன்:*** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) விருத்தாச்சலம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

***விடை—***

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:***

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

*21—*

**வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்**

***வினா 16017—திரு. பி. இராசமாணிக்கம்:*** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலத்தில் (திருவாரூர் மாவட்டம்) வட்டாட்சியர் அலுவலகம் பழுதடைந்து உள்ளதால் புதிய அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு செயல்படுத்தப்படுமா?

***விடை—***

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:***

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

*22—*

**நிவாரண உதவிகள் வழங்குதல்**

***வினா 17556—திரு. ச.க. வெங்கடேசன்:*** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கைச் சீற்றத்தினால் நாடு பாதிப்புக்குள்ளாவதைச் சமாளிக்க நிரந்தரமாக ஒரு நிதியை ஏற்படுத்தி அதன் மூலம் நிவாரண உதவிகள்வழங்க அரசு முன் வருமா?

*விடை—*

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:***

இயற்கை இடர்பாடுகளினால் ஏற்படும் துயர் துடைக்க இயற்கைச் சீற்ற நிவாரண நிதி என்ற நிதியமைப்பை அரசு ஏற்கெனவே ஏற்படுத்தி உள்ளதால் மீண்டும் ஒரு நிரந்தர நிதி ஏற்படுத்தும் அவசியம் இல்லை.

*23—*

**வட்டாட்சியர் குடியிருப்புக்குக் கட்டடம்**

***வினா 17569—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகில், வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

*விடை—*

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:***

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

*24—*

**வருவாய் வட்டாட்சியாளரால் வழங்கப்படும் சான்றுகள்**

***வினா 17605—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வருவாய் வட்டாட்சியாளரால் தற்போது வழங்கப்பட்டுவரும் இருப்பிடச் சான்று, சாதிச் சான்று, வருமானச் சான்று மற்றும் வாரிசுச் சான்று ஆகியவற்றை தற்போது உள்ளபடியே நீடிக்க அரசு முன் வருமா?



*விடை—*

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:***

இருப்பிடச் சான்று, சாதிச் சான்று வருமானச் சான்று மற்றும் வாரிசுச் சான்று ஆகியவை தொடர்ந்து வட்டாட்சியர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

*25—*

**பாலம் கட்டுதல்**

***வினா 3465—திரு. எம். ஆண்டி அம்பலம்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய்ப்பட்டி ஊராட்சி, சக்கிலியான்கோட்டை சாலையில் ஒரு பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

*விடை—*

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) கணவாய்ப்பட்டி ஊராட்சி, சக்கிலியான் கோட்டை சாலையில் நபார்டு திட்டம் மூலம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

*26—*

**தார்ச் சாலைகள் அமைத்தல்**

***வினா 5062—திரு. சி.வெ. கிருஷ்ணன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, குஜிலியாம்பாறை ஒன்றியத்தில் கூடலூர்-திருமக்கம்பட்டி, கூடலூர்-

[1998 நவம்பர் 23

கோட்டநத்தம், விருதலைப்பட்டி-கையித்தியான் கோட்டை, ரெங்கநாதபுரம்-ராஜகவுண்டன்வலசு, புளியமரத்துக் கோட்டை-சக்காம்பட்டி ஆகிய இடங்களில் தார்ச் சாலைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள சாலைகளில் விருதலைப்பட்டி-கையித்தியா கோட்டை சாலை கி.மீ. 0/0 -2/2 வரை மேம்படுத்துவதற்காக ரூபாய் 13.20 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டு வேலை ஒப்புதல் பெறப்பட்டு நடைபெற்று வருகிறது. மற்ற சாலைகளும் செய்து கொடுக்க நிதிநிலை வசதிக்கேற்ப பரிசீலனை செய்யப்படவுள்ளது.

***27—***

**ரோடு அமைத்தல்**

***வினா 5970—திரு. அ. கடலைமுத்து:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதியில் குரங்கனிக்கு மேல் உள்ள மலைப் பிரதேசமான டாப் டேசன் வரை ரோடு அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) இல்லை.



1998 நவம்பர் 23]

***28—***

**தார்ச் சாலைகள் சீரமைத்தல்**

***வினா 6070—திரு. அ. கடலைமுத்து:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதியில் உள்ள தார்ச் சாலைகள் அனைத்தும் குண்டும் குழியுமாக இருப்பதால் இவற்றைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

போடிநாயக்கனூர் தொகுதியில் உள்ள தார்ச் சாலைகள் அனைத்தும் தற்போது சீர் செய்யப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

***29—***

**குளம் மராமத்து செய்தல்**

***வினா 6735—திரு. கே. ரவி அருணன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, தெற்கு மேடு, வடக்கு குறுவன் பத்து குளம் மராமத்து செய்யப்படுமா?

**(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி நிறைவேற்றப்படும்?**

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம் தென்காசி தொகுதி, தெற்கு மேடு வடக்கு குறுவன் பத்து குளம் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விரைவில் வேலை முடிக்கப்படும்.

[1998 நவம்பர் 23

30—

### தார்ச் சாலை அமைத்தல்

***வினா 7013—திரு. இ. கணேசன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் சேலம் மெயின் ரோடிலிருந்து நல்லணம்பட்டி வரை காடையாம்பட்டி வழியாக தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

சேலம் மாவட்டம் எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நல்லணம்பட்டி வழியாக சேலம் ரோடிலிருந்து காடையாம்பட்டிக்குச் செல்லும் சாலை, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிப்பிற்காக, இடங்கணசாலை பேரூராட்சியிடம் 20.1.1998-ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது இச்சாலை பேரூராட்சி வசம் உள்ளதால், 1998-99 நிதியாண்டின் திட்ட ஒதுக்கீட்டில் முன்னுரிமை அளித்து கப்பிச் சாலையை தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

31—

### காவிரி நீர் வழங்குதல்

***வினா 8116— திரு. இ. கணேசன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீருக்காக பூலாம்பட்டி - ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படாத பகுதிகள் எத்தனை?

(ஆ) விடுபட்ட பகுதிகளையும் உடனடியாக அந்த குடிநீர்த் திட்டத்தில் சேர்த்து காவிரி நீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



1998 நவம்பர் 23]

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) 27 கிராமங்கள்.

(ஆ) இக்கிராமங்களுக்கு இருப்பாளி குடிநீர்த் திட்டத்திலிருந்து மிகுதியாக உள்ள நீரைக் கொண்டு குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

32—

### மருகால்குறிச்சியில் தெப்பக்குளம் அமைத்தல்

***வினா 8275— திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றுஉள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, மருகால்குறிச்சியில் தெப்பக்குளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ)மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, மருகால்குறிச்சியில் உள்ள தெப்பக்குளம் ஊராட்சியைச் சார்ந்தது. தெப்பக்குளத்தின் சுற்றுச் சுவர் அமைக்கவும் படிக்கட்டு கட்டவும் உத்தேச மதிப்பீடு ரூ. 2.00 இலட்சம் ஆகும். ஊராட்சியில் நிதி வசதி போதுமானதாக இல்லாததால், தற்போது எதுவும் சீரமைப்பு செய்யும் திட்டம் இல்லை.

33—

### ஊடையம் சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்

***வினா 11521—திரு. மு.பெ. சாமிநாதன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, முத்தூர் ஊடையம் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முத்தூர் பேரூராட்சியைச் சேர்ந்த முத்தூர் ஊடையம் (வழி) மலையத்தாபாளையம், காட்டுப்பாளையம், நாகப்பாளையம் சாலையின் நீளம் 6.200 கி.மீ. தூரமாகும். இச்சாலையை தார்ச்சாலையாக மாற்றியமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.30 இலட்சமாகும். நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையின் மூலம் ஊரகச் சாலை அமைப்புத் திட்டத்தின்கீழ், 1998-99 ஆம் நிதியாண்டில் இச்சாலையின் 3.00 கி.மீ. தூரத்திற்கு தார்ச்சாலை அமைக்க அளவுகள் எடுத்து திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகிறது. இந்த வேலை 31-3-1999க்குள் முடிக்கப்பட்டுவிடும். 1999-2000ஆம் நிதியாண்டில் அரசு மானியம் மற்றும் பேரூராட்சி பொது நிதியிலிருந்து முன்னுரிமை கொடுத்து மீதமுள்ள 3.200 கி.மீ. தூரத்திற்கு தார்ச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

*34—*

**தார்ச்சாலை அமைத்தல்**

***வினா 11522—திரு. மு.பெ. சாமிநாதன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் ஒன்றியம், தொட்டியபாளையத்தில் இருந்து கொட்டம்பாளையம் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெள்ளக்கோவில், தாராபுரம் ஒன்றியம், தொட்டியபாளையத்தில் இருந்து கொட்டம்பாளையம் சாலையில் கி.மீ 0/0 - 1/0 வரை 1997-98 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் தார்ச்சாலை போடப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 கி.மீ. தூரம் 1998-99 வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் தார்ச்சாலையாக மாற்றம் செய்யப்படவுள்ளது.





*35—*

**பாலம் கட்டுதல்**

***வினா 12719—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டையங்காடு கிராமத்தில் கோட்டகம் என்னுமிடத்தில் புதுப்பட்டினம் வாய்க்காலின் குறுக்கே சிறு பாலம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டையங்காடு கிராமத்தில் கோட்டகம் என்னுமிடத்தில் போக்குவரத்திற்காக வண்டிப் பாதையோ சாலையோ கிடையாது. வண்டிப் பாதை இல்லாததாலும், போக்குவரத்திற்கு வழி இல்லாததாலும் பாலம் கட்ட வாய்ப்பில்லை.

*36—*

**பாதை சீரமைத்தல்**

***வினா 13924—திரு. நா. பெரியசாமி:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

**(அ) ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், அணைப்பாளையம் ஊராட்சி, குள்ளாயூரிலிருந்து வெள்ளியம்பாளையம் வரை செல்லும் பாதை சீரமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?**

**(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?**

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், அணைப்பாளையம் ஊராட்சி, குள்ளாயூரிலிருந்து வெள்ளியம் பாளையம் வரை செல்லும் சாலையில் கி.மீ. 0/0-2/0 வரை 1997-98 ஆம் ஆண்டில் 65 சதவிகிதம் ஜவஉறர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.66,215/- மதிப்பீட்டில் சாலை மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது.

*37—*

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

***வினா 13949—திரு. க. மணிவர்மா:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, கொளக்குடி ஊராட்சி, லட்சுமிபுரத்திற்கும், அழகானந்தல் ஊராட்சி பட்டுராமபுரம் பகுதிக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) ஆம்.

(ஆ) 1998-99 ஆம் நிதியாண்டில் இக்குடியிருப்பு களுக்குக் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*38—*

**குடிநீர் வசதி செய்தல்**

***வினா 13958—திரு. க. மணிவர்மா:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூர் ஊராட்சியைச் சேர்ந்த





ஐந்தாப்பாளையம் காலனி பகுதி, மல்லிகாபுரம், வேடங்குளம் ஆகிய குடியிருப்புப் பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) ஆம். 1998-99 ஆம் நிதியாண்டில் இக்குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

*39—*

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

***வினா 13960—திரு. க. மணிவர்மா:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, சு.நல்லூர் காலனி பகுதி, வளசை காலனி பகுதி, பறையம்பட்டு காலனி பகுதி ஆகிய குடியிருப்புப் பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) சு. நல்லூர், வளசை, பறையம்பட்டு ஆகிய காலனிப் பகுதிகளுக்கு வரும் நிதி ஆண்டுகளில் வாரிய முன்னுரிமை அடிப்படையில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற தக்க பரிசீலனை செய்யப்படும்.

**40—**

**பேருந்து நிலையம் அமைத்தல்**

***வினா 14081—திரு. ச. இராஜ ரெட்டி:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் உள்ள சின்ன ஏரியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

தேன்கனிக்கோட்டை பேரூராட்சியில் ஏற்கெனவே பயணிகளுக்கான நிழற்குடையுடன் கூடிய எட்டு பேருந்துகள் நிற்பதற்கான ஒரு 'சி' வகுப்பு பேருந்து நிலையம் இயங்கி வருகிறது. பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அருகிலுள்ள சின்ன ஏரி என்ற இடத்தில் சர்வே எண் 165/1-ல் 2.08 ஹெக்டேர் நிலத்தை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**41—**

**நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

***வினா 14288—திரு. கே. ரவி அருணன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், ஆவிடையானூர் ஊராட்சி, பொடியனூர் ராமர்கோவில் தெருவிலுள்ள கிணற்றினை ஆதாரமாகக் கொண்டு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) வரும் நிதி ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் திட்டம் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**42—**

**நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

***வினா 14300—திரு. கே. ரவி அருணன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூர் ஊராட்சி, சுப்பிரமணியபுரம் ராஜீவ் காலனி, வெண்ணியூர் பகுதிகளுக்கென மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

***விடை—***

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) இக்குடியிருப்புக்கு ஏற்கெனவே 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு, போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**43—**

**குழாய் பணியாளர்கள் பணி நிரந்தரம்**

***வினா 14572—திரு. சி. ஞானசேகரன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சியில் தற்காலிகமாக வேலை செய்யும் குழாய் பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்களா?

74

[1998 நவம்பர் 23

**விடை—**

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்ட பராமரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள தினக்கூலி/தொகுப்பூதிய பணியாளர்களை ஒழுங்கு செய்வது குறித்து பொதுவான செயற்குறிப்பு அரசால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இச்செயற்குறிப்பின்மீது அரசால் பிறப்பிக்கப்படவுள்ள ஆணை சத்துவாச்சாரி பேரூராட்சியில் குழாய் பணியாளர்களாக தற்காலிகமாக பணியாற்றுபவர்களுக்கும் பொருந்தும்.

**44—**

**பம்ப் ஆப்பரேட்டர்கள் பணி நிரந்தரம்**

***வினா 14573—திரு. சி. ஞானசேகரன்:*** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேரூராட்சியில் தற்காலிகமாக பல ஆண்டுகளாகப் பணியாற்றும் பம்ப் ஆப்பரேட்டர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்களா?

**விடை—**

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்ட பராமரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள தினக்கூலிப் பணியாளர்களை ஒழுங்கு செய்வது குறித்து செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இச்செயற்குறிப்பின்மீது அரசால் வெளியிடப்பட உள்ள ஆணை சத்துவர்ச்சாரி பேரூராட்சியில் தற்காலிகமாகப் பம்ப் ஆப்பரேட்டர்களாகப் பணியாற்றுபவர்களுக்கும் பொருந்தும்.

**45—**

**ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம்**

***வினா 13629—திரு. பெ.சு. திருவேங்கடம்:*** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 23]

(அ) ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம், இந்த ஆண்டு புதிய குறுகிய நெல் விதைகளை வெளியிட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

**விடை—**

***மாண்புமிகு திரு. எஸ். வீரபாண்டி ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:***

(அ) ஆம்.

(ஆ) ஏடி 93013 என்ற குறுகிய கால நெல் ரகம், 8-1-1998 அன்று நடைபெற்ற உழவர் தின விழாவில் ஏடிடீ 43 (ஆடுதுறை 43) என்ற புதிய ரகமாக வெளியிடப்பட்டது.

இந்த ரகத்தின் குணாதிசயங்களாவன:—

(1) குறைந்த வயது (110 நாட்கள்)

(2) அதிக தூர் கட்டும் திறன்

(3) நடுத்தர சன்ன வெள்ளை அரிசி

(4) அதிக மாவுப் பொருள்

(25 விழுக்காடுக்கு மேல் அமிலோஸ்)

(5) அதிகமாக நீளும் தன்மை (1.72 மடங்கு)

(6) அதிக சாதம் காணும் திறன் (4.6 மடங்கு)

(7) பச்சை தத்துப் பூச்சிக்கு எதிர்ப்புத் திறன்

*பட்டம்:* சொர்னவாரி/கார்/ குறுவை (ஏப்ரல்—ஜூலை விதைப்பு)

*மகசூல்:* 5.9 டன்/எக்டர் (6—6.5 சதவீதம் அதிக விளைச்சல் ஐ ஆர். 50, ஏடிடீ 36, ஏ எஸ் 4—1 சி-ஐ விட)

*பயரிட உகந்த மாவட்டங்கள்:*

கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களைத் தவிர தமிழகமெங்கும்.

46—

### வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

***வினா 14639—டாக்டர் ஆ. ஞானசேகரன்:*** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசனைத் திரவியத்தை தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:***

தமிழ்நாட்டில் வாசனைத் திரவிய தொழிற்சாலைகள் தனியார் துறையினரால் நடத்தப்படுகின்றன. வாசனைத் திரவிய தொழிற்சாலைகள் ஏதும் அமைப்பதுபற்றி அரசின் பரிசீலனையில் இல்லை.

47—

### பழத்தோட்டம் உற்பத்தி விவரம்

***வினா 16268—திரு. டி. மணி:*** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், கொட்டாரத்தில் செயல்படும் பழத்தோட்டம் 1997-98 இல் எவ்வளவு உற்பத்தி செய்தது?

(ஆ) இதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் எவ்வளவு?

***விடை—***

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:***

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கொட்டாரத்தில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 1997-98 இல் சுமார் 3.45 இலட்சம் பழச்செடிகள் மற்றும் பொருளாதாரச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டன.





இதில் முக்கிய பழப் பயிர்களான மா ஒட்டுச் செடிகளில் 0.625 இலட்சம் எண்களும், கொய்யா 0.255 இலட்சம் எண்களும், 2.062 இலட்சம் இதர பழச் செடிகளும், 0.408 இலட்சம் பொருளாதார பழச் செடிகளும், 0.100 இலட்சம் அலங்காரச் செடிகளும் உற்பத்தி செய்யப்பட்டன.

(ஆ) 1997-98 இல் அரசு தோட்டக்கலைப் பண்ணையில் சுமார் ரூ.15.00 இலட்சம் செலவிடப்பட்டு, ரூ.18.39 இலட்சம் வருவாயாக பெறப்பட்டுள்ளது.

48—

### கால்வாய் அகலப்படுத்தும் திட்டம்

***வினா 10749—திரு. வி.கே. லட்சுமணன்:*** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் கங்கனூர் பள்ளத்திலிருந்து சின்னவேடம்பட்டி குளத்திற்குச் செல்லும் ஊட்டுக் கால்வாய் எப்பொழுது அகலப்படுத்தப்படும்?

***விடை—***

***மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:***

சின்னவேடம்பட்டி திட்டம், அணை, அணைக்கட்டு நீர்த்தேக்கம் ஊட்டுக் கால்வாய் என அதன் பல்வேறு கூறுகள் அரசின் பொதுப்பணித் துறை மூலம் ஒப்பளிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டுள்ளது. அதன்படி நீர்த்தேக்கம் 27.58 மில்லியன் கன அடி கொள்ளளவும் ஊட்டுக் கால்வாயின் திறன் (carrying capacity) 195 கன அடி/வினாடிக்கு என்றளவில் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கணுவாய் அணைக் கட்டிலிருந்து பிரியும் இவ்வூட்டுக் கால்வாய் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 40 மணி நேர அவகாசத்தில் நீரைக்கொண்டு சென்றாலே நீர்த்தேக்கம் நிரம்பிவிடும். அணைக்கட்டு தளத்தில் உள்ள மணல்போக்கி ஷட்டர்கள் மற்றும் கால்வாய் ஷட்டர்கள் ஆகியவைகளை முறைப்படி இயக்கி மழைக்காலத்தில் தேவையான நீரை இந்த நீர்த்தேக்கத்திற்குக் கொண்டு செல்லலாம். எனவே, மேற்காணும் சூழ்நிலையில் இந்த ஊட்டுக் கால்வாயை அகலப்படுத்தும் திட்டம் தேவையில்லை.

*49—*

## விவசாயத்திற்குப் பாசன வசதி அளித்தல்

***வினா 11274—திரு. மா. இராமச்சந்திரன்:*** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கிளாமங்கலம் மேடையகொல்லை கிராம மத்தியில் ஓடும் காட்டாற்று தண்ணீரைத் தேக்கி விவசாயத்திற்குப் பயன்படுத்த அரசு முன்வருமா?

*விடை—*

***மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:***

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கிளாமங்கலத்திற்கும் பட்டுக்கோட்டை வட்டம், மேதையன் கொல்லை இரு ஊர்களுக்கும் இடையே ஓடும் நசவினி ஆற்றின் குறுக்கே தண்ணீரைத் தேக்கி அணை கட்டி இறைவைப் பாசனம் மூலம் விவசாய நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் பொருட்டு திட்ட மதிப்பீடு ஒன்று ரூ.59.00 இலட்சத்திற்கு (1995-96 விலைப்படி) தயாரிக்கப்பட்டு தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

*50—*

## இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டுத் திட்டம்

***வினா 1227—திரு. கே. சுப்பராயன்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பலதரப்பட்ட பகுதியினருக்கு வழங்கப்படும் இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டு (Bus Pass) திட்டத்தால் போக்குவரத்துத் துறைக்கு வருடத்தில் ஏற்படும் இழப்பு எவ்வளவு?

(ஆ) அதை ஈடு கட்ட மாநில அரசு இழப்பை ஏற்றுக்கொள்ளுமா?





*விடை—*

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

(அ) பலதரப்பட்ட பகுதியினருக்கு வழங்கப்படும் இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டு (Bus Pass) திட்டத்தில் போக்குவரத்துத் துறைக்கு 1995-96 ஆம் வருடத்தில் ரூ.4046.18 இலட்சங்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(ஆ) போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் மாணவர் பயணச் சலுகை இழப்பில் 70 சதவீத உபயோகத்தில் 80 சதவீதத்தை அரசு ஏற்கிறது. 20 சதவீதத்தை அந்தந்தப் போக்கு வரத்துக் கழகங்கள் மேற்கொள்கின்றன. ஊனமுற்றோர் மற்றும் பார்வையற்றோருக்கு அளிக்கப்படும் 100 சதவீதம் பயணச் சலுகையினால் ஏற்படும் இழப்பினை அரசு ஈடு செய்கின்றது. மேலும், தெரிவு செய்யப்பட்ட நாடகக் குழுவினருக்கு அளிக்கப் படும் 50 சதவீதம் இலவசப் பயணச் சலுகையினால் ஏற்படும் இழப்பினை அரசு ஈடு செய்கின்றது. மேலும், சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் மொழி மற்றும் எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களுக்கு அளிக்கப்படும் 100 சதவீதம் பயணச் சலுகை இழப்பினையும் போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு ஈடு செய்து வருகின்றது.

*51—*

## புதிய பேருந்துகள் இயக்கும் விவரம்

***வினா 6084—திரு. வீ. தமிழ்மணி:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டில் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் எத்தனை புதிய பேருந்துகள் வாங்க அரசு உத்தேசித்துள்ளது?

(ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்திற்கு எத்தனை புதிய பேருந்துகள் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளது?

(இ) செங்கல்பட்டு, கல்பாக்கம் பணிமனைகளுக்கு எத்தனை புதிய பேருந்துகள் ஒதுக்கப்படும்?

[1998 நவம்பர் 23

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97-ல் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் 1,391 பேருந்துகள் வாங்கி இயக்கப்பட்டன.

(ஆ) 1996-97 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு போக்கு வரத்துக் கழகத்தால் காஞ்சிபுரத்திற்கு 71 புதிய பேருந்துகளை வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(இ) செங்கல்பட்டு பணிமனைக்கு 10 புதிய பேருந்துகளும், கல்பாக்கம் பணிமனைக்கு 7 புதிய பேருந்துகளும் ஒதுக்கப்பட்டன.

**52—**

## நகரப் பேருந்துகளை மாருதி நகர் வழியாக இயக்குதல்

**வினா 8837—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்துவாச்சாரி பேரூராட்சி, தெற்கு நிழல் மரச்சாலை (சவுத் அவின்யூ) வழியாகச் செல்லும் அனைத்து நகரப் பேருந்துகளையும் மாருதி நகர் வழியாக இயக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சத்துவாச்சாரி பேரூராட்சி மாருதி நகர் தெற்கு நிழல் மரச் சாலையிலிருந்து நடக்கும் தூரத்திலேயே உள்ளது. மாருதி நகர் சாலைகள் யாவும் குறுகிய சாலைகளாக இருப்பதால் பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை. மேலும் அடர்த்தியான குடியிருப்புகள் உள்ள பகுதியாகும். எனவே, அவ்வழியாக பேருந்து இயக்குவது உசிதமல்ல.



1998 நவம்பர் 23]

**53—**

## நகரப் பேருந்தை மீண்டும் இயக்குதல்

**வினா 9404—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரத்திலிருந்து வடரங்கம் மாதிரவேலூர் வரை சென்று வந்த சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுவிட்டதை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சிதம்பரம்-புத்தூர்-வடரங்கம் தடத்தில் முன்பு 8 நடைகள் நகரத் தடம் எண் 1-ன் மூலம் இயக்கப்பட்டது. இந்நடைகளை மக்கள் போதிய அளவிற்குப் பயன்படுத்தாத காரணத்தால், இவ்வியக்கம் ஜனவரி 1995 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது.

மாதிரவேலூர் மக்கள் பயன்பெறும் வகையில் 3-1-1997 முதல் சீர்காழி—புத்தூர், மதகடி—மாதிர, வேலூர், வடரங்கம் தடத்தில் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. சீர்காழி—வடரங்கம் வழி பணங்காட்டாங்குடி தடத்தில் நகரத் தடம் எண் 8 மற்றும் 8ஏ-ன் மூலம் 28 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கை தடத்தில் மக்கள் பயன்பாடு குறைவாகவே உள்ளது. தற்போதுள்ள பேருந்து வசதியினை வடரங்கம் மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**54—**

## நகரப் பேருந்தை இயக்குதல்

**வினா 9405—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியிலிருந்து பொறையார் வரை சென்று வருகின்ற நகரப் பேருந்தை பழையபடி அனைத்து முறையும் இயக்கப்பட அரசு ஏற்பாடு செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பொறையார்—சீர்காழி தடத்தில், முன்பு நகரத் தடம் எண் 12-ன் மூலம் 12 நடைகள் இயக்கப்பட்டன. இந்நடைகளில் போதிய அளவு மக்கள் பயன்பாடு இன்மையால் இவ்வியக்கம் நிறுத்தப்பட்டது. எனினும் 7-12-1996 அன்று கும்பகோணத்தில் நடைபெற்ற போக்குவரத்து மற்றும் சாலை மேம்பாடு ஆய்வுக் கூட்ட முடிவின்படி 3-1-1997 முதல் நகரத் தடம் எண் 19-ன் மூலம் இத்தடத்தில் 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் இந்நகரப் பேருந்து மூலம் சீர்காழி-வடரங்கம் தடத்தில் 4 நடைகளும், சீர்காழி-மயிலாடுதுறை வழி சேத்தூர் பொன்மாசநல்லூர் தடத்தில் 4 நடைகளும் இயக்கப்படுகின்றன.

பொறையார்-சீர்காழி தடத்தில் கழக புறநகர் பேருந்துகள் 13-ன் மூலம் 57 நடைகள் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகள் அனைத்து நிறுத்தங்களிலும் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன. தற்சமயம் இயங்கும் நடைகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

**55—**

**சீர்காழியிலிருந்து மயிலாடுதுறைக்குப் பேருந்து வசதி**

**வினா 9406—திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியிலிருந்து கொண்டல், ஆதமங்கலம், பட்டவர்த்தி வழியாக மயிலாடுதுறை சென்று வந்த சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து திடீரென்று நிறுத்தப்பட்டு விட்டதால் அதை முன்போல் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடத்தில் பேருந்து இயக்கப்பட்டு போதிய மக்கள் பயன்பாடு கிட்டாமல் ஜூலை 1995 முதல் நிறுத்தம் செய்யப்பட்டது. கோரிக்கை தடத்தின் நீளம் 32 கி.மீ. ஆகும். இத்தடத்தில் கொண்டல் முதல் தலைஞாயிறு பட்டவர்த்தி வரை 6 கி.மீ. பகுதி மட்டுமே பேருந்து வசதி பெறாத பகுதி ஆகும். இந்த 6 கி.மீ. தூரம் சாலை தார்ச் சாலையாக இருப்பினும் குறுகிய வளைவுகள் உடைய சாலையாக உள்ளது.





இச்சாலையில் கரும்பு அறுவடை சமயங்களில் கரும்பு ஏற்றும் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் பேருந்து மாறிச் செல்ல இயலாமல் பேருந்து இயக்கம் தடைபடுகிறது. சாலையினை அகலப்படுத்தி சீர்செய்து தர கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறைக்குக் கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது. சாலை அகலப்படுத்தப்பட்டவுடன் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**56—**

**ஒட்டன்சத்திரத்திலிருந்து பாச்சலூருக்குக் கூடுதல் பேருந்து**

**வினா 9415—திரு. ஆர். சக்கரபாணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டன்சத்திரத்திலிருந்து பாச்சலூருக்குக் கூடுதலாகப் பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பெரியகுளம்—ஒட்டன்சத்திரம் (வழி) பத்து, பண்ணைக்காடு மற்றும் பாச்சலூர் வழித் தடத்தில் 3-8-1997 முதல் கூடுதலாக ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி இயக்கத்தின் மூலம் ஒட்டன்சத்திரம் பாச்சலூர் தடத்தில் 4 தனி நடைகள் கூடுதலாகப் பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**57—**

**பழனியிலிருந்து கொடுமுடிக்குக் கூடுதல் பேருந்து இயக்குதல்**

**வினா 9416—திரு. ஆர். சக்கரபாணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனியிலிருந்து கொடுமுடிக்கு கள்ளமந்தயம் வழியாகக் கூடுதலாகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 நவம்பர் 23

*விடை—*

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

பழனி-கொடுமுடி வழி கள்ள மந்தையம் வழித்தடம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல் மற்றும் ஈரோடு ஆகியவைகளின் இயக்கப் பகுதிக்கு உட்பட்ட வழித்தடமாகும். இத்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், ஈரோடு மூலம் 8 தனி நடைகள் மிகக் குறைவான 45 சதவிகிதப் பயணிகள் இருப்பு விகித அளவில் இயக்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட பேருந்து வசதி நீங்கலாக கோரிக்கையில் உள்ள வழித்தடத்தில் பகுதி வாரியாக நகர மற்றும் புறநகர் போக்குவரத்து வசதிகள் உள்ளன. எனவே தற்சமயம் இயங்கும் மேற்கண்ட 8 தனி நடைகள் மற்றும் பகுதி வாரியாக உள்ள பேருந்து வசதிகளே பழனி-கொடுமுடி வழி கள்ள மந்தையம் தடத்திற்குப் போதுமானதாகும்.

எனவே, கூடுதலான பேருந்துகள் இயக்க வேண்டிய நிலமை நிலவவில்லை.

*58—*

**புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குதல்**

***வினா 9417—திரு. ஆர். சக்கரபாணி:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லிலிருந்து உடுமலைப்பேட்டைக்கு இடையகோட்டை, கள்ள மந்தையம், கீரனூர், தாழையூத்து ஆகிய ஊர்கள் வழியாக புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

*விடை—*

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல்-உடுமலைப்பேட்டை, வழி



1998 நவம்பர் 23]

இடையகோட்டை, கள்ள மந்தையம், கீரனூர், தாழையூத்து (தாளையம்) ஒரு சுற்று வழித்தடமாகும். இந்த வழித்தடத்தின் தூரம் 110.8 கி.மீ. ஆகும். திண்டுக்கல்-உடுமலை (வழி) ஒட்டன்சத்திரம், பழனி வழித்தடத்தின் தூரம் 93.5 கி.மீ. ஆகும். நேர் வழித்தடத்தில் 36 தனி நடைகள் இயங்கி வருகின்றன. கோரிக்கையில் உள்ள வழித்தடம் பகுதி வாரியாக நகர மற்றும் புறநகர் பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவை நீங்கலாக, கோரிக்கையில் உள்ள வழித்தடத்தில் உள்ள திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழனி, தாழையூத்து (தாளையம்) ஆகிய ஊர்கள் அனைத்தும் போதிய போக்குவரத்து வசதி பெற்று இணைக்கப்பட்டுள்ளன. கோரிக்கையில் உள்ள வழித்தடத்தில் உள்ள ஊர் பொது மக்கள் திண்டுக்கல்-உடுமலை (வழி) ஒட்டன்சத்திரம், பழனி ஆகிய வழித்தடம் வந்தடைந்து பயணம் செய்வதையே பெரிதும் விரும்புகின்றனர்.

*59—*

**கூடுதல் அரசுப் பேருந்து இயக்குதல்**

***வினா 12631—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பெருமகளூரிலிருந்து பேராவூரணிக்கு கூடுதல் அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

பேராவூரணி-பெருமகளூர் வழித்தடத்தில் நகரப் பேருந்து பத்து நடைகள் இயக்கப்படுகின்றன. தனியார் புறநகர் பேருந்துமூலம் 24 நடைகள் இயக்கப்படுகின்றன. 7-8-1997 முதல் பெருமகளூர், ரெட்டவயல், கழனிவாசல் மற்றும் பேராவூரணி வழியாக திருச்சி வரை புதிய பேருந்து ஒன்று இயக்கப்படுகிறது. ஆகவே, இத்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்க வேண்டிய தேவை நிலவவில்லை.

[1998 நவம்பர் 23

60—

## கூடுதல் அரசுப் பேருந்துகள் இயக்குதல்

**வினா 13587—திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், தக்கலை-நாகர்கோவில்-திங்கள்சந்தையில் மக்கள் நெருக்கடி அதிகமாக உள்ளதால் அரசு பேருந்து விட ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகர மற்றும் புறநகர் தட பேருந்துகளில் நாளொன்றிற்கு 77 பேருந்துகளில் 654 நடைகள் நாகர்கோவிலிலிருந்து திங்கள்சந்தைக்கு நேர்வழி மற்றும் சுற்று வழிகள் மூலம் போக்குவரத்து வசதி ஏற்கெனவே இருந்து வருகிறது. இதுபோல் நாகர்கோவிலிலிருந்து தக்கலை மற்றும் அதன் வழியாக நாளொன்றிற்கு நகர மற்றும் புறநகர் தட பேருந்துகள் மூலம் 856 நடைகள் 121 பேருந்துகளில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்படி பேருந்துகளின் சராசரி பயணி விகிதாச்சாரம் 55 சதவீதமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. எனவே, தற்போது அதிகப்படியான பேருந்துகள் இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

61—

## தளியிலிருந்து சென்னைக்கு பேருந்து வசதி

**வினா 14080—திரு. ச. இராஜ ரெட்டி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளியிலிருந்து சென்னைக்கு பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) தளி தொகுதி, தேன்கனிக் கோட்டையில் உள்ள அரசுப் போக்குவரத்துப் பணிமனையில் உள்ள அனைத்துப் பேருந்துகளும் பழுது அடைந்து உள்ளதால் அவற்றை மாற்ற அரசு ஆவன செய்யுமா?



1998 நவம்பர் 23]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்துக் கழகம் (தமிழ்நாடு கோட்டம் 1) வழித்தடம் 421 ஓசூரிலிருந்து சென்னைக்கு 8 பேருந்துகள் 16 ஒரு வழிப்பாதை பயணமாக இயக்கப்பட்டு வருகின்றன. ஓசூரிலிருந்து தளி 27 கி.மீ. தொலைவில்தான் உள்ளது. ஆகவே, தளியைச் சார்ந்த பயணிகளும் ஓசூர் வந்து தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(ஆ) தேன்கனிக்கோட்டை கிளையில் இயங்கி வரும் பேருந்துகளின் பழுதுகள் நீக்கப்பட்டு தற்போது அனைத்து பேருந்துகளும் நல்ல முறையில் இயக்கப்பட்டு வருகின்றன.

62—

## பேருந்து வசதி செய்தல்

**வினா 14088—திரு. ச. இராஜ ரெட்டி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதியில் தேன்கனிக்கோட்டையிலிருந்து உரிகம் மற்றும் நாட்ராம்பாளையம் ஊராட்சிகளுக்கு தேன்கனிக் கோட்டையிலிருந்து பிதிரெட்டி, பேவநத்தம் கிராமங்களுக்கு காமாயர், காரப்பள்ளி வழியாக கூட்டூர் செல்ல போதுமான பேருந்து வசதி இல்லை என்று அரசுக்குத் தெரியுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தேன்கனிக்கோட்டையிலிருந்து காமாயர் காரப்பள்ளி கூட்டூர், பிதிரெட்டி வழியாக பேவநத்தம் 33 கிலோ மீட்டர்கள் தூரத்தில் உள்ளது. இத்தடத்தில் கூட்டூர் கிராமம் தவிர மற்ற அனைத்து கிராமங்களும் நகர்ப் பேருந்து வசதி பெற்றுள்ளன. கூட்டூர் கிராமம் தற்போது பேருந்து வசதியுள்ள கூட்டூர் கிராமிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. மேலும் இத்தடத்தில் பகுதி வாரியாக

[1998 நவம்பர் 23

அதாவது தேன்கனிக்கோட்டையிலிருந்து காமாயர், காரப்பள்ளி, கெலமங்கலம் வழியாக உத்தனப்பள்ளி வரை 6 நடைகளும் மற்றும் தேன்கனிக்கோட்டையிலிருந்து கௌதாளம் பிதிரெட்டி வழியாக பேவநத்தத்திற்கு 8 நடைகளும் நகரப் பேருந்து தடம் எண் 34 இயங்கி வருகின்றது. தேன்கனிக்கோட்டையிலிருந்து கௌதாளம் வழியாக கெலமங்கலம் வரை மூன்று நகரப் பேருந்துகள் 34 நடைகள் இயங்கி வருகின்றன.

மேற்படி தடத்தின் நீளம் 30 கிலோ மீட்டருக்கு அதிகமாக உள்ள காரணத்தாலும், இத்தடம் முழுவதும் நகரப் பேருந்து தனித் தனியாக இயங்கி வருகின்ற காரணத்தாலும், தற்போதுள்ள அரசு ஆணைப்படி இத்தடத்தில் நேரடி நகரப் பேருந்து இயக்கிட இயலாது. மேலும், ஏற்கெனவே பகுதிவாரியாக இயங்கி வரும் நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் கொள்ளளவு 43 விழுக்காடுதான் உள்ளது. கோரப்பட்டுள்ள தடம் சுற்றுத் தடமாக உள்ள காரணத்தாலும், பயணிகளின் கொள்ளளவு மிகவும் குறைவாக உள்ள காரணத்தாலும், பேருந்து இயக்கிட வாய்ப்பு கிடையாது.

*63—*

**புதிய பேருந்துகளை இயக்குதல்**

***வினா 14390—திரு. செங்கை சிவம்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகரிலிருந்து இயங்கும் பழுதடைந்த பழைய மாநகரப் பேருந்துகளை மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டிலே புதிய பேருந்துகள் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*விடை—*

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகரிலிருந்து 32 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இயக்கப்படும் பேருந்துகள் சீராக பழுது பார்த்து இயக்கப்படுகின்றன.



1998 நவம்பர் 23]

மிகப் பழைய பேருந்துகள் யாவும் கழிவு செய்யப்பட்டுவிட்டன. தற்பொழுது இயக்கப்படும் பேருந்துகளின் விவரம்:

| | | |
|---|---|---|
| புதிய பேருந்துகள் | - | 10 |
| கூண்டு புதுப்பிக்கப்பட்டது | - | 10 |
| கூண்டு பழுது பார்க்கப்பட்டது | - | 12 |
| மொத்தம் | - | 32 |

*64—*

**பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம்**

***வினா 14401—திரு. செங்கை சிவம்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மகாகவி பாரதி நகர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

*விடை—*

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

*65—*

**நகரப் பேருந்துகள் இயக்குதல்**

***வினா 14537—திரு. சி. ஞானசேகரன்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் வேலூர் நகரில் சைதாப்பேட்டை, சலவன்பேட்டை, வேலப்பாடி, ராமநாயக்கன் பாளையம், கஸ்பா, வசந்தபுரம் பகுதிகளுக்கு நகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

84

***விடை—***

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

வேலூர் நகரில் தற்போது சலவன்பேட்டை, சார்பனா மேடு, வேலப்பாடி வழியாக 6 நடைகளும், வசந்தபுரம் கஸ்பா, ராமநாயக்கன்பாளையம் பகுதிக்கு 8 நடைகளும் நகரப் பேருந்துகள் இயங்கி வருகின்றன.

***66—***

**பொறியியல் கல்லூரிக்குக் கூடுதல் நகரப் பேருந்து**

***வினா 14589—திரு. சி. ஞானசேகரன்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் பொறியியல் கல்லூரிக்கு நகரப் பேருந்துகளை அதிகமாக விட அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

வேலூர் பொறியியல் கல்லூரிக்கு தற்போது அலமேலு மங்காபுரத்திலிருந்து இரண்டு பேருந்துகளும் பாகாயம் பகுதியிலிருந்து ஒரு பேருந்தும் காலை, மாலை, கல்லூரி நேரத்திற்கு ஏற்ப இயங்கி வருகின்றன. மேலும் வேலூரிலிருந்து பொறியியல் கல்லூரி வழியாக நகரப் பேருந்துகள் தினசரி 48 நடைகள் இயங்கி வருகின்றன. இது தவிர காட்பாடியிலிருந்து பொறியியல் கல்லூரி வழியாக 44 நடைகளும் மொத்தம் 104 நடைகள் தினசரி கல்லூரி வழியாக இயக்கப்படுகின்றன. எனவே, கூடுதலாக நகரப் பேருந்துகளை இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

***67—***

**நகரப் பேருந்து நீட்டித்து இயக்குதல்**

***வினா 14600—திரு. சி. ஞானசேகரன்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





பாகாயம் முதல் அழகிரி நகர் வரை ஓடும் நகரப் பேருந்தை பேங்க் காலனி வதூர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

பேங்க் நகர் காலனி வதூர் பகுதி, வேலூர்-ஆற்காடு பிரதான சாலையில் அலமேலுமங்காபுரத்தையடுத்து 1.4 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. அழகிரி நகர் அலமேலு மங்காபுரத்திலிருந்து 400 மீட்டர் தூரத்தில் பிரதான சாலையிலிருந்து பிரிந்து 1.00 கி.மீ. உள்ளடங்கி இருக்கிறது.

கோரிக்கையின்படி அழகிரி நகர் வரை வரும் பேருந்தை பேங்க் நகர் காலனி வதூர் வரை நீட்டித்து இயக்கினால் ஏற்கெனவே பயன் பெற்றுவரும் அழகிரி நகர் மக்கள் பாதிக்கப்படுவார்கள். மேலும், பேங்க் நகர், வதூர் பகுதி மக்கள் பயனடையும் வகையில் ஆற்காடு, வேலூர் மற்றும் பாகாயம் செல்ல 15 நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 160 நடைகள் இயக்கப்படுகின்றன. அழகிரி நகர் மக்களுக்கு அந்த ஒரு பேருந்து மட்டுமே பயன்படுவதால், அப்பேருந்தை பேங்க் நகர், வதூர் வரை நீட்டித்து இயக்குவது சாத்தியமில்லை.

***68—***

**அரசுப் பேருந்தை அலுவலக வளாகத்தில் நிறுத்திச் செல்லுதல்**

***வினா 14602—திரு. சி. ஞானசேகரன்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம்—சென்னை தடம் எண் 145 அரசுப் பேருந்து வேலூர் பொறியியல் கல்லூரி வழியாகச் செல்வதால் அதனைக் கல்லூரி வளாகத்தில் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

வேலூர் வழியாக சென்னை-குடியாத்தம் இயங்கும் மாவட்ட தடம் எண் 145 பேருந்துகளை வேலூர் பொறியியல் கல்லூரி பேருந்து

[1998 நவம்பர் 23

நிறுத்தத்தில் இனி வரும் காலங்களில் நின்று செல்ல உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

*69—*

**போக்குவரத்துப் பேருந்துகள் பழுது பார்க்க நடவடிக்கை**

***வினா 14638—டாக்டர் ஆ. ஞானசேகரன்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சரிவர சுத்தம் செய்யப்படாமலும், சிறிய பழுதுகள் நிவர்த்தி செய்யப்படாமலும் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

*விடை—*

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் சரிவர சுத்தம் செய்யப்பட்டும், பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்ட பின்பும்தான் தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. பேருந்துகளின் தினசரி பராமரிப்புப் பணியின்போது சிறிய பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்ட பின்பு அவை மேற்பார்வையாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு அதன் பின்பு மேற்பார்வையாளர்களால், அடுத்தநாள் இயக்கத்திற்கான லாக் சீட்டில் கையொப்பமிடப்பட்டு, பேருந்து, தடத்தில் இயக்குவதற்கு அனுப்பப்படுகிறது.

மேலும், பேருந்து தடத்தில் இயக்குவதற்காக பணிமனையில் இருந்து வெளியே வரும்பொழுது பாதுகாவலர்களால் வாயிலில் வைத்து ஆய்வு செய்யப்பட்டு, நன்கு சுத்தம் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்து பின்னரே தடத்தில் இயக்க அனுப்பப்படுகிறது.

மெயின் கேட்டில் காவலர் பேருந்து சரிவர சுத்தம் செய்யப்படாமல் வந்தால் கிளை மேற்பார்வையாளர் மற்றும் கிளை மேலாளர் கவனத்திற்குக் கொண்டு சென்று உடன் பேருந்து சுத்தம் செய்து அனுப்பப்படுகிறது.



1998 நவம்பர் 23]

அன்றாடம் ஒவ்வொரு பேருந்து ஓட்டுனர்களுக்கும் வழங்கப்படும் லாக் சீட்டுக்கள் மூலம் தினசரி பழுதுகள் குறிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகின்றன. மூன்று தினங்கள் பேருந்தில் குறைபாடுகள் தொடர்ந்து இருப்பின் கிளை மேலாளரால் சரி செய்யப்படுகிறது. மேலும், தலைமையகத் தொழில்நுட்ப ஆய்வாளர்கள் மூலமும் பேருந்து வேலைகள் அறிந்து அப்பழுதுகள் சரி செய்யப்படுகின்றன. மேலும், தானியங்கி இயந்திரத்தின் மூலமும் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது.

*70—*

**கூடுதலாகப் பேருந்துகள் இயக்குதல்**

***வினா 14675—திரு, ச.க. வெங்கடேசன்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டிலிருந்து மதுராந்தகம் கடலூருக்கு இயக்கப்படும் பேருந்துகள் மிகவும் பழுதடைந்துள்ளதாலும், போதிய எண்ணிக்கை இன்மையாலும், அவற்றைப் பழுது பார்த்து கூடுதலாகப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

தற்பொழுது, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தால் (காஞ்சிபுரம்) செங்கல்பட்டிலிருந்து மதுராந்தகம், கடலூர் கிராமத்திற்கு மதுராந்தகம் வழியாக தடம் எண் 85 மூலம் 6 நடைகள் இயக்கப்படுகின்றன. அதேபோல் தடம் எண் 212 எம் மூலம் சென்னையிலிருந்து மரக்காணத்திற்கு கடலூர் கிராமம் வழியாக 2 நடைகளும் இயக்கப்படுகின்றன. இவை, அனைத்தும் தினசரி எந்தவித தடங்கலும் இன்றி இயக்கப்படுகின்றன. நடை இழப்புமின்றி இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பேருந்தில் குறைகளும் நிவர்த்திக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தடங்களில் சராசரி அடர்வு 62 விழுக்காடுதான். எனவே, கூடுதலாகப் பேருந்து களை இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

[1998 நவம்பர் 23

*71—*

**புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைத்தல்**

***வினா 14775—திரு. ப. கோவிந்தன்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தாலுகாவை சேர்ந்த பகுதிகளைச் சேர்த்து தாரமங்கலத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் புதியதாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

***விடை—***

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :***

இல்லை.

*72—*

**போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்**

***வினா 15569—திரு. ஏ. கோதண்டம்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்றத்தூரில் சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

***விடை—***

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

(அ) ஆம்.

(ஆ) பணிமனையுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க 3 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசு நிலம் தெரிவு செய்யப்பட்டு நிலமாற்றம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கிடைத்ததும் பணிமனையுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



1998 நவம்பர் 23]

*73—*

**அரசு போக்குவரத்துப் பணிமனை அமைத்தல்**

***வினா 15377—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செந்துறை தொகுதியில் அரசு போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

செந்துறை, தற்போது பணிமனை உள்ள அரியலூரிலிருந்து 22.2 கி.மீ. தூரத்திலும் தற்போது பணிமனை உள்ள ஜெயங்கொண்டத்தில் இருந்து 25 கி.மீ. தூரத்திலும் உள்ளது. மேலும் ஒரு பணிமனைக்கும் மற்றொரு பணிமனைக்கும் இடையே உள்ள தூரம் 40 கி.மீ. குறைவாக இருக்கக்கூடாது. எனவே, போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலையினைக் கருத்திற்கொண்டு செந்துறையில் தற்போது பணிமனை அமைக்கும் உத்தேசம் இல்லை.

*74—*

**போக்குவரத்து வாகன துணை ஆய்வாளர் அலுவலகம் அமைத்தல்**

***வினா 15858—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:*** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், அரக்கோணம் நகரில் போக்குவரத்து வாகன துணை ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

***விடை—***

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:***

இல்லை.

9

75—

## தரைப்பாலம் அமைத்தல்

***வினா 14225—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் உள்ள ஆண்கள் மேல்நிலைப் பள்ளி அருகில் செல்லும் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் மாணவர்கள் சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு ஒரு தரைப்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள எடப்பாடி மகுடஞ்சாவடி சாலை கி.மீ.0/6-ல் அரசு மேல்நிலைப் பள்ளி அமைந்துள்ளது. இவ்விடத்தில் சாலை பழுதடைந்ததை தற்போது வெள்ள நிவாரணப் பணியின்கீழ் சாலையின் மட்டத்தை உயர்த்தி தார்ச் சாலை நல்ல முறையில் சீரான வாகன போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இங்கு தரைப்பாலம் அமைக்கத் தேவையில்லை.

76—

## ஸ்ரீ ஆண்டாள் திருக்கோயில் நிலம் விவரம்

***வினா 4547—திரு. இரா. தாமரைக்கனி:*** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, ஸ்ரீ ஆண்டாள் திருக்கோயிலுக்குச் சொந்தமாக எத்தனை ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளன?

(ஆ) இவற்றின் மூலம் எவ்வளவு குத்தகை வசூலாகிறது?

(இ) குத்தகையைச் செலுத்தாதவர்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

D
V241, 31/1/98
N98.601
221798



***விடை—***

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:***

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, ஸ்ரீ ஆண்டாள் கோயிலுக்குக் கீழ்க்கண்ட நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் உள்ளன:

| | |
|---|---|
| நஞ்சை | 291.26 ஏக்கர் |
| புஞ்சை | 796.29 ஏக்கர் |

(ஆ) பசலி 1407-க்கு இதுநாள் வரை ரொக்க குத்தகை இனங்களில் ரொக்கம் ரூ.72,056ம் நெல் குத்தகையாக 456 மூட்டை நெல் (மூட்டை 1க்கு 60 படி நெல்) வசூல் செய்யப்பட்டுள்ளது. புஞ்சை நிலங்களின் கேட்புத் தொகை ரூ.1,72,320/-.

(இ) பசலி 1399க்கு முன் உள்ள குத்தகைப் பாக்கிகள் தமிழ்நாடு அரசு அவசரச் சட்டம் 38/90-ன்படி குத்தகைதாரர்களால் வருவாய் நீதிமன்றத்தில் செலுத்தப்பட்ட பாக்கிகள்மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் திருக்கோயிலின் தரப்பில் மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. பசலி 1400 முதல் 1404 வரை குத்தகை பாக்கிகளுக்கு மதுரையிலுள்ள வருவாய் நீதிமன்றத்தில் குத்தகைதாரர்கள் வெளியேற்றம் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்மீது தமிழ்நாடு அவசரச் சட்டம் 20/97, நாள் 25-4-1997-ன்படி 30-6-1999வரை விசாரணை (அதாவது பசலி 1408 வரை) ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து குத்தகைப் பாக்கிகள் வசூல் பணி நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

77—

## தெப்பக்குளத்தைத் தூர்வாரி மராமத்து செய்தல்

***வினா 13234—திரு. கே. ரவி அருணன்:*** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

(அ) தென்காசி அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தெப்பக்குளத்தைத் தூர்வாரி மராமத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) தென்காசி, அருள்மிகு காசிவிஸ்வநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தெப்பக்குளத்தைத் தூர்வாரி மராமத்து செய்வதற்கு 1992-93 ஆம் ஆண்டு விலை விவரப்படி ரூ.6.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு திருக்கோயிலில் போதுமான நிதி வசதிகள் இல்லாததால் வேலை செய்யப்படவில்லை. இத்திருப்பணி செய்ய வேண்டியது அவசியம். எனவே மேற்படி திருக்கோயில் திருப்பணிக்காக திருப்பணிக் குழு அங்கீகரிக்கப்பட்டு திரும்பவும் 1997-98 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.9.50 இலட்சத்திற்கான திருத்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டபின் அரசு நிதி உதவி அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

**78—**

**பகுதி நேரக் கடை அமைத்தல்**

***வினா 8106—திரு. வி. அய்யலுசாமி:*** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டி வட்டம், ஆத்திக்கிணறு கிராமத்திற்கு டி. சண்முகபுரம் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து ஆத்திக்கிணற்றிலே பகுதி நேரக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1998 நவம்பர் 23]

**விடை—**

***மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:***

கோவில்பட்டி தொகுதி, கோவில்பட்டி வட்டம் ஆத்திக்கிணறு கிராமத்தில் ஒரு புதிய பகுதி நேர நியாய விலைக் கடை தொடங்க தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரால் 4-3-1998 அன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

**79—**

**உணவு மற்றும் நியாய விலைக் கடை ஊழியர்கள் விவரம்**

***வினா 12808—திரு. கே. சுப்பராயன்:*** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உணவு மற்றும் நியாய விலைக் கடையில் பொருள் வழங்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் எந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்?

**விடை—**

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:***

(அ) தமிழ்நாட்டில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், கூட்டுறவுச் சங்கங்களாலும் நியாய விலைக் கடைகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் அமுதம் சில்லறை அங்காடிகளில் தற்போது பட்டியல் எழுத்தர்களாக 2382 பேரும், நிலுவையாளர்களாக 1731 பேரும் பணியில் உள்ளனர். இக்கழகம் 1-7-1972 முதல் தொடங்கப்பட்டு அரசு உணவு பொருள் வழங்கு துறையின் ஊழியர்கள் விருப்பத்தின்பேரில் பணிக்கு அமர்த்தப்பட்டும், 31-3-1975க்கு முன்பு நேரடி நியமனம் செய்யப்பட்டும், 31-3-1975க்கு பின்பு வேலை வாய்ப்பு நிறுவனம் மூலமாகவும் பணிக்கு அமர்த்தப்பட்டும் வருகின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் விற்பனையாளர்கள் 20,093 நபர்களும் கட்டுநர்களாக 4064 நபர்களும் உள்ளனர்.

(ஆ) அரசாணை (நிலை) எண் 362, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 24-4-1990 தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 74-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நியாய விலைக் கடை விற்பனையாளர் மற்றும் கட்டுநர்களைத் தேர்வு செய்து நியமிக்க அரசு மாவட்ட தேர்வுக் குழுவை (District Recruitment Board) நியமித்துள்ளது. இத்தேர்வுக் குழுவில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் உள்ளனர்:

| | | |
|---|---|---|
| 1. | மண்டல இணைப் பதிவாளர் | தலைவர் |
| 2. | துணைப் பதிவாளர் (பொது) | உறுப்பினர்-செயலாளர் |
| 3. | மாவட்ட வழங்கு அலுவலர் | உறுப்பினர் |
| 4. | கூட்டுறவு விற்பனைச் சங்கம் அல்லது நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் தனி அலுவலர் அல்லது தலைவர் | உறுப்பினர் |

மேலும், மாவட்ட தேர்வுக் குழு, வட்டத்தில் உள்ள நியாய விலைக் கடைகளின் விற்பனையாளர் மற்றும் கட்டுநர் பணியிடங்களில் ஏற்படும் காலியிடங்களுக்கு 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதி 151-ல் தெரிவித்துள்ள நடைமுறையைக் கையாண்டு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெற்றும், மேலும் உள்ளூர் தினசரிகளில் விளம்பரம் செய்தும் விண்ணப்பங்களைப் பெற்று நேர்முகத் தேர்வு/நேர்காணல் தேர்வு நடத்தி தகுதியான நபர்களைத் தேர்வு செய்கிறது.

*80—*

**நியாய விலைக் கடை அமைத்தல்**

***வினா 13595—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:*** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மேலத்தேவநல்லூர் மற்றும் கீழத்தேவநல்லூரில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

***விடை—***

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:***

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், தேவநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த மேலதேவநல்லூரில் 471 குடும்ப அட்டைகளுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்பெறும் பிரதான நியாய விலைக் கடையும், பெருமாள்குளத்தில் 286 குடும்ப அட்டைகளுடன் ஒரு கிளைக் கடையும் இயங்கி வருகின்றன. மேலத்தேவநல்லூர் பிரதான நியாய விலைக் கடையிலிருந்து கீழத்தேவநல்லூர் 1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதால் கீழத்தேவநல்லூரில் புதிய முழுநேர நியாய விலைக் கடையோ அல்லது பகுதிநேர நியாய விலைக் கடையோ திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இரண்டு கிலோ மீட்டருக்கு மேல் தொலைவு இருந்தால் மட்டுமே புதிய கடை திறப்பது சாத்தியம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

*81—*

**கூட்டுறவு பண்டகசாலை பணியாளர் ஊதிய விவரம்**

***வினா 13664—திரு. கே. ரவி அருணன்:*** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விக்கிரமசிங்கபுரம், மதுரா கோட்ஸ் தொழிலாளர்கள் கூட்டுறவுப் பண்டகசாலை பணியாளர்களுக்கு இரண்டு வருட காலமாக ஊதியம் வழங்கப்படாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) தற்போது, கூட்டுறவுப் பண்டகசாலை இயங்கச் செய்வதற்கு புதியதாகக் கடன் வழங்கல் ரூ.75 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்தும்கூட, பணியாளர்களுக்கு வருங்கால வைப்பு நிதி மற்றும் சம்பளப் பாக்கியை வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யாததால், தற்பொழுது வங்கி மூலம்

ஒதுக்கப்பட்ட தொகையைப் பயன்படுத்த இயலாமல் இருப்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:***

(அ), (ஆ) மற்றும் (இ) மதுரா கோட்ஸ் தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை சில காரணங்களால் 1985 ஆம் ஆண்டு முதல் நட்டத்தில் செயல்பட்டு வருகிறது. பண்டகசாலையில் போதிய வியாபாரமும், விற்பனையும் இல்லாமல் கொள்முதல் இல்லை என்ற நிலையும், 31-3-1996 அன்று குவிப்பு நட்டம் ரூ.197.49 இலட்சமாக இருந்ததாலும், கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டு, பணியாளர்களுக்கு பிப்ரவரி 1996 முதல் ஊதியம் வழங்கப்படவில்லை. எனினும், பண்டகசாலை ஊழியர்களுக்கு மாதம் ரூ.500 சம்பள முன்பணமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. பண்டகசாலையால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாதம் ரூ.300 சம்பள முன்பணமாக கொடுக்கப்பட்டு வருகிறது. இதனை உயர்த்தி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் பெறப்படும் புதிய காசுக் கடன் தொகை ரூ.75 இலட்சத்தைப் பயன்படுத்தி பண்டகசாலையின் அவசியமான கடன்களைச் சரிசெய்ய இயலாததால், கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து ரூ.132 இலட்சம் குறைந்த வட்டியில் நீண்ட காலக் கடனாக வழங்க கருத்துரு அனுப்பப்பட்டது. கூட்டுறவு ஒன்றியம், கோவை சிந்தாமணி நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் பணியாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க ரூ.1.00 கோடி கடனுதவி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாலும், சேமிப்பில் இருக்கின்ற நிலுவை நிதி குறைவாக உள்ளதாலும், இதைக் கொண்டு வருங்காலத்தில் இன்னும் பல திட்டங்களையும் ஒன்றியத்தின் வருடாந்திரச் செலவுகளை நிறைவேற்றவே நிதிநிலை போதுமானதாகவே இருக்காது என்பதாலும் பண்டகசாலைக்கு நிதியுதவி செய்ய இயலாது என்று தெரிவித்துள்ளது. திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் பெறப்படும் புதிய காசுக் கடன் தொகை ரூ.75.00 இலட்சத்தைப் பண்டகசாலை வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளப் பண்டகசாலைத் தலைவருக்கு அறிவுரை வழங்க மண்டல இணைப் பதிவாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.





**82—**

## பகுதி நேரக் கடை அமைத்தல்

***வினா 14119—திரு. க. மணிவர்மா:*** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, தேவரடியார் குப்பம் கூட்டுறவு நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து பகுதி நேரக் கடையாக கொளமஞ்சனூரில் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:***

(அ) இல்லை.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம் கொளமஞ்சனூர் தேவரடியார் குப்பம் கிராமக் கூட்டுறவு நியாய விலைக் கடையில் 316 குடும்ப அட்டைகள் உள்ளன. இக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள கொளமஞ்சனூர் கிராமத்தில் 123 குடும்ப அட்டைகளும், தேவரடியார் குப்பம் கிராமத்தில் 193 குடும்ப அட்டைகளும் ஆக மொத்தம் 316 குடும்ப அட்டைகள் உள்ளன. புதிய பகுதி நேரக் கடை திறக்கக் கோரியுள்ள கிராமத்தில் குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமெனவும், குடும்ப அட்டை பிரித்த பிறகும் முந்தைய கடையில் 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டுமெனவும் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள கூட்டுறவுக் கடைக்கும் பகுதி நேரக் கடை கோரியுள்ள கிராமத்திற்கும் இடையே குறைந்தபட்சம் 2 கி.மீ. தூரம் இருக்க வேண்டுமெனவும் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. தற்போது கூட்டுறவுக் கடை அமைந்துள்ள தேவரடியார் குப்பம் கிராமத்திற்கும் கொளமஞ்சனூர் கிராமத்திற்கும் இடைப்பட்ட தூரம் 2 கி.மீ. உள்ளது. ஆனால், பகுதி நேரக் கடை திறக்க கோரியுள்ள கொளமஞ்சனூர் கிராமத்தில் 123 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் அங்கு பகுதி நேரக் கடை திறக்க வாய்ப்புகள் இல்லை.

83—

## நியாய விலைக் கடைகளை அரசுக் கட்டடத்தில் இயக்குதல்

**வினா 14724—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை நியாய விலைக் கடைகள் தனியார் கட்டடத்தில் இயங்குகின்றன?

(ஆ) அதனை அரசுக் கட்டடத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் நகர்ப்புற நியாய விலைக் கடைகள் 179-ம், கிராமப்புற நியாய விலைக் கடைகள் 469-ம் தனியார் கட்டடத்தில் இயங்குகின்றன. அரசாணை நிலை எண் 162, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 12-6-1997-ல் நியாய விலைக் கடைகளுக்குப் படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்ட திட்டம் அரசால் ஏற்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட உள்ளது. சேலம் மாவட்டத்தில் சொந்தக் கட்டடம் இல்லாத 648 நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் கட்ட ஏதுவாக ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு இந்த நியாய விலைக் கடைகளின் பட்டியல் அளிக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சேலம், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் மேற்காணும் 648 நியாய விலைக் கடைகளுக்குப் படிப்படியாகச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

84—

## கூட்டுறவு வங்கி நகைக்கடன் தொகை விவரம்

**வினா 14729—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





சேலம் மாவட்டத்தில் 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகள் மூலம் நகைக் கடனுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

***மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:***

1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் நிர்ணயிக்கப்பட்ட நகைக் கடன் வழங்குவதற்கான குறியீடு மற்றும் முன்னேற்றம் பின்வருமாறு:

| விவரம் | 1996-97 குறியீடு* (ரூ. கோடியில்) | 1996-97 முன்னேற்றம் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி* | 62.50 | 64.57 |
| தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்* | 250.00 | 289.75 |
| நகரக் கூட்டுறவு வங்கிகள் | 83.00 | 100.14 |

*நாமக்கல் மாவட்டம் உள்ளிட்டு

| விவரம் | 1997-98 குறியீடு* (ரூ. கோடியில்) | 1997-98 முன்னேற்றம் (ரூ. கோடியில்) |
|---|---|---|
| மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி* | 81.00 | 54.03 |
| தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்* | 385.00 | 298.46 |
| நகரக் கூட்டுறவு வங்கிகள் | 65.00 | 68.02 |

*நாமக்கல் மாவட்டம் உள்ளிட்டு

94

[1998 நவம்பர் 23

*85—*

**நியாய விலைக் கடைக்கு அரசுக் கட்டடம்**

***வினா 14970—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை நியாய விலைக் கடைகள் தனியார் கட்டடத்தில் செயல்படுகின்றன?

(ஆ) நடப்பு நிதியாண்டில் அக்கடைகள் அரசுக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

***விடை—***

***மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:***

(அ) சேலம் மாவட்டத்தில் 731 நியாய விலைக் கடைகள் தனியார் கட்டடத்தில் செயல்படுகின்றன.

(ஆ) நடப்பு நிதியாண்டில் (1998-99) நமக்கு நாமே திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகளை கட்ட இணைப்புச் சங்கத்தால், மதிப்பீட்டில் 1/3 பகுதியைச் செலுத்தி இசைவு தெரிவித்து, 100 நியாய விலைக் கடைகளுக்கான முன்மொழிவுகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

*86—*

**பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் விவரம்**

***வினா 14693—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) எடப்பாடி, சங்ககிரி தாலுகாக்களில் எத்தனை பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன?



1998 நவம்பர் 23]

***விடை—***

***மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:***

(அ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 578 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) எடப்பாடி வட்டத்தில் 22 சங்கங்களும், சங்ககிரி வட்டத்தில் 60 சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

*87—*

**கூட்டுறவு பால் வழங்கும் சங்கக் கட்டடம் வழங்குதல்**

***வினா 14802—திரு. ப. கோவிந்தன்:*** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, வேடப்பட்டியில் (பெரியேரிப்பட்டி ஊராட்சி) ஒரு கூட்டுறவு பால் வழங்கும் சங்கக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

***விடை—***

***மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வேடப்பட்டி கிராமத்திலுள்ள எஸ்.எம்.டி. 493 என்ற எண் கொண்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் 20-6-1990 முதல் செயல்பட்டு வருகின்றபோதிலும், குறைந்த அளவே பால் கொள்முதல் செய்து, தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால் மேற்படிச் சங்கத்திற்கு கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை.

*88—*

**கட்டடத் தொழிலாளர்களுக்கு நிவாரணம்**

***வினா 13915—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தமிழ்நாட்டில் 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் கட்டடத் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலில் வேலை செய்யும்போது தவறி விழுந்து இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அரசு அவர்களுக்கு அளித்த நிவாரணம் என்ன?

[1998 நவம்பர் 23

*விடை.—*

***மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:***

(அ) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களில் மரண விபத்து ஏற்பட்ட கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு விவரம் | மரண விபத்து ஏற்பட்ட பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1996-97 | 3 |
| 1997-98 | 6 |

(ஆ) மேலே குறிப்பிட்ட மரண விபத்து ஏற்பட்ட 9 பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களின் நியமனதாரர்களுக்கு (Nominee) தலா ரூ.50,000 வீதம் மொத்தம் ரூ.4,50,000 (ரூபாய் 50,000 X 9) காப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

*89—*

**களப்பணியாளர்களுக்கு அரசு குடியிருப்பு**

***வினா 13711—டாக்டர் ஆ. ஞானசேகரன்:*** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய சிறைகளில் பணிபுரியும் அனைத்து களப் பணியாளர்களுக்கும் போதிய அளவு அரசு குடியிருப்பு வழங்கப்பட்டுள்ளதா?

*விடை—*

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:***

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மத்திய சிறைகளில் பணிபுரியும் களப்பணியாளர்களின் எண்ணிக்கை 3,402. தற்பொழுது 990



1998 நவம்பர் 23]

களப்பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மேலும் 75 குடியிருப்புகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

*90—*

**சட்டக் கல்லூரியில் பேராசிரியர்கள் இல்லாமை**

***வினா 14054—திரு. கே. சுப்பராயன்:*** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சட்டக் கல்லூரியில் போதுமான பேராசிரியர்கள் இல்லாததால் கடந்த ஆண்டுத் தேர்வுகளில் மாணவர்கள் பெரிதும் பாதிப்பு அடைந்தது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

*விடை—*

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:***

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

*91—*

**நரிக்குறவர்களுக்குத் தொழில் செய்ய கடனுதவி**

***வினா 14209—திரு. மா. ராமச்சந்திரன்:*** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், மேலஉளூர் கிராமத்தில் வசிக்கும் நரிக்குறவர்களுக்குப் பாசிமணி தொழில் செய்ய வங்கி மூலம் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[1998 நவம்பர் 23

**விடை—**

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:***

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், மேலஉளூர் கிராமத்தில் வசிக்கும் நரிக்குறவர்கள் பாசிமணி தொழில் செய்ய 'டாப்செட்கோ' மூலம் கடன் கேட்டு விண்ணப்பித்தால் மாவட்ட கூர்ந்தாய்வுக் குழுவால் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதியான விண்ணப்பங்கள் 'டாப்செட்கோ'வுக்கு அனுப்பப்படும். அவ்விண்ணப்பங்களை 'டாப்செட்கோ' தன்வழிமுகமை வங்கிகளுக்கு கடன் வழங்க அனுப்பி வைக்கும்.

(ஆ) விண்ணப்பங்கள் பெறப்பட்டால் தகுதியின் அடிப்படையில் கடன் வழங்கப்படும்.

*92—*

### பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோருக்கு வீட்டுமனை வழங்குதல்

***வினா 13568—திரு. நா. பெரியசாமி:*** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வடுகபாளையம் கிராமத்தில் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் சமூகப் பிரிவினருக்கு வீட்டுமனை வழங்க அரசு நிலம் கையகப்படுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வீட்டுமனை வழங்கப்படும்?

**விடை—**

***மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:***

(அ) ஆம்.

**(ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வடுகபாளையம் கிராமம் க.சா.19/1ல் 0.87.0 ஹெக்டேர் நிலம் மேற்படி கிராமத்தில் வசிக்கும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் பொருட்டு 4(1)ன் கீழான நிலமெடுப்பு செய்யப்பட்டதில் காங்கேயம் தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்)**



1998 நவம்பர் 23]

மூலம் 30-5-1992-ல் தனித் தாசில்தாரின் தீர்ப்பாணையின்படி (Award) முடிவு செய்யப்பட்ட தொகை ரூ.45,385 வருவாய் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நில உடமையாளர் திரு. எஸ். பழனிசாமி என்பவர் நிலமெடுப்பு செய்ததை ஆட்சேபித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்கில் எதிர் உறுதி ஆவணம் (DCA) சென்னை உயர் நீதிமன்றத்தில், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. வழக்கு முடிந்த பின்னர், உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக வீட்டுமனைப்பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

*93—*

### வனச்சரகர் பதவிக்குத் தமிழக மாணவர்கள் புறக்கணிப்பு

***வினா 10840—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கேரளா, ஜம்மு மற்றும் காஷ்மீர், பீஹார், ஒரிசா, இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வனவியல் படித்த மாணவர்களை வனச்சரகர் (Ranger) பதவிக்குத் தேர்வு செய்யும்பொழுது தமிழக மாணவர்கள் புறக்கணிக்கப்படுவதை அரசு அறியுமா?

**விடை—**

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:***

வனத் துறையில், வனச்சரகர் பதவியில் காலிப் பணியிடம் ஏற்படும் வாய்ப்பு மிகக் குறைவாகவே இருந்து வருகிறது. அவ்வாறு ஏற்படும் காலிப் பணியிடங்களில் 45 விழுக்காடு நேரடி நியமனம் மூலமும், 54 விழுக்காடு பதவி உயர்வு மூலமும் மற்றும் 1 விழுக்காடு பணிமாற்றம் மூலமும் நியமனம் செய்ய விதிமுறைகள் இடமளிக்கிறது. அவ்வாறு காலியாக உள்ள பணியிடங்களில் 45 விழுக்காடு நேரடி நியமனத்தை தமிழ்நாடு தேர்வாணையம் தேர்வு செய்கிறது. தமிழ்நாட்டில் வனவியல் பட்டம் பெற்ற மாணவர்கள் தேர்வாணையத்தின் மூலம் தகுதிக்கேற்றவாறு வனச்சரகர் பணியில் நியமனம் பெற வழிவகைகள் உள்ளன. இதனால் வனச்சரகர் பதவிக்கு வனவியல் படித்த மாணவர்கள் புறக்கணிக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை.

*94—*

**ஆதிதிராவிடர் காலனியில் பாதை அமைத்தல்**

***வினா 13445—திரு. ஜி.கே. மணி:*** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, கிழக்கு ஏமனூர் மற்றும் மேற்கு ஏமனூர் ஆகிய பகுதிகளிலுள்ள ஆதிதிராவிடர் காலனியில் போடப்பட்டுள்ள பாதை முழுவதையும் வனத் துறை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:***

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைப் பகுதி, காப்புக் காட்டிற்கு வெளியே அமைந்துள்ளதால், வனத் துறைமூலம் அதை மேம்பாடு செய்வது பற்றிய கேள்வி எழவில்லை.

*95-*

**அரசு ஊழியர் குடியிருப்பு பழுதுபார்த்தல்**

***வினா 6679—திரு. எம். ஆண்டி அம்பலம்:*** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) சென்னை, பட்டினப்பாக்கம் அரசு ஊழியர் குடியிருப்பில், ஏஇ, ஏஎப், ஏஜி, ஏஎச், ஏஐ, ஏஎல் பிளாக்குகளில் பழுதுபார்க்கும் பணிக்காக ஒதுக்கப்பட்ட தொகையைப் பெற்றும் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

*விடை—*

***மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:***

**(அ) மற்றும் (ஆ) பட்டினப்பாக்கம் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டப் பகுதியில் உள்ள மொத்தம் 1172 குடியிருப்புகளுக்கும் சிறப்புப் பராமரிப்புப் பணிக்காக 1994 ஆம் ஆண்டு ரூ.1.00 கோடி வழங்கப்பட்டது. இதில் சிறப்புப் பராமரிப்புக்காக பிளாக் ஒய், ஆர்ஏ முதல் ஆர்எச் வரை மற்றும் ஏஇ முதல் ஏபி வரை திட்ட மதிப்பீடு ரூ.7,86,000 (வகை) தயாரிக்கப்பட்டது. இதில் பழுதுபார்க்கும் பணியாக குளியலறை/ கழிவு அறைக் கதவுகள் மாற்றுதல், மின் இணைப்பு பணியாக மின்சாரக் கம்பிகள் மாற்றுதல் ஆகியவை அடங்கும். இதில் பிளாக் ஏஇ முதல் ஏகே வரை உள்ள வீடுகளில் மின்சாரக் கம்பிகள் (Electrical Wiring) மட்டுமே குறையாகக் காணப்பட்டதால் தகுந்த ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.0.87 இலட்சத்திற்கு பணி முடிவு பெற்றது.**





*96—*

**தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்**

***வினா 12494—திரு. ஆர்.ஆர். சேகரன்:*** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் இரும்பாலை அருகே தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*விடை—*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:***

சேலம் இரும்பாலை அருகே தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.

*97—*

**குழந்தைகள் காப்பகம் கட்டுதல்**

***வினா 12882—திரு. ஆர்.ஆர். சேகரன்:*** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்புதூர் ஊராட்சியில் குழந்தைகள் காப்பகம் ஒன்று கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 நவம்பர் 23

*விடை—*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:***

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம் கணவாய்புதூரில் குழந்தைகள் நல மையம் ஏற்கெனவே அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது.

*98—*

**சிறிய தொழிற்பேட்டை அமைத்தல்**

***வினா 13716—டாக்டர் ஆ. ஞானசேகரன்:*** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்தில் சிறிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:***

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்தில் சிறிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது ஏதுமில்லை. மேலும், விழுப்புரம் மாவட்டத்தில் சிட்கோ, கீழ்க்காணும் இடங்களில் தீப்பெட்டி செய்வதற்கென குறுந்தொழிற்கூடங்களை அமைத்துள்ளது:

| எண் | தொழிற் கூடங்கள் | கட்டி முடிக்கப்பட்டவை | ஒதுக்கீடு செய்யப்பட்டவை | மீதம் உள்ளவை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி | 55 | 55 | .. |
| 2. | தியாகதுர்க்கம் | 22 | 22 | .. |
| 3. | திருக்கோயிலூர் | 10 | 10 | .. |
| 4 | இலவனாசூர் கோட்டை | 14 | 14 | .. |
| 5. | கோலியன் குளம் | 15 | 15 | .. |
| 6. | திருச்சிற்றம்பலம் | 12 | 12 | .. |



1998 நவம்பர் 23]

*99—*

**பட்டதாரி, பட்டயப் பொறியாளர்களுக்கு வேலையளித்தல்**

***வினா 2186—திரு. உ. திசைவீரன்:*** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வேலையற்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த பட்டதாரி பொறியாளர்கள்/பட்டயப் பொறியாளர்களுக்கு வேலை தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*விடை—*

***மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) இல்லை.

*100—*

**வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள்**

***வினா 11837—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் மற்றும் உதவிகளை சுற்றுலாத் துறையே ஏற்று செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

***மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:***

தமிழ்நாட்டிற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான கீழ்க்கண்ட வசதிகளை சுற்றுலாத் துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து செய்து வருகின்றன.

(1) வெளிநாட்டிலிருந்து தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தகவல் வழங்குவதற்கு சென்னை விமான நிலையத்தில்

[1998 நவம்பர் 23

தகவல் மையம் ஒன்று இயங்கி வருகிறது. சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் செல்லும் இடங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. முதற்கட்டமாக மாமல்லபுரம் மற்றும் கன்னியாகுமரிக்கு மின் விளக்குகள் (சோடியம் வேப்பர்) அமைப்பதற்கு அரசு ரூ.20 இலட்சம் வழங்கியுள்ளது. இப்பணி தொடரும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) தங்கும் வசதிகள் (உணவகத்துடன்) மற்றும் சென்னையிலிருந்து சுற்றுலாப் பேருந்து வசதிகள் போன்றவற்றை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் செய்து வருகிறது.

## இரண்டாவது பட்டியல்

*1—*

### கடன் பத்திரங்கள் மூலம் கடன் பெறும் விவரம்

***வினா 13175—திரு. கே. சுப்பராயன்:*** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் பொது மக்களிடமிருந்து கடன் பத்திரங்கள் மூலம் கடன் பெறப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எவ்வளவு?*

*(இ) அது எப்போது முதிர்ச்சி பெறும்?*

***விடை—***

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:***

(அ) (ஆ) மற்றும் (இ) திட்டப் பணிகளைச் செயல்படுத்த மாநில அரசிற்கான நிதி ஆதாரங்களில் ஒரு பகுதியாக, மத்தியத் திட்டக் கமிஷன் குறிப்பிட்ட தொகையை வெளிச் சந்தைக் கடனாக ஒவ்வொரு மாநில அரசிற்கும் ஒதுக்குகிறது. இத்தொகையை இந்திய ரிசர்வ் வங்கி வெளிச் சந்தைக் கடன் வாயிலாகத் திரட்ட அனுமதியளிக்கின்றது. இதில் பெரும்பாலும் வங்கிகளும், நிதி நிறுவனங்களும் மட்டுமே முதலீடு



1998 நவம்பர் 23]

செய்கின்றன. இன்றைய நிலவரப்படி, திரு. ஆர். சந்திரமௌலி, திரு. ஏ. ஸ்ரீதரமல்லி ஆகிய இரு தனி நபர்கள் மட்டுமே முறையே ரூ. 1000, ரூ. 5000 என்று இதில் முதலீடு செய்துள்ளனர். இத்தொகைகள் முறையே 2007, 2008-ல் முதிர்வடைகின்றன.

*2—*

### பகுதி நேர நூலகத்தைக் கிளை நூலகமாக்குதல்

***வினா 10497—திரு. கே. ரவி அருணன்:*** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், ஆவுடையானூர் பகுதி நேர நூலகத்தைக் கிளை நூலகமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ஆவுடையானூர் பகுதி நேர நூலகம் 30-1-1996 நாளிட்ட கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை, அரசாணை (நிலை) எண் 66-ன்படி ஏற்கெனவே ஊர்ப்புற நூலகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

*3—*

### உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல்

***வினா 11028—திரு. மா. இராமச்சந்திரன்:*** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பின்னையூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக வகுப்பறைகள் கட்டுவதற்கு அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[1998 நவம்பர் 23

*விடை—*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) 1997-98 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பின்னையூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக 2 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டிக் கொடுக்க ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கி அரசாணை (நிலை) எண் 506, பள்ளிக் கல்வி, நாள் 15-12-1997-ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

*4—*

**தமிழ் வழியில் பொறியியற் கல்லூரி**

***வினா 12397—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பொறியியற் கல்லூரியில் தமிழ் வழியில் பயில எத்தனைக் கல்லூரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?

*விடை—*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

தமிழ்நாட்டில் பொறியியற் கல்லூரியில் தமிழ் வழியில் பயிற்றுவிக்க அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, அழகப்பா பொறியியற் கல்லூரி, காரைக்குடி, தியாகராஜர் பொறியியற் கல்லூரி, மதுரை மற்றும் பி.எஸ்.ஜி. காலேஜ் ஆஃப் டெக்னாலஜி, கோவை ஆகிய கல்வி நிறுவனங்கள் முன்வந்தன. அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகத்திடமிருந்து தமிழ் வழியில் பயிற்றுவிக்க அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி கிடைத்ததும் அது நடைமுறைப் படுத்தப்படும்.

*5—*

**பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடம் அமைத்தல்**

***வினா 12764—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடம் ஒன்று ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



1998 நவம்பர் 23]

*விடை—*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

சேலம், எடப்பாடி, மகுடஞ்சாவடி அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, 1997-98 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. இவ்வாறு மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு ஆய்வகம் கட்டும் பணி படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. 1996-97 ஆம் கல்வியாண்டில் இவ்வாறு உயர்த்தப்பட்ட 81 பள்ளிகளில், 25 பள்ளிகளுக்கு ஆய்வகம் கட்ட ஆணை பிறப்பித்தது போக, மீதமுள்ள 56 பள்ளிகளுக்கும் 1997-98 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்ட 75 பள்ளிகளுக்கும் ஆய்வகம் கட்டித் தர, 1998-99 ஆம் நிதியாண்டில் நிதியாதாரங்களின் அடிப்படையில் அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

*6—*

**பொது நூலகம் அமைத்தல்**

***வினா 14313—திரு. கே. ரவி அருணன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூர் ஊராட்சி, சிவநாடானூர் கிராமத்தில் பொது நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*விடை—*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) சிவநாடானூர் கிராமத்தில் தற்போது பொது நூலகம் இல்லை. இருப்பினும், அவ்வூர்ப் பொது மக்கள், பகுதி நேர நூலகம் திறப்பதற்கென விதிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கும்பட்சத்தில், சிவநாடானூர் கிராமத்தில் தொகுப்பூதியத்தில் பகுதி நேர நூலகரை நியமனம் செய்து, ஒரு பகுதி நேர நூலகம் திறக்க வழிவகை உள்ளது:

(1) நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் வழங்குதல் வேண்டும்.

(2) பின்னால் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலி மனையை, நூலக ஆணைக் குழுவின் பெயருக்குப் பத்திரப் பதிவு செய்து தருதல் வேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ. 1,000 தொகை செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(5) ரூ. 2,000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

*7—*

**அரசு கலைக் கல்லூரி அமைத்தல்**

***வினா 15010—திரு. ப. கோவிந்தன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*8—*

**கலைக் கல்லூரி கட்டுதல்**

***வினா 15225—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஒரு கலைக் கல்லூரி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*9—*

**அரசு பெண்கள் கல்லூரி அமைத்தல்**

***வினா 15515—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் அரசு பெண்கள் கல்லூரி திறக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*10—*

**நெசவாளர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பித்தல்**

***வினா 16063—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில் நெசவாளர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

அரசின் நிதி நிலைமை காரணமாக தற்போது அரசு அளவில் கல்வி நிறுவனங்கள் எதுவும் தொடங்குவதில்லை என்றும், ஆனால், அதேசமயம், தனியார் கல்வி அறக்கட்டளைகள் ஏதேனும் சுய நிதி அடிப்படையில் தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க முன்வந்தால், விதிமுறைகளுக்குட்பட்டு, அதற்கு ஒப்புதல் வழங்க பரிசீலனை

செய்யலாம் என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஆண்டிமடம் தொகுதியில் அரசு நெசவாளர் பயிற்சிக் கல்லூரி திறப்பதற்கான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

*11—*

**தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல்**

***வினா 16937—திரு. இரா. மகேந்திரன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளியில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி அமைந்துள்ள வேலூர் மாவட்டத்தில் தற்போது ஓர் அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் (பாலிடெக்னிக்), ஒரு சுய நிதி பாலிடெக்னிக்கும் இயங்கி வருகின்றன. நிதி நெருக்கடி காரணமாக தற்போது அரசு பாலிடெக்னிக் திறப்பதை நிறுத்தியுள்ளது. எனினும், பாலிடெக்னிக் தொடங்க தனியார் முன்வந்தால் அதை அரசு பரிசீலிக்கும்.

*12—*

**அறிவொளி இயக்கத்தின் மூலம் கல்வி**

***வினா 17003—திரு. ஐ. கணேசன்:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கடந்த 1997-98 ஆம் ஆண்டில் அறிவொளி இயக்கத்தின் மூலம் கல்வி கற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) 1997-98 ஆம் ஆண்டிற்கு அந்த இயக்கத்திற்கு, அரசு செய்த செலவு விவரம் என்ன?

(இ) அந்த முறையில் கல்வி கற்பிக்க, ஒரு நபருக்கு சராசரி என்ன செலவாகிறது?



***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

(அ) தமிழ்நாட்டில் 1997-98-ல் அறிவொளி இயக்கத்தின் மூலம் கல்வி கற்றோர் எண்ணிக்கை 15.36 இலட்சம்.

(ஆ) 1997-98 ஆம் ஆண்டிற்கு அந்த இயக்கத்திற்கு அரசு செலவு செய்த தொகை ரூ. 248.94 இலட்சம்.

மைய, மாநில அரசுகளும் அறிவொளி இயக்கத்திற்கு 2:1 என்ற விகிதத்தில் செலவுத் தொகையை ஏற்கின்றன. மைய அரசு, மாவட்டங்களுக்கு விடுவிக்கும் தொகைக்கேற்ப மாநில அரசும் தொகையை விடுவிக்கும். 1997-98 ஆம் ஆண்டில் மாநில அரசு ரூ. 248.94 இலட்சம் விடுவித்துள்ளது.

(இ) இந்த முறையில் கல்வி கற்பிக்க முழு எழுத்தறிவுத் திட்டத்திற்கு ஒரு நபருக்கு ரூ. 60 எனவும், தொடக்கக் கல்வித் திட்டத்திற்கு ஒரு நபருக்கு ஒரு ஆண்டிற்கு ரூ. 30 எனவும் மாநில அரசு நிர்ணயித்து மாவட்டங்களுக்கு விடுவிக்கிறது.

*13—*

**உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணி நியமனம் செய்தல்**

***வினா 17887—திரு. ஜி.கே. மணி:*** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பி.எட். கல்வித் தகுதி பெற்று மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் பணியாற்றி, பின்னர் இடைநிலை ஆசிரியர்களாக, தொடக்கப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டவர்களை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களாகப் பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:***

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், பள்ளிக் கல்வித் துறையின்கீழும், தொடக்கப் பள்ளிகள், தொடக்கக் கல்வித் துறையின்கீழும் வருகின்றன. இவற்றிற்கு வெவ்வேறு பணி விதிகள்

உள்ளன. எனவே, மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் பணியாற்றி, பி.எட். தகுதி பெற்று தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு மூலம் பள்ளி உதவி ஆசிரியர் மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் நியமனம், அரசு உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் வழங்கப்படுவதில்லை.

*14—*

**மருந்தாளுநர், உடலியற் பயிற்சியாளர், செவிலியர் ஆகிய பணியிடங்களை நிரப்புதல்**

***வினா 8544—திரு. ஜி. நிஜாமுதீன்:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், நாகை அரசினர் தலைமை மருத்துவமனையில் இ.4 பிரிவில் காலியாக உள்ள மருந்தாளுநர், உடலியற் பயிற்சியாளர் மற்றும் செவிலியர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

***விடை—***

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:***

நாகப்பட்டினம் மாவட்டம், நாகை அரசினர் தலைமை மருத்துவமனையில் காலியாக உள்ள செவிலியர் மற்றும் உடலியற் பயிற்சியாளர் பணியிடங்கள் ஏற்கெனவே நிரப்பப்பட்டு விட்டன. மருந்தாளுநர் பணியிடம் நிரப்பப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*15—*

**மருத்துவமனைப் புறநோயாளிகள் பகுதியில் ஜெனரேட்டர் வசதி**

***வினா 12437—திரு. கே. சுப்பராயன்:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரிலுள்ள மாவட்ட மருத்துவமனைப் புறநோயாளிகள் பகுதியில் ஜெனரேட்டர் வசதி செய்து தரப்பட வேண்டும் என்று அரசிற்குக் கோரிக்கை வந்துள்ளதா?





(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

***விடை—***

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:***

(அ) திருப்பூர் மாவட்டத் தலைமை மருத்துவமனையில் உள்நோயாளிகள் பகுதியில் ஜெனரேட்டர் உள்ளது. புறநோயாளிகள் பகுதியில் நோயாளிகளைப் பார்க்கும் காலை நேரங்களில் மின் தடை ஏற்படுவதில்லை. எனவே, புறநோயாளிகள் பகுதியில் ஜெனரேட்டர் வசதி செய்து தர அவசியம் ஏற்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடை அவசியம் இல்லை.

*16—*

**மருத்துவமனைக்குப் படுக்கை மற்றும் தண்ணீர் வசதி செய்தல்**

***வினா 12658—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:*** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் உள்ள காமராஜர் அரசு பொது மருத்துவமனைக்குப் போதுமான தண்ணீர் வசதி மற்றும் படுக்கை வசதிகளைச் செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

***விடை—***

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:***

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் உள்ள காமராஜர் அரசு பொது மருத்துவமனையில் தண்ணீர் வசதியும், படுக்கை வசதியும் போதுமான அளவில் உள்ளன. அங்கு தற்போதுள்ள விறகு உபயோகிக்கும் சமையல் அறையை நவீன காஸ் சமையலறையாக மாற்றுவதற்கு அரசாணை (நிலை) எண் 293 (சு) நாள் 5-6-1998-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

[1998 நவம்பர் 23

17—

**உதவிப் பொறியாளர் அலுவலகமாக மாற்றி அமைத்தல்**

**வினா 13684—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம் பேரூராட்சிப் பகுதியிலுள்ள மின்சார வாரிய விநியோகப் பிரிவு, உதவிப் பொறியாளர் அலுவலகமாக மாற்றியமைக்கப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) குற்றாலம் பேரூராட்சிப் பகுதியில் உள்ள மின் அமைப்புகள், தென்காசி துணை மின் நிலையப் பிரிவு அலுவலகத்தால் பராமரிக்கப்பட்டு வந்தது. தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்ட, 'தென்காசி நகர்ப்புறம் 2' என்றழைக்கப்பட்ட பிரிவு அலுவலகம் குற்றாலம் பேரூராட்சிப் பகுதிக்கு, ஒரு இளநிலை மின் பொறியாளர் (முதல் நிலை) பொறுப்பில் மாற்றப்பட்டுள்ளது. இப்போது இளநிலைப் பொறியாளர் (முதல் நிலை) ஒருவர் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்.

(ஆ) மேற்கண்ட பிரிவு அலுவலகம் 22-5-1998 முதல் குற்றாலத்தில் பேரூராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

18—

**புற்றுநோய் அறுவை அரங்கம் தனிப் பகுதியாக அமைக்கப்புடுதல்**

**வினா 13841—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்



1998 நவம்பர் 23]

புற்றுநோய் அறுவை அரங்கத்தைத் தனிப் பகுதியாக அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற்றுநோய் அறுவை சிகிச்சைப் பிரிவு (surgical oncology) தனிப் பிரிவாகத் தற்போது இயங்கவில்லையாதலால், தனியாகப் புற்றுநோய் அறுவை அரங்கம் தற்போது தேவையில்லை. இருப்பினும், பர்னார்டு கதிர்வீச்சு ஆராய்ச்சி நிலையத்தில் (BIR) புற்றுநோய் அறுவை சிகிச்சைக்காக ஒரு சிறிய அரங்கம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

19—

**மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கட்டட வசதி**

**வினா 13916—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் போதுமான கட்டட வசதி இல்லை என்பது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மருத்துவமனை, மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு, மருத்துவமனையாக மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் தற்போது அத்தியாவசியமான கட்டடங்கள் உள்ளன. மேலும் தேவைக்கேற்ப கட்டடம் கட்ட தக்க நடவடிக்கைகள் அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு செயல்படுத்தப்படும். மேலும், அரசாணை எண் 580/சு, நாள் 25-11-1997-ல் சேலம் மருத்துவக்

கல்லூரிக்கு ரூ. 31.74 இலட்சம் செலவில் பிராணிகள் அறை கட்டவும். ரூ. 6.05 இலட்சம் செலவில் மிதிவண்டி நிழற்குடை கட்டவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1998-99 பகுதி-2 திட்டத்தில் விடுதிக் காப்பாளர் குடியிருப்பு (பெண்கள் விடுதிக்கு ஒன்றும், ஆண்கள் விடுதிக்கு ஒன்றும்) ரூ. 14 இலட்சம் செலவில் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**20—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்துதல்**

**வினா 14246—திரு. லி. அய்யலுசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோவில்பட்டி தொகுதி, ஈராச்சி கிராமம் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தும் வகையில் தளவாடச் சாமான்கள் (furniture), படுக்கை வசதி, வேன் வசதி செய்யவும், புதிதாக எழுத்தர் பணிக்கு நியமனம் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*ஈராச்சி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தேவையான தளவாடங்கள் உள்ளன. ஆறு படுக்கை வசதிகளுக்கு அனுமதி இருந்தும், படுக்கை வசதிகள் இல்லாத ஈராச்சி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உள்நோயாளிகள் வருவது குறைவாக இருக்கின்றது. இருப்பினும், இதர ஆரம்ப சுகாதார நிலையங்களில் உபரியாகவுள்ள படுக்கைகளைக் கொண்டு, படுக்கை வசதி செய்து தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோவில்பட்டி தொகுதியில் வில்லிசேரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மட்டும் ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. ஈராச்சிக்கும், வில்லிசேரிக்கும் இடையே சுமார் 40 கி.மீ. தூரம் உள்ளதால், ஈராச்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மாற்றுப் பணி மூலம் ஊர்தி வசதி செய்து தர வாய்ப்பில்லை. மேலும், முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமான கீழ ஈரால் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து ஓர் அமைச்சுப் பணியாளரை மாதத்தில் 10 நாட்கள் மாற்றுப் பணியில், அமைச்சுப் பணியிடம் அனுமதியில்லாத ஈராச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*



**21—**

**மருத்துவமனைக்கு ஓய்வறை**

**வினா 14525—திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலூர் அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளது உறவினர்கள், மருத்துவமனைக்கு வரும்போது வெளியில் காத்திருப்பதைத் தவிர்க்க ஓய்வறை கட்டித் தரப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*வேலூர் அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளைப் பார்க்க வரும் உறவினர்கள் வெளியில் காத்திருக்காமல் தங்குவதற்குக் கழிப்பிடம் மற்றும் தண்ணீர் வசதியுடன் கூடிய சிமெண்ட் பெஞ்ச் 1995-96 பகுதி இரண்டு திட்டத்தில் ரூபாய் ஒன்றரை இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது உபயோகத்தில் உள்ளது.*

**22—**

**அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி**

**வினா 14914— திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் உள்ள காமராஜர் அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் உள்ள காமராஜர் அரசு மருத்துவமனையில் தற்போதுள்ள 58 படுக்கை வசதி போதுமானதாக உள்ளது.*

23—

### மின்சார விளக்கு வசதி செய்து கொடுத்தல்

**வினா 16274— திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், நடுப்பட்டி ஊராட்சியிலுள்ள காக்காயன்காட்டிலிருந்து பெருமாள் கோயில் வரை மின்சார விளக்கு வசதி செய்து கொடுக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், நடுப்பட்டி ஊராட்சியிலுள்ள காக்காயன்காட்டிலிருந்து பெருமாள் கோயில் வரை மின்சார விளக்கு வசதி செய்து கொடுக்க வேண்டி ஊராட்சி ஒன்றியத்திலிருந்து விண்ணப்பம் ஏதும் மின் வாரியத்தால் இதுவரை பெறப்படவில்லை. எனவே, இக்கருத்துக்கு இடமில்லை.

24—

### மின்சார வசதி செய்து கொடுத்தல்

**வினா 16275—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், ஜோடு குழிப்புதூர், மாரப்பன் கொட்டாய், பாசிரான் கொட்டாய், ஜோடு குழி போயர் காலனி, சிகல்ராப்பட்டி அருந்ததியர் தெரு ஆகிய பகுதிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க அரசு ஆணை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், ஜோடு குழிப்புதூர், மாரப்பன் கொட்டாய், பாசிரான் கொட்டாய், ஜோடு குழி போயர் காலனி, சிகல்ராப்பட்டி அருந்ததியர் தெரு ஆகிய பகுதிகளுக்கு ஏற்கெனவே மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது. 3/98 வரை பெறப்பட்ட நிலுவையில் உள்ள வீட்டு மின் இணைப்பு விண்ணப்பங்களுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. மேற்படி விண்ணப்பங்களுக்கு வரிசைக்கிரமப்படி மின் இணைப்பு வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



25—

### மின் மாற்றி அமைத்தல்

**வினா 16295—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பனம்பட்டிக்கு மின் மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் ஊராட்சி கருப்பனம்பட்டி, தொளசம்பட்டி மின் பகிர்மானப் பிரிவிற்குட்பட்டது. கருப்பனம்பட்டியில் ஏற்கெனவே மூன்று மின் மாற்றிகள், முறையே 100 கே.வி.ஏ. 63 கே.வி.ஏ. மற்றும் 50 கே.வி.ஏ./22 கே.வி. திறனில் உள்ளன. இம்மின் மாற்றிகளுக்கு தும்பிப்பாடி 110/22 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து கொங்குப்பட்டி 22 கே.வி. உயர் அழுத்தத் தொடர் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. இம்மின் மாற்றிகளின் பளு ஏற்கெனவே உள்ள மின் இணைப்புகளுக்குப் போதுமானதாக உள்ளது. மேலும், இப்பகுதிகளில் மின் அழுத்தம் சீராக உள்ளது. மற்றும் இப்பகுதிகளில் மின் இணைப்புக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை. ஆகவே, புதிய மின் மாற்றி அமைக்க வேண்டிய தேவை தற்போது இல்லை.

[1998 நவம்பர் 23

26—

### சித்த மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா 16638—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் அரசு மருத்துவமனையில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள சித்த மருத்துவமனைக்கு ஒரு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் சித்த மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

27—

### மின் இணைப்பு விவரம்

**வினா 16783—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 'ஒரு வீட்டுக்கு ஒரு விளக்கு' திட்டத்தின்கீழ் மின் இணைப்புக் கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) 1996-97, 1997-98-ல் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(இ) மீதி உள்ளவர்களுக்கு எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 'ஒரு வீட்டுக்கு ஒரு விளக்கு' திட்டத்தின்கீழ் மின் இணைப்புக் கோரிப் பெறப்பட்ட மனுக்கள் 715.



1998 நவம்பர் 23]

(ஆ) 1996-97-ல் வழங்கப்பட்டுள்ள மின் இணைப்புகள்—104
1997-98-ல் வழங்கப்பட்டுள்ள மின் இணைப்புகள்— 99
நிலுவையில் உள்ளவை—512

(இ) மீதமுள்ள விண்ணப்பங்களுக்கு நடப்பாண்டில், 1998-99-ல் 'ஒரு வீட்டுக்கு ஒரு விளக்கு' திட்டத்தில் மேட்டூர் மின் விநியோகம் வட்டத்தில் சேலம் மாவட்டத்திற்கு 560 மின் இணைப்புகள் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்படிக் குறியீட்டின் அடிப்படையில் எடப்பாடி தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 1998-99 ஆம் ஆண்டில் தோராயமாக 80 குடிசை விளக்கு விண்ணப்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும். மீதமுள்ள விண்ணப்பங்களுக்கு இனி வருகின்ற ஆண்டுகளில் அரசு நிர்ணயிக்கும் குறியீட்டின் அடிப்படையில் மின் இணைப்புகள் வழங்கப்படும்.

28—

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஊடுகதிர்க் கருவி வழங்குதல்

**வினா 18502—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஊடுகதிர்க் கருவி (எக்ஸ்ரே கருவி) வழங்க அரசு ஆவன செய்யுமா?

ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமல்ல. 24 மணி நேரம் இயங்கும் மருத்துவமனை மட்டுமே. எனவே, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நுண்கதிர்ப் படப் பிரிவு தொடங்கிட வாய்ப்புகள் இல்லை.

29—

## கிருஷ்ணகிரி அணை புனல் மின் திட்டம்

**வினா 19465—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி அணை புனல் மின் திட்டத்தின் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி அணை புனல் மின் திட்டச் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் தற்சமயம் ஏதும் இல்லை.

30—

## சூரிய ஒளி குளிர்பதனப் பெட்டிகள் தயாரித்தல்

**வினா 19470—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் சூரிய ஒளி குளிர்பதனப் பெட்டிகள் தயாரிக்கப்படவுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



31—

## நத்தம் மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா

**வினா 15920—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், கனவாய்ப்புதூர் ஊராட்சி நத்தத்தில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஓமலூர் வட்டம், கனவாய்ப்புதூர் கிராமம், கனவாய்ப்புதூர் ஊராட்சி நத்தத்தில், நத்தம் நிலவரித் திட்டத்தின்போது வீடுகள் கட்டிக் குடியிருந்து வந்த அனைவருக்கும் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கிராமத்தில் வீட்டுமனைப் பட்டா கோரி வரப்பெற்ற மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

32—

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 15969—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் மக்கள் தொகைக்கேற்ப குடியிருப்புக் கட்டடங்கள் உருவாக, வீட்டுமனைப் பட்டாக்கள் பல்வேறு பகுதிகளிலும் வழங்க அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை வீட்டுமனைகள், பட்டாக்கள் வழங்குவது தடை செய்யப்பட்டுள்ள போதிலும், வீட்டுமனைக் குடியிருப்புகள் வழங்குதல் தொடர்பானவற்றை

வீட்டுவசதி வாரியம், பொதுப்பணித் துறை மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகியவை தனித்தனியான திட்டங்கள் மூலம் செயல்படுத்தி வருகின்றன.

33—

## இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 15970—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் வட்டம், கொல்லம்பட்டி ஊராட்சியில் சொந்த வீடில்லாத சுமார் 100 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, ஓமலூர் வட்டம், கருப்பூர் கிராமத்தில் வீடுகள் கட்டிக் குடியிருந்து வரும் இடம் தீர்வை ஏற்பட்ட தரிசப் புறம்போக்காகும். அங்கு வசிப்பவர்களுக்கு வீட்டுமனை ஒப்படை வழங்குவதற்கு நிலத்தினை நத்தமாக நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளது. தகுதியின் அடிப்படையில் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

34—

## வீட்டுமனைப் பட்டா

**வினா 15973—திரு. ஆர்.ஆர்.சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், காமலாபுரம் ஊராட்சியில் புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக்கொண்டு குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காமலாபுரம் ஊராட்சியில்





ச.எண் 9/10, கல்லாங்குத்துப் புறம்போக்கிலும், ச.எண் 66/4, பாதைப் புறம்போக்கிலும், ச.எண் 65/5 தீர்வை ஏற்பட்ட தரிசப் புறம்போக்கிலும் வீடுகள் கட்டிக் குடியிருந்து வருபவர்களுக்கு நிலவகை மாற்றம் செய்து வீட்டுமனை ஒப்படை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

35—

## வீட்டுமனைப் பட்டா வழங்கல்

**வினா 15978—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சிக்குட்பட்ட 14 ஆவது வார்டிலுள்ள புறம்போக்கு நிலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் கட்டி வசித்து வருபவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீட்டுமனைப் பட்டா கோரியுள்ள இடம் தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் கிராமம், ச.எண் 54/4-ல் விஸ். 1.08.5 எக்டேர் தீர்வை ஏற்பட்ட புஞ்சை போடுகால் தரிசு நிலம் ஆகும். மேற்படி புலத்தில் 66 நபர்கள் வீடுகள் கட்டிக் குடியிருந்து வருகின்றனர். மேற்படி புலங்களிலுள்ள ஆக்கிரமிப்புக்களை முறைப்படுத்தி வீட்டுமனை ஒப்படை வழங்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

36—

## நிலச் சீர்திருத்தம் மற்றும் பங்கீடு

**வினா 16000—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலச் சீர்திருத்தத்தினால் இதுவரை அரசுக்கு எத்தனை ஏக்கர் நிலம் கிடைத்துள்ளது?

(ஆ) அது எத்தனை பேருக்கு, எப்படிப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது?

(இ) இன்னும் கொடுக்க வேண்டிய நிலம் எத்தனை ஏக்கர் உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) (1) நிலச் சீர்திருத்தச் சட்டத்தினால் இதுவரை அரசுக்குக் கிடைத்துள்ள நிலம் (31-5-1998 வரை)— 1,96,966 ஏக்கர்

(2) நீதிமன்ற வழக்குகளால் நிலுவையிலுள்ள பரப்பு— 14,204 ஏக்கர்

(3) பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்ட பரப்பு— 9,976 ஏக்கர்

(ஆ) பகிர்ந்தளிக்கப்பட்ட பரப்பு 1,70,831 ஏக்கர்

பயனடைந்தோர் விவரம்

| வரிசை எண்ணும் வகுப்பும் | பயனடைந்தோர் எண்ணிக்கை | பகிர்ந்தளித்த பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. தாழ்த்தப்பட்டோர் | 61,564 | 65,432 |
| 2. மலைஜாதியினர் | 188 | 264 |
| 3. ஏனையோர் | 74,123 | 1,05,135 |
| மொத்தம் | 1,35,875 | 1,70,831 |

(இ) இன்னும் கொடுக்கப்பட வேண்டிய பரப்பளவு (1அ)—(1ஆ இ 2அ)—1,955 ஏக்கர்.

**37—**

## ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா

**வினா 17621—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள மேய்ச்சல் புறம்போக்கில் வாழும் ஏழை





மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

மேய்ச்சல் புறம்போக்கு போன்ற ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்கள் பற்றிய உண்மை நிலையைக் கண்டறியவும் மற்றும் அவற்றை ஒப்படை செய்வது குறித்து தகுந்த பரிந்துரைகளை அரசுக்குச் செய்யவும் அமைக்கப்பட்ட குழுவால் பரிந்துரை செய்யப்படும் இனங்களில் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**38—**

## புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா

**வினா 19302—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, சாமத்தாள், கொம்பாடியூர், குளிக்காடு, பள்ளிப்பட்டி, சாணர்பட்டி, சோளிக்கவுண்டனூர் ஆகிய கிராமங்களில் உள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்து பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலங்கள் உரிமை மாற்றம் மற்றும் ஒப்படை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலத்தை குத்தகைக்கு வழங்கவும் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கூறிய சூழ்நிலையில் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சியைச் சேர்ந்த சாமத்தாள், கொம்பாடியூர் போன்ற கிராமங்களில் உள்ள மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தை ஒப்படை வழங்க இயலாது.

39—

### பொது மக்களின் இடையூறை அகற்றல்

**வினா 3430—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, சிதம்பரம் எல்லையம்மன் கோயில் தெருவில் பொது மக்களுக்கு இடையூறாக இருக்கும் பாழடைந்த கிணற்றை அப்புறப்படுத்தவும், வெல்லப்பிறந்தான் தெருவில் குவிந்துள்ள மண்ணை அகற்றவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சிதம்பரம் நகராட்சி, எல்லையம்மன் கோயில் தெருவில் பொது மக்களுக்கு இடையூறாக இருந்த பாழடைந்த கிணறு மற்றும் வெல்லப்பிறந்தான் தெருவில் குவிந்திருந்த மண் அகற்றப்பட்டுவிட்டது.

40—

### சாலை மேம்படுத்தல்

**வினா 4416—திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, காசணிப்பட்டி-பட்டணம்பட்டி சாலையை போக்குவரத்து வசதிக்கேற்ப மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் காசணிப்பட்டி முதல் பட்டணம்பட்டி வரை உள்ள சுமார் 3 கி.மீ. சாலையை மேம்படுத்தும் நடவடிக்கை பரிசீலனையில் உள்ளது.





41—

### குடிசைப் பகுதிகளுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா 4751—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சி, இராமநாயக்கன்பாளையம், பிள்ளையார் கோயில் தெரு, பொன்னியம்மன் கோயில் தெரு, ஜண்டா தெரு ஆகிய குடிசைப் பகுதிகளுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் நகராட்சி, இராமநாயக்கன்பாளையம், பிள்ளையார் கோயில் தெரு, பொன்னியம்மன் கோயில் தெரு, ஜண்டா தெரு ஆகியவற்றில் தற்போதுள்ள குடிநீர் வசதிகள் போதுமானதாகக் கருதப்படுவதால், மேலும் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

42—

### நகராட்சிப் பணிக்கு வாகன வசதி

**வினா 10331—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகராட்சியில், நகராட்சித் தலைவர் மற்றும் ஆணையர் பயன்படுத்த வாகன வசதி இல்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதைப் போக்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா?

[1998 நவம்பர் 23

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி நகராட்சியின் உபயோகத்திற்குப் புதிய ஈப்பு ஒன்று வாங்கிக்கொள்ள விரைவில் அனுமதி வழங்கப்படும் என்று நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

**43—**

**தார்ச் சாலையாக மாற்றுதல்**

**வினா 11523—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் ஒன்றியம், சண்ணாம்புக்காட்டுத் தோட்டம் சாலையிலிருந்து வரப்பாளையம் முதல் சின்னியகவுண்டன் வலசு சாலையை தார்ச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வெள்ளக்கோவில் தொகுதி, தாராபுரம் ஒன்றியம் சண்ணாம்புக்காட்டுத் தோட்டம் சாலை 0.3 கி.மீ. தூரத்திற்குத் தார் போடப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலை 0/8-1/2இ, 1998-99 ஆம் ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**44—**

**மயானக் கட்டடம், சாலை வசதி அமைத்தல்**

**வினா 12707—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி நகராட்சிக்குட்பட்ட 31,32,33 வார்டு பொது மக்கள் பயன்படுத்தும் மயானக் கட்டடங்களைப் பழுதுபார்த்து, சாலை வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தென்காசி நகராட்சி 31, 32, 33 வார்டுகளில் பொது மக்கள் பயன்படுத்தும் மயானக் கட்டடங்களைப் பழுதுபார்த்து சாலை வசதி ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**45—**

**பாரதியார் தினசரி சந்தையின் கடைகள் விவரம்**

**வினா 12826—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் அனுப்பர்பாளையம் பாரதியார் தினசரி சந்தையில் எத்தனைக் கடைகள் உள்ளன?

(ஆ) அங்கு வியாபாரம் சரிவர நடப்பதில்லை என்று அரசிற்குப் புகார் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், திருப்பூர் அனுப்பர்பாளையம் பாரதியார் தினசரி சந்தையில் கீழ்க்கண்ட கடைகள் உள்ளன:

| | |
|---|---|
| மட்டன் ஸ்டால் | 6 |
| கடைகள் | 23 |
| தினசரி மார்க்கெட் (பிளாட்பாரம்) | 5 |
| சைக்கிள் ஸ்டாண்ட் | 1 |

இவைதவிர ஒரு நவீன கழிப்பிடமும் உள்ளது.

(ஆ) இச்சந்தையில் வியாபாரம் சரிவர நடப்பதில்லை என்ற புகார் எதுவும் வரவில்லை.

(இ) இவ்வினாவிற்கிடமில்லை.

46—

**தியாகி குமரன் குடியிருப்பில் வடிகால் பணிகள்**

**வினா 13966—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தியாகி குமரன் குடியிருப்பில் சாக்கடை வடிகாலுக்காகத் தோண்டப்பட்ட பள்ளம் தொடர்பான வேலை நடைபெறாமல் காலதாமதப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணிகள் எப்போது முடிவுறும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் தியாகி குமரன் காலனி பகுதியில் சாக்கடை வடிகாலுக்காக வெட்டப்பட்ட பள்ளங்கள் பெரும் பகுதியில் வடிகால்கள் கட்டி முடிக்கப்பட்டு, ஆர்.சி.சி. சிலாப் போடப்பட்டு, அதன்மீது மண் போடப்பட்டு வாகனங்களும் பொது ஜனங்களும் சென்று வருகின்றனர். மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

47—

**தடுப்புச் சுவர் எழுப்புதல்**

**வினா 14432—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி, இருப்பூர்தி நிலையம் அருகில் மாடுகள் வெட்டுவதை மறைக்க தடுப்புச் சுவர் எழுப்ப அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட இடத்தில் மாடு அடிப்பதற்கு என தனியாக இடம் ஏதுமில்லை. எனவே, தடுப்புச் சுவர் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் வேலூர் நகராட்சியில் இல்லை.

48—

**கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிதண்ணீர் வழங்குதல்**

**வினா 14659—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், நடுப்பட்டி ஊராட்சிக்கு மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிதண்ணீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

49—

**மத்திய மாநில மேல்செங்கம் பண்ணை**

**வினா 7295—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாலை மாவட்டம், மத்திய மாநில மேல்செங்கம் பண்ணையை மூடும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை மூடாமல் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(இ) அதன் வளர்ச்சிக்கு அரசு செய்யும் உதவிகள் பற்றிய விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் இப் பண்ணையை மூடும் செயற்குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மாநில அரசு இதில் தலையிட இயலாது.

(இ) இப்பண்ணைக்கு மாநில அரசின் மூலம் நீர்ப்பாசன வசதி செய்தல் மற்றும் மின் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல் தொடர்பான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**50—**

**பூச்சிமருந்துகள், பூஞ்சான் காளான்கள் விற்பனை செய்யும் முறை**

**வினா 14101—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் உள்ள வேளாண்மைத் துறை அரசு கிடங்குகள் மூலம் பூச்சி மருந்துகள் மற்றும் பூஞ்சான் காளான்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் முறையை மீண்டும் அறிமுகம் செய்வது பற்றி அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது அறிமுகப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.





**51—**

**விவசாய விளைபொருள் கூடம் அமைத்தல்**

**வினா 14714—திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலத்தில் விவசாய விளைபொருள் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**52—**

**தரிசு நில மேம்பாட்டிற்கான உத்திகள் குழு**

**வினா 15593—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் வி.சி. குழந்தைசாமியின் தலைமையில் தரிசுநில மேம்பாட்டிற்கான உத்திகளை ஆய்வதற்காகப் போடப்பட்ட குழு தனது பரிந்துரையில் என்ன ஆலோசனையைச் சொல்லியிருக்கிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பரிந்துரைகள்:

1. அரசு, பயன்படுத்தப்படாத நிலம் மற்றும் புன்செய் நிலத்தின் மேம்பாட்டில் கவனத்தை செலுத்தி தற்போது நிலவும் பற்றாக்குறையைப் போக்கி வருங்காலத்தில் தேவையினை ஈடுசெய்யும்வகையில் உற்பத்தித் திறனைக் கணிசமான அளவிற்கு உயர்த்த வேண்டியது அவசியமாகும்.

[1998 நவம்பர் 23

2. தொலைநோக்குத் திட்டம்

பயன்படுத்ததப்படாத நிலம் மற்றும் நீர்ப்பிரிமுகடுப் பகுதி மேம்பாட்டிற்கான தொலைநோக்குத் திட்டம் ஒன்றை அரசு தயாரித்து 10 முதல் 15 ஆண்டுகளில் செயல்படுத்த வேண்டுமென காலவரையறை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

3. பயிற்சித் தேவைகள்

திட்ட அதிகாரிகள் முதல் அடிமட்டப் பணியாளர்கள் வரையிலுள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் செம்மையான பயிற்சி அளிப்பதற்கான திட்டத்தை அரசு வகுத்து மூன்று நிலைகளில் பணியாளர்களின் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

4. மக்கள் பங்கேற்பு

அரசு செயல்படுத்தும் திட்டங்களில் திட்டமிடும் நிலையிலிருந்து மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் நீர்ப்பிரிமுகடுப் பகுதி அளவிலும் பொது மக்களை ஈடுபடுத்துவதற்குண்டான நடைமுறைகளை உருவாக்குவதற்கு முறையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. விரிவான திட்ட அறிக்கை

அரசு, நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுப் பணிகளை கவனிக்கின்ற மாவட்ட அளவிலான அலுவலகத்தின் மூலம் தொழில்நுட்ப உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

6. கண்காணிப்பும் மதிப்பீடும்

அனைத்துத் திட்டங்களிலும் உள்மதிப்பீடும் நடுத்தர மற்றும் பெரிய திட்டங்களைப் பொறுத்தவரை தனிப்பட்ட சிறந்த வெளி அமைப்பு அல்லது நிறுவனத்தைக் கொண்டு தனிப்பட்ட வகையிலும் மதிப்பீட்டுப் பணியை மேற்கொள்ள வேண்டும்.

7. சொத்துக்கள் குறித்த ஆவணம்

அனைத்துத் திட்டங்களின் நேர்விலும் உருவாக்கப்பட்ட சொத்துக்கள் குறித்த ஆவணம் பராமரிக்கப்பட வேண்டும்.

8. ஒருங்கிணைந்த அணுகுமுறை

பயன்படுத்தப்படாத நில மேம்பாடு (வனப் பகுதியில் உள்ள பயன்படுத்தப்படாத நிலங்களையும் சேர்த்து) நீர்ப்பிரிமுகடு மேம்பாடு



1998 நவம்பர் 23]

ஆகிய திட்ட செயலாக்கப் பணிகளை வெவ்வேறு வகைப்பட்ட துறைகளிலும் ஒப்படைக்கலாம். ஆனால், அத்துறைகளின் பணியை முறையாக ஒருங்கிணைத்தல் வேண்டும்.

9. செயல் திட்டம்

ஒவ்வொரு நுண்ணிய நீர்ப்பிரிமுகடுப் பகுதிக்கும் பெருங்களூர் நுண்ணிய நீப்ப்பிரிமுகடு பகுதிக்கான மாதிரி செயல்திட்ட வரைபடங்கள் போல் செயல்திட்ட வரைபடங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

10. மாநில நிலப்பயன்பாட்டு வாரியம்

நிலப்பயன்பாட்டின் அனைத்து அம்சங்கள் குறித்த புள்ளிவிவரங்களைத் திரட்டி பகுப்பாய்வு செய்யத் தேவையான உபகரணங்கள் திறன், தொழில்நுட்ப நுண்ணறிவு ஆகியவைகள் அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள தொலை உணர்வு மையத்திடம் உள்ளதால் அதை வலுப்படுத்தலாம்.

11. நிலப்பயன் வகைப்பாடு

மரபு வழியிலான ஒன்பது வகை நிலப்பயன்பாட்டு வகைப்பாட்டிற்கும் மேலானதாக உள்ள தேசிய தொலை உணர்வு மையம் பின்பற்றும் பிரிவு முறைக்கு முன்னுரிமை அளித்து கொள்கை அளவில் பின்பற்ற வேண்டும்.

12. நிலம் குறித்த புள்ளிவிவரங்களை மேம்படுத்துவதற்கான ஆய்வு

தற்போதுள்ள 1,50,000 என்ற அளவில் ஒருநாள் செயற்கைக்கோள் புள்ளிவிவரங்களில் தற்காலிகமாகப் பயன்படுத்தப்படாத நிலங்கள் குறித்த விவரங்கள் அடங்காது. பயன்படுத்தப்படாத நிலப்பகுதி குறித்து கணக்கிட இந்த அறிக்கையில் ஒன்பது வகைப்பாட்டிலிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், இந்த உயர்மட்டக் குழு தயாரித்துள்ள அறிக்கையில் உள்ள மாதிரி செயல்திட்டம், தொலை உணர்வு புள்ளிவிவரங்களின் அடிப்படையில் பயன்படுத்தப்படாத நிலங்களின் பரப்பளவை துல்லியமாகக் கணக்கிட இரண்டு மாவட்டங்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

[1998 நவம்பர் 23

13. நிலப்பயன்பாட்டு வரைபடங்கள் அவ்வப்பொழுது திருத்தலும் புதுப்பித்தலும்

நிலப்பயன்பாட்டு வரைபடங்கள் அதிக அளவிலான அளவுகோலில் தயாரிக்கப்பட வேண்டும். இவை இலக்க ரீதியாக இருக்க வேண்டும். இவற்றை ஒவ்வொரு ஐந்தாண்டும் திருத்திப் புதுப்பிக்க வேண்டும்.

14. இலக்க ரீதியான புள்ளிவிவர அடிப்படை மற்றும் புவியியல் தகவல் செயற்பாட்டைப் பயன்படுத்துதல்

அடிப்படை புள்ளிவிவரம் மற்றும் குறிப்பிட்ட திட்டப் புள்ளிவிவரம் ஆகியவற்றிற்கான இலக்க ரீதியான புள்ளிவிவரங்களைச் சேமித்து வைக்க அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலை உணர்வு நிறுவனம் ஒரு மையமாக இருக்கலாம்.

15. நீர்ப்பிரிமுகடுப் பகுதி நில வரைபடம்

தமிழ்நாடு முழுவதற்குமான நீர்ப்பிரிமுகடுப் பகுதி வரைபடம் தயாரிக்கும் பணிக்கு முக்கியத்துவம் அளித்து சுமார் 2 ஆண்டுகளில் முடிக்க வேண்டும்.

16. வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் வகைப்பாடு

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும்போது முன்னுரிமையை நிர்ணயிக்க ஒரு அளவுகோலைப் பயன்படுத்தலாம்.

17. வேளாண் வானிலை நிலையங்கள்

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு வேளாண் வானிலை நிலையத்தை ஏற்படுத்தி விவசாயிகளுக்கான நடுத்தர வகை முன்னறிவிப்பைப் பெற அதனை எம்.ஆர்.டி.ஓ.டபிள்யூ.எப். உடன் இணைக்கலாம்.

18. பயிர்வகைகளைத் தெரிந்தெடுத்தல்

வேளாண்மை தட்பவெப்ப நிலை, நிலமட்டம், மழை, நாட்கள், மண்ணின் தன்மை ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வளர்ச்சி வட்டாரங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பயிர்கள் குறித்த விரிவான பட்டியலை விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் பயன்படுத்தலாம்.



1998 நவம்பர் 23]

19. கசிவுநீர்க் குட்டைகள்

நீர்க் குட்டைகளுக்கு வகைசெய்யும் திட்டம் தொடரப்படலாம்.

20. சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம்

சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகளைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்துவது குறித்து பிரச்சாரம் செய்யப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

21. மரங்கள் தோட்டக்கலை

புன்செய் மற்றும் பயன்படுத்தப்படாத நிலங்களுக்குரிய திட்டவட்டமான இடம் குறித்த ஆய்விற்கான தென் மண்டலத்தில் ஓர் ஆய்வு மையமும் வட மண்டலத்தில் மற்றோர் ஆய்வு மையமும் அமைக்கப்படலாம். புன்செய் மற்றும் பயன்படுத்தப்படாத நில மேம்பாடுகளில் ஈடுபட்டுள்ள பணியிடைப் பயிற்சி அளிப்பதற்காக கீருஷ்விக்யான் கேந்திரங்கள் இரண்டும் அமைக்கப்படலாம்.

22. அரசு சாரா நிறுவனங்கள்

பயன்படுத்தப்படாத நிலத்தை பயன்படுத்துதல், புன்செய் நிலத்தில் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் ஆகிய முயற்சியில் அரசு சாரா நிறுவனங்கள் பங்கு பெற அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

23. அமைப்பு முறை

எய்தப்பட வேண்டிய நோக்கங்களின் பரிமாணங்களுக்குப் போதுமானதாக இருக்கின்ற ஒருங்கிணைந்த அமைப்பு முறை ஒன்றை ஏற்படுத்துவது அவசியமாகும்.

24. வேளாண்மை நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டு அமைச்சர்

வேளாண்மைத் துறை அமைச்சர், வேளாண்மை பயன்படுத்தப்படாத நிலம் மற்றும் நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் துறை அமைச்சர் எனப் பெயரிடப்படலாம்.

25. அமைப்பு-மாதிரி 'A' மாதிரி 'B'

அனுமந்தராவ் தலைமையிலான வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம் (DDP) ஆகியவை குறித்த தொழில்நுட்பக் குழுவில் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்திய அரசு அளித்த வழிகாட்டுக்

குறிப்புரைகளைக் கருத்திற்கொண்டும் இக்குழுவின் பரிந்துரைகளில் கொடுக்கப்பட்ட விவரங்களைக் கருத்திற்கொண்டும், கீழ்க்கண்ட அமைப்புமுறை பரிந்துரைக்கப்படுகிறது.

கொள்கை உருவாக்குதல், திட்டமிடல், வளர்ச்சி ஆகியவற்றிற்காக அரசின் பரிசீலனைக்காக இரண்டு மாதிரிகள் அதாவது, மாதிரி A ,மாதிரி B ஆகியவை குறித்து கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

மாதிரி A பின்வரும் கூறுகளைக் கொண்டதாக இருக்கும்.

(அ) முதலமைச்சரைத் தலைவராகவும், சம்பந்தப்பட்ட அமைச்சர் மாநில நிலப் பயன்பாடு வாரியத்தின் தலைவர், ஊராட்சிகளின் பிரதிநிதிகள், தொடர்புடைய துறைகளின் செயலாளர்கள், வல்லுநர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுக்கான கொள்கை மேற்பார்வை கண்காணிப்புக் குழு என்று அழைக்கப்படுகின்ற மாநில அளவிலான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தலாம். இந்தக் குழுவிற்கு வல்லுநர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் துணைபுரியும். தொடக்கத்தில் இரண்டு குழுக்கள் ஏற்படுத்தப்படலாம். ஒன்று ஆராய்ச்சி தொடர்பானதும் மற்றொன்று பொது மக்கள் பங்குகொள்வது குறித்ததுமாகும். இம்மன்றம், குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறை கூடலாம். அதன் அன்றாட அலுவல்கள் செயற்குழு என்று அழைக்கப்படுகிற மன்றத்தின் துணைக் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்படலாம். இந்தத் துணைக் குழு குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட வேண்டும். மன்றத்திற்கு உதவி செய்யத் தனிச் செயலாளர் ஒருவர் தலைமையில் கட்டுக்கோப்பான செயலகம் ஒன்று இருக்கும்.

(ஆ) பயன்படுத்தப்படாத நிலம் நீர்ப்பிரிமுகடு பகுதி மேம்பாட்டு இயக்ககம் ஒன்று ஏற்படுத்தப்படலாம். இது மாநில அளவில் மையத் துறையாகச் செயல்படும்.

(இ) மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சித் தலைவர் தலைமையில் அரசுத் துறைகள் அரசு சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர், வங்கிகள் மற்றும் உழவர்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக்கொண்ட மாவட்ட, பயன்படுத்தப்படாத நிலங்கள் நீர்ப்பிரிமுகடு பகுதி மேம்பாட்டுக் குழு ஒன்று ஏற்படுத்தப்படலாம். திட்ட இயக்குநர் ஒருவர் மூன்று அல்லது



நான்கு முதுநிலை அதிகாரிகள் ஆகியோரைக்கொண்ட தொழில்நுட்பக் குழு ஒன்று ஏற்படுத்தப்படலாம். அவர்கள், வேளாண்மைத் தோட்டக்கலை, பொறியியல் மற்றும் வனவியல் ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்களாக இருப்பர். ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்படும் பணியின் அளவைப் பொறுத்து, இக்குழு விரிவுபடுத்தப்படலாம்.

(ஈ) களத்தில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டத்தின் மாவட்ட அமைப்பு முறையானது, பொதுவாக, அனுமந்தராவ் குழு அறிக்கையின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி வேலைவாய்ப்பு அமைச்சகம் பரிந்துரைத்தவாறு இருக்கலாம். நீர்ப்பிரிமுகடுப் பகுதி அளவில், நீர் பயன்படுத்துவோர் சங்கம் ஒன்றும், நீர்ப்பிரிமுகடு பகுதிக் குழு ஒன்றும் இருக்கும்.

(உ) நீர்ப்பிரிமுகடுப் பகுதி மேம்பாட்டிற்கான மாவட்ட நிர்வாக அமைப்புகள் பயன்படுத்தப்படாத நிலம் நீர்ப்பிரிமுகடுப் பகுதி மேம்பாட்டு இயக்ககத்தின் பகுதியாகவும் அவ்வியக்கத்தின் ஆளுகையிலும் இயங்கும்.

(ஊ) நீரைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்கு அவர்களது முயற்சியில் ஆலோசனை வழங்குவதற்காக மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள தொழில்நுட்ப ஆதார மையங்கள் இனம் கண்டறியப்படலாம்.

மாதிரி 'B' பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்:

(அ) மாநில அளவிலான நீர்ப்பிரிமுகடு பயன்படுத்தப்படாத நிலமேம்பாட்டுக் குழு வடிவிலான முழு நேர தலைவர், நிதி, பொறியியல் பண்ணை முறைக்கான உறுப்பினர்கள் கொண்ட அதிகார மன்றம் ஒன்று.

(ஆ) அமைச்சரவைக் குழு வடிவிலான கொள்கை அமைப்பு முதலமைச்சரைத் தலைவராகவும் தொடர்புடைய அமைச்சகங்களை உறுப்பினர்களாகவும் கொண்ட கொள்கை மேற்பார்வைக் கண்காணிப்புக் குழு.

(இ) நிலையான ஆலோசனைக் குழுக்கள் மூலமாகத் தொழில்நுட்ப அறிவுரைகள் வழங்குதல் (i) அறிவியல் தொழில்நுட்பவியல், (ii) நிதி, (iii) மக்கள் பங்குகொள்ளுதல் (iv) கண்காணிப்பு, மதிப்பீடு ஆகியவை குறித்து தொழில்நுட்ப உதவியை நல்குவதற்கு ஆலோசனை நிலைக் குழுக்கள்.

(ஈ) மாவட்டக் கள நிலங்களில் A மாதிரியில் உள்ளதுபோல் இருத்தல்

25 ஆண்டுகளுக்கான தொலைநோக்குத் திட்டம்

42.5 இலட்சம் எக்டேர் பரப்பில் பயன்படுத்தப்படாத நில மேம்பாடு மற்றும் நீர்ப்பிரிமுகடு மேம்பாடு ஆகிய திட்டங்களுக்காக ரூ.2,300 கோடி செலவில் ஒரு தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரித்து 15 ஆண்டுகளில் செயல்படுத்த வேண்டுமென காலவரையறை நிர்ணயித்து அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென உயர்நிலைக் குழு பரிந்துரை செய்துள்ளது. இதற்கான நிதியுதவி, மானியம், கடன் போன்றவைகள் கீழ்க்கண்ட பலவிதமான ஆதாரங்களின் மூலம் பெறப்படலாம் எனவும் அக்குழு பரிந்துரை செய்துள்ளது:

(1) மைய அரசு

(2) மாநில அரசு

(3) நிலச் சொந்தக்காரர் அல்லது பயனீட்டாளர்கள்

(4) நிதி நிறுவனங்கள்

(5) தனியார் நிறுவனங்கள்

(6) வெளிநாட்டு நிதியுதவி

முதல் ஆண்டிற்கான இலக்கு 2.5 மில்லியன் எக்டேர் பரப்பளவு தொகை ரூ.160 கோடியாகும். இந்த இலக்கை முதல் வருடத்திலேயே எட்ட முடியாது எனக் கருதுவதால் 4 பல்வேறு மண்டலங்களில் முன்னோடி திட்டத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என நபார்ட் நிறுவன அலுவலர்களுடன் 22-4-1998 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை இயக்குநர் தலைமையின்கீழ் சம்பந்தப்பட்ட துறைகளின் அலுவலர்கள் மற்றும் நபார்ட் நிறுவனத்தின் பிரதிநிதி ஆகியோர்களைக் கொண்ட ஒரு செயல்பிரிவு உடனடியாகக் கூட்டப்பட உள்ளது. அச்செயல்பிரிவு ஒரு மண்டலத்திற்கு சுமார் 4,000 எக்டேர் நிலத்தைத் தேர்ந்தெடுத்து, ஒரு முன்னோடி திட்டத்தின் அடிப்படையில் வேளாண்மைப் பொறியியல் பணிகளாகிய சிறிய தடுப்பு அணைகள், கசிவு நீர்க்குட்டைகள், மண்வளப் பாதுகாப்பு முறைகள் மற்றும் வேளாண்மைப் பணிகளாகிய மரத் தேவைகள்/ எரிபொருள்/தீவனப் பயிர்கள் மற்றும் ஆண்டுப் பயிர்களாகிய சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள் போன்ற கூறுகளைக் கொண்ட செயல் திட்டத்தைத் தயாரித்து 3 மாத காலத்திற்குள் அரசுக்குச் சமர்ப்பிக்கும். அதை அரசு முறைப்படி ஆய்வு செய்து ஆணை வெளியிடும்.



53—

## வேளாண்மை வளர்ச்சித் திட்டப் பணிக்கான தொகை விவரம்

**வினா 18595—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98ஆம் ஆண்டு எடப்பாடி தொகுதியில் உலக வங்கி உதவியுடன் வேளாண்மை வளர்ச்சித் திட்டப்பணிக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், பிரிக்கப்படும் முன்னர் எடப்பாடி, சங்ககிரி வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டிலிருந்து வந்தது. தற்போது மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டபின், எடப்பாடி என்ற புதிய வட்டம் உருவாக்கப்பட்டது புதிய அலுவலகம் அமைக்க வேளாண்மை இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார். எடப்பாடி வட்டம், தற்போதும் சங்ககிரி வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. சங்ககிரி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டடம் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1995-96 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1997-98 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்கள் செயலாக்கப்பட்டன:

[1998 நவம்பர் 23

| | | நிதி ஒதுக்கீடு | நிதி சாதனை |
|---|---|---|---|
| (1) | அனுசரணை ஆராய்ச்சித் திட்டங்கள் அமைத்தல் | ரூ. 6195 | ரூ. 6195 |
| (2) | 20 ஹெக்டேர் செயல் விளக்கப் பண்ணை அமைத்தல் | ரூ. 2750 | ரூ. 2750 |
| (3) | ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | | |
| அ. | விவசாயிகள் பயிற்சி | ரூ. 3000 | ரூ.3000 |
| ஆ. | வேளாண் கருவிகள் விநியோகம் | ரூ. 3000 | ரூ.34000 |

இதன் மூலமாக 362 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். மேலும், இத்திட்டத்தின்கீழ் பலமுனை விரிவாக்கத் திடல்களும், காரிப், ராபி பயிற்சி முகாமும் செயல்படுத்தப்பட்டுள்ளன.

**54—**

**விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்**

**வினா 18655—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி (ஐ.பி.எம்.) ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரே சமயத்தில் 10முதல் 15 கிராமங்களில் நடத்தப்படுகிறது. இதனைத் தவிர்த்து ஒன்று அல்லது இரண்டு இடங்களில் மட்டுமே ஒரு வட்டாரத்தில் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி நெல் மற்றும் பருத்தி பயிரில் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. நெல் பயிரில் ஒரு வட்டாரத்திற்கு பத்து பள்ளிகள் என்ற அளவில் தேர்வு செய்யப்பட்ட 140 வட்டாரங்களில் மட்டுமே மத்திய அரசு சார்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. அது சம்பா மற்றும் நவரை பருவத்தில் செயல்படுத்தப்படுகிறது. மேலும், தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அனைத்து வட்டாரங்களில் பருத்திப் பயிரில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி உழவர் வயல்வெளிப் பள்ளிகள் மூலம் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்கு மத்திய அரசு உதவித் தொகை பெறப்படுவதால் பயிற்சியினைக் குறைவாக நடத்தினால் மத்திய அரசு அளிக்கும் உதவி முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் போய்விடும். அதனால், ஒரு வட்டாரத்தில் ஒன்று அல்லது இரண்டு இடங்களில் மட்டும் பயிற்சி அளிக்க இயலாது.

**55—**

**வாய்க்காலைப் புதுப்பித்தல்**

**வினா 5115—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானம்பார்த்தான் வாய்க்கால் மதகு எண் 4-ஐப் புதுப்பித்து வாய்க்காலின் இருமருங்கிலும் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

ஆம். தமிழ்நாடு நீர் ஆதார ஒருங்கிணைந்த திட்டத்தில் சேத்தியாத்தோப்பு துணைத் திட்டத்தின்கீழ் மானம்பார்த்தான் வாய்க்காலைப் புதுப்பித்து நவீனப்படுத்தும் வேலையினை எடுத்துச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

56—

## தொலைபேசி இணைப்பு வழங்குதல்

**வினா 6332—திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கொடைக்கானலில் உள்ள சேக் அப்துல்லா அரசு விருந்தினர் மாளிகையில் உள்ள தொலைபேசிக்கு, தொலைபேசிக் கட்டணம் கட்டாததால் துண்டிக்கப்பட்ட தொலைபேசி இணைப்பை மீண்டும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) தொலைபேசிக் கட்டணம் கட்டாததன் காரணம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) கொடைக்கானலில் உள்ள சேக் அப்துல்லா அரசு விருந்தினர் மாளிகையில் உள்ள தொலைபேசிக்கு தொலைபேசி நிலுவைக் கட்டணத் தொகை அரசின் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, தொலைபேசித் துறையினருக்கு வழங்கப்பட்டுவிட்டது. மேலும், இந்த விருந்தினர் மாளிகையில் 41669 என்ற எண்ணுள்ள புதிய தொலைபேசி இணைப்பு நிரந்தரமாகப் பெறப்பட்டுள்ளது.

(ஆ) நிலுவையிலுள்ள தொலைபேசிக் கட்டணத்திற்காக இணைப்பு துண்டிக்கப்பட்டது. நிலுவைத் தொகையினுடன் கட்டணத் தொகையும் சேர்த்து ரூ.36,543-க்கு அரசின் ஒப்புதல் பெற்ற பின்னரே செலுத்த முடியும் என்பதால் உடனே கட்டப்படவில்லை.

57—

## கால்வாய் மராமத்து செய்தல்

**வினா 9401— திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிற்றாறு கால்வாய் கடபோகத்தி அணையிலிருந்து மேலப்பாவூர், கீழப்பாவூர், நாகல்குளம், கடம்பன்குளம் கால்வாய் வரை உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி மராமத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம் சிற்றாறு பாசனத் திட்டத்தின் கீழுள்ள பாவூர் அணைக்கட்டு, திருச்சிற்றம்பலம் அணைக்கட்டு மற்றும் கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு தமிழ்நாடு நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 83.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பந்தக்காரர் நியமனம் ஆனவுடன் பணிகள் விரைவில் தொடங்கப்படும். இச்சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய்த் துறையினருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

58—

## சுற்றுலா ஆய்வு மாளிகையை விரிவுபடுத்துதல்

**வினா 13295—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

தருமபுரி தொகுதி, இலக்கியம்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சுற்றுலா ஆய்வு மாளிகையை விரிவுபடுத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, இலக்கியம்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சுற்றுலா ஆய்வு மாளிகையை விரிவுபடுத்த அரசின் நிதிநிலையைப் பொறுத்து 1999-2000 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டங்களில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

59—

## பேருந்துகளை மீண்டும் இயக்குதல்

**வினா 129 5—திரு. டி. மணி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கன்னியாகுமரி மாவட்டம், படந்தாலுமூடு, மார்த்தாண்டம், திருவெட்டார் திங்கள் சந்தை போன்ற பணிமனைகளில் பல பேருந்துகள் இயக்கப்படாமல் உள்ளதை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*தற்பொழுது தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் நாகர்கோவிலைச் சேர்ந்த அனைத்துத் தடங்களிலும் எல்லாப் பேருந்துகளும் ஒழுங்காக இயக்கப்பட்டு வருவதோடு, சிறப்புப் பேருந்துகளும், தேவைக்கு ஏற்ப கூடுதல் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.*

60—

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 10457—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரக்கோணம் நகரில் தக்கோலம் ரயிலடியிலிருந்து மங்கம்மாள் ரயில் கடவு வரை நகரப் பேருந்து இயக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*அரக்கோணத்திலிருந்து தக்கோலம் ரயில் கடவு 8.0-வது கிலோ மீட்டரிலும் மங்கம்மாள் ரயில் கடவு 3.0-வது கிலோ மீட்டரிலும் அமைந்துள்ளன. இத்தடத்தின் இரண்டு ஆரம்ப ஊர்களும் அங்கீகரிக்கப்பட்ட நகராக இல்லாததால் இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்கச் சாத்தியமில்லை.*



61—

## பேருந்து வழித் தடத்தை நீட்டித்தல்

**வினா 11885—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் புதிய பேருந்து நிலையம் முதல் புதிய மாவட்ட மருத்துவனைவரை பேருந்து வழித் தடத்தை நீட்டிக்குமாறு கோரிக்கை வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், கோரிக்கையை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது 3ஏ/10 என்ற பல்திசைப் பேருந்து கடந்த 25.12.1997 முதல் அரசு மருத்துவமனை—பாண்டியன் நகர் (வழி) திருப்பூர் புதிய பேருந்து நிலையம் வழித் தடத்தில் தினசரி 3 சிங்கிள்கள். அரசு மருத்துவனை, பெருமாநல்லூர் (வழி) திருப்பூர் புதிய பேருந்து நிலையம் வழித் தடத்தில் , தினசரி சிங்கிள்கள் என இயக்கப்பட்டு வருவதன் மூலமாக மேற்படி கோரிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது.*

62—

## அரசுப் பேருந்து இயக்குதல்

**வினா 12620—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து ஒட்டங்காடு, கட்டையங்காடு, பள்ளத்தூர் வழியாக பட்டுக்கோட்டைக்கு அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

[1998 நவம்பர் 23

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேராவூரணி—பட்டுக்கோட்டை(வழி) ஒட்டங்காடு, கட்டயங்காடு, பள்ளத்தூர் (தட நீளம் 30கி.மீ.) தடத்தில் நகர்ப் பேருந்து ஒன்று மூலம் எட்டு நடைகள் இயக்கப்படுகின்றன. இது தவிர தனியார் புறநகர் பேருந்துகள் மூலம் எட்டு நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், இத்தடத்தின் பகுதிகளான பேராவூரணி, ஒட்டங்காடு, பள்ளத்தூர், பட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் பிற தடங்களில் இயங்கும் பேருந்துகள் இயங்குகின்றன. இத்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்க செயற்குறிப்பு இல்லை.

**63—**

**கட்டுமாவடிக்கு அரசுப் பேருந்து இயக்குதல்**

**வினா 12636—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து முதல்சேரி, தொக்காளிக்காடு, கிழங்கோட்டை, இராசாடம் வழியாக கட்டுமாவடிக்கு அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை--முதல்சேரி--தொக்காளிக்காடு--கிழங்கோட்டை—இராசாடம்—கட்டுமாவடி தடத்தின் நீளம் 37 கி.மீ. பட்டுக்கோட்டை--தொக்காளிககாடு, தொக்காளிக்காடு--இராசாமடம், இராசாமடம்—கட்டுமாவடி என இத்தடத்தின் பகுதிகள் அனைத்தும் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளன. எனவே, இத்தடத்தில் புதிய பேருந்து வழித் தடம் தொடங்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.



1998 நவம்பர் 23]

**64—**

**புதிய வழித்தடம் ஏற்படுத்துதல்**

**வினா 12641—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொளக்குடி கிராமத்திற்குப் புதிய வழித்தடம் ஏற்படுத்தி பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க, பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேராவூரணியிலிருந்து அறந்தாங்கி செல்லும் அநேக பேருந்துகள் மூலம் கொளக்குடி கிராமம் பேருந்து வசதி பெறுகிறது. இப்பகுதியில் தனியார் பேருந்துகள்24 நடைகளும் கழகப் பேருந்துகள் மூலம் பேராவூரணி—ரெட்டவயல் பகுதியில் 24 நடைகளும், ரெட்ட வயல்—அறந்தாங்கி (வழி) கொளக்குடி 12 நடைகளும் இயக்கப்படுகின்றன. எனவே, இத்தடத்தில் புதிய வழித்தடம் தொடங்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**65—**

**அரசுப் பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா 12718—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து கட்டுமாவடி வரை முன்பு இயங்கிக் கொண்டிருந்த 13-ஏ அரசுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி. போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தால் கும்பகோணத்திலிருந்து பேராவூரணி நகரத் தடம் எண் 13-ஏ இயக்கப்படவில்லை. பேராவூரணியிலிருந்து இரட்டவயல், வெள்ளாளங்காடு, பழுக்காடு, விளாங்குளம் வழியாக கட்டுமாவடி வரை தட எண் 3-ஏ நகரப் பேருந்து சில மாதங்கள் இயக்கப்பட்டு போதிய மக்கள் பயன்பாடு இன்மையால் நிறுத்தப்பட்டது. ஆயினும், 3-ஏ நகரப் பேருந்துக்குப் பதிலாக இதே தடத்தின் வழியாக கட்டுமாவடிக்கு மனமேல்குடி வழியாக ஒரு புறநகர்ப் பேருந்து அதே எட்டு நடைகளுக்கு இயக்கப்படுகிறது.

66—

### அரசு விரைவுப் பேருந்து இயக்குதல்

**வினா 14777—திரு.ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலத்திலிருந்து சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தாரமங்கலத்திலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்குவதற்கான திட்டம் எதுவும் இல்லை. தாரமங்கலத்திலிருந்து சேலம் 24 கிலோ மீட்டர் தொலைவில்தான் உள்ளது. சேலத்திலிருந்து சென்னைக்கு தினசரி 13 பேருந்துகள், 24 ஒருவழிப்பாதை பயணமாக அரசு விரைவுப் பேருந்து போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, தாரமங்கலம் பயணிகளும் நகரப் பேருந்து மூலம் சேலம் வந்து இக்கழகப் பேருந்து வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.



67—

### இராதாபுரம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் பேருந்து வசதி

**வினா 15539—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் வரை பொது மக்களின் நலன் கருதி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் செல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) வழித்தடம் எண் 3-ல் இயக்கப்படும் நகரப் பேருந்து, வள்ளியூரிலிருந்து உதயத்தூர் செல்லும் சுற்றுக்களில் 8 நடைகளும், வள்ளியூரிலிருந்து இராதாபுரம் செல்லும்போது 2 நடைகளும், புறநகர்ப் பேருந்து (தடம் எண் 234) வள்ளியூரிலிருந்து கூத்தக்குளி இடிந்தகரை செல்லும்போது 6 நடைகளும், தடம் எண் 315 ஈச்சட்டி வழியாகச் செல்லும்போது 2 நடைகளும், ஆக 18 நடைகள் இராதாபுரம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் வழியாக இயக்கப்பட்டு வருகிறது. மேலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப 22.9.1997 முதல் தடம் எண் 15, நகரப் பேருந்து வள்ளியூரிலிருந்து இராதாபுரம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் வரை நீட்டித்து 3 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. ஆகவே, தற்போது 21 சுற்றுக்கள் மேற்படி அலுவலகம் வழியாக/வரை இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

68—

### குற்றாலத்தில் சீசன் காலங்களில் நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 15856—திரு.கோ. நயினா முகமது:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் சீசன் காலங்களில் 24 மணி நேரமும் குற்றாலத்தைச் சுற்றியுள்ள 15-20 கி.மீ. தூரத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குற்றாலத்தில் சாரல் இருக்கும் சீசன் காலத்தில் குற்றாலத்திலிருந்து அருகில் உள்ள முக்கிய இடங்களுக்குக் காலை 5.00 மணியிலிருந்து இரவு 10.30 மணி வரை தேவைக்கேற்ப சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தவிர, இரவு 10.30 மணிக்கு மேல், பொதுவாக உல்லாசப் பயணிகளின் கூட்டம் அருகில் உள்ள ஊர்களிலிருந்து இருக்காது. எனவே, இரவு முழுவதும் சிறப்புப் பேருந்துகள் இயக்கவேண்டிய அவசியம் ஏதும் இல்லை. தேவைக்கேற்ப தென்காசி-குற்றாலம் வழித்தடத்தில் இரவிலும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை மற்றும் திருநெல்வேலியைச் சார்ந்த புறநகரப் பேருந்துகள் செங்கோட்டை-மதுரை (வழி) குற்றாலம், தென்காசி, கடையநல்லூர், புளியங்குடி, சிவகிரி, ராஜபாளையம் வழித்தடத்தில் இரவு முழுவதும் ஏற்கெனவே இயங்கி வருகின்றன.

**69—**

## பேராவூரணிக்குப் புதிய பேருந்து வழித்தடம்

**வினா 15861—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை கீழத்தோட்டம் வழியாக வேராவூரணிக்கு புதிய பேருந்து வழித்தடம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேராவூரணி-ராஜாமடம்-கீழத்தோட்டம்-ஏரிப்புறக்கரை நடத்தில் ராஜாமடம் கீழத்தோட்டத்திற்கு இடையில் உள்ள பாலம் ஒன்று உடைந்தும், கீழத்தோட்டம் முதல் ஏரிப்புறக்கரை வரை உள்ள 3 கி.மீ. சாலை மிகவும் குறுகலாகவும், பழைய கப்பிச் சாலையாகவும், சிற்றுார்தி இயக்குவதற்குக்கூட வாய்ப்பில்லாத சாலையாகவும் உள்ளது. எனவே, இத்தடத்தில் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை. ஆயினும், பேராவூரணி முதல் ராஜாமடம் வரை பேருந்து வசதி உள்ளது.

**70—**

## குடிதண்ணீர் வசதி ஏற்படுத்துதல்

**வினா 16935—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்ட சாலைப் போக்குவரத்துக் கழகப் பாலிடெக்னிக்கில் பணிபுரியும் அலுவலர், ஆசிரியர் ஆசிரியைகளுக்கு, பயிலும் மாணவ மாணவியருக்கு குடிதண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி சாலைப் போக்குவரத்து நிறுவனம் பாலிடெக்னிக்கில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கும் தேவையான குடிதண்ணீர் ஆழ்குழாய்க் கிணறு மூலம் பெறப்பட்டு இரண்டு தண்ணீர் குளிர்விப்புச் சாதனங்கள் மூலமாகக் குளிர்ந்த குடிநீரும் குளிரூட்டப்படாத குடிநீரும் தனித் தனியே வழங்கப்பட்டு வருகிறது.

[1998 நவம்பர் 23

71—

**சாலையோர உணவு விடுதி**

**வினா 19917—திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சுற்றுலாத் தலமான மனோரமாவில் சாலையோர உணவு விடுதி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

இல்லை.

72—

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா 13674—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூரிலிருந்து சுரண்டை சாலையில், சாலை மிகவும் குறுகலாக இருப்பதால் போக்குவரத்து பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலையை அகலப்படுத்துவதற்கு இச்சாலையில் உள்ள சிறு பாலங்கள் மற்றும் தாம்பாலங்களை அகலப்படுத்த வேண்டியுள்ளது. மேலும், அகலப்படுத்துவதற்கு நில எடுப்பு செய்ய வேண்டியுள்ளது. இதற்கான மொத்தச் செலவு



1998 நவம்பர் 23]

தோராயமாக ரூ.200/- இலட்சம் ஆகும். அரசின் நிதி நெருக்கடி காரணமாக இப்பணியை அண்மைக் காலங்களில் எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

73—

**பாலம் அமைத்தல்**

**வினா 14226—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் பெட்ரோல் பங்குக்கு அருகில் உள்ள நெடுஞ்சாலை பள்ளமாக உள்ளதால் மழைக் காலங்களில் அந்தப் பள்ளத்தில் நீர் தேங்குவதால் பொது மக்கள் சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு ஒரு பாலம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு, பெரிய மாவட்டச் சாலையான எடப்பாடி-மகுடஞ்சாவடி சாலை 0/8-ல் எடப்பாடி நகரில் பெட்ரோல் பங்குக்கு எதிரிலுள்ள பள்ளமான சாலைத் தளத்தின்மீது மழைநீர் கடந்து செல்வதால் தார் தளம் பாதிக்கப்பட்டது. தற்போது, இவ்விடத்தில் உள்ள குழிகள் மற்றும் பள்ளங்கள் தார் நொடி இடப்பட்டு சீரான போக்குவரத்திற்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் சாலை பராமரிக்கப்பட்டு வருகின்றது. மழைநீரை எளிதில் கடத்துவதற்காக இந்தப பள்ளத்தில் ஒரு குழாய்ச் சிறு பாலம் அமைக்க சுமார் ரூ.2.60 லட்சங்கள் செலவாகலாம். வரும் நிதியாண்டில் நிதி நிலைக்கேற்ப குழாய்ச் சிறு பாலம் அமைக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[1998 நவம்பர் 23

74—

## நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதி புதுப்பித்தல்

**வினா 142227—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் உள்ள நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதி மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள எடப்பாடி நகரிலுள்ள நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதி பழைய கட்டடமாக இருந்தாலும் மொசைக் தரையுடன் எல்லாவித வசதிகளுடன் அமைக்கப்பட்டு சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

75—

## தமிழகக் கோவில் நகைகள்

**வினா 13921—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள கோவில்களில் எவ்வளவு மதிப்புள்ள நகைகள் களவு போயின? எத்தனை வழக்குகள் பதிவாகி உள்ளன?

(ஆ) எத்தனை கொள்ளையர்கள் பிடிக்கப்பட்டுள்ளார்கள்?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்**

(அ) 1996-97 ஆம் ஆண்டு தமிழகத்திதில் உள்ள 31 திருக்கோயில்களில் 31 களவுகள் நிகழ்ந்து மொத்தம் ரூ. 15,64,821 மதிப்புள்ள தங்க நகைகள், வெள்ளி ஆபரணங்கள் மற்றும் விடை மதிப்புள்ள கற்கள் களவு போய் உள்ளன. இதன் தொடர்பாக 31 வழக்குகள் சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 14 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.14,13,716 மதிப்புள்ள நகை மற்றும் ஆபரணங்கள் மீட்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் உள்ள 19 கோயில்களில் 19 களவுகள் நிகழ்ந்து மொத்தம் ரூ.1,12,350 மதிப்புள்ள தங்க நகைகள், வெள்ளி ஆபரணங்கள்மம மற்றும் கற்கள் திருட்டு போய் உள்ளன. இதன் தொடர்பாக 19 வழக்குகள் பதியப்பட்டுள்ளன. இவ்வழக்குகளில் இதுவரை 6 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.6,250 மதிப்புள்ள தங்க, வெள்ளி நகைகள் மற்றும் கற்கள் மீட்கப்பட்டுள்ளன.

(ஆ) 1996-97 ஆம் ஆண்டில் இவ்வழக்குகளில் சம்பந்தப்பட்ட மொத்தம் 21 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களின்மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டு நிகழ்ந்த நகை களவுகளில் சம்பந்தப்பட்ட மொத்தம் 16 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள்மீது நீதமின்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

76—

## தமிழக அரசிடம் அரிசி கையிருப்பு விவரம்

**வினா 10234—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 இல் மத்திய அரசிடம் அமதி பெற்று ஆந்திராவில் இருந்தும் பஞ்சாபிலிருந்தும் எவ்வளவு அரிசியை தமிழக அரசு வாங்கியுள்ளது?

(ஆ) 1997-98 இல் போதுமான அரிசி தமிழக அரசிடம் கையிருப்பு உள்ளதா?

[1998 நவம்பர் 23

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1996-97 இல் மத்திய அரசிடம் அனுமதி பெற்று பிற மாநிலங்களிலிருந்து கீழ்க்கண்ட அளவு அரிசிளை தமிழக அரசு கொள்முதல் செய்துள்ளது.

| | (டன்) |
|---|---|
| 1. ஆந்திரப் பிரதேசத்திலிருந்து வாங்கப்பட்ட அரிசியின் அளவு | 2,45,991.078 |
| 2. மத்தியப் பிரதேச இந்திய உணவுக் கழகத்திடம் வெளிச்சந்தை விலையில் வாங்கப்பட்ட அரிசியின் அளவு | 93,086.857 |
| 3. பஞ்சாப் மாநில நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து வாங்கப்பட்ட அரிசியின் அளவு | 80,826.168 |

4. 1997-98 ஆம் ஆண்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அரிசி வழங்கப் போதுமான அளவு அரிசி அரசின் கையிருப்பில் உள்ளது. 7-4-1998 ஆம் தேசிய நிலவரப்படி அரசின் கையிருப்பில் 12,53.357 டன்கள் அரிசி உள்ளது.

77—

### பகுதி நேர நியாயவிலைக் கடை திறத்தல்

**வினா 12757—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், தெப்பக்குட்டை ஊராட்சியில் உள்ள நாடிக்காரனூர், அய்யனூரில் இரண்டு பகுதிநேர நியாய விலைக் கடைகளை திறக்க அரசு ஆவன செய்யுமா?



1998 நவம்பர் 23]

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் தெப்பக்குட்டை நியாயவிலைக் கடையில் பதியப்பட்டுள்ள 1,238 குடும்ப அட்டைகளிலிருந்து 522 குடும்ப அட்டைகளைப் பிரித்து தாடிக்காரனூரில் ஒரு புதிய முழு நேர நியாயவிலைக் கடை திறக்கப்பட்டு அக்கடை 1.6.1998-லிருந்து செயல்பட்டு வருகிறது. அய்யனூரில் 150 குடும்ப அட்டைகளே உள்ளதாலும், தெப்பக்குட்டை நியாயவிலைக் கடையிலிருந்து அய்யனூருக்கு 1 கிலோ மீட்டர் தூரமே உள்ளதாலும் அய்யனூரில் புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்க அரசு விதிகளின்படி சாத்தியக்கூறுகள் இல்லை.

78—

### மில் போன்ற உற்பத்திப் பிரிவு செயல்பாடு

**வினா 12943—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிந்தாமணி எண்ணெய் ஆலைகள், மாவு மில்கள், பனியன் உற்பத்திப் பிரிவு, பருப்பு உடைக்கும் மில் போன்ற உற்பத்திப் பிரிவுகள் செயல்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) கோவை சிந்தாமணியில் உற்பத்திப் பிரிவுகளான (பருப்பு உடைக்கும் மில் தவிர) எண்ணெய் ஆலைகள், மாவு மில்கள், பனியன் உற்பத்திப் பிரிவு, சம்பா ரவை உடைக்கும் மில் போன்றவை செயல்பட்டு வருகின்றன. கோவை சிந்தாமணியில் உற்பத்திப் பிரிவான பருப்பு மில்லில் உளுத்தம் பருப்பு தேவை மிகக் குறைவாக

இருப்பதால், பருப்பு நேரடியாகக் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. உளுந்து கொள்முதல் செய்யப்படுவது இல்லை. இதனால் பருப்பு ஆலை செயல்படுவது இல்லை.

(ஆ) கோவை மத்தியக் கூட்டுறவு வங்கியில் பண்டகசாலைக்கு அனுமதித்து வந்துள்ள காசுக் கடனுக்குப் போதுமான சரக்கிருப்பு ஆதாரங்கள் இல்லாத காரணத்தாலும், காசுக் கடனில் மேலவாதேவி குறைக்கப்பட்ட காரணத்தாலும், இப்பண்டகத்தில் தற்போது நிலவிவரும் நிதி நெருக்கடியைத் தவிர்த்திட இயலாமல் உள்ளது. பண்டகசாலைக்குச் சொந்தமான உற்பத்திப் பிரிவுகளை நிதிக் கட்டுப்பாடு காரணமாக முழு அளவில் பயன்படுத்தாத நிலையிலும், பராமரிப்புச் செலவுகள் செய்ய வேண்டியுள்ளதாலும் (மின் கட்டணம், வரி போன்றவை) பண்டகத்தின் நிதி ஆதாரத்தில் பெரும் இழப்பு ஏற்படுகிறது.

மேற்காணும் உற்பத்திப் பிரிவுகளை முழுமையாகச் செயல்படுத்த இப்பண்டகசாலையைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**79—**

### கூட்டுறவுப் பண்டகசாலை அமைத்தல்

**வினா 14116—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கொளக்குடி, நடுப்பட்டு, ஆண்டாப்பட்டு, அழகானந்தல் ஆகிய ஊர்களில் விளைகின்ற கருணைக் கிழங்கை விற்பதற்கு கூட்டுறவுப் பண்டகசாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. விவசாய விளைபொருட்களின் விற்பனையை விற்பனைச் சங்கங்கள் மேற்கொள்கின்றன. கூட்டுறவுப் பண்டகசாலைகள் நுகர்வோர் நலனுக்கென தொடங்கப்படுகின்றன. எனவே, கருணைக் கிழங்கை விற்பதற்கு கூட்டுறவுப் பண்டகசாலை அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.



**80—**

### குறுகிய கால பயிர்க் கடன் விவரம்

**வினா 14723—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளுக்கு பிப்ரவரி வரை குறுகிய கால பயிர்க் கடன் எவ்வளவு வழங்கியுள்ளன?*

*(ஆ) சங்ககிரி, எடப்பாடி வட்டங்களில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு 1996-97, 1997-98 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை குறுகிய கால பயிர்க் கடன் எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 1996-97, 1997-98 ஆம் நிதியாண்டுகளில் வழங்கப்பட்ட குறுகிய கால பயிர்க் கடன் விவரம் பின் வருமாறு:

| ஆண்டு | குறுகிய காலக் கடன் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| 1996-97 | 3203.49 |
| 1997-98 | 3791.07 |

(ஆ) சங்ககிரி மற்றும் எடப்பாடி வட்டங்களில் 1996-97, 1997-98 ஆம் நிதியாண்டுகளில் வழங்கப்பட்ட குறுகிய கால பயிர்க் கடன்கள் விவரம் பின்வருமாறு:

[1998 நவம்பர் 23

| ஆண்டு | குறுகிய காலக் கடன் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| சங்ககிரி வட்டாரம் | |
| 1996-97 | 122.51 |
| 1997-98 | 133.96 |
| எடப்பாடி வட்டாரம் | |
| 1996-97 | 171.86 |
| 1997-98 | 194.98 |

81—

**மோட்டார் தொழிலாளர் சட்டம்**

**வினா 15119-திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையுளிப்பாரா—

ஐந்து தொழிலாளர்களுக்குக் குறைவான தொழிலாளர்கள் இருந்தாலும் மோட்டார் தொழில்ாளர் சட்டம் பொருந்துகிறமாதிரி அறிவிக்கை வெளியிடுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம் பிரிவு 1(4)-ன்படி 5 தொழிலாளர்களும் அதற்கு மேலும் பணிபுரியும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களுக்கே இச்சட்டம் பொருந்தும். 5 தொழிலாளர்களுக்குக் குறைவாகப் பணிபுரியும் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும் வகையில் பிரிவு 1(4)-க்குத் திருத்தப் பிரேரணை மாநில அரசால் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இத்திருத்தம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

82—

**தையற் பயிற்சி நிலையம் தொடங்குதல்**

**வினா 16271-திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை யளிப்பாரா—



1998 நவம்பர் 23]

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், நாட்டார்மங்கலத்தில் தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் தையற் பயிற்சி நிலையம் ஒன்று தொடங்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், நாட்டார்மங்கலத்தில் தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் தையற் பயிற்சி நிலையம் தொடங்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

83—

**பீடித் தொழிலாளர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்**

**வினா 19374-திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பீடித் தொழிலாளர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

(ஆ) இவர்களின் வாழ்க்கைத் தரம் உயரும் வகையில் அரசு எடுத்துள்ள முயற்சிகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் உள்ள பீடித் தொழிலாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

(1) தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள்:

| | |
|---|---|
| ஆண்கள் | 9,031 |
| பெண்கள் | 46 |
| மொத்தம் | 9,077 |

[1998 நவம்பர் 23

(2) வீட்டுத் தொழிலாளர்கள் எண்ணிக்கை:

| | |
|---|---|
| ஆண்கள் | 42,307 |
| பெண்கள் | 1,70,765 |
| மொத்தம் | 2,13,272 |

இவர்களின் வாழ்க்கைத் தரம் உயரும் வகையில் அரசு எடுத்துள்ள முயற்சிகள்:

பீடித் தொழிலாளர்களின் நலன் காக்கவும், அவர்களின் சமூகப் பொருளாதார அந்தஸ்தை மேம்படுத்தவும் அவர்களுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுள்ள பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைகைள்) சட்டம், 1966 மற்றும் அதன் விதிகள், 1968மற்றும் தொடர்புடைய ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களும் தொழிலாளர் துறை அமலாக்க ஆய்வர்கள் மூலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

1991 ஆம் ஆண்டில் புதுடெல்லி, உச்சநீதிமன்றம் பிறப்பித்த கட்டளைகளின்படி பீடித் தொழிலாளர்கள் அதிகம் செறிந்து முதலிடாக விளங்கும் திருநெல்வேலி மாவட்டத்திற்கென பிரத்தியேகாக 8 தொழிலாளர் உதவி ஆய்வர்கள் (பீடி) மேற்படி சட்ட விதிகளைத் தீவிராக அமல்படுத்தி வருகின்றனர்.

பீடித் தொழிலாளர்களுக்கான சட்டப்படியான சலுகைகள் அவர்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் 1997 ஆம் ஆண்டில் இத்துறை அமலாக்க ஆய்வர்கள் பீடி நிறுவனங்களில் 3798 ஆய்வுகள் மேற்கொண்டு சட்ட விதிகளின்கீழ் முரண்பாடுகள் காணப்பட்ட இடங்களில் சம்பந்தப்பட்ட வேலையளிப்பவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் மொத்தம் 412 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளனர்.

1998 ஆம் ஆண்டிலும் பீடித் தொழிலாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு அவர்களுக்குரிய சட்டப்படியான சலுகைகள் கிடைக்கப்பெறவேண்டும் என்பதற்காக 4-3-1998 முதல் 7-3-1998 வர பீடித் தொழிலாளர்கள் செறிந்துள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாநிலம் தழுவிய சிறப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டாய்வு 654 பீடி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படடு, 610 வேலையளிப்பவர்கள்மீது நீதிமன்றங்களில் வழக்குத் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



1998 நவம்பர் 23]

பீடித் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்கள் அனைத்தும் பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டம், 1976 மற்றும் அதன் விதிகள், 1978 ஆகியவற்றின்கீழ் மத்திய அரசால், ஹைதராபாத் நல ஆணையர் மூலம் நேரடியாக அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இருப்பினும், பீடித் தொழிலாளர்களுக்காக மாநில அரசு முன்வந்து நிலளித்து, வீடுகள் கட்டிக் கொடுத்தால், மத்திய அரசு வீடு ஒன்றுக்கு ரூ.9,000/- வீதம் மானியத் தொகை வழங்குகிறது. எனவே, இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்கள் அதிகம் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் முறையே 439 மற்றும் 535 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு, மேலப்பாளையத்தில் கட்டுமானப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

மேற்படி இரண்டு இடங்களிலும் அரசு புறம்போக்கு நிலம் தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்நிலம் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, சென்னை நகரியம் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் ஒப்புதல் பெறப்பட்டு வீட்டுமனைகள் சம்பந்தப்பட்ட பீடித் தொழிலாளர்கள்/பயனீட்டாளர்கள் பெயரிலேயே அரசு செலவினம் ரூ.3,69,335-ல் பத்திரப் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வீடுகள், வீடு ஒன்றுக்கு ரூ.22,000 கட்டுமானச் செலவில் கட்டப்படுகிறது. இதில் மத்திய அரசின் மானியத் தொகை ரூ.9,000 போக பாக்கித் தொகை ரூ.13,000 வீதம் ஹட்கோ நிதி நிறுவனத்திடம் கடனாகப் பெற வகை செய்து, கடன் தொகை ரூ.119,73 லட்சத்திற்கு அரசு முன்வந்து உத்தரவாதம் அளித்துள்ளது.

தவிர, பீடித் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள வேலூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

இதர மாவட்டங்களில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏதுவாக அரசு புறம்போக்கு நிலங்களை கண்டறியும் பொருட்டு மாவட்ட வருவாய் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, தமிழ்நாட்டில் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களாக உள்ள பீடித் தொழிலாளர்களின்மீது அரசு மிகுந்த அக்கறை கொண்டு அவர்களின் நலன் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அவர்களுக்கு சட்டப்படியாக கிடைக்க வேண்டிய சலுகைகளைக் கிடைக்கச் செய்யவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

84—

பீடித் தொழிலாளர்கள் நலத் திட்டம்

**வினா 19376--திரு. அ.வ. அப்துல நாசர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பீடித் தொழிலாளர்கள் நலத் திட்டங்களுக்கென மத்திய அரசு உதவி ஏதும் பெறப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பீடித் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்கள் அனைத்தும் பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டம், 1976 மற்றும் அதன் விதிகள், 1978 ஆகியவற்றின் கீழ் மத்திய அரசால் ஹைதராபாத், நல ஆணையர் மூலம் நேரடியாக அமல்படுத்தப்படுகிறது. பீடித் தொழிலாளர்கள் நலத் திட்டங்களில் மத்திய அரசின் உதவி மூலம் மாநில அரசு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டமும் ஒன்றாகும். பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க மாநில அரசு முன்வந்தால் மத்திய அரசு பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து வீடு ஒன்றுக்கு ரூபாய் 9,000 வீதம் மானியத் தொகை வழங்குகிறது.

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்கள் செறிந்து முதல் மாவட்டமாக விளங்கும் திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் மற்றும் முக்கூடலில் மொத்தம் 1000 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு மேலப்பாளையத்தில் 439 வீடுகளும் முக்கூடலில் 535 வீடுகளும் கட்ட ... வருக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மேலப்பாளையத்தில் தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்திற்கென மத்திய அரசு ஆயிரம் வீடுகளுக்கு உரிய மொத்த மானியத் தொகை ரூ.96 இலட்சத்தில் முதல் தவணையாக 50 ... தனிக் தொகை ரூ.45 இலட்சத்தை அனுமதித்து வழங்கியுள்ளது. இத்தொகை மாநில அரசு மூலம் ... பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தை ஏற்று நடத்தி வரும், சென்னை-7, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திடம் அளிக்கப்பட்டுள்ளது.



85—

பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டடம்

**வினா 14679—திரு.ச. அழகுவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

விழுப்புரம் வட்டம் விக்கிரவாண்டி மற்றும் கண்டங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் வட்டம், விக்கிரவாண்டி மற்றும் கண்டங்கலத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு கட்டடம் கட்டித் தருவது குறித்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

86-

பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லத்திற்குக் கட்டடம்

**வினா 16244-திரு. ஏ.ராசேந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருவண்ணாமலை மாவட்டம் போளூர் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் இல்லத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை போளூரில் பிற்படுத்தப் பட்டோர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்கவில்லை. மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இயங்கி வருகிறது. அவ்விடுதிக்குக் கட்டடம் கட்டுவது குறித்த செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

## பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குச் சொந்தக் கட்டடம்

**வினா 16249-திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதிகள் சொந்தக் கட்டடம் இன்றி இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி தொகுதியில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவது குறித்த செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

## புதிய மாணவர் விடுதி அமைத்தல்

**வினா 16250-திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் புதிய மாணவர் விடுதி ஒன்றை தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலம் புதிய மாணவர் விடுதி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.





89—

## பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்களுக்கு விடுதி

**வினா 16251—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்களுக்கு விடுதி கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளியில் பிற்படுத்ததப்பட்டோர் மாணவர் விடுதி இயங்கி வருகிறது. அவ்விடுதிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

## வனத் துறைச் சாலையைச் செப்பனிடல்

**வினா 14421-திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் ஜவ்வாது மலையில் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை என்ற கிராமத்திற்குச் செல்லும் வனத் துறைச் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் ஜவ்வாது மலையில் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை என்ற கிராமத்திற்குச் செல்லும் வனத் துறைச் சாலையை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (District Rural Development Agency) மேம்படுத்த முன் வந்தால் தக்க அனுமதி கொடுக்கப்படும்.

91—

சாலை அமைத்தல்

**வினா 14965-திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

தண்டராம்பட்டு ஒன்றியம், கன்னக்கந்தல் முதல் மேல்கரிப்பூர் வரை செல்ல காட்டுப் பகுதியில் வனத் துறை இடத்தில் சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

கன்னக்கந்தலில் இருந்து தண்டராம்பட்டுக்கு கோவிந்தாபுரம் வழியாக கரிப்பூருக்கு 4 மீட்டர் அகலத்திற்குச் சாலை உள்ளது. தற்பொழுது உள்ள வண்டிப் பாதையை அகலப்படுத்தி அமைக்கவேண்டிய அவசியம் இல்லை.

92—

அரசு அச்சகம் அமைத்தல்

**வினா 17879-திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

தமிழ்நாட்டில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவச பாடப் புத்தகம் கிடைப்பதில் காலதாமதம் ஆகிறது என்பதால் தமிழ்நாட்டில் மாவட்டம் தோறும் அரசு அச்சகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இலவசமாகவோ, விலைக்கோ பாடநூல்கள் அச்சிட்டு விநியோகிக்கும் பணியைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. பல தலைப்புகளிலான பல கோடி புத்தகங்கள் பல நிலை வகுப்புகளுக்கு ஒவ்வொரு ஆண்டு மிகக் குறுகிய காலத்தில் அச்சிட்டு வழங்கப்படவேண்டி உள்ளது. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்



இப்பணியினை நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் அச்சகங்களுக்குப் பகிர்ந்தளித்து நிறைவேற்றி வருகிறது. எனவே, பாடப் புத்தகங்களை அச்சடிக்கும் பணியினை மேற்கொள்வதற்கென தமிழ்நாட்டில் மாவட்டம்தோறும் அரசு அச்சகங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது இல்லையெனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

93—

அச்சகத்தில் பணியாளர்கள் நியமனம்

**வினா 19923— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) அரசு மைய அச்சகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாததால் வேலை விரைவாக நடைபெறவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகத் தேவையான பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மைய அச்சகத்தில் போதிய பணியாளர்கள் இல்லை என்ற காரணத்திற்காக பணிச் சுணக்கம் ஏற்படுவதில்லை. அரசு அச்சகங்கள் நவீனப்படுத்தப்படுவதால் சில வழக்கொழிந்த செயல்முறைப் பிரிவுகளில் பணியாற்றும் ஊழியர்கள் உபரியாகின்றனர். அவர்களை தேவைப்படும் பணிகளில் விருப்பம் உள்ளவர்களைப் பணிமாற்றம் செய்வது குறித்து ஆய்வு செய்யப்படுகிறது. ஆகையினால், புதிதாகப் பணியாளர்களை நியமிக்கும் வாய்ப்பு தற்போது இல்லை.

94—

சொத்து கிரயம் செய்தல்

**வினா 17990— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

தமிழ்நாட்டில் ஒரு சொத்து கிரையம் செய்யும்போது அதிலுள்ள சர்வே எண் அளவுகள் நில அளவர்களை வைத்து பரிசீலித்து பதிவு செய்ய அனுமதிக்கும் முறை அரசின் ஆய்வில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**95—**

**மகப்பேறு உதவித் தொகை விவரம்**

**வினா 11928— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகப்பேறு உதவித்தொகை 1996-97 ஆம் ஆண்டு எத்தனை பேருக்கு தமிழ்நாட்டில் வழங்கப்பட்டது?

(ஆ) சேலம் மாவட்டத்தில் 1996-97 ஆம் ஆண்டு எத்தனை பேருக்கு மகப்பேறு உதவித்தொகை வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 2,00,842 பேருக்கு மகப்பேறு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 1996-97 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 12,395 பேருக்கு மகப்பேறு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**96—**

**தையல் பயிற்சி மையங்கள் அமைத்தல்**

**வினா 19890— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஆயத்த ஆடைகள் தயாரிப்பு குறித்த தையல் பயிற்சி மையங்களை அமைத்துத் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஆயத்த ஆடைகள் தயாரிப்பு குறித்த தையல் பயிற்சி மையங்கள் அமைத்துத் தரும் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**97—**

**ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனை**

**வினா 12390—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை வட்டம், மொரட்டுப்பாளையம், கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனை இடம் ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், மொரட்டுப்பாளையம் கிராமம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை இடம் வழங்க பயனாளிகள் விவரம் சரிபார்த்து தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 31/78-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நடவடிக்கைகள் முடிவுற்றதும் வீட்டுமனை இடங்கள் ஒதுக்கப்படும்.

**98—**

**ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா**

**வினா 12833—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

திருப்பூர், முத்தாளம் பாளையம், இராகேவுண்டன் பாளையம் ஆதிதிராவிட மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

திருப்பூர், முத்தாளம்பாளையம், இராகேவுண்டன் பாளையம் ஆதிதிராவிடர்கள் குடியிருந்துவரும் இடித்தில்புலத் தணிக்கை மேற்கொண்டு உரிய விசாரணை செய்து நில எடுப்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள திருப்பூர் ஆதிதிராவிடர் நலத் தனி வட்டாட்சியருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன எனக் கோயம்புத்தூர் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தெரிவித்துள்ளார்.

**99-**

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 15820--திரு.ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட குழந்தை நகர் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை-**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி கிராம குழந்தை நகர் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைகள் வழங்குவதற்கு, காடையாம்பட்டி கிராமம் புல எண் 312/3பி-ல் 1.34.5 ஹெக்டேர் நிலம் கையகம் செய்யப்பட்டு அவார்டு எண் 2/94-95 நாள் 29-12-1994-ன்படி தீர்ப்பாணையம் வழங்கப்பட்டது.



1998 நவம்பர் 23]

இந்நில எடுப்பை எதிர்த்து நில உரிமையாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளார். (Interim stay of dispossession) இவ்வழக்கு மீதான பதிலுரை ஆவணம் சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, தற்போது வழக்கு நிலுவையில் உள்ளது. இவ்வழக்கு முடிவுற்றபின் காடையாம்பட்டி கிராமம், குழந்தை நகர் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும்.

**100-**

**அரசு வாகன வசதி செய்தல்**

**வினா 14745—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம், கோடியக்கரை, கோடியக்காடு பகுதிகளுக்கு சுற்றுலாப் பயணிகள் சென்று வர அரசு வாகன வசதி செய்து தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 20 வகையான சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. இதற்காக 24 சொகுசுப் பேருந்துகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கொண்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் "8 நாள் தமிழ்நாடு" சுற்றுலா மூலம் நாகப்பட்டினம், நாகூர் ஆகிய இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்கிறது. கோடியக்காடு ஆகிய இடங்களுக்கு தற்போது சுற்றுலாக்களை நடத்தவில்லை.

இருப்பினும் நாகப்பட்டினம், கோடியக்கரை, கோடியக்காடு ஆகிய பகுதிகளுக்கு சுற்றுலா நடத்த குறைந்தபட்சம் 10 நபர்கள் கொண்ட குழுவாக இருப்பின் அதற்கேற்ப வாகன ஏற்பாடு செய்து சுற்றுலா செல்ல வசதி செய்து கொடுக்கப்படும்.

## (மூன்றாம் பட்டியல்)

1—

### கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை

**வினா 10607—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் எத்தனை அரைவை ஆலைகள் உள்ளன?

(ஆ) எத்தனை டன் கரும்பு அரைவைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இரண்டு அரைவை ஆலைகள் உள்ளன. பழைய முதல் அரைவை ஆலையில் உள்ள இயந்திரங்கள் நீண்ட காலம் வேலை செய்து பழுதுபட்ட நிலையில் இருந்ததால், புதிய அரைவை ஆலை நிறுவப்பட்டுள்ளது.

(ஆ) கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் நாளொன்றுக்கு 2,500 டன்கள் வீதம் ஒரு அரைவை ஆண்டிற்கு 4.50 இலட்சம் டன்கள் கரும்பு அரைவைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

2—

### மணல் ஆலையை விரிவுபடுத்துதல்

**வினா 13311—டாக்டர் வே. ஆல்பன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் மணவாளக்குறிச்சியில் செயல்பட்டுவரும் மணல் ஆலையை விரிவுபடுத்த மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?



(ஆ) ஆம் எனில், அந்நிறுவனத்தில் தமிழகத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மணவாளக்குறிச்சி மணல் ஆலையை விரிவிபடுத்தும் திட்டம் எதுவும் இந்தியன் ரேர் எர்த்ஸ் நிறுவனத்திடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

3—

### சிமெண்ட் ஆலை நவீனமயமாக்குதல்

**வினா 13755—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் சிமெண்ட் ஆலை நவீனமயமாக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விருதுநகர் மாவட்டம் ஆலங்குளம் கிராமத்தில் 1970ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சிமெண்ட் ஆலையானது ஈரப்பத முறையில் ஆண்டுக்கு 4 இலட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்டதாக அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. சுமார் 27 ஆண்டுகளாக பழைய ஈரப்பத முறையில் சிமெண்ட் உற்பத்தி செய்து வரும் இந்த ஆலையில் இயந்திரங்கள் அனைத்தும் சரி செய்ய முடியாத நிலைக்கு பழுதடைந்து உள்ளதால் உற்பத்தி அளவு குறைந்து, செலவு கூடிப் போனதால் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தி வருகிறது.

[1998 நவம்பர் 23

இந்நிலையைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் ரூ.160.00 கோடி திட்டச் செலவில் ஆலையை நவீன மயமாக்கும் ஒரு திட்டத்தைத் தயாரித்து ஈரப்பத செய்முறையிலிருந்து உலர்பத செய்முறைக்கு மாற்றி நவீனப்படுத்தி, உற்பத்தித் திறனை நாள் ஒன்றுக்கு 1,200 டன்னிலிருந்து 1,500 டன்னாக அதிகரிக்கத் திட்டம் தீட்டியுள்ளது. இந்தத் திட்டத்திற்குச் சென்ற ஆண்டு (1997) ஜூன் மாதம் தமிழக அரசின் திட்ட முதலீட்டுக் குழு, (PIC) தனது ஒப்புதலை வழங்கியது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து நீண்ட காலக் கடனாக ரூ.110 கோடி கடன் உதவிக்கான உத்திரவாத ஒப்புதலையும் பெற்றுள்ளது.

திட்ட முதலீட்டுக் குழுவின் ஆலோசனைக்கு இணங்க இந்தத் திட்டத்தினை turnkey அடிப்படையில் செயல்படுத்த ஒரு தொழில் நுட்ப ஆலோசனை நிறுவனத்தினை நியமிக்க 1997 ஆகஸ்டு மாதம் முறைப்படி டெண்டர்கள் கோரப்பட்டன. இந்த டெண்டர்கள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு சென்ற ஆண்டு நவம்பர் மாதம் தமிழக அரசின் பரிசீலனைக்கும், மேலும் ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டன. இது சம்பந்தமாக அரசு எடுத்த முடிவு பெறப்பட்டு மேல் நடவடிக்கை டான்சம் நிறுவனத்தால் எடுக்கப்பட்டு வருகிறது.

சிமெண்ட் ஆலை நவீனமயமாக்கப்படும் திட்டமானது உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு செப்டம்பர் மாதம் 2000 ஆம் ஆண்டு முடிக்கப்பெறும்போது, இவ்வாலையில் இப்பொழுதைவிடக் குறைந்த உற்பத்திச் செலவில் சிமெண்ட் உற்பத்தியைச் செய்ய இயலும்.

4—

**கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கரும்பு அரைவை**

**வினா 13888—திரு. க.மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை எண் 1, எண் 2 இரண்டும் இயங்குகின்றனவா?

(ஆ) ஆம் எனில், ஒவ்வொரு ஆலையும் ஒரு நாளைக்கு எவ்வளவுடன் கரும்பு அரைக்கிறது?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை—1 இயங்கி வருகிறது. கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை—2 புதிய சர்க்கரை ஆலையாகும். சோதனை அரைவையை 18-12-1997 முதல் நடத்தி வருகிறது. கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை—1 நாள் ஒன்றிற்கு 2,500 டன்கள் கரும்பை அரைவை செய்கிறது. ஆலை இரண்டில் முறைப்படி அரைவை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

5—

**கள்ளச் சாராயத்தின் மதிப்பு**

**வினா 18009—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 1997-98 ஆம் ஆண்டில் கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச் சாராயத்தின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 1997-98 ஆம் ஆண்டில் கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள்:

| | |
|---|---|
| 1997 ஆம் ஆண்டு ... | 1,631 |
| 1998 ஆம் ஆண்டு மே மாதம் வரை ... | 751 |

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச் சாராயத்தின் மதிப்பு:

| | |
|---|---|
| 1997 ஆம் ஆண்டு ... | ரூ. 7,87,115 |
| 1998 ஆம் ஆண்டு மே மாதம் வரை ... | ரூ. 2,65,890 |

[1998 நவம்பர் 23

6—

## அழிக்கப்பட்ட கள்ளச் சாராயத்தின் மதிப்பு

**வினா 18010—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச்சாராயத்தின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள்:

| | |
|---|---|
| 1997 ஆம் ஆண்டு | 8,793 |
| 1998 ஆம் ஆண்டு மே மாதம் வரை | 4,244 |

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச் சாராயத்தின் மதிப்பு:

| | |
|---|---|
| 1997 ஆம் ஆண்டு | ரூ.62,70,760 |
| 1998 ஆம் ஆண்டு மே மாதம் வரை | ரூ.35,85,805 |

7—

## தருமபுரி மாவட்டத்தில் கள்ளச் சாராயத்தின் மதிப்பு

**வினா 18011—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச் சாராயத்தின் மதிப்பு எவ்வளவு?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள்:

| | |
|---|---|
| 1997 ஆம் ஆண்டு ... | 17,527 |
| 1998 ஆம் ஆண்டு மே மாதம் வரை ... | 6,566 |

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச் சாராயத்தின் மதிப்பு சுமார்:

| | |
|---|---|
| 1997 ஆம் ஆண்டு .. | ரூ.98,59,315 |
| 1998 ஆம் ஆண்டு மே மாதம் வரை .. | ரூ.34,16,555 |

8—

## சேலம் மாவட்டத்தில் கள்ளச் சாராயத்தின் மதிப்பு

**வினா 18054—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சங்ககிரி சரகத்தில் 1997-98 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச் சாராயத்தின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் சங்ககிரி சரகத்தில் 1997-98 ஆம் ஆண்டு கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காகவும், விற்றதற்காகவும் கைது செய்யப்பட்டவர்கள்:

| | |
|---|---|
| 1997 ஆம் ஆண்டு ... | 605 |
| 1998 ஆம் ஆண்டு மே மாதம் வரை ... | 332 |

(ஆ) அழிக்கப்பட்ட கள்ளச் சாராயத்தின் மதிப்பு:

| | |
|---|---|
| 1997 ஆம் ஆண்டு | ரூ. 7,48,290 |
| 1998 ஆம் ஆண்டு | ரூ. 2,49,970 |

9—

**மாம்பழச்சாறு பிழியும் தொழிற்சாலை தொடங்குதல்**

**வினா 18091—திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதி, இடைக்கழிநாடு பகுதியில் மாம்பழம் அதிகமாக உற்பத்தியாவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு மாம்பழச்சாறு பிழியும் தொழிற்சாலையைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சியைச் சேர்ந்த கிராமங்களில் மாம்பழம் உற்பத்திச் செய்யும் பரப்பு 90 ஹெக்டேர் உள்ளது. இங்கு வருடத்திற்கு சுமார் 180 மெட்ரிக் டன் மாம்பழங்களே உற்பத்தியாகிறது. இந்த உற்பத்தி, மாம்பழச்சாறு பிழியும் தொழிற்சாலை அமைக்கப் போதுமானதாக இல்லை. எனவே, அங்கு மாம்பழச்சாறு பிழியும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசிடம் இல்லை.

10—

**அரசுப் பள்ளி மற்றும் தனியார் பள்ளியின் தேர்ச்சி விகிதங்கள்**

**வினா 11693—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வுகளில் அரசுப் பள்ளி மற்றும் தனியார் பள்ளியின் தேர்ச்சி விகிதங்கள் பரிசீலிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



(இ) விவரங்களின் அடிப்படையில் அரசு எடுத்துள்ள முடிவு என்ன?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வுகளில் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் தேர்ச்சி விழுக்காடு பரிசீலிக்கப்பட்டது. மிகவும் பின்தங்கியுள்ள பள்ளிகளின் சார்பாக மாவட்டக் கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள் ஆகியோர்களது கூட்டத்தைக் கூட்டி, தேர்ச்சி விழுக்காட்டில் முன்னேற்றம் ஏற்பட தனிக் கவனம் செலுத்த வேண்டும் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

11—

**ஆசிரியர்கள் நியமித்தல்**

**வினா 11887—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சிறுபூலப்பட்டியில் ஆசிரியர் பற்றாக்குறையால் கல்வி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ)ஆம் எனில், ஆசிரியர்கள் நியமிக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி சிறுபூலப்பட்டியில் அனுமதிக்கப்பட்ட ஏழு ஆசிரியர் பணியிடங்களிலும் ஏழு ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) இப்பள்ளியில் தற்போதைய மாணவர்கள் வகுப்பு வாரியாக பதிவு மற்றும் வருகை அடிப்படையில் 637 ஆகும். இப்பள்ளியில் முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை இயங்குகின்றன. அரசாணை நிலை எண் 525, பள்ளிக் கல்வித் துறை நாள்

[1998 நவம்பர் 23

29-12-1997-ல் வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி இப்பள்ளிக்கு 15 ஆசிரியர் பணியிடங்கள் தேவை. தற்போது இப்பள்ளியில் ஒரு பி.டி. தலைமையாசிரியர், 5 இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் ஒரு கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு, 7 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். கூடுதலாகத் தேவைப்படும் ஆசிரியர் பணியிடங்கள் 1998-99 ஆம் கல்வி ஆண்டில் அனுமதிப்பது குறித்து முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

**12—**

**தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்**

**வினா 12723--திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கட்டையங்காடு—உக்கடை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1997-98 ஆம் கல்வியாண்டில் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கட்டையங்காடு—உக்கடை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை. 1998-99 ஆம் கல்வி ஆண்டில் கருத்துருக்கள் பெறப்படின், தேவையின் அடிப்படையில், விதிகளின்படி பரிசீலித்து தகுதி இருப்பின் அரசினால் ஆணைகள் வழங்கப்படும்.

**13—**

**தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்**

**வினா 12931—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 23]

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், பூசாரிப்பட்டியில் உள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த இந்த ஆண்டிலாவது அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், பூசாரிப்பட்டி கிராமத்தின் மக்கள் தொகை 4,578. இப்பள்ளியில் 5 ஆம் வகுப்பில் 76 மாணவர்கள் பயிலுகிறார்கள். இத்தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டால், 76 மாணவர்கள் தோராயமாக சேருவார்கள். பூசாரிப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்த பெறப்பட்ட கருத்துருக்கள் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

**14—**

**ஆசிரியர் பணியிடங்கள் நிரப்புதல்**

**வினா 14593— திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் கே.ஏ.கே.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரி அறிவியல் ஆசிரியர், வேதியியல், தாவரவியல், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தமிழாசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாததால் இப்பணியிடங்களை உடனே நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வேலூர் கே.ஏ.கே.எம். நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரி அறிவியல் ஆசிரியர், தமிழாசிரியர் மற்றும் முதுகலை தமிழ்மொழி ஆசிரியர் பணியிடம் காலி இல்லை. முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் (தாவரவியல், வேதியியல்) காலிப் பணியிடத்தை பொது மாறுதலின் போதோ அல்லது வரும் கல்வி ஆண்டின் தொடக்கத்திலோ நிரப்ப தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[1998 நவம்பர் 23

15—

**பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும் இலவச நோட்டுகள் விவரம்**

**வினா 19055—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு எவ்வளவு நோட்டுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டிற்கு மாணவர்களுக்கு இலவசமாக வழங்க ஆதிதிராவிட நலத் துறை மற்றும் தனித் துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை மற்றும் திண்டுக்கல், ஆகியோருக்குக் கீழே குறிப்பிட்டுள்ளபடி குறிப்பேடுகள் வழங்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| 80 பக்கம் கோடிட்டது | ... 24,99,591 |
| 80 பக்கம் இரு கோடிட்டது | ... 2,34,055 |
| 192 பக்கம் கோடிட்டது | ... 35,12,844 |
| 192 பக்கம் ஒரு பக்க கோடிட்டது | ... 10,32,047 |
| 192 பக்கம் கணக்கு | ... 13,70,645 |
| 72 பக்கம் கட்டுரை | ... 17,53,869 |
| 192 பக்கம் கோடில்லாதது | ... 88,723 |
| 92 பக்கம் கோடிட்டது | ... 5,200 |
| மொத்தம் | 1,04,96,974 |

16—

**புதியதாக மருந்தகங்கள் தொடங்குதல்**

**வினா 14906—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 23]

5000 மக்கள் தொகை உள்ள பகுதிகளில் புதியதாக மருந்தகங்கள் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை.

17—

**மின் மாற்றி அமைத்தல்**

**வினா 16276—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வட்டாரம் தீவட்டிப்பட்டி நைனாக்காட்டில் ஒரு மின் மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வட்டாரம் தீவட்டிப்பட்டி நைனாக்காடு ஓமலூர் மேற்கு மின் பகிர்மான பிரிவிற்கு உட்பட்டது. மேற்படி நைனாக்காடு பகுதிக்கு சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் உள்ள மாட்டுக்காரன்புதூர் மின்மாற்றியின் கூடுதல் 50 கே.வி.ஏ. மூலம் மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. இம்மின்மாற்றியில் விவசாயத்திற்கு 18 கிணறுகளுக்கு 74.0 குதிரைத் திறன் வழங்கப்பட்டுள்ளது. இம்மின்மாற்றி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள மின் இணைப்புகளுக்குப் போதுமானது. இப்பகுதியில் மின் இணைப்பு கோரி விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை. ஆகவே நைனாக்காட்டில் புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய தேவை தற்போது இல்லை.

18—

**மின்மாற்றி அமைத்தல்**

**வினா 16294—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் ஊ. மாரமங்கலம் ஊராட்சிக்கு ஒரு மின்மாற்றி அமைக்க அரசு மேல் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், ஊ. மாரமங்கலம் பகுதி தொளகம்பட்டி மின் பகிர்மான பிரிவிற்கு உட்பட்டது. ஊ. மாரமங்கலத்தில் ஏற்கெனவே ஒரு மின்மாற்றி 100 கே.வி.ஏ.. 22 கே.வி. உள்ளது. இம்மின்மாற்றிக்கு தும்பிப்பாடி துணை மின் நிலையத்திலிருந்து கொங்குப்பட்டி 22 கே.வி உயர் அழுத்தத் தொடர் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. இம்மின்மாற்றியில் உள்ள பளு விவசாயத்திற்கு 101.0 குதிரைத் திறனும், தொழில் முறைக்கு 11.25 குதிரைத் திறனும் உள்ளது. இம்மின்மாற்றியில் இன்னும் கூடுதல் பளு இணைக்கும் அளவிற்கு உள்ளது. இப்பகுதியில் மின் அழுத்தம் சீராகவே உள்ளது. மேலும் இப்பகுதியில் மின் இணைப்புக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை. எனவே ஊ. மாரமங்கலத்தில் தற்போது புதிய மின்மாற்றி அமைக்கத் தேவை இல்லை.

**19—**

### கிராமச் செவிலியருக்குப் பரிசு

**வினா 16755—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு எத்தனைக் கிராமச் செவிலியர்களுக்கு, அவர்கள் பணிபுரியும் ஓராண்டுக் காலத்தில் சிசு இறப்பு ஏதும் இல்லை என்பதற்காக 1 சவரன் தங்கம் வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் கிராமச் சுகாதாரச் செவிலியர் எவருக்கும் ஒரு சவரன் தங்கம் பரிசு வழங்கப்படவில்லை. 1994 ஆம் ஆண்டில் பரீட்சார்த்தமாக சிசு மரணம் ஏதும் இல்லாத 65 துணைச் சுகாதார நிலையங்களைத் தேர்வு செய்து அந்நிலையத்தில் பணிபுரியும் கிராமச் சுகாதாரச் செவிலியருக்கு ஒரு சவரன் தங்கம் பரிசு வழங்க ஆணையிடப்பட்டது. அதன் பிறகு இத்திட்டம் நீடிக்கப்படாமையால் தற்போது இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை.





**20—**

### மருந்துக் கடை நடத்த கடனுதவி

**வினா 16760—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டத்தில் மருந்தாளுநர் (D. Pharm) பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள் மருந்துக் கடை நடத்துவதற்கு கடன் உதவி கேட்டு அரசிடம் எவ்வளவு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன?

(ஆ) அதில் எத்தனை விண்ணப்பங்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மருந்தாளுநர் ( D. Pharm) பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள் மருந்துக் கடை நிறுவ வங்கிகள் பண உதவி அளிக்கின்றன. அரசாங்கம் அவர்களுக்கு எந்தவிதப் பண உதவியும் செய்வதில்லை.

(ஆ) இக்கேள்விற்கு இடமில்லை.

**21—**

### மருந்துக் கடை நடத்த கடனுதவி அளித்தல்

**வினா 16761—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

(அ) ஈரோடு மாவட்டத்தில் மருந்தாளுநர் (D. Pharm) பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள் மருந்துக் கடை நடத்துவதற்கு கடன் உதவி கேட்டு அரசிடம் எவ்வளவு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன?

(ஆ) அதில் எத்தனை விண்ணப்பங்களுக்குக் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மருந்தாளுநர் (D. Pharm) பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள் மருந்துக் கடை நிறுவ வங்கிகள் பண உதவி அளிக்கின்றன. அரசாங்கம் அவர்களுக்கு எந்தவிதப் பண உதவியும் செய்வதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**22—**

**குடும்பநல உதவியாளரை நியமனம் செய்தல்**

**வினா 18737—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள குடும்பநல உதவியாளர் பணியிடத்தில் ஒருவரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் பேறுகாலப் பின் கவனிப்புப் பிரிவு இல்லை என்பதால் அம்மருத்துவமனையில் குடும்ப நல உதவியாளர் பணியிடம் இல்லை. எனவே அங்கு குடும்ப நல உதவியாளர் ஒருவரை நியமனம் செய்ய இயலாது.



1998 நவம்பர் 23]

**23—**

**சித்தா மருத்துவப் பட்டப்படிப்பு தொடங்குதல்**

**வினா 18786—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் சித்தா மருத்துவப் பட்டப்படிப்பு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் சித்தா மருத்துவப் பட்டப்படிப்பு தொடங்குவது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**24—**

**இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 11971—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் மூலம் எத்தனைப் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டு முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புற மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் மூலம் 1998 மார்ச் மாதம் வரை 1616 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

[1998 நவம்பர் 23

25—

### வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 15918—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் வட்டம், ஓமலூர் நகரைச் சேர்ந்த இராமன் நகர் மற்றும் வ.உ.சி. நகர் பகுதிகளில் நீண்ட காலமாக வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் டவுன் பகுதியை ஒட்டியுள்ள வ.உ.சி. நகரில் உள்ள நிலங்கள் தனியாருக்குச் சொந்தமான நிலங்கள் ஆகும். ஓமலூர் கிராமம் இராமன் நகரில் உள்ள நிலங்கள் ஓமலூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெயரில் பட்டாவாக உள்ளன. மேலும் ஒரு பகுதி ஆட்சேபகரமான புறம்போக்கு ஆகும். எனவே பட்டா வழங்க இயலாது.

26—

### புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா

**வினா 17581—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் அருந்ததியர்கள் வேளாண்மை செய்யும் புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா வழங்க ஆவன செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஊர்மக்களின் பொதுக் காரியங்களுக்குத் தேவைப்படாத, தடை செய்யப்படாத மற்றும் ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை முறைப்படுத்தி, அனுபவிப்பவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஒப்படை கோருபவர்களின் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு வருகிறது.



1998 நவம்பர் 23]

27—

### பட்டா வழங்கல்

**வினா 17606—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தர்மபுரி மாவட்டத்தில் நீண்ட காலமாக பொது மக்கள் அனுபோகத்தில் இருந்துவரும் தரிசு நிலங்களை அவர்களுக்கே உரியதாக்கி பட்டா தரும் யோசனை அரசுக்கு உண்டா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஊர்மக்களின் பொதுக் காரியங்களுக்குத் தேவைப்படாத, தடை செய்யப்படாத மற்றும் ஆட்சேபணையற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை முறைப்படுத்தி அனுபவிப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஒப்படை கோருபவர்களின் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

28—

### பட்டா வழங்கல்

**வினா 17607—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் மாவட்டத்தில் நெடுங்காலமாக பொது மக்கள் அனுபோகத்தில் இருந்து வரும் தரிசு நிலங்களை அவர்களுக்கே உரியதாக்கி பட்டா வழங்க அரசு ஆணையிடுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

ஊர் மக்களின் பொதுக் காரியங்களுக்குத் தேவைப்படாத, தடை செய்யப்படாத மற்றும் ஆட்சேபணையற்ற அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமணங்களை முறைப்படுத்தி, அனுபவிப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, ஒப்படை கோருபவர்களின் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டு வருகிறது.

29—

**குடிநீருக்கான நிதி ஒதுக்கீடு விவரம்**

**வினா 11817—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீருக்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

| | | (நிதி ஒதுக்கீடு ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| மாநகராட்சி | ... | 250.00 |
| நகராட்சி | ... | 100.00 |
| நகரப் பேரூராட்சி | ... | 224.00 |
| நகரப் பேரூராட்சி (துரிதப்படுத்தப்பட்ட நகரக் குடிநீர்த் திட்டத்தின்கீழ்) | ... | 100.00 |
| ஊரகப் பேரூராட்சி | .. | 333.25 |
| ஊரகக் குடியிருப்புகள் | ... | 550.00 |
| மொத்தம் | | 1,557.25 |





30—

**கசிவு நீர்க் குட்டை அமைத்தல்**

**வினா 12525—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மவாட்டம், மேச்சேரி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, காரப்பட்டிபள்ளம், தீராம்பட்டி, சின்னேரி, மூர்த்திப்பட்டி, புக்கம்பட்டி ஊராட்சி, கரன்காட்டானூர் ஆகிய இடங்களில் கசிவு நீர்க் குட்டை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், எம். காளிப்பட்டி ஊராட்சி, காரப்பட்டிபள்ளம், தீராம்பட்டி, சின்னேரி, மூர்த்திப்பட்டி ஆகிய இடங்களில் கசிவு நீர்க் குட்டை அமைக்க தொழில் நுட்ப ரீதியாகச் சாத்தியக் கூறுகள் இல்லை.

புக்கம்பட்டி ஊராட்சி, கரன்காட்டானூர் என்னுமிடத்தில் தடுப்பணை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

31—

**இராஜாஜி சிலையைச் சீர்செய்தல்**

**வினா 12747—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியில் உள்ள இராஜாஜி பூங்காவில் இராஜாஜியின் சிலையை இரும்பு முள்வேலி போட்டு சிறைப்படுத்தி உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி இராஜாஜி பூங்காவில் உள்ள இராஜாஜி சிலையைச் சுற்றி இரும்பு வேலி போடப்படவில்லை. பூங்காவில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு பூங்காவின் பாதுகாப்புக்காக சிலையைத் தள்ளி வேலி போடப்பட்டுள்ளது. இராஜாஜி அவர்களின் திருவுருவச் சிலை 1951 ஆம் வருடம் நிறுவப்பட்டதாகும். அச்சிலை சீர்செய்ய முடியாத அளவிற்கு மிகவும் பழுதடைந்துள்ளது.

**32—**

**சாலைகளைச் சீர்செய்தல்**

**வினா 13042—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, வள்ளியூரில் சுப்பிரமணியசுவாமி கோயில் அருகே தெப்பக்குளத்தைச் சுற்றி அமைந்துள்ள சாலைகளைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



1998 நவம்பர் 23]

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் சுப்பிரமணியசுவாமி கோயிலைச் சுற்றி 1170 மீட்டருக்கு பேரூராட்சிக்குச் சொந்தமான இரண்டு தார்ச் சாலைகள் அமைந்துள்ளன. இச்சாலைகளைப் பராமரிக்க ரூ. 2.34 இலட்சங்கள் செலவாகும். 1998-99 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இச்சாலைகளைச் சீர் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**33—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 13946—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு ஒன்றியம் மேல்கரிப்பூர் ஊராட்சி காலனி, தரடாப்பட்டு ஊராட்சி அண்ணா நகர், கண்ணக்கந்தல் ஊராட்சி ரோடு பாளையம், சதாகுப்பம் ஊராட்சி அண்ணா நகர் குடியிருப்புப் பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வசதி பெற்ற கிராமங்களுக்காக குடிநீர்த் திட்டம் செயல்பட இருப்பதால் 1999-2000 ஆம் ஆண்டில் இத்திட்டங்கள் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**34—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா 13951—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

(அ) தண்டராம்பட்டு தொகுதி பண்டிதப்பட்டு ஊராட்சி, கார் பாளையம், விசுவந்தாங்கல் பாளையம் ஊராட்சிப் பகுதி, கண்டியங்குப்பம் காலனி ஊராட்சிப் பகுதிகளுக்கு மேல் நீர்த் தொட்டி அமைத்துக் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட பகுதிகளுக்கு 1998-99 ஆம் நிதியாண்டில் திட்டம் மேற்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**35—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 13956—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை ஒன்றியத்திலுள்ள கன்னிப்பந்தல் ஊராட்சி பட்டுநகர், கீழ் செட்டிப்பட்டு, விசுவந்தாங்கல் ஊராட்சி கார்பாளையம், கண்டியங்குப்பம் ஊராட்சி காலனி பகுதி, தாவையம்பள்ளம் ஊராட்சி சக்கரதம்படை, பாவுப்பட்டு ஊராட்சி, வெள்ளக்கோட்டை ஆகிய குடியிருப்புப் பகுதிகளுக்கு மேல் நீர்த் தேக்கம் மூலம் குடி நீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

**(அ) மற்றும் (ஆ)** ஆம். மேற்கண்ட குடியிருப்புகளுக்கு வரும் நிதியாண்டில், 1998-99-ல் வாரிய முன்னுரிமை அடிப்படையில் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும்.



1998 நவம்பர் 23]

**36—**

**தனி ஊராட்சி அமைத்தல்**

**வினா 14071—திரு.கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சிக்குட்பட்ட ஆதிதிராவிடர் வசிக்கும் ஆசாத் நகர் பகுதியையும், தென்காசி ஒன்றியம் மத்தளம்பாறை ஊராட்சிக்குட்பட்ட ஆதிதிராவிடர் குடியிருப்பையும் இணைத்து தனி ஊராட்சியாக மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**37—**

**சாலை வசதி மற்றும் கால்வாய் வசதி ஏற்படுத்துதல்**

**வினா 14425—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் காகிதப் பட்டறை மா.பா. சாரதி நகரில் சாலை வசதி மற்றும் கால்வாய் வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் காகிதப் பட்டறை மா.பா. சாரதி நகரில் 1996-97 ஆம் ஆண்டு, மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் ரூ.70,000 மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.40,000 செலவில் ஒரு பகுதியில் கால்வாய் கட்டப்பட்டுள்ளது

38—

### பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுதல்

**வினா 19147—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேராவூரணி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*நகராட்சியாகத் தரம் உயர்த்தத் தேவையான மக்கள் தொகையோ ஆண்டு வருவாயோ பேராவூரணி பேரூராட்சிக்கு இல்லாததால் அதனை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு ஏதுமில்லை.*

39—

### விளைச்சலுக்கேற்ற விவசாய நில விவரம்

**வினா 7421—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1996-97 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் விளைச்சலுக்கு ஏற்ற விவசாய நிலம் எத்தனை ஏக்கர் உள்ளது?*

*(ஆ) அவை முழுவதும் பாசன வசதி பெற ஏதேனும் திட்டம் உள்ளதா?*

*(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) 1996-97 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் விளைச்சலுக்கு ஏற்ற விவசாய நிலம் 70,25,988 ஹெக்டேர் ஆகும்.*

*(ஆ) அவை முழுவதும் பாசன வசதி பெற திட்டம் ஏதும் இல்லை.*

*(இ) கேள்வி எழவில்லை.*





40—

### புயல் மற்றும் வெள்ள நிவாரணம்

**வினா 13642—திரு.நா. பெரியசாமி:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சத்தியமங்கலம் வட்டாரத்தில் உள்ள வேளாண்மை நிலம் சாகுபடிப் பயிரும் புயல் மட்டும் வெள்ளத்தினால் சேதம் அடைந்துள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அங்கு வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) 1997-98 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டாரத்தில் நவம்பர் 1997 மற்றும் டிசம்பர் 1997 மாதங்களில் புயல் வெள்ளத்தினால் பயிர் பாதிப்பு ஏதுமில்லை.*

*(ஆ) இவ்வினா எழவில்லை.*

41—

### வெற்றிலைச் சாகுபடி

**வினா 18605—திரு. அ.வ. அப்துல் நாசர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கடலூர் மாவட்டத்தில் வெற்றிலைச் சாகுபடி எத்தனை ஏக்கரில் செய்யப்படுகிறது?*

*(ஆ) இதற்கு அரசு உதவிகள் ஏதும் வழங்கப்படுகிறதா?*

*(இ) ஆம் எனில், பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டத்தில் வெற்றிலை சுமார் 437.5 ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகின்றது.

(ஆ) வெற்றிலைச் சாகுபடி பரப்பை அதிகரிக்க அரசு உதவிகள் ஏதும் தற்போது வழங்கப்படவில்லை.

(இ) எழவில்லை

42—

**வெள்ளக்குட்டை வரை கரும்புச் சாலை அமைத்தல்**

**வினா 14512—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், ஆம்பூரிலிருந்து வெள்ளக்குட்டைக்கு கரும்புச் சாலை அமைக்கும் பணி தாமதமாக நடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அய்யனூர் முதல் வெள்ளக்குட்டை வரை 4 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலை அமைக்கப்பட்டுவிட்டது. 1 கிலோ மீட்டர் தூரம் வனப் பகுதியாக இருப்பதால் செப்பனிடத் தேவையில்லை எனவும் வனத் துறையின் அனுமதி காலதாமதத்தாலும், இப்பகுதியில் கரும்பு பயிரிடப்படாததாலும், கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சாலை அமைக்க இயலாது.

43—

**திருமணக் கடனுதவித் திட்டம்**

**வினா 14651—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளின் பிள்ளைகளுக்கு திருமணக் கடன் உதவித் திட்டம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகளின் பிள்ளைகளுக்கு திருமணக் கடன் உதவித் திட்டம் ஏற்படுத்த செயல் திட்டம் எதுவுமில்லை.

44—

**காளான் வளர்ப்புப் பயிற்சி**

**வினா 18607—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கொப்பனூர் கிராமம், மூலைரோடு பகுதியில் 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் காளான் வளர்ப்புப் பயிற்சி அளிக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்திற்கு காளான் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் உள்ள நிதி வசதிக்கேற்ப 50 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க தோட்டக் கலை துணை இயக்குநர் அவர்களால் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பயனாளி ஒருவருக்கு பயிற்சியின்போது ரூ.500 மதிப்பில் காளான் வளர்ப்பு உபகரணங்கள் முழு மானியத்தில் வழங்கப்படும். தருமபுரி மாவட்டத்தில் இத்திட்டம் தோட்டக்கலை உதவி இயக்குநர், தருமபுரி அவர்களால் செயல்படுத்தப்படுகிறது. இந்தக் காளான் பயிற்சி பெண்ணாகரம் தொகுதி, கொப்பனூர் கிராமம், மூலை ரோடு பகுதி விவசாயிகளுக்கும் அளிக்கப்படும்.

45—

**இயற்கை உரங்களை விவசாயக் கிடங்கிலேயே விற்பனை செய்தல்**

**வினா 18656— திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கை உரங்களான வேப்பம்புண்ணாக்கு மற்றும் இரசாயன உரங்களை விவசாயக் கிடங்கிலேயே விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அரசின் கொள்கை முடிவின்படி, உரங்கள் விநியோகம் வேளாண்மைத் துறை மூலம் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே, இயற்கை உரங்களான வேப்பம்புண்ணாக்கு மற்றும் இரசாயன உரங்கள் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுவதில்லை.

**46—**

**விவசாய மானியம் பற்றிய விளம்பரப் பலகைகள்**

**வினா 18667— திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மத்திய-மாநில அரசுகளின் விவசாய மானியம் பற்றிய விளம்பரப் பலகைகளை ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மத்திய-மாநில அரசுகளின் திட்டங்கள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியம் மற்றும் சலுகைகள் பற்றிய முழு விவரங்களும் அனைவருக்கும் தெரியும்படி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் விளம்பரப் பலகை மூலமாக எழுதி வைத்து விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.





**47—**

**புதிய வாய்க்கால் வெட்டுதல்**

**வினா 9673— திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி அணைக்கட்டிலிருந்து ஆற்று நீர் வீணாவதைத் தவிர்க்க குருக்கம்பட்டி, பவளத்தானூர் ஏரி வழியாக புதிய வாய்க்கால் வெட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் அணைக்கட்டிலிருந்து ஆற்று நீர் வீணாவதைத் தவிர்க்க குருக்கம்பட்டி, பவளத்தானூர் ஏரி வழியாக புதிய வாய்க்கால் வெட்டுவதற்கு தல ஆய்வு மேற்கொண்டதில் தாரமங்கலம் அணைக்கட்டு ஆற்றுப்படுகை மட்டத்தைவிட குருக்கம்பட்டி பவளத்தானூர் ஏரிகள் மேல் மட்டத்தில் உள்ளதால் தொழில்நுட்ப ரீதியாக இத்திட்டத்திற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பது தெரிய வருகிறது.

**48—**

**வாய்க்கால் சீர் செய்தல்**

**வினா 9674— திரு.ப. கோவிந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி துட்டம்பட்டி ஊராட்சி, குழந்தாம்பட்டியில் பழுதடைந்துள்ள வாய்க்காலை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

ஆம். 1997-98 ஆம் ஆண்டிற்கான வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் வேலையை செயல்படுத்த சேலம் மாவட்ட ஆட்சியருக்கு இப்பணி விவர அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரால் நிதி ஒதுக்கீடு ஒப்புதல் பெற்ற பின்பு எடுத்துக்கொள்ளப்படும்.

[1998 நவம்பர் 23

49—

**கண்மாய் ஆழப்படுத்துல்**

**வினா 10553—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட குராயூர் பெரிய கண்மாயினை ஆழப்படுத்தி புதியதாக மடைக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டிற்கான கண்மாய்கள் தூர்வாரி சீரமைக்கும் திட்டத்தின்கீழ் நிதி நிலைமைக்கேற்ப எடுத்துக்கொள்ளப்படும்.

50—

**விருந்தினர் மாளிகையை விரிவுபடுத்துதல்**

**வினா 11944— திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் அமைந்துள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான விருந்தினர் மாளிகையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

இல்லை.



1998 நவம்பர் 23]

51—

**பேருந்தை மீண்டும் இயக்குதல்**

**வினா 9844— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி இடங்கணசாலை பேரூராட்சியில் உள்ள கொசவம்பட்டியில் 81ஏ பேருந்து அந்த ஊருக்குச் சென்று வருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அந்தப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள நகரப் பேருந்து 81ஏ சேலத்திலிருந்து சித்தர் கோவில், கொசவம்பட்டி, எளம்பிள்ளை, கே.கே.நகர், மாட்டையாம்பட்டி, பாப்பாம்பாடி வழியாக சின்னப்பம்பட்டிக்கு இயக்கப்பட்டு வந்தது. சில நிர்வாகக் காரணங்களால் இந்த நடைகளைத் தடம் மாற்ற நேரிட்டது. எனினும், இத்தடப்பகுதி மக்கள் பெற்று வந்த பேருந்து வசதியை நீட்டித்து அளிக்கும் பொருட்டு 81ஏ நகரப் பேருந்து இயக்கப்பட்ட நேரங்களிலேயே இதே வழித்தடத்தில் தடம் எண் 107 என்ற நகரப் பேருந்து 1-4-1997 முதற்கொண்டு இயக்கப்பட்டு வருகிறது. மேலும் 81ஏ இயக்கப்பட்ட வழித்தடத்தின் பெரும்பகுதியை உள்ளடக்கி சேலம்-சின்னப்பம்பட்டி (வழி) சித்தர் கோவில், கே.கே. நகர், மாட்டையாம்பட்டி, பாப்பாம்பாடி தடத்தில் நகரப் பேருந்து தடம் எண் 75 மூலம் தினசரி 12 நடைகள் வீதம் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

பூலாம்பட்டி-சேலம் (வழி) இருப்பாளி, புதுப்பாளையம் பாப்பாம்பாடி, கே.கே. நகர், எளம்பிள்ளை, சித்தர் கோவில் வழித்தடத்தில், கூடுதலாக ஒரு புதிய புறநகர் பேருந்து மூலம் 11-6-1997 முதல் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறியவாறு கொசவம்பட்டி வழியாக போதிய நகரப் பேருந்து வசதியும், புறநகர் பேருந்து வசதியும் அளிக்கப்பட்டு வருவதால் தடம் எண் 81 ஏ பேருந்தை மீண்டும் இயக்கத் தேவை நிலவவில்லை.

52—

### பாவூர் சத்திரம்—விக்கிரமசிங்கபுரத்திற்கு நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 11856— திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, பாவூர் சத்திரத்திலிருந்து விக்கிரமசிங்கபுரத்திற்கு இயங்கி வந்த தடம் எண் 1டி அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தினை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தடம் எண் 1டி அம்பாசமுத்திரத்திலிருந்து மேலச் செவலுக்கும் கீழ உப்பூரணிக்கும் இயக்கப்பட்ட நகரப் பேருந்து ஆகும். இவ்வழித் தடத்தில் தடங்கல் ஏற்படும் சமயத்தில் தற்காலிகமாக ஒரு சில தினங்கள் மட்டும் விக்கிரமசிங்கபுரம்-பாவூர் சத்திரம் போன்ற தடங்களில் இயக்கப்பட்டது. பின்னர் வழித் தடங்களைச் சீரமைத்து இயக்கம் மேற்கொள்ளப்பட்டபொழுது வருவாய் குறைந்த தடம் எண் 1டி நகரப் பேருந்து நிறுத்தப்பட்டு அதில் இயக்கப்பட்ட சுற்றுக்களை தடம் எண் 10 என்ற நகரப் பேருந்து மூலம் மேலச்சேவல், கீழ உப்பூரணி ஆகிய கிராமங்களுக்கு ஈடு செய்யப்பட்டுள்ளது. தற்போது தடம் எண் 10 அம்பாசமுத்திரம்-சேரன்மாதேவி-மேலச்சேவல்-கீழ உப்பூரணி, சடைமான்குளம்—திருப்புடை மருதூர் என பல்முனை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது. எனவே தடம் எண் 1டி-யை மீண்டும் இயக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.*

53—

### விரைவுப் பேருந்து இயக்குதல்

**வினா 13578— டாக்டர் வே. ஆல்பன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*





*கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி குலசேகரத்திலிருந்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம், கோட்டம்-1 அல்லது மதுரை கோட்டம்-3 மூலம் ஒரு பேருந்து இயக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(1)* தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (மதுரை—கோட்டம் -3) நாகர்கோவிலுக்கு நாளொன்றுக்கு 4 பேருந்துகள் நாகர்கோவிலிலிருந்து சென்னைக்கு புறப்படுமாறும் 4 பேருந்துகள் சென்னையிலிருந்து நாகர்கோவிலுக்கு வருமாறும் இயக்க அனுமதி பெற்றுள்ளது.

*(2)* அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் கோட்டம்-1-ன் வழித்தடம் எண் 288 (குலசேகரம்-சென்னை) இயக்கப்பட்டபோது போதிய பயணிகள் இன்றி வருவாய் இழப்பு ஏற்பட்டதன் காரணமாக மேற்படி தடம் நிறுத்தப்பட்டது. இந்நிலையில் மீண்டும் குலசேகரத்திலிருந்து பேருந்தை இயக்கச் சாத்தியமில்லை. குலசேகரத்திலிருந்து திங்கள்சந்தை மற்றும் நாகர்கோவில் குறைந்த தூரத்திலேயே உள்ளதால், குலசேகரப் பயணிகள் திங்கள்சந்தை அல்லது நாகர்கோவில் வந்து இக்கழகப் பேருந்தைப் பயன்படுத்திக்கொள்ள வசதியாக உள்ளது.

54—

### தெங்குமரஹடாவிற்குப் பேருந்துகள் இயக்குதல்

**வினா 13588— திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தெங்குமரஹடா செல்ல தற்போது எத்தனைப் பேருந்துகள் இயங்கி வருகின்றன?*

*(ஆ) அதனை மேலும் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

[1998 நவம்பர் 23

(அ) தெங்குமரஹடாவிற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் கோயம்புத்தூர், ஈரோடு, உதகமண்டலம் மூலம் தலா ஒரு பேருந்து தினசரி 2 தனி நடைகள் வீதம் மொத்தம் 3 பேருந்துகள் 6 தனி நடைகள் தற்போது இயங்கி வருகின்றன.

(ஆ) தற்போது இயங்கும் நடைகளிலேயே பயணிகளது அடர்வு மிகவும் குறைவாக உள்ள நிலையில் மேலும் பேருந்து வசதி அதிகரிக்க வேண்டிய நிலைமை நிலவவில்லை.

55—

## பேருந்து வசதி செய்தல்

**வினா 14558— திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் சதுப்பேரியையடுத்த அகமேடு கிராமத்திற்குப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அகமேடு கிராமம் சதுப்பேரி-ஜமால்புரம் சாலையில் பிரிந்து 1.0 கி.மீ. தூரத்தில் உள்ளடங்கி இருக்கிறது. மேலும் இக்கிராமத்தின் மக்கள் தொகை 600 மட்டுமே ஆகும். அரசு ஆணைப்படி பேருந்து வசதியுள்ள நெடுஞ்சாலையிலிருந்து 1.0 கி.மீ. தூரத்திற்குள் இருக்கும் கிராமங்கள் பேருந்து வசதி பெற்ற கிராமங்களாகவே கருதப்படும்.

56—

## அரசுப் பேருந்து பணிமனை அமைத்தல்

**வினா 14597— திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆம்பூரில் அரசுப் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஆம்பூரில் பேருந்து பணிமனை அமைக்க ரூ.5.00 இலட்சம் செலவில் சுற்றுச்சுவர் மற்றும் வலாஷின் ரேம்ப் ஆகியவை ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் பராமரிப்புக் கூடம் மற்றும் உணவகக் கட்டடங்களுக்காக ரூ.30.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு பராமரிப்புக்கூடப் பணிகள் நடந்து வருகின்றன. இப்பணிமனையை 1999-2000 ஆம் ஆண்டுக்குள் கட்டி முடித்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

57—

## வயது வரம்புச் சலுகை

**வினா 15571—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போக்குவரத்துத் துறையில் பணியாளர்கள் தெரிவு செய்யும்போது வயது வரம்புச் சலுகை அளிக்கப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு நிர்ணயித்துள்ள வயது வரம்புதான் கடைப்பிடிக்கப்படுகிறது.

58—

## போக்குவரத்து அலுவலர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம்

**வினா 15859—திரு. அ. அசோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மண்டலப் போக்குவரத்து அலுவலர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருவாரூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், ஏற்கெனவே பகுதி அலுவலகமாக வாடகைக் கட்டடத்தில்தான் இப்போதும் செயல்பட்டு வருகிறது. இதற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து அரசு நிதி நிலைக்கு ஏற்ப முடிவு செய்யயப்படும்.

**59—**

**தார்ச் சாலையைச் சீர்செய்தல்**

**வினா 7566—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையிலிருந்து செங்கம் வழியாக சிங்காரப்பேட்டை வரை செல்லும் பழுது அடைந்துள்ள தார்ச் சாலையைச் சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையில் தற்போது மேம்படுத்தும் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் செயலாக்கம் பெற்றுள்ளன. இப்பணிகள் யாவும் விரைவில் தொடங்கி முடிக்கப்பட்டுவிடும். இருப்பினும் இச்சாலை நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருவதுடன், தற்போது இச்சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தி மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**60—**

**குத்தம்பாக்கம் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைத்தல்**

**வினா 10100—திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் திருமழிசை சத்தியவேடு சாலையிலிருந்து குத்தம்பாக்கம் செல்லும் சாலை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இச்சாலை பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இச்சாலை நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்ததல்ல. எனவே, இந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்க வேண்டிய நிலைமை எழவில்லை.

**61—**

**பழுதடைந்துள்ள சாலைகளைச் சீர் செய்தல்**

**வினா 10579—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்திலிருந்து நாகமரை வரை செல்லும் சாலை மற்றும் நாகதாசம்பட்டியிலிருந்து பாப்பாரப்பட்டி வரை செல்லும் சாலை ஆகிய பழுதடைந்துள்ள சாலைகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது பெண்ணாகரம் நாகமரை சாலை (கி.மீ.0/0—29/6) 29.60 கி.மீ. நீளம் கொண்ட ஒரு பிற மாவட்டச் சாலையாகும். இச்சாலையில், வெள்ளத்தினால் சேதம் ஏற்பட்ட பகுதிகளைச் சீர்செய்து போக்குவரத்துக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இச்சாலையில் கி.மீ. 0/4 - 1/0, 2/0 - 4/0, 14/0 - 15/0, 17/0 - 19/0, 20/0 - 21/0 ஆகிய பகுதிகளில் மேம்பாடு செய்ய தேசிய

[1998 நவம்பர் 23

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக் கடனுதவித் திட்டத்தின்கீழ் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மீதமுள்ள கி.மீ. 1/0 - 2/0, 4/0 - 14/0, 15/0 - 17/0, 19/0 - 20/0, 21/0 - 29/6 ஆகிய பகுதிகளை நிதி நிலைமைக்கேற்ப வரும் திட்டங்களில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

62—

**மொறையாறு பாலம் அகலப்படுத்துதல்**

**வினா 11168— திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியிலுள்ள செய்யாற்றின் குறுக்கே உள்ள மொறையாறு பாலத்தைச் சீர் செய்து அகலப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் செயற்குறிப்பில் இல்லை.

63—

**பயணியர் விடுதி கட்டுதல்**

**வினா 13286— திருமதி ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூரில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பயணியர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**



1998 நவம்பர் 23]

அரசின் நிதி நெருக்கடி காரணமாக ரூ.20 இலட்சம் தேவைப்படும் மொரப்பூர் பயணியர் விடுதி கட்டும் திட்டத்தினை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

64—

**புதிய விருந்தினர் ஆய்வு மாளிகை அமைத்தல்**

**வினா 13297— திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி தருமபுரியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக நவீன வசதியுடன் கூடிய புதிய விருந்தினர் ஆய்வு மாளிகை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

1917 ஆம் ஆண்டு கட்டப்பட்ட தருமபுரி பயணியர் மாளிகை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருவதால் நெடுஞ்சாலைத் துறை மூலமாக புதிய விருந்தினர் மாளிகை ஒன்றினை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

65—

**சாலை செப்பனிடல்**

**வினா 13300— திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி - திருப்பத்தூர் சாலை மிகவும் சேதமடைந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்தச் சாலையைச் செப்பனிட அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை

செப்பனிடப்பட்டு நல்ல முறையிலும் போக்குவரத்திற்கேற்ற வகையிலும் உள்ளது.

66—

**தங்கும் விடுதியைச் சீர்செய்தல்**

**வினா 13327— திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல் ஒரு சிறந்த சுற்றுலா ஸ்தலமாக இருப்பதால் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான தங்கும் விடுதியை சீர்செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல்லில் உள்ள நெடுஞ்சாலைத் துறை பயணியர் மாளிகையில் தற்பொழுது சிறு சிறு பழுதுகள் மட்டும் சீர்செய்யப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

67—

**ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்**

**வினா 13481— திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, முக்கல்நாயக்கன்பட்டி ஊராட்சி அண்டைக்கான்கொட்டாய், ராஜாத்தோப்பு இடையே ஓடும் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**





வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் கட்டும் பணியினை இனிவரும் ஆண்டுகளில் நிதிநிலைக்கேற்ப செயல்படுத்த வழிவகைகள் ஆய்வு செய்யப்படும்.

68—

**மக்ளீன் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல்**

**வினா 13591— திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி நெமிலி ஒன்றியத்திலுள்ள மக்ளீன் கால்வாய் குறுக்கே பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள பாலம் அமைக்க ரூ.1.06 கோடி தேவைப்படுவதால் இப்பணியை அண்மைக் காலங்களில் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

69—

**அழகிய பூங்காக்கள் அமைத்தல்**

**வினா 13865— திரு. ச. அழகிரி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) பெங்களூர், புதுடில்லி போன்று சென்னை நகரிலும் சாலைச் சந்திப்புகளில் அழகிய பூங்காக்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

[1998 நவம்பர் 23

சென்னை மாநகர எல்லைக்குள் தற்போது கீழ்க்கண்ட மூன்று தேசிய நெடுஞ்சாலைகள் இத்துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1. பெரிய வடக்கத்திய சாலை (ஜி.என்.டி. சாலை, தேசிய நெடுஞ்சாலை—5)
2. பெரிய தெற்கத்திய சாலை (ஜி.எஸ்.டி. சாலை, தேசிய நெடுஞ்சாலை-45)
3. பெரிய மேற்கத்திய சாலை (ஜி.டபிள்யூ.டி. சாலை, தேசிய நெடுஞ்சாலை-4)

மேற்குறிப்பிட்ட மூன்று சாலைகளில் தேசிய நெடுஞ்சாலை—45-ஐத் தவிர மற்ற இரண்டு சாலைகளின் சாலைச் சந்திப்புகளில் பூங்காக்கள் ஏதும் அமைக்கப்படவில்லை. தற்போது தேசிய நெடுஞ்சாலை-45 சாலையான சென்னை- திருச்சி - திண்டுக்கல் சாலையில், அண்ணா மேம்பாலம் அமைந்துள்ள இடத்திலும், சைதாப்பேட்டை பகுதியில் மறைமலை அடிகள் பாலம் முடிவடையும் இடத்திலும் மற்றும் உள்வட்டச் சாலை (Inner Ring Road) ஆரம்பிக்கும் பகுதியான கத்திப்பாரா சந்திப்பில் ஜவகர்லால் நேரு சிலை அமைந்துள்ள பகுதிகளிலும் அழகிய பூங்காக்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவைதவிர, நெடுஞ்சாலைத் துறை, சாலைச் சந்திப்புகளில் புதிதாக பூங்காக்கள் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

70—

### நெடுஞ்சாலைகளைப் பழுதுபார்த்தல்

**வினா 14023— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரிலுள்ள நான்கு வழி நெடுஞ்சாலையான பேருந்து நிலையத்திலிருந்து ஜலகண்டபுரம் செல்லும் நெடுஞ்சாலையும், பூலாம்பட்டி செல்லும் நெடுஞ்சாலையும் தேவூர் மற்றும் சேலம் செல்லும் நெடுஞ்சாலைகளும் மிகவும் பழுதுபட்டு உள்ளதால் அவற்றைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**



1998 நவம்பர் 23]

எடப்பாடி நகரப் பேருந்து நிலையத்திலிருந்து (1) எடப்பாடி - மகுடஞ்சாவடி சாலை (2) எடப்பாடி - ஜலகண்டபுரம் சாலை (3) குமாரபாளையம் - எடப்பாடி சாலை மற்றும் (4) எடப்பாடி - பூலாம்பட்டி சாலை ஆகிய நான்கு அரசு சாலைகள் பிரிந்து செல்கின்றன. மேற்காணும் நான்கு சாலைகளும் சந்திக்கும் நகராட்சிப் பேருந்து நிலையப் பகுதியில் குடிநீர்க் குழாய்கள் பதிப்பதற்கும், நீர்ப்போக்கும் மட்டம் தொடர்பான சோதனைகள் மேற்கொள்ளவும் சாலையைத் தோண்டியுள்ளனர். இச்சோதனைகள் முடிந்ததும் இப்பள்ளங்கள் யாவும் மூடப்பட்டு நிரந்தரமாகச் செப்பனிடப்படும். எனினும் தற்பொழுது தற்காலிகமாக செப்பனிடப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

71—

### சிவன் ஆலயங்களைச் சீர் செய்தல்

**வினா 11397— திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டத்தில் நடைபெறும் சப்தஸ்தான விழா தொடர்புடைய திருப்பழனம், திருவேதிக்குடி, திருக்கண்டியூர், திருப்பந்துருத்தி, திருநெய்தானம் ஆகிய இடங்களிலுள்ள சிவன் ஆலயங்கள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டத்தில் நடைபெறும் சப்தஸ்தான விழா தொடர்புடைய சிவன் ஆலயங்களில் திருப்பந்துருத்தி, அருள்மிகு புஷ்பவனேஸ்வரர் திருக்கோயிலில் 20-3-1992 அன்று திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. தற்போது அரசு

மானியம் பெறப்பட்டு இராஜகோபுரத் திருப்பணி நடைபெற்று வருகின்றது. மதில் சுவர் பழுதுபார்க்கும் பணிகள் விரைவில் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதர திருக்கோயில்களான திருநெய்தானம் அருள்மிகு திருதபுரீஸ்வரர் திருக்கோயில், திருப்பழனம் அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் மற்றும் திருவேதிக்குடி அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயில்களில், நிதி வசதி இல்லாததால் திருப்பணிக் குழுக்கள் அமைத்துத் தேவையான நிதியாதாரம் திரட்டி திருப்பணி வேலைகளை முடிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. திருக்கண்டியூர் அருள்மிகு பிரம்மசிர கண்டீஸ்வரர் திருக்கோயிலில் 11-2-1993 அன்றுதான் குடமுழுக்கு நடைபெற்றுள்ளதால், இத்திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

72—

### நீலகண்ட விநாயகர் ஆலயத்திற்குத் திருமண மண்டபம்

**வினா எண் 12648—திரு.எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் உள்ள அருள்மிகு நீலகண்ட விநாயகர் ஆலயத்திற்குத் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



73—

### தெப்பக்குளம் தூர் எடுத்தல்

**வினா 14837—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் ஆலய தெப்பக்குளம் தூர் எடுக்கும் பணி அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1994 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இப்பணி ரூ.50,000 மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது இச்செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை.

74—

### தினந்தோறும் நியாய விலைக் கடைகளில் பொருட்களை வழங்குதல்

**வினா எண் 14540—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்தில் நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் பொருட்களை பொது மக்களுக்கு மாதம் 30 நாட்களும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழகம் முழுவதிலும் உள்ள நியாய விலைக் கடைகள்

அனைத்திலும் அரசு விடுமுறை நாட்கள், ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர அனைத்து வேலை நாட்களிலும். குடும்ப அட்டைதாரர்களுக்கு குடிமைப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. வேலூர் மாவட்டத்திலுள்ள நியாய விலைக் கடைகளுக்கும் இது பொருந்தும்.

**75—**

**கூட்டுறவு விவசாயக் கடன்**

**வினா 19333—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு விவசாயக் கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என விவசாயிகள் விரும்புவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். கூட்டுறவு விவசாயக் கடனை அரசு தள்ளுபடி செய்ய இயலாது. ஏனெனில், பொதுவாக இயற்கையின் சீற்றங்களான வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் பயிர்கள் பாதிக்கப்படும்போது கடன்தாரர்களுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்கள் குறுகிய காலப் பயிர்க் கடன்களை மத்திய காலக் கடன்களாகவும், மத்தியக் காலக் கடன்களை மத்தியக் கால மாற்றுக் கடன்களாகவும் மாற்றி நிவாரணம் அளிக்க இயலும். வேளாண்மை மற்றும் வேளாண்மை சாராக் காரியங்களுக்கு மிகச் சலுகையான வட்டியிலும் குறுகிய மற்றும் மத்திய காலக் கடன்களுக்கு நாபார்டு வங்கி மறுநிதியுதவி வழங்கி வருகின்றது. நாபார்டு வங்கியுடன் செய்து கொண்ட உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்புப்படி கடன்களை மாற்றியமைத்தல், மறு அட்டவணைப்படுத்துதல், தள்ளி வைத்தல், அல்லது கடன் நிவாரணம் அளித்தல் போன்றவைகளைக்





கூட்டுறவு வங்கிகள் மீறினால் மறுநிதி அளிக்கப்பட மாட்டாது எனவும் கூறப்பட்டுள்ளது.

4-6-1998 அன்று வருவாய்த் துறையினரால் வெளியிடப்பட்ட அரசாணை நிலை எண் 459-ன்படி தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் நில வரி ரத்து செய்யப்பட்டதன் மேல் சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரை குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்க விண்ணப்பம் கோரப்பட்டது. ஆனால், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் 1997-98 ஆம் ஆண்டில் புயல், வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் அம்மாவட்டத்தில் ஏதுமில்லை எனத் தெரிவித்துள்ளதால் மேற்படி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் பெற்ற கூட்டுறவுக் கடன்களை மாற்றியமைக்க விண்ணப்பம் பெறப்படவில்லை.

**76—**

**நவீன அரிசி ஆலை ஏற்படுத்துதல்**

**வினா 19421—திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாதேவி தொகுதியில் அதிகமாக நெல் சாகுபடி செய்யப்படுவதால் ஒரு நவீன அரிசி ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆலை நிறுவப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மாதேவி தொகுதியில் ஒரு நவீன அரிசி ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. ஏனெனில், திருநெல்வேலி மாவட்டத்தில் தாழையூத்து என்ற இடத்தில் ஏற்கெனவே, ஒரு நவீன அரிசி ஆலை நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது. அம்மாவட்டத்தில் சாகுபடியாகும் உபரி நெல் கொள்முதல்

செய்யப்பட்டு மேற்சொன்ன நவீன அரிசி ஆலைக்கு அனுப்பி அரிசியாக மாற்றப்பட்டு பொது விநியோகத்திற்கு வழங்கப்படுகின்றது. இவ்வாலையின் தேவைக்கு தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களிலிருந்தும் மேற்கொண்டு நெல் அனுப்பப்படுகிறது. ஆகவே, இரண்டு ஆலைகளுக்கு வேண்டிய அளவு நெல் திருநெல்வேலி மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படுவதில்லை.

77—

### சிறு தொழிற்சாலை ஏற்படுத்துதல்

**வினா 18002—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மத்திய சிறைச்சாலையில் நீண்ட நாள் கைதிகள் தொழில் கற்றுக்கொள்ள சிறு தொழிற்சாலை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

தற்போது சேலம், மத்திய சிறையிலும் பிற மத்திய சிறைகளில் உள்ள தொழிற்சாலைகளான தச்சு, நெசவு, கைமுறைக் காகிதம், டேப், புத்தகம், கட்டுதல், தையற்பணி, கருமார் ஆகியவை நடைபெற்று வருகின்றன. அலுமினியத் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இவை தவிர, சிறைவாசிகளின் நலன் கருதி ஸ்டீல் யூனிட் மற்றும் பிளாஸ்டிக் யூனிட் ஒன்றும் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆக நீண்ட நாள் சிறைவாசிகள் தொழில் கற்றுக்கொள்ள மற்ற சிறைகளில் உள்ளது போல் சேலம், மத்திய சிறையிலும் தொழிற்சாலை வசதி உள்ளது.

78—

### மத்திய சிறைச்சாலையில் பெண்கள் பிரிவில் கைத்தொழில்கள்

**வினா 18004 — திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





சேலம் மத்திய சிறைச்சாலையில் பெண்கள் பிரிவில் தையல் பயிற்சி, காலணி தயாரிக்கும் தொழில் மற்றும் கைத்தொழில்கள் கற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சேலம் மத்திய சிறையில் பெண்கள் பிரிவு இல்லை. ஆகவே, பெண்களுக்கு அங்கு பயிற்சி அளிக்கும் வினா எழாது.

79—

### சாதிவாரியான விவரங்கள்

**வினா 16253—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், சமூகப் பொருளாதார மற்றும் கல்வி பற்றிய ஆய்வுக்காக சாதிவாரியான விவரங்களைச் சேகரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சமூக, பொருளாதார மற்றும் கல்வி பற்றிய ஆய்வுக்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் சாதிவாரியான விவரங்களைச் சேகரிக்கவில்லை.

(ஆ) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரி பல்வேறு சமூகங்களும் அளித்துள்ள கோரிக்கைகள் குறித்து முடிவு செய்ய ஏதுவாக தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலை குறித்த கணக்கெடுப்பினை மேற்கொள்வதற்கான செயற்குறிப்பினை

[1998 நவம்பர் 23

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

80—

**அரசு அச்சகத்தை நவீனமயமாக்கும் திட்டம்**

**வினா 16189 — திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலத்தில் இயங்கி வரும் அரசு அச்சகத்தை நவீனமயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

விருத்தாசலத்தில் இயங்கி வரும் அரசு கிளை அச்சகத்தினை நவீன மயமாக்கும் திட்டத்தின்கீழ் மினி ஆப்செட் இயந்திரம் வாங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

81—

**தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பணி விவரம்**

**வினா 17304 — திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு எத்தனை ஏக்கர் நிலம் தேயிலைத் தோட்டமாக உள்ளது?

(ஆ) அதில் நிரந்தரத் தொழிலாளர் மற்றும் தற்காலிகத் தொழிலாளர்கள் எத்தனை பேர் பணியாற்றி வருகின்றார்கள்?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு 10,772 ஏக்கர் தேயிலைத் தோட்டமாக உள்ளது.

(ஆ) நிரந்தரத் தொழிலாளர்கள்—7071 நபர்கள். தற்காலிகத் தொழிலாளர்கள்—2963 நபர்கள்.

82—

**தேயிலைத் தோட்டக் கழகம்**

**வினா 17307— திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் 1997—98 ஆம் ஆண்டில் ஈட்டிய நிகர லாபம் எவ்வளவு?

(ஆ) ஏற்றுமதி மூலம் கிடைத்துள்ள வருவாய் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) ரூபாய் 29.20 கோடி (தோராயமாக) (ஆண்டு தணிக்கைக்கு முந்தையது.

(ஆ) வணிகர்கள் இக்கழகத்தின் தேயிலையை பொது ஏலச் சந்தையில் வாங்கி ஏற்றுமதி செய்கிறார்கள். கழகம் நேரடியாக ஏற்றுமதி செய்வதில்லை. எனவே இக்கேள்வி எழவில்லை.

83—

**குழந்தைகள் நல மையம் அமைத்தல்**

**வினா 12600 — திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் எம். காளிப்பட்டி ஊராட்சி, கொப்பத்தானூர் பகுதியிலும் சித்திருள்ளனூர் பகுதியிலும், எம். காளிப்பட்டியிலும் குழந்தைகள் நல மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

அரசின் தற்போதைய நிதி நிலைமையில் புதிய குழந்தைகள் நல மையம் ஆரம்பிக்க இயலாது. அருகிலுள்ள பிரதான குழந்தைகள் நல மையத்திலிருந்து மைய உதவியாளர் மூலம் உணவு எடுத்துச் சென்று அக்கிராமப் பயனாளிகளுக்கு வழங்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**84—**

**சத்துணவு மையங்களின் சொந்தக் கட்டடங்கள் விவரம்**

**வினா 16174 — திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் எத்தனை சத்துணவு மையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்குகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் 57 பள்ளி சத்துணவு மையங்கள், 61 குழந்தைகள் நல மையங்கள் ஆக மொத்தம் 118 மையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன.

**85—**

**மின்னணுத் தொழிற்பேட்டையில் இயங்கும்**

**தொழிற்சாலைகள் விவரம்**

**வினா 17542 — திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 23]

(அ) சேலம் மாவட்டம் மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டையில் தற்போது எத்தனை தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன?

(ஆ) ஆம் எனில், எத்தனை தொழிற்கூடங்கள் தொடங்கப்பட உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மின்னணுத் தொழிற்பேட்டையில் 52 மேம்படுத்தப்பட்ட மனைகள் உள்ளன. அவற்றில் 45 மனைகள் 26 தொழில் முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதி 7 மனைகள் காலியாக உள்ளன. தற்போது 2 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

(ஆ) 5 தொழிற்சாலைகள் (6 மனைகள்) கட்டடப் பணி முடியும் நிலையில் உள்ளது. மற்ற தொழிற்கூடங்கள் ஆரம்ப நிலையில் உள்ளன.

**86—**

**சத்துணவுத் திட்டம் செயல்படுத்துதல்**

**வினா 17955—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வெட்டுவாக் கோட்டையில் புதியதாகத் தொடங்கிய அரசு உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெட்டுவாக்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் 1-6-1998 முதல்

177 மாணவர்களுக்கு சத்துணவு வழங்க அனுமதியளிக்கப்பட்டு 8-6-1998 முதல் சத்துணவு மையம் இயங்கி வருகிறது.

87—

### அண்ணா நினைவக மேம்பாடு

**வினா 10188—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996-97 ஆம் ஆண்டு சென்னை அண்ணா சதுக்கம், காஞ்சிபுரத்தில் உள்ள அண்ணா நினைவக மேம்பாட்டுக்காக அரசு எடுத்த நடவடிக்கைப் பற்றிய விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

1996-97 ஆம் ஆண்டு, சென்னை காமராசர் சாலை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடமான அண்ணா சதுக்கத்தில் நடைபாதை அகலப்படுத்துதல், தரை முழுவதும் பளிங்குக் கற்கள் அமைத்தல், 6 எண்கோண மண்டபங்கள் மற்றும் 2 அலங்கார வளைவுகள் அமைத்தல், தோட்டங்கள், புல்வெளிகள், நீரூற்றுகள் அமைத்தல், புதிய நுழைவு வாயில், பேரறிஞர் அண்ணா நினைவிடம் அகலப்படுத்துதல், நினைவுத் தூண் உயரப்படுத்துதல், பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் அருங்காட்சியகம் அமைத்தல் உட்பட பல்வேறு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்து ரூ.275 இலட்சம் செலவில் எல்லாப் பணிகளும் முடிவுற்று, புதுப் பொலிவுடன் அண்ணா சதுக்கம் அமைக்கப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா நினைவிடமான அண்ணா சதுக்கத்தின் முகப்பில் பேரறிஞர் அண்ணாவின் மார்பளவுச் சிலை 3-2-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 3-2-1998 முதல் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டுச் செல்கிறார்கள்.





காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த இல்லமான பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தின் பராமரிப்புப் பணிகள் ரூ.4.20 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்டு பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் புகைப்படங்கள் புதியதாகத் தயார் செய்து லாமினேஷன் செய்யப்பட்டு கண்ணாடி மற்றும் அலுமினியத்தின் மூலம் செய்யப்பட்ட கண்காட்சிப் பேழையில் வைக்கப்பட்டுள்ளன. மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. பேரறிஞர் அண்ணாவின் நினைவு இல்லம் புதிய பொலிவுடன் காட்சியளிக்கிறது. 15-9-1997 முதல் பொது மக்கள் பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தைப் பார்வையிட்டுச் செல்கிறார்கள்.

88—

### குழந்தைகள் காப்பகம்

**வினா 17076—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் இயங்கும் குழந்தைகள் காப்பகங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் தற்போது சேலம் மற்றும் ஆத்தூர் ஆகிய இரு இடங்களில் அரசு குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. சேலம் அரசு குழந்தைகள் காப்பகத்தில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியரின் எண்ணிக்கை 250 ஆக நிர்ணயிக்கப்பட்டு தற்போது 241 மாணவ மாணவியர் பயனடைந்து வருகின்றனர். அதேபோல, ஆத்தூர் அரசு குழந்தைகள் காப்பகத்திலும் 100 குழந்தைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு தற்போது 92 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

89—

### ஆதிதிராவிட மக்களுக்கு உதவித் தொகை

**வினா 3587—திரு. அ. அசோகன்(ம)திரு.உ.திசைவீரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ மூலம் ஆதிதிராவிட மாணவிகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) வழங்கப்படாத தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மூன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஆதிதிராவிட மாணவியருக்கு ஒரு மாணவிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.500 வீதம் வழங்க 60,000 ஆதிதிராவிட மாணவிகள் பயன்பெறும் வகையில் ரூ.300 இலட்சங்களும் மற்றும் ஆறாம் வகுப்புக் கல்வி பயிலும் ஆதிதிராவிட மாணவிகளுக்கு ஒரு மாணவிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1000 வீதம் ஊக்கத் தொகை வழங்க 30,000 மாணவிகள் பயன்பெறும் வகையில் ரூ. 300 இலட்சங்களும், ஆக மொத்தம் ரூ.600 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| (ஆ) 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை மாணவிகளுக்கு வழங்கப்பட்ட தொகை | ரூ.196.28 இலட்சம் |
| 6 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு வழங்கப்பட்ட தொகை | ரூ.243.25 இலட்சம் |
| மொத்த செலவினத் தொகை | ரூ.439.53 இலட்சம் |



| | |
|---|---|
| (இ) 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவிகள் ஊக்குவிப்புத் தொகையில் வழங்கப்படாத தொகை | ரூ.103.72 இலட்சம் |
| 6 ஆம் வகுப்பு மாணவிகள் ஊக்குவிப்புத் தொகையில் வழங்கப்படாத தொகை | ரூ. 56.72 இலட்சம் |
| மொத்தம் வழங்கப்படாத தொகை | ரூ.160.46 இலட்சம் |

இத்திட்டத்தில் செலவு செய்யப்படாத தொகையை 1997-98 ஆம் ஆண்டு பழங்குடியின மாணவிகளுக்கு கல்வி ஊக்குவிப்புத் தொகை வழங்கப் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

90—

### பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்

**வினா 4462—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மீனம்பாக்கம் ஆதிதிராவிடர் நலத் துறை ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டில் மீனம்பாக்கம் ஆதி திராவிடர்

நல ஆரம்பப் பள்ளிக்கு ஐந்து வகுப்பறைகள் கட்ட அனுமதிக்கப்பட்டு கட்டட வேலை முடியும் தருவாயில் உள்ளது.

(ஆ) கட்டடம் கட்ட ஒதுக்கப்பட்ட தொகை ரூ.15.698 இலட்சம் ஆகும்.

91—

**நிர்வாக எல்லைகளை மாற்றியமைத்தல்**

**வினா 12968—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் குறித்த பணிகளைக் கவனிக்கும் தனி வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிர்வாக எல்லைகளை மாற்றியமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதிதாக மாற்றியமைக்கப்பட்ட காஞ்சிபுரம், திருவள்ளூர், சேலம், நாமக்கல், நாகை, திருவாரூர், மதுரை, தேனி மாவட்டங்களில் சில வருவாய் வட்டங்கள் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ளதால் அவற்றின் அடிப்படையில் சில ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் ஏற்கெனவே பணிபுரிந்த எல்லைகளை மாற்றி புதிய அலுவலக அதிகார எல்லையை திருத்தியமைக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் செயற்குறிப்பு அனுப்பியிருந்தார். இது நிர்வாகம் குறித்த பொருள் ஆதலின் இயக்குநரே இது குறித்து தக்க ஆணைகள் பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.



92—

**ஆதிதிராவிடர் நலப் பள்ளி அமைத்தல்**

**வினா 13466— டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திலுள்ள எதப்பட்டி, கோட்டாம்பூண்டி, பெருவலூர் மற்றும் மேல்மலையனூரில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

93—

**இலவச வீட்டு மனைகள் விவரம்**

**வினா 15917— திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதியில் 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தவர் எத்தனை பேர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதியில் 1996-97 ஆம் ஆண்டில் 415 ஆதிதிராவிடர்களுக்கும், 1997-98 ஆம் ஆண்டில் 351

[1998 நவம்பர் 23

ஆதிதிராவிடர்களுக்கும் மற்றும் 30 பழங்குடியினர்களுக்கும் இலவச வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. 232 ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டு மனைகள் வழங்கத் தயார் நிலையில் உள்ளன.

94—

**நீச்சல் குளம் அமைத்தல்**

**வினா 11707— திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் நீச்சல் குளம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், குற்றாலத்தில் நீச்சல் குளம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

95—

**கண்மாயைச் சுற்றுலா மையமாக்குதல்**

**வினா 15896— திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வண்டியூர் கண்மாயைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை வண்டியூர் கண்மாயைச் சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இக்கண்மாய் மதுரை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

96—

**தமிழ்நாடு ஹோட்டல் கட்டுதல்**

**வினா 15899— திரு. சி. சந்திரசேகரன் :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையில் சுற்றுலாத் துறை மூலமாக தமிழ்நாடு ஹோட்டல் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொல்லிமலையில் சுற்றுலாத் துறை மூலமாக தமிழ்நாடு ஓட்டல் கட்டுவதற்கு தற்போது செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

97—

**பூங்கா அமைத்தல்**

**வினா 15907— திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

(அ) வேடசந்தூர் தொகுதியில் உள்ள குடகனாறு நீர்த் தேக்கம் அருகில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் பூங்கா அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் உள்ள குடகனாறு நீர்த் தேக்கம் அருகில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

98—

### குறைந்த விலையில் தரமான உணவு வழங்குதல்

**வினா 17817— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு மையத்தில் கோடை விழாக் காலங்களில் குறைந்த விலையில் தரமான உணவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஏற்காடு சுற்றுலா மையத்தில் கோடை விழாக் காலங்களில் குறைந்த விலையில் கூட்டுறவு சிறப்பங்காடி மூலம் தரமான உணவு வழங்கப்படுகிறது.

99—

### தமிழ்நாடு ஓட்டல் கட்டுதல்

**வினா 19922— திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 23]

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுபாக்கம் தொகுதி, கிழக்குக் கடற்கரைச் சாலையையொட்டி சுற்றுலாத் துறை மூலம் தமிழ்நாடு ஓட்டல் கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதி, கிழக்குக் கடற்கரைச் சாலையையொட்டி சுற்றுலாத் துறை மூலம் ஓட்டல் கட்டும் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

100—

### ஏற்றுமதி செய்யப்பட்ட மீன்கள் விவரம்

**வினா 17041— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலிருந்து கடந்த 1997-98-ல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மீன் வகைகள் எத்தனை டன்? அதன் மதிப்பு என்ன?

(ஆ) அதனால் கிடைத்த அன்னியச் செலவாணி எவ்வளவு?

(இ) அவை எந்தப் பகுதியில் உற்பத்தியாகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலிருந்து கடந்த 1997-98-ல் வெளிநாடுகளுக்கு 1,220 கோடி மதிப்புள்ள இறால் மீன், கணவா ஆகியவை 41,052 டன் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

(ஆ) தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மீன் வகைகளால் மொத்தம் ரூ. 1,220 கோடி அன்னியச் செலாவணி கிடைத்தது. அதன் விவரம் பின்வருமாறு:

[1998 நவம்பர் 23

1997-98

| | எடை (டன்னில்) | மதிப்பு ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| (1) இறால் | 24,865 | 1,047 |
| (2) மீன் | 2,776 | 18 |
| (3) கணவா | 4,618 | 50 |
| (4) ஊசிகணவா | 3,111 | 43 |
| (5) மற்றவை | 5,682 | 62 |
| மொத்தம் | 41,052 | 1,220 |

(இ) தமிழ்நாட்டில் இராமநாதபுரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டக் கடல் பகுதிகளில் கணிசமாகவும், இதர மாவட்டங்களில் பரவலாகவும் உற்பத்தியாகிறது.

நான்காம் பட்டியல்

1—

**மேக்னசைட் செங்கற்களைத் தயாரிக்கும் திட்டம்**

**வினா 10753—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தில் அதிக வெப்பம் தாங்கும் மேக்னசைட் செங்கற்களைத் தயாரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**



1998 நவம்பர் 23]

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2—

**சர்க்கரை ஆலை அமைத்தல்**

**வினா 14665—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கூட்டுறவுத் துறை மூலம் சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்போது ஓமலூர் பகுதியில் குறைந்த அளவு, அதாவது 175 ஏக்கரில் மட்டுமே கரும்பு பயிரிடப்படுகிறது. இதிலிருந்து சராசரியாக 700 டன்கள் கரும்புதான் கிடைக்கிறது. மேலும், சர்க்கரை ஆலைக்கு அடிப்படை தேவையான தண்ணீர் வசதி, கரும்பு அபிவிருத்தி செய்யத்தக்க வளமிக்க விளை நிலம் இங்கு இல்லை. சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே நாளொன்றுக்கு 2500 டன் கரும்பு அரைவைத் திறன் கொண்ட சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையும், தவிர நாளொன்றுக்கு 2500 டன் கரும்பு அரைவைத் திறன் கொண்ட பொன்னி சர்க்கரை ஆலை எனும் தனியார் சர்க்கரை ஆலையும் இயங்கி வருகின்றன. இது தவிர சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டத்தில் நாளொன்றுக்கு 2500 டன் கரும்பு அரைவைத் திறன் கொண்ட ஒரு புதிய சர்க்கரை ஆலை தனியார் துறையில் அமைக்க மைய அரசு உரிமம் வழங்கியுள்ளது. இந்நிலையில் இந்த மூன்று ஆலைகளின் முழுத் தேவைக்கான கரும்பு (அதாவது ஒரு ஆலைக்கு 4.30 இலட்சம் டன் கரும்பு) தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் கிடைப்பதில் சிரமம் உள்ளது. இச்சூழ்நிலையில் சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டத்தில் சர்க்கரை ஆலை ஒன்று கூட்டுறவுத் துறையில் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறு ஏதுமில்லை.

[1998 நவம்பர் 23

3—

### பெண் காவலர் நியமனம் செய்தல்

**வினா 18035—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் உள்ள காவல் நிலையத்திற்குப் பெண் காவலர்கள் நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நாமக்கல் மாவட்டத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று ஏற்கெனவே இயங்கி வருகிறது. எனவே, குமாரபாளையத்தில் உள்ள காவல் நிலையத்தில் பெண் காவலர்கள் நியமனம் செய்ய அவசியம் ஏழவில்லை எனக் கருதப்படுகிறது.

4—

### பெண் காவலர்கள் நியமனம்

**வினா 18072—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் பெண் காவலர்கள் எவ்வளவு பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

(ஆ) 1998-99 நிதியாண்டில் பெண் காவலர்கள் எவ்வளவு பேர் பயிற்சி அளித்து, நியமிக்கப்பட உள்ளார்கள்?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ)தமிழ்நாட்டில் மொத்தம் 554 பெண் தலைமைக் காவலர்களும், 1974 பெண் முதல்நிலைக் காவலர்களும், 3047 பெண் காவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) நடப்பு ஆண்டில் 5000 பெண் காவலர்கள் தேர்ந்தெடுக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் தக்க பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.



1998 நவம்பர் 23]

5—

### காவல் துறையில் தேர்வுக்கு வயது வரம்பைத் தளர்த்தல்

**வினா 18082—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) தமிழ்நாடு காவல் துறை ஆய்வாளர், காவலர் ஆகியோர் தேர்வுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வயது வரம்பைத் தளர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவல் துறைக்குத் திறமையான, இளமையான நல்ல உடல்திறன் கொண்டவர்களே தேவைப்படுவதால், இப்போதுள்ள வயது வரம்பை மேலும் தளர்த்தும் கருத்துரு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

6—

### சேலம் சர்க்கரை ஆலை

**வினா 19402—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம் மோகனூரில் உள்ள சேலம் சர்க்கரை ஆலையில் கடந்த 1997-98 ஆம் ஆண்டில் எவ்வளவு தொகை நஷ்டம் ஏற்பட்டுள்ளது?

(ஆ) அதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ரூ.2.72 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

[1998 நவம்பர் 23

(ஆ) இவ்வாலை செலுத்த வேண்டிய கடன்கள், வட்டி மற்றும் கரும்பு விலையினைச் செலுத்த இயலாததால், ஆலையின் புனரமைப்பிற்கு ஒரு திட்டம் பரிசீலனையில் உள்ளது. மேலும் வரும் அரைவைப் பருவங்களில் ஆலை முழு அரைவைத் திறனுடன் அரைப்பதற்கும், கழிவுப்பாகு மற்றும் எரிசாராய விற்பனையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வருங்காலங்களில் லாபம் ஈட்டுவதற்கான அனைத்து சிக்கன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7—

**அரசு சிமெண்ட் ஆலையினை நவீனப்படுத்துதல்**

**வினா 19418—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, அரியலூர் அரசு சிமெண்ட் ஆலையினை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) டான்செம் நிறுவனத்தின் அரியலூர் சிமெண்ட் ஆலையினை சுமார் ரூ.60 முதல் ரூ.70 கோடி செலவில் மேலும் நவீனப்படுத்தி தற்போது உள்ள உற்பத்தி செலவினைக் குறைப்பதற்கு ஏதுவான செயல் திட்டம் நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) டான்செம் நிறுவனத்தின் ஆலங்குளம் சிமெண்ட் ஆலையினை ரூ.200 கோடி திட்டச் செலவில் செயல்படுத்தும் பணி விரைவில் தொடங்க உள்ளது. இப்பணி முடிந்தவுடன் ஆலையை நவீனப்படுத்தும் திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

8—

**ஆரம்பப் பள்ளியை இடமாற்றம் செய்தல்**

**வினா 8115—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாங்குநேரி தொகுதி, வடுகச்சிமதில் இந்து ஆரம்பப் பள்ளியை



1998 நவம்பர் 23]

விளையாட்டு மைதானத்துடன் கூடிய சுகாதாரமான இடத்திற்கு மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

இந்த உதவி பெறும் தனியார் பள்ளியை, விளையாட்டு மைதானத்துடன் கூடிய சுகாதாரமான இடத்திற்கு மாற்றுவது சார்பாக கருத்துரு எதுவும் பள்ளி நிர்வாகியிடமிருந்து பெறப்படவில்லை. மேலும், இப்பள்ளிக்கு ஏற்கெனவே விளையாட்டு இடம் உள்ளது. பள்ளி தற்போது வசதியான இடத்திலேயே அமைந்துள்ளதால் இடமாற்றம் செய்வதற்கான அவசியம் எதுவும் எழவில்லை.

9—

**உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைச் சீர்செய்தல்**

**வினா 13666—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம், தேவனூர் உயர்நிலைப் பள்ளியின் கட்டடத்தைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மேல்மலையனூர் தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியம் தேவனூர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் 1996 ஆம் ஆண்டில் பெய்த புயல் மழையின் காரணமாக பெரிதும் பழுதடைந்து, தேவனூர் கிராமப் பொது மக்களால் ஜனவரி 1998 இல் பழுது பார்க்கப்பட்டது. மேற்படி பள்ளியின் சிறப்பு மராமத்துப் பணிக்காக பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பெறப்பட்டவுடன் பரிசீலனை செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10—

**மூன்றாம் நிலை நூலகர்களுக்குப் பதவி உயர்வு**

**வினா 14201—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

(அ) பொது நூலகத் துறையில் பணிபுரியும் மூன்றாம் நிலை நூலகர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொது நூலகத் துறையில் பணிபுரியும் மூன்றாம் நிலை நூலகர்களுக்குப் பதவி உயர்வு வழங்கும் அதிகாரம் மாவட்ட நூலக அலுவலர்களுக்கேயுள்ளதால், இது பற்றிய செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் வருவதில்லை.

கடந்த நான்கு ஆண்டுகளில் மூன்றாம் நிலை நூலகர்களுக்கு 2 ஆம் நிலை நூலகர்களாகப் பதவி உயர்வு வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:-

| ஆண்டு வாரியாக | மாவட்ட நூலக ஆணைக் குழுவின் இரண்டாம் நிலை நூலகர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை | கன்னிமாரா பொது நூலக நூலகர்களுக்கு இரண்டாம் நிலை நூலகர்களுக்கு இணையான பதவிகளில் பதவி உயர்வு |
|---|---|---|
| (i) 1994 | 54 | 1 |
| (ii) 1995 | 14 | — |
| (iii)1996 | 46 | 2 |
| (iv)1997 | 42 | — |
| (v) 1998 | 14 | — |
| | 170 | 3 |

(2) தற்போது 2 ஆம் நிலை நூலகர் பதவியில் காலியாகும் என எதிர்பார்க்கப்படும் பதவிகளின் எண்ணிக்கை:-



1998 நவம்பர் 23]

| | (1) | (2) |
|---|---|---|
| 1998 இல் காலியாகும் என எதிர்பார்க்கப்படும் இரண்டாம் நிலை நூலகர் பணியிடங்களின் எண்ணிக்கை | 34 | 2 |
| 1999 இல் நூலகர் பணியிட எண்ணிக்கை | 14 | - |
| 2000 இல் நூலகர் பணியிட எண்ணிக்கை | 11 | - |
| | 59 | 2 |

11—

## நூலகம் அமைத்தல்

**வினா 14393—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட கவியரசு கண்ணதாசன் நகரில் நூலகத்திற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் நூலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்கும்?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) திருவெற்றியூர் தொகுதி, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட கவியரசு கண்ணதாசன் நகரில் நூலகத்திற்கென இடம் ஏதும் இதுவரை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, இதன்பொருட்டு செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

12—

### கிளை நூலகம் அமைத்தல்

**வினா 15215—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியத்திலுள்ள, ஆடையூர் பக்கநாடு பகுதியில் ஒரு கிளை நூலகம் ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியத்திலுள்ள ஆடையூர் பக்கநாடு பகுதியில் கிளை நூலகம் அமைப்பதற்கு தற்போது கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

13—

### மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வசதி

**வினா 15244—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட சின்னப்பம்பட்டி மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடம், கழிப்பிடம் மற்றும் சுற்றுச் சுவர் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட சின்னப்பம்பட்டி மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல்



ஆய்வகம் நடப்பு நிதியாண்டில் கட்டித்தர அரசால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இப்பள்ளிக்கு அரசாணை எண் 222, பள்ளிக் கல்வி, நாள் 11-6-1998-ல் கழிவறை வசதி செய்து கொடுக்க அரசு ஆணையிட்டுள்ளது.

மேலும், இப்பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைப்பது சார்பாக தற்போது நிதி ஆதாரம் ஏதும் வழங்கப்படாததால், அரசாணை எண் 581, கல்வி, நாள் 14-7-1994 இன்படி பசுமை வேலி அமைப்பது சார்பாக வனத் துறை அலுவலரிடம் தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

14—

### 'கற்பது கற்கண்டே நிகழ்ச்சியின் பணிகள்

**வினா 15326—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளில் நடைபெறும் 'தகற்பது கற்கண்டே' நிகழ்ச்சியின் பணிகள் என்ன? அதற்காக அரசு நிதி ஒதுக்கீடு ஏதேனும் செய்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கற்பித்தலை சுவையாக மாணவர்கள் விரும்பி ஏற்றுக் கொள்கின்ற வகையில் ஆடல், பாடல், விளையாட்டு முறையில் செய்வதற்கு ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியே "கற்பது கற்கண்டே" நிகழ்ச்சியாகும்.

(ஆ) இதற்கான அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதற்காகும் செலவினத்தை "யூனிசெப்" நிறுவனமும் மாவட்ட தொடக்கக் கல்வி திட்டங்களை செயல்படுத்தும் மாவட்டங்களில் மாவட்ட தொடக்க கல்வித் திட்டத்தின் மூலமும் ஏற்று நடத்தப்படுகிறது.

[1998 நவம்பர் 23

15—

**அரசு கலைக் கல்லூரியில் கணினி பாடப் பிரிவு தொடங்குதல்**

**வினா 15366—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திண்டிவனம் திரு. ஆ. கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரியில் கணினி பாடப் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

16—

**மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்**

**வினா 16373—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி தாலுகா, கொங்கணாபுரத்தில் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் (புதியதாக) கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*சேலம் மாவட்டம், எடப்பாடி தாலுகா, கொங்கணாபுரத்தில் உள்ள கே.ஏ. நாச்சியப்பா அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு 1996-97 ஆம் நிதியாண்டில் பகுதி-1 திட்டத்தின்கீழ் அரசு முழு நிதியுதவியுடன் 3 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டிக்கொடுக்க அரசாணை நிலை எண் 718, கல்வி, அறிவியல் (மற்றும்) தொழில் நுட்பவியல் துறை, நாள் 4-10-1996 இல் ஆணை பிறப்பிக்கப்பட்டு, தற்போது அப்பணி முடியும் தருவாயில் உள்ளது.*



1998 நவம்பர் 23]

17—

**நூலகம் வைத்துள்ள குடும்பங்களுக்குப் பரிசு**

**வினா 17346—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வீட்டுக்கோர் நூலகம் வைத்துள்ள குடும்பங்களுக்குப் பரிசளிக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

பொதுமக்களுக்கு குறைந்த செலவில் சிறந்த படிப்பு அளிப்பதே அரசின் நோக்கமாகும். மேலும் பொதுமக்களிடத்தில் படிக்கும் ஆர்வத்தை உக்குவிப்பதும் கிராமப்புறங்களில் உள்ள வசதி குறைந்த பாமர மக்கள் கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும் உதவுவதுமே அரசின் முக்கியக் குறிக்கோளாகும். எனவே, வீட்டுக்கோர் நூலகம் வைத்துள்ள குடும்பங்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

18—

**செங்கோட்டை அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி**

**வினா 12025—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை அரசு வட்ட மருத்துவமனையில் அறுவை அரங்கு வசதியுடன் அவசர சிகிக்சை, எலும்பு சிகிச்சை, மனநோய், தோல், காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை அரசு மருத்துவமனையில் அறுவை அரங்கு வசதியுடன் அவசர சிகிச்சை, எலும்பு சிகிச்சை,

மனநோய், தோல், காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவுகளை அரசு நிதிநிலைமையைக் கருத்திற் கொண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொன்றாக ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

19—

**குடிப்பழக்கம் மூலம் எய்ட்ஸ் நோய்**

**வினா 14250—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எய்ட்ஸ் நோய் பரவுவதற்கு குடிப்பழக்கம் மறைமுகக் காரணமாக (indirect cause) உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எய்ட்ஸ் நோய் பரவுவதற்கு குடிப்பழக்கம் மறைமுகக் காரணமாக (Indirect cause) இருக்கலாம் என்பது மருத்துவ ரீதியாக சரியென்றாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குடிப்பழக்கத்தினால் எய்ட்ஸ் நோய் பரவுகிறதா என்று இதுவரை தகவல் ஏதும் பெறப்படவில்லை. பெரும்பாலும் பாதுகாப்பற்ற உடலுறவு மூலமாகவே பரவுவதாக தற்போதுள்ள விவரங்கள் மூலம் தெரிகிறது.

20—

**வேலூர் அரசு மருத்துவமனைக்குத் தண்ணீர் வசதி**

**வினா 14525—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு மருத்துவமனையில் போதிய தண்ணீர் வசதி இன்றி நோயாளிகள் துன்பப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) பாலாற்றில் இருந்து மருத்துவமனைக்கு தனி பைப்லைன் அமைத்து தண்ணீர் பிரச்சினை சரி செய்யப்படுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் அரசு தலைமை மருத்துவமனையில் 9 தண்ணீர் தொட்டிகளும் (சம்ப்) 10 மேல்நிலைத் தண்ணீர் தொட்டிகளும் உள்ளன. இவற்றில் திறந்தவெளிக் கிணறு (1). ஆழ்துளைக் கிணறுகள் (3) மற்றும் நகராட்சியிலிருந்து (2 நாட்களுக்கொரு முறை) தண்ணீர் பெறுதல் - இந்த வழிகளில் நாளொன்றுக்கு 85,000 லிட்டர் தண்ணீர் பெற்று நிரப்பி, மருத்துவமனையில் அனைத்து இடங்களுக்கும் குறைவின்றி தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதனால் தற்போது தண்ணீர் பிரச்சினை ஏதும் இல்லை.

(ஆ) மேலும், தேவை ஏற்பட்டால் அரசின் நிதி நிலையை கருத்திற்கொண்டு பாலாற்றில் இருந்து இம்மருத்துவமனைக்கு 5 கி.மீ.தூரம் குழாய் அமைத்துத் தண்ணீர் கொண்டு வரும் திட்டம் பகுதி-2 திட்டத்தில் பரிசீலிக்கப்படும்.

21—

**அதிக மின் அழுத்தமுள்ள மின்மாற்றி அமைத்தல்**

**வினா 16286—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்பட்டி ஊராட்சியிலுள்ள நாகோசிபட்டி, ஏழுமாத்தையான்காடு வெடியகாரனூர், நரியனூர், பள்ளிப்பட்டி, ஆண்டிகவுண்டனூர் ஆகிய பகுதிகளில் அதிக மின் அழுத்தமுள்ள மின்மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்பட்டி

ஊராட்சியிலுள்ள நாகோசிப்பட்டி, எழுமாத்தையான்காடு, வெடியகாரனூர், நரியனூர், பள்ளிப்பட்டி, ஆண்டிக்கவுண்டனூர் ஆகிய பகுதிகளுக்கு மேட்டூர் 110/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து 25 கி.மீ. வழித்தடம் கொண்ட 11 கே.வி. மேச்சேரி மின்னூட்டியின் மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது.

எனவே, 11 கே.வி. மேச்சேரி மின்னூட்டியில் மின் அழுத்தம் ஒரே சீராக கிடைப்பதற்காக உப்புப்பள்ளம் என்ற இடத்தில் ரூ.2.83 இலட்சம் செலவில் 'சன்ட் கெபாசிடர்', 600 கே.வி.ஏ.ஆர். நிறுவப்பட்டு, 28-7-1997 அன்று இயக்கி வைக்கப்பட்டுள்ளது. நரியனூர் பகுதியில் புதியதாக ஒரு 63 கே.வி.ஏ., 11 கே.வி. மின் மாற்றி சுமார் ரூ.1.6 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க அனுமதி பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இம் மின்மாற்றி அமைக்கப்பட்டபின் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் குறைவழுத்தக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்.

22—

## தாரமங்கலம் தொகுதியில் மின்மாற்றிகள்

**வினா 16290—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மல்லியகுந்தம் ஊராட்சியிலுள்ள மல்லியகுந்தம், புள்ளசோழியூர், திப்பரத்தாம்பட்டி ஆகிய இடங்களில் குறைந்த மின் அழுத்தமுள்ள மின் மாற்றியை அதிக அழுத்தமுள்ள மின் மாற்றியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், மல்லியகுந்தம் ஊராட்சியிலுள்ள மல்லியகுந்தம், புள்ளசோழியூர், திப்பரத்தாம்பட்டி ஆகிய பகுதிகளுக்கு மேட்டூர் 110/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து 11 கே.வி. மேச்சேரி மின்னூட்டியின் மூலம் சுமார் 501 கே.வி.ஏ. திறனுள்ள ஆறு மின் மாற்றிகள் மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி மேச்சேரி மின்னூட்டியின் மொத்த வழித்தடம் சுமார் 25 கி.மீ. ஆகும். எனவே, மேற்கண்ட பகுதிகளில் உள்ள உச்ச மின்சுமை நேரத்தில் தாழ்வு மின்னழுத்தம் இருந்து வருகிறது.



11 கே.வி. மேச்சேரி மின்னூட்டியின் மின்அழுத்தம் ஒரே சீராகக் கிடைப்பதற்காக உப்புப்பள்ளம் என்ற இடத்தில் ரூ.2.83 இலட்சம் செலவில் 'சன்ட் கெபாசிடர்' 28-7-1997 முதல் இயக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், புள்ளசோழியூர் பகுதியில் புதியதாக ஒரு மின் மாற்றி அமைக்க மதிப்பீடு தயார் செய்து அனுமதி வழங்கப்பட உள்ளது. மேலும், மேச்சேரியில் 110/11 கே.வி. துணை மின் நிலையம் ரூ. 390 இலட்சம் செலவில் அமைக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு, 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்துணை மின் நிலையம் அமைக்கப்பட்டபின் மேச்சேரி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் குறைவழுத்தக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்.

23—

## மாவட்ட ஆட்சியர்க்கு சுழற் கோப்பை

**வினா 16574—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிசு மரணத்தைப் பெருமளவு குறைத்து சாதனை படைக்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கு சுழற்கோப்பை வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளதையடுத்து 1997-98 ஆம் ஆண்டில் எத்தனை மாவட்ட ஆட்சியர்களுக்கு சுழற்கோப்பை வழங்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டு எந்த ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் சுழற் கோப்பை வழங்கப்படவில்லை.

[1998 நவம்பர் 23

24—

### ஊர்தி ஓட்டுநர் நியமனம் செய்தல்

**வினா 18736—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் காலி பணியிடமாக உள்ள ஊர்தி ஓட்டுநர் ஒருவரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் ஊர்தி ஓட்டுநர் பணியிடம் இதுவரை உருவாக்கப்படவில்லை. தற்பொழுதுதான் அப்பணியிடம் அரசாணை (நிலை) எண் 338, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 16-6-1998-ன்படி மருத்துவமனை பணியாளர் பதவியை ஒப்படைத்து அதற்குப் பதிலாக உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) இப்பணியிடம் விரைவில் நிரப்பப்பட்டுவிடும்.

25—

### 'டேனிடா' திட்டத்தின்கீழ் மருத்துவமனைகள்

**வினா 18771—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனைகள் எத்தனை?

(ஆ) அதில் எத்தனை மருத்துவமனைகள் செயல்படாமல் உள்ளன?



1998 நவம்பர் 23]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் 'டேனிடா' திட்டத்தின்கீழ் இதுவரை அரசு மருத்துவமனைகள் எதுவும் கட்டப்படவில்லை. இத்திட்டம் 1997-98-லிருந்துதான் செயல்படுத்தப்படுகிறது. இம்மாவட்டத்தில் 'டேனிடா' திட்டத்தின் கீழ் ரூ.45 இலட்சம் செலவில் பத்து துணை சுகாதார நிலையங்கள் (Sub-Centres) கட்டுவதற்கு அரசு ஆணை எண் 2(டி) 35, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 24-4-1998 மற்றும் அரசு ஆணை (டி) எண் 36, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 24-4-1998 முறையே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

26—

### காற்றாலைப் பண்ணைகள் அமைத்தல்

**வினா 19471—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் தருமபுரி மாவட்டத்தில் காற்றாலைப் பண்ணைகள் அமைக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சாத்தியக்கூறு இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

27—

### துணை மின்நிலையம் அமைத்தல்

**வினா 19483—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு வட்டம், ஈச்சங்கோட்டை கிராமத்தில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரத்தநாடு வட்டம், ஈச்சங்கோட்டை கிராமத்தில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க திட்டம் ஏதும் இல்லை. தற்போது அங்கு துணை மின் நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

ஒன்பதாவது பெருந்திட்டமிடல் (1997-2002 ஆண்டிற்கான) திட்டத்தில் ஒரத்தநாடு வட்டம், ஈச்சங்கோட்டையில் தற்போதுள்ள ஆளில்லா துணை மின் நிலையத்தை வழக்கமான 33/11 கி.வோ. ஆக மாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஈச்சங்கோட்டை பகுதியில் 2002 ஆண்டு வரை மின் பளு வளர்ச்சி 9 எம்வி.ஏ. என கணக்கிடப்பட்டுள்ளதால், அங்கு 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான மின்பளு வளர்ச்சிக்கு வாய்ப்பில்லை.

**28—**

**வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 15971—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம் டேனிஸ்பேட்டை ஊராட்சிக்கு உட்பட்ட பொன்னன் நகரில் சொந்த வீடில்லாத நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், டேனிஸ்பேட்டை பொன்னன் நகரில் பட்டா கேட்டு உள்ள நிலம் புல எண் 213/2பி4 தனியார் ஒருவருக்குச் சொந்தமானது. அங்கு வசிக்கும் ஆறு நபர்கள் வீடு கட்டி வாழ்கின்றனர். அவர்கள் பட்டாதாரர்கள். அவர்களுக்கு விவசாய நிலங்கள் உள்ளன. எனவே, தனியார் நிலத்தில் வாழும் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.



**29—**

**காலதாமதம் இன்றி பட்டா மாற்றம் செய்தல்**

**வினா 17610—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நிலம் கிரயம் செய்யும்போது பட்டா மாறுதல் செய்வதில் ஏற்படும் இடர்பாடுகளை எளிதாக்கி கால தாமதமின்றி மாறுதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

பட்டா மாறுதல் செய்யும்போது உட்பிரிவு இல்லாத பட்டா மாற்றம் 15 நாட்களுக்குள்ளும், உட்பிரிவுடன் கூடிய பட்டா மாற்றம் 30 நாட்களுக்குள்ளும் செய்யப்பட வேண்டும் என அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**30—**

**புறம்போக்கு நிலங்களுக்கு வீட்டுமனைப் பட்டா**

**வினா 19316—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி இருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 865, வருவாய்த் துறை, நாள் 31-8-1996 இல் ஆட்சேபகரமான புறம்போக்குகள் என்ற மந்தைப் புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு, ஏரி, குட்டை போன்ற நீர்வழி புறம்போக்கு, மயானம் ஆகிய புறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் உண்மையில் ஆட்சேபகரமானவைதானா மற்றும் சமூக

நலனுக்கு இந்த நிலங்கள் தேவைதானா என்பது குறித்து ஆய்வு செய்யவும் உரிய நேர்வுகள் பொது நலன் கருதி ஒப்படை செய்வது பற்றியும் முடிவு செய்ய சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையரைத் தலைவராகக் கொண்டு ஓர் உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையை ஆய்வு செய்து வீட்டுமனைப் பட்டா வழங்குவது பற்றி முடிவு எடுக்கப்படும்.

**31—**

**நடுநிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைத்தல்**

**வினா 11356—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, குளத்தூரில் உள்ள நடுநிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் நடுநிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் வழி முறையில் (1994) வரிசை XVI இணைப்பு III (Annexure III Serial Number XVI—ல்) வழிவகை உள்ளது என்பதால் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் மூலமும் மற்றும் மாவட்டப் பஞ்சாயத்து மூலமாகவும் மாவட்ட ஆட்சியருக்குக் கோரிக்கை வருமாயின் நடவடிக்கை எடுக்கப்படும்.

**32—**

**குடிநீர்ப் பஞ்சம் தடுத்தல்**

**வினா 19946—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அடுத்த 20 ஆண்டுகளில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படும் என்று கூறப்படுவது உண்மையா?*



*(ஆ) ஆம் எனில், கடலில் கலக்கும் நீரைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னைக் குடிநீர் வாரியத்தைப் பொறுத்தவரையில் 2021 ஆம் ஆண்டுக்கான குடிநீர்த் தேவையினைக் கருத்திற்கொண்டு கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் வரையப்பட்டு செயல் வடிவமும் கொடுக்கப்பட்டுள்ளது. தற்சமயமுள்ள நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழையினால் வரும் நீர் மற்றும் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்திலிருந்து பெறப்படும் நீர் இவற்றை ஆதாரமாகக் கொண்டு சென்னைக்கு மேற்குறிப்பிட்டபடி குடிநீர் வழங்க திட்டம் வரையப்பட்டுள்ளது. எனவே, அடுத்த 20 ஆண்டுகளில் சென்னை மாநகரில் குடிநீர்ப் பஞ்சம் இருக்க வாய்ப்பு இல்லை.

**33—**

**வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் உதவி**

**வினா 18576—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளுக்குக் கட்டணமின்றி புல்டோசர், டிராக்டர்கள் வாடகைக்கு விட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், ஏழை விவசாயிகளுக்குக் கட்டணமின்றி கிடைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1998 நவம்பர் 23

34—

## விவசாயத் தொழிற் பயிற்சி அளித்தல்

**வினா 18592—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் உள்ள விவசாயப் பண்ணையில் விவசாயத் தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பட்டுக்கோட்டையில் தென்னை நாற்றுப் பண்ணை ஒன்று உள்ளது. அதில் விவசாயத் தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

35—

## விவசாயிகளின் குறையைப் போக்குதல்

**வினா 18624—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல், தர்மபுரி, விழுப்புரம் மாவட்டங்களிலும் மற்றும் பல இடங்களிலும், 1997-98 ஆம் ஆண்டில் மானாவாரி நிலக்கடலைப் பயிர்களில் பல இடங்களில் கம்பளிப்புழுத் தாக்குதலின் காரணமாக பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குறையைப் போக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் தர்மபுரி, விழுப்புரம் மாவட்டங்களில் மானாவாரி நிலக்கடலை பயிர்களில் கம்பளிப்புழுத் தாக்குதல் இல்லை.



1998 நவம்பர் 23]

ஆனால், நாமக்கல் மாவட்டத்தில், ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் நாமக்கல் வட்டாரத்தில் சில கிராமங்களில் சுமார் 300 எக்டேர் பரப்பில் மானாவாரி நிலக்கடலைப் பயிரில் கம்பளிப் புழுவின் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதேபோன்று, பரமத்தி வட்டாரத்தில் சுமார் 100 எக்டேர் பரப்பில் கம்பளிப்புழு தாக்குதல் இருந்தது. திருச்செங்கோடு கோட்டத்தில் சில இடங்களிலும் கம்பளிப்புழுத் தாக்குதல் இருந்தது. இத்தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது. விவசாயிகளுக்கு எந்தவித மகசூல் இழப்பும் ஏற்படவில்லை.

(ஆ) கம்பளிப்புழுத் தாக்குதல் காரணமாக மகசூல் இழப்பு ஏற்படாமையால், விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் நிலை ஏற்படவில்லை.

36—

## மல்லிகைப்பூ பயிரிடுபவர்களுக்கு உதவி

**வினா 18670—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி தாலுகாக்களில் மல்லிகைப்பூ பயிரிடுபவர்களுக்கு அரசு உதவிகள் ஏதும் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி தாலுகாக்களில் ஒருங்கிணைந்த மலர்கள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் மலர்கள் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகளுக்குச் செயல் விளக்கத் தளைகள் அமைக்க, தளை ஒன்றுக்கு ரூ.6,000/- வீதம் மானியமாக, உயர் விளைச்சல் நடவுச் செடிகள், உரம் மற்றும் பூச்சி மருந்துகளுக்காக வழங்கப்படுகிறது. இத்தகைய தளைகள் 0.10 எக்டேர் பரப்பில் அமைக்கப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி தாலுகாக்களில் ரோஜாவில் 2 எண்களும்,

கனகாம்பரத்தில் 1 எண்ணும் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கப்பட்டன. ரூ.18,000 மானியமாகச் செலவிடப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில் இந்த இரண்டு தாலுகாக்களில் மொத்தம் 10 செயல் விளக்கத் தளைகள் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தளைகள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதில் மல்லிகையில் 5 செயல் விளக்கத் தளைகள் நிறுவப்படும். இதற்காக ரூ.60,000 இத்திட்டத்தில் செலவிடப்படும்.

37—

**பார்த்தீனியம் விஷச் செடியை அழித்தல்**

**வினா 18677—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பல இடங்களில் பார்த்தீனியம் எனும் விஷச் செடிகள் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) அதை அழிக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம் மற்றும் பல மாவட்டங்களிலும் பார்த்தீனியம் களைச் செடிகள் இருப்பதை அரசு அறியும்.

(ஆ) பார்த்தீனியம் களைச் செடிகளை அழிக்க, அரசுத் திட்டம் தனியாக எதுவும் நடைமுறையில் இல்லை. ஆனால், அவற்றை அழிக்கத் தேவையான தொழில் நுட்பங்கள் வேளாண்மைத் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மூலம் தேவைப்படுபவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

38—

**செல்வ சிந்தாமணிக் குளத்தில் வீடு கட்டுதல்**

**வினா 4079—திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரிலுள்ள செல்வ சிந்தாமணிக் குளத்தில் ஏழை மக்களுக்கு வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

நீர்நிலைப் புறம்போக்குகளில் பிற துறைகளுக்கு நில உரிமை மாற்றம் செய்தல், குத்தகைக்கு விடுதல் போன்ற எந்தக் கருத்துருவினையும் பரிந்துரை செய்ய வேண்டாமென 20-01-1987-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளதால், செல்வ சிந்தாமணிக் குளத்தில் ஏழைகளுக்கு வீடுகள் கட்டித்தர இடம் ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்க இயலாது.

39—

**கண்மாயில் மடை கட்டுதல்**

**வினா 7842—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதியில் உள்ள அனைத்துக் கண்மாய்களையும் தூர் எடுத்து, அதற்கேற்றாற்போல் தண்ணீர் திறந்துவிட, மடை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதியில் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரெட்டிக் கண்மாய் மற்றும் வடுகக் கண்மாய் ஆழப்படுத்துதல் மற்றும் கரையினைப் பலப்படுத்துதல் பணிகள் 1997-98 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன. கட்டக்குளம் கண்மாயின் சில பணிகள் நிலுவையில் உள்ளன. இவ்வேலைகள் நடப்பு நிதி ஆண்டில் செய்து முடிக்கப்படும்.

மேலும், மாநில கண்மாய் பாசனத் திட்டத்தின்கீழ் வாடிப்பட்டி வட்டத்தில் இருபது கண்மாய்களில் மராமத்து வேலைகளும், வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் தடுப்புச் சவர்களும் ரூ.22.50 இலட்சத்திற்கு மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர, இத்தொகுதியில் உள்ள 12 கண்மாய்கள் மராமத்துச் செய்யப்பட உள்ளன. இப்பணிகள் நிதி நிலைமைக்கேற்ப, வரும் காலங்களில் எடுத்துக் கொள்ளப்படும்.

40—

**அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர்**

**வினா 8829—திருமதி ஆர். சரஸ்வதி:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தாராபுரம் தொகுதி, அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.*

41—

**வீணாகும் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துதல்**

**வினா 10507—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-*

*(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம் பின்னையூர் மேல்பகுதியில் வரும் கொக்கு வாய்க்கால், வடிகால் வாய்க்காலில் நீரைத் தேக்கி, தண்ணீர் வீணாகக் கடலுக்குச் செல்வதைத் தடுத்து, விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் அமைக்க அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம் பின்னையூர் மேல்பகுதியில் வரும் கொக்கு வாய்க்கால், வடிகால் வாய்க்காலில் நீரைத் தேக்கி, வீணாகக் கடலுக்கு செல்வதைத் தடுத்து விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் பாசனத் திட்டம் தயாரிக்க இனிமேல்தான் ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.*





42—

**குளத்தை மராமத்து செய்தல்**

**வினா 12977—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, இராஜாக்கமங்கலம் ஊராட்சி, இராஜாக்கமங்கலம் குளத்தை மராமத்துச் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இக்குளத்தை மராமத்துச் செய்யும் பணி நிதி நிலைமைக்கேற்ப வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும்.*

43—

**திருநெல்வேலி மாவட்டத்தில் குளங்கள் மராமத்து**

**வினா 12989—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், காமநேரிக்குளம், செங்களாக்குறிச்சிக்குளம், சோலான்குளம், திருவரங்கநேரிகுளம் மற்றும் தேவனார்குளம், வடமலை சமுத்திரம் கிராமம், பெரியகுளம் ஆகிய குளங்களை மராமத்துச் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இக்குளங்களின் மராமத்துப் பணிகள் நிதி நிலைமைக்கேற்ப வரும் நிதியாண்டுகளில் எடுத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.*

[1998 நவம்பர் 23

44—

புலியூர்குறிச்சிக் குளம் மராமத்துச் செய்தல்

**வினா 12999—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, புலியூர்குறிச்சி ஊராட்சி, புலியூர்குறிச்சிக் குளம் மராமத்து செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள புலியூர்குறிச்சிக் குளத்தின் (தேவனார்குளம்) மராமத்துப் பணிகள் நிதி நிலைமைக்கேற்ப செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

45—

நாங்குநேரி தொகுதியில் குளங்கள் மராமத்து

**வினா 13001—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, இறைப்புவாரி ஊராட்சி, பட்டர்புரம் குளம் மற்றும் செங்குளம் ஆகிய குளங்களில் மராமத்துப் பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இக்குளங்களின் மராமத்து பணிகள் நிதி



1998 நவம்பர் 23]

நிலைமைக்கேற்ப வரும் ஆண்டுகளில் எடுத்துக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

46—

செங்கோட்டை ஒன்றியத்தில் குளங்களைப் புதுப்பித்தல்

**வினா 13908—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம் புளியரை ஸ்ரீமூலப்பேரி அணைக்கட்டில் மடைக் கதவினைச் சீர்செய்து இரு கண்மாய்களையும் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீமூலப்பேரி அணைக்கட்டில் மடைக் கதவினைச் சரிசெய்து இரு கண்மாய்களைப் புதுப்பிக்கும் பணி வரும் நிதியாண்டுகளில் நிதி நிலைமைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

47—

வாய்க்கால் தூர் எடுத்தல்

**வினா 15100—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், கொண்டமரெட்டி ஓடையின் ஆக்கிரமிப்பை அகற்றி வாய்க்காலைத் தூர் எடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

கொண்டமரெட்டி ஓடையின் ஆக்கிரமிப்பை வருவாய்த்

துறையினரின் ஒத்துழைப்புடன் அகற்றி வாய்க்கால் தூர் எடுக்கும் பணியினை, அரசின் நிதி நிலைமைக்கேற்ப எடுத்துக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**48—**

### அணையை ஆழப்படுத்துதல்

**வினா 15667—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி வட்டம், பாலமேடு சாத்தையாறு அணையை ஆழப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*சாத்தையாறு நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை அதிகரிக்க நீர்ப்பிடிப்புப் பகுதியை ஆழப்படுத்தினால், ஆற்று மதகின் தரைமட்டத்திற்குக்கீழ் தேங்கும் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் வாய்ப்பு இல்லை.*

**49—**

### பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம்

**வினா 17275—திரு. மு.பெ. சாமிநாதன்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோயில் தொகுதியில் அமைந்துள்ள வட்டமலைஓடை அணையின் பராமரிப்பு அமராவதித் திட்டத்தில் இருந்து பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திற்கு மாற்றப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

*ஆற்று வடிநிலங்களின் அடிப்படையில் கால்வாய்கள், ஓடைப் பகுதிகள், அணைகள் ஆகியன நிர்ணயிக்கப்பட்ட போது*





*வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக்கம் அமராவதி வடிநிலக் கோட்டத்தின் எல்லைக்குள் உட்பட்டு வருகிறது. அமராவதி நீர்த்தேக்கத் திட்டத்தில் பாசனம் பெறும் பரப்பு, பரம்பிக்குளம் ஆழியாறு பாசனம் பெறும் பரப்பை விடக் குறைவாக உள்ளதாலும் பரம்பிக்குளம் ஆழியாறு வடிநிலத் திட்டத்தில் செய்யப்படும் பணிகளின் வேலைப் பளுவைவிட சற்று குறைவாக உள்ளதாலும் வட்டமலைக்கரை ஓடைப் பராமரிப்பு பணிகள் மற்றும் பாசனப் பணிகள் ஆகியவை அமராவதி வடிநிலக் கோட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருமூர்த்தி கோட்டம் மற்றும் பொள்ளாச்சி கோட்டத்திற்கு உட்பட்ட பரம்பிக்குளம் ஆழியாறு திட்டப் பாசனப் பரப்புகள் கூடுதலாக உள்ளன. இதற்கான வாய்க்கால்கள் மற்றும் அணைகளின் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ள வேண்டியுள்ளன. இக்கோட்டங்களின் வேலைப் பளுவும் கூடுதலாக உள்ளது. ஆகவே மேற்கண்ட சூழ்நிலையில் வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக்கத்தின் பராமரிப்பை மேற்கொள்ள அமராவதி வடிநிலக் கோட்டத்தின் கட்டுப்பாட்டிலிருந்து பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்திற்குட்பட்ட கோட்டத்திற்கு மாற்றுவது சிறந்ததல்ல.*

**50—**

### வீரமங்கலம் செல்ல பேருந்து

**வினா 10483—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருத்தணியிலிருந்து வீரமங்கலம் செல்லும் 65 எண் நகரப் பேருந்து அடிக்கடி நிறுத்தப்பட்டு விடுவதால், வங்கனூர் பயணிகள் 4 கி.மீ. தூரம்நடக்க வேண்டியிருப்பதால், அந்தப் பேருந்தைத் தவறாமல் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*திருத்தணி-வீரமங்கலம் (வழி) வங்கனூர் செல்லும் எண் 65 நகரத் தடம் ஒருசில நாட்களில் ஏதேனும் வழியில் ஏற்படும் எதிர்பாராத பழுதுகளினால் உண்டாகும் ஓரிரு நடை இழப்புகள் தவிர தினமும் இயக்கப்பட்டு வருகிறது.*

[1998 நவம்பர் 23

51—

## இராமேஸ்வரத்திற்குப் புதிய பேருந்து

**வினா 12635 —திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து பெருமகளூர், கட்டுமாவடி வழியாக இராமேஸ்வரத்திற்குப் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேராவூரணி-இராமேஸ்வரம் தடத்தில் பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. ஆகவே இத்தடத்தில் புதிதாகப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

52—

## பேருந்துகள் இயக்குதல்

**வினா 12807—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடபகுதியைச் சேர்ந்த மரியபுரம், முட்டிக்காளன்பதி, கிருஷ்ணாபுரம், சந்தைப்பாளையம், மேட்டுவளவு, கே.ஆர். பாளையம் ஊர்களுக்கு பஸ் வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், 45, 45ஏ, 45பி இவற்றில் ஏதாவதொன்றை தினசரி மூன்று நடைகள் இந்த ஊர்கள் வழியாக விட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மரியபுரம், முட்டிக்காளன்பதி, கிருஷ்ணாபுரம், சந்தைப்பாளையம், மேட்டுவளவு, கே.ஆர். பாளையம் ஆகிய ஊர்கள் மரியபுரத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவிற்குள் அமைந்துள்ளன. இதில் 1 கி. மீ. தொலைவிலுள்ள முட்டிக்காளன்பதி வரை மெட்டல் பாதையாகவும், மீதமுள்ள பாதை மண் பாதையாகவும் உள்ளன. மேலும், தொட்டியவலசு, கே.ஆர். பாளையம் இடையே உடைந்த பாலம் உள்ளது. எனவே, பயணிகள் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும் மரியபுரம்-குன்னத்தூர் பிரதான சாலையில் இருந்து மேற்படி ஊர்கள் மிக அருகில் அமைந்துள்ளன. தொட்டியவலசு, கே.ஆர். பாளையம் இடையே உள்ள உடைந்த பாலத்தைச் சரி செய்ய குன்னத்தூர் பேரூராட்சி (தேர்வு நிலை) செயல் அலுவலருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.



1998 நவம்பர் 23]

53—

## சேலத்திற்குக் கிராமங்கள் வழியாகப் பேருந்து இயக்குதல்

**வினா 14721—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, தாராபுரம் பஞ்சாயத்திலிருந்து சேலம் வரை செல்ல அரசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எடப்பாடியிலிருந்து சேலம் (வழி) தாராபுரம், புதுப்பாளையம், சமுத்திரம், பனிக்கனூர், சின்னம்பம்பட்டி, தாரமங்கலம் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி-சேலம் (வழி) தாராபுரம், புதுப்பாளையம், சமுத்திரம், பனிக்கனூர், சின்னப்பம்பட்டி, இளம்பிள்ளை, சித்தர்கோவில் வழித்தடத்தில் 22-4-1998 முதல் ஒரு பேருந்து மூலம் இரு நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

54—

## கோபிச்செட்டிபாளையம் செல்ல பேருந்து

**வினா 14728—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து புதிய வழித் தடத்தின் வழியாக எடப்பாடி, தேவூர், கொமராபாளையம், பவானி, ஜம்பை,

ஆப்பக்கூடல், பெருந்தளையூர், பி. மேட்டுப்பாளையம், கவுந்தப்பாடி வழியாக கோபிச்செட்டிபாளையம் செல்ல பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடி-கோபிசெட்டிபாளையம் (வழி) அந்தியூர் தடத்தில் ஏற்கெனவே இரண்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவை எடப்பாடியிலிருந்து கோபி செல்லும் பயணிகளின் தேவையை நிறைவு செய்து வருகின்றன. எடப்பாடியில் இருந்து பவானி சென்று அங்கிருந்து கோபி செல்ல பகுதி வாரியாக போதுமான பேருந்து வசதி உள்ளதால், ஆப்பக்கூடல், கவுந்தப்பாடி வழியாக எடப்பாடியிலிருந்து கோபிசெட்டிபாளையத்திற்கு பேருந்து இயக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**55—**

### மேட்டூருக்கு செல்வதற்கு பேருந்து வசதி

**வினா 14731—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக நாமக்கல்லிலிருந்து சங்ககிரி, தங்காயூர், கொங்கணாபுரம், கோரணம்பட்டி, கோணசமுத்திரம், புதுப்பாளையம், சமுத்திரம், ஜலகண்டாபுரம் வழியாக மேட்டூர் செல்லும் பேருந்து நிறுத்தப்பட்டு உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த வழித்தடத்தில் பேருந்து எப்போது இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல்லிலிருந்து-சங்ககிரி, தங்காயூர்,



கொங்கணாபுரம், கோரணம்பட்டி, கோணசமுத்திரம், புதுப்பாளையம், சமுத்திரம், ஜலகண்டாபுரம் வழியாக மேட்டூர் செல்லும் வழித்தடமானது கிராமப்புறங்கள் வழியாகச் செல்லும் சுற்று வழித்தடமானதால் நாமக்கல்லிலிருந்து மேட்டூர் செல்லும் நேர்வழிப் பயணிகள் இவ்வழிதடப் பேருந்தில் பயணம் செய்வதில்லை. குறுந்தொலைவுப் பயணிகளும் இப்பேருந்தை எதிர்பார்த்த அளவு பயன்படுத்தவில்லை. எனவே, இப்பேருந்து நிறுத்தப்பட்டது. இந்த வழித்தடத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு பகுதியிலும் போதுமான அளவு பேருந்து வசதி உள்ளதால், நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கும் திட்டம் எதுவும் இல்லை.

**56—**

### பேருந்து வசதி செய்தல்

**வினா 15003—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதியில் அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்து தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1981 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, 1000 மக்கள்தொகை கொண்ட தாரமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்கும் அரசுப் பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. தவிரவும், சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரையுடன் பெறப்படும் பொது மக்களின் மனுக்களையும் பரிசீலனை செய்து, அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதே நடைமுறைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**57—**

### ஓமலூருக்குச் செல்வதற்குப் பேருந்து வசதி

**வினா 15208—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் மெயின் ரோட்டிலிருந்து கருக்கல்வாடி, முத்தநாயக்கன்பட்டி வழியாக ஓமலூர் செல்ல நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ள தடத்தில் ஏற்கெனவே தடம் எண் 86-ன் மூலம் தினசரி 4 நடைகள் பேருந்து வசதியுள்ளது. அதுவே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவையினை நிறைவு செய்வதாக உள்ளதால், கோரிக்கையில் கேட்டுள்ளவாறு மற்றொரு நகரப் பேருந்து இயக்கும் கருத்துரு இல்லை.

**58—**

**பணிமனைக் கட்டடம் கட்டுதல்**

**வினா 15570—திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூரில் தமிழ்நாடு அரசப் போக்குவரத்துப் பணிமனை கட்டடம் எப்போது கட்டப்படும்?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

போளூரில் பணிமனை கட்டுவதற்காக 4.77 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதில் முதற்கட்டமாக ரூ.9.00 இலட்சம் செலவில் பேருந்துப் பராமரிப்புக் கூடமும், ரூ.2.00 இலட்சம் செலவில் தடுப்பு வேலியும் அமைக்க, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, நிதி நெருக்கடி காரணமாக இந்நிதியாண்டில் தடுப்பு வேலி அமைப்புப் பணி மட்டும் நிறைவேற்றப்படுகிறது. எஞ்சியுள்ள பணிகள் வரும் ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.





**59—**

**ஏலகிரியிலிருந்து சென்னைக்குப் புதிய பேருந்து**

**வினா 17192—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையிலிருந்து சென்னைக்குப் புதிய பேருந்து விட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது முதல் இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஏலகிரியிலிருந்து சென்னைக்குப் புதியதாகப் பேருந்து இயக்கும் செயல் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**60—**

**புதிய பேருந்துகள் இயக்குதல்**

**வினா 17197—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு போக்குவரத்துக் கழக கிளைப் பணிமனையிலுள்ள மிகவும் பழுதடைந்துள்ள வண்டிகளுக்குப் பதிலாக புதிய வண்டிகள் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசப் போக்குவரத்துக் கழகக் கிளைப் பணிமனையில் உள்ள மிகவும் பழுதடைந்துள்ள வண்டிகளுக்குப் பதிலாக, புதிய வண்டிகள் விட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1998 நவம்பர் 23

61—

### பள்ளிநேர நடைகளாகப் பேருந்துகள் இயக்குதல்

**வினா 17200—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் வசதியைக் கருதி பள்ளி நேரத்திற்குத் தக்கபடி, பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது பூலாம்பட்டிக்கு மாணவர்களின் வசதியைக் கருதிப் பள்ளிநேர நடைகளாகக் கீழ்க்கண்டவாறு நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன:

1. தடம் எண் 11இ

| எடப்பாடி | | பூலாம்பட்டி | |
|---|---|---|---|
| (வழி) பில்லுக்குறிச்சி | | | |
| சேர். | புறப். | சேர். | புறப். |
| - | 08.30 | 08.55 | - |
| 16.50 | - | - | 16.25 |

2. தடம் எண் 6

| எடப்பாடி | | சித்தூர் | | பூலாம்பட்டி | |
|---|---|---|---|---|---|
| சேர். | புறப். | சேர். | புறப். | சேர். | புறப். |
| - | 08.20 | - | 08.45 | 09.10 | - |
| 18.00 | - | 17.45 | - | - | 17.15 |



1998 நவம்பர் 23]

3. தடம் எண் 11

| பூலாம்பட்டி | | மேட்டூர் | |
|---|---|---|---|
| சேர். | புறப். | சேர். | புறப். |
| 08.40 | - | - | 07.45 |
| - | 16.30 | 17.30 | - |

மேற்கண்டவாறு தற்போது இயக்கப்படும் பேருந்து வசதியே பூலாம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் போதுமானதாக உள்ளது.

62—

### திருப்பத்தூரிலிருந்து ஏலகிரிக்குப் புதிய பேருந்து

**வினா 17350—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலிருந்து ஏலகிரி மலைக்கு புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூரிலிருந்து ஏலகிரி மலைக்கு ஏற்கெனவே இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

63—

### மேம்பாலம் அமைத்தல்

**வினா 5008—திரு. சி. கோபு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, வெட்டுவானம்-சலாத்திப்பேட்டை சாலையின் குறுக்கே காணாற்றின் மீது மேம்பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலமானது நெடுஞ்சாலைத் துறையினால் இதர மாவட்ட சாலையாக பராமரிக்கப்பட்டு வரும் ஓதியத்தூர் பிரிவு சாலையில் கி.மீ. 1/42-ல் குறுக்கிடும் ஓடையின் குறுக்கே கட்டப்பட வேண்டிய பாலமாகும். இப்பாலப் பணியானது அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை. எனினும் எதிர்வரும் ஆண்டுகளில் நபார்டு திட்டத்தின்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**64—**

**சாலை சீரமைத்தல்**

**வினா 8487—திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதியில் உள்ள, கோவில்பட்டியிலிருந்து மீனாட்சிபுரம் வழி- அய்யாக்கோட்டையூர் சாலை, கடலையூர்-மீனாட்சிபுரம் சாலையிலிருந்து மலைப்பட்டி, குமாரரெட்டியபுரம் வழியாக எட்டயபுரம்-அருப்புக்கோட்டை சாலை வரையுள்ள சாலை, எட்டயபுரம்-கடலையூர் சாலை, கோவில்பட்டி-ஊத்துப்பட்டி சாலை, கோவில்பட்டி-பசுவந்தனை சாலை, கோவில்பட்டி (திட்டங்குளத்திலிருந்து) ஈரால் சாலை, எட்டயபுரம்-ஈராச்சி சாலை ஆகியவற்றைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் அடங்கிய ஏழு சாலைத் தொகுதிக்குட்பட்ட பதினைந்து இதர மாவட்டச் சாலைகளைச் சீரமைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கோவில்பட்டியில் நான்கு ஒன்றியச் சாலைகளும் தற்பொழுது நல்ல நிலையில் உள்ளன. சட்டமன்ற வினாவில் கோரப்பட்டுள்ள ஏழு சாலைத் தொகுதிகளின் வாரியாக



நெடுஞ்சாலைத் துறையின் இதர மாவட்டச் சாலைகளின் பெயர்கள் தற்போதைய நிலைகள் மற்றும் கோவில்பட்டி ஒன்றியச் சாலைகளின் பெயர்கள், தற்போதைய நிலை ஆகியன வருமாறு:-

1. கோவில்பட்டியிலிருந்து மீனாட்சிபுரம் (வழி) அய்யாக்கோட்டையூர் சாலை:

அ. கோவில்பட்டி-கடலையூர் சாலை கி.மீ. 0/0 -9/6 இந்த அரசு இதர மாவட்டச் சாலை மிகவும் பழுதடைந்த கி.மீ. 8/2 - 9/4 வரையுள்ள பகுதி, 1996-97 ஆம் ஆண்டுக்கான நிதியின்கீழ் காலமுறை புதுப்பித்தல் செய்யப்பட்டும், கி.மீ. 6/0, 7/0 வரையுள்ள பகுதி 1997-98 ஆம் ஆண்டுக்கான நிதியின்கீழ் காலமுறை புதுப்பித்தல் பணி நடைபெற்றும் வருகிறது. தார்த்தளம் புதுப்பிக்கும் இப்பணி விரைவில் முடிக்கப்பட்டுவிடும். கி.மீ. 0/0 - 6/0. 7/0 - 8/2 மற்றும் 9/4 - 6 ஆகிய மீதமுள்ள தார்த்தளம் பகுதிகள் தார் நொடி போடப்பட்டு போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஆ. கடலையூர்-முத்தலாபுரம் சாலை கி.மீ. 0/9 -6/2 இந்த அரசு இதர மாவட்டச் சாலையில் கி.மீ. 0/0 -1/0 வரை ரூபாய் 2.23 இலட்சம் செலவில் தனிப் பழுதுபார்க்க, மதிப்பீடுகள் ஒப்பளிக்கப்பட்டு உள்ளன. இதற்கான ஒப்பந்தம் கொடுக்கப்பட்டு, பணி விரைவில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள கி.மீ. 1/0 - 2/0 வரை 1994-95 ஆம் ஆண்டிலும், கி.மீ. 3/0 - 2/0 வரை 1991-92 ஆம் ஆண்டிலும், கி.மீ. 5/0 - 6/2 வரை 1993-94 ஆம் ஆண்டிலும் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இச்சாலையில் நொடிகள் போடப்பட்டு போக்குவரத்து தடையுறாமல் நடைபெற்று வருகிறது.

இ. மீனாட்சிபுரம்-வெங்கடாசலபுரம் சாலை கி.மீ. 0/0 - 1/2 இந்த அரசு இதர மாவட்டச் சாலையானது 1997-98 ஆம் ஆண்டில் தனிப் பழுதுபார்த்தல் திட்டத்தின்கீழ் ரூ.2.70 இலட்சம் செலவில் தற்போது பணி முடிவுற்றுள்ளது.

ஈ. வெங்கடாசலபுரம்-அய்யாக்கோட்டையூர்-உப்பத்தூர் சாலை கி.மீ. 0/0 - 2/2 இந்த அரசு இதர மாவட்டச்சாலையின் தார் தளம் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப வரும் நிதியாண்டில் புதுப்பிக்கப்படும். இருப்பினும் தற்போது நொடிகள் போடப்பட்டு போக்குவரத்திற்கேற்ற முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

[1998 நவம்பர் 23

2. சடலையூர்-மீனாட்சிபுரம் சாலையில் இருந்து மலைப்பட்டி, குமாரரெட்டியாபுரம் வழியாக எட்டயபுரம்- அருப்புக்கோட்டை சாலை வரையுள்ள சாலை :

அ. எட்டயபுரம்-மீனாட்சிபுரம் (வழி) மலைப்பட்டி-குமாரரெட்டியாபுரம் சாலை கி.மீ. 8/4 - 11/6 இந்த அரசு இதர மாவட்டச் சாலையின் தார்த்தளப் பரப்பு, நிதியொதுக்கீட்டிற்கேற்ப வரும் நிதியாண்டில் புதுப்பிக்கப்படும். இருப்பினும் தற்போது தார் நொடிகள் போடப்பட்டு போக்குவரத்திற்கேற்ற முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

ஆ. சிந்தாரலக்கரை-மீனாட்சிபுரம் (வழி) குமாரரெட்டியாபுரம் சாலை கி.மீ. 0/0 - 4/8 இந்த அரசு இதர மாவட்டச் சாலையின் தார்த்தளம் வரும் ஆண்டுகளில் புதுப்பிக்க வழிவகைகள் ஆய்வு செய்யப்படும். இருப்பினும் தற்போது தார் நொடிகள் போடப்பட்டு போக்குவரத்திற்கேற்ற முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

3. எட்டயபுரம் - சடலையூர் சாலை:

இந்த அரசு இதர மாவட்டச் சாலையின் சரியான பெயர் சடலையூர்-எட்டயபுரம் சாலை கி.மீ. 0/0 - 9/0 என்பதாகும். இதில் கி.மீ. 0/0 - 1/0, 8/0 - 9/0 ஆகிய பகுதிகள் 1996-97 ஆம் ஆண்டிலும் தனிப் பழுதுபார்த்தலின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டிலும் தனிப் பழுதுபார்த்தலின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 1/0 - 9/0 மற்றும் 6/0 மற்றும் 8/0 ஆகியவற்றை நிதி ஆதாரத்தைப் பொறுத்து சீர்செய்யத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது நொடிகள் போடப்பட்டு போக்குவரத்திற்கேற்ற முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

4. கோவில்பட்டி-ஊத்துப்பட்டி சாலை:

இந்த அரசு இதர மாவட்டச் சாலையின் பெயர் கோவில்பட்டி-குருமலை (வழி) கார்த்திகைப்பட்டி சாலை கி.மீ. 0/0 - 10/8 என்பதாகும். இதில் கி.மீ. 0/0 - 1/0 வரையுள்ள பகுதி 1996-97 லும் கி.மீ. 2/0 - 4/0 வரையுள்ள பகுதி 1991-92 லும், கி.மீ. 5/0-9/0 வரையுள்ள பகுதி 1992-93 லும் மேம்படுத்தப்பட்டு நல்ல நிலையில் உள்ளன. மீதமுள்ள கி.மீ. 1/0 - 2/0, 4/0 - 5/0 மற்றும் கி.மீ. 9/9 - 10/8 ஆகிய பகுதிகள் மேம்படுத்தப்படும். இருப்பினும் இச்சாலையில் தேவையான இடங்களில்



1998 நவம்பர் 23]

நொடிகள் போடப்பட்டு போக்குவரத்திற்கேற்ற முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

5. கோவில்பட்டி-பமந்தனா சாலை கி.மீ. 0/0-22/8.

இந்த இதர மாவட்டச் சாலையில் கி.மீ.1/4 - 2/8 வரை தேசிய வேளாண்மை வளர்ச்சி வங்கி (நபார்டு) திட்டத்தின்கீழ் மேம்படுத்தும் நடவடிக்கை, தற்போது பணி செயலாக்கம் பெற்றுள்ளது. இதில் கி.மீ. 3/0 - 4/0, 5/0 - 6/0 ஆகிய பகுதிகள் 1994-95 ஆம் ஆண்டும், கி.மீ. 6/6 - 8/0, 15/0 - 17/0, 19/0 - 20/0 ஆகிய பகுதிகள் 1995-96 ஆம் ஆண்டும், கி.மீ. 4/0 - 5/0, 9/0 - 12/0, 16/0 - 17/0, 19/9 - 20/0 ஆகிய பகுதிகள் 1991-92 ஆம் ஆண்டும், கி.மீ. 0/0 - 1/4, 12/0 - 14/0, 18/0 - 20/0, 20/0 - 22/0 ஆகிய பகுதிகள் 1993-94 ஆம் ஆண்டும் மேம்பாடு செய்யப்பட்டு உள்ளன. தற்போது நொடிகள் போடப்பட்டு நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

6. கோவில்பட்டி-(திட்டங்குளத்திலிருந்து ஈரால் சாலை)

அ. கோவில்பட்டி-கொடுக்காம்பாறை (வழி) விஜயாபுரி சாலை கி.மீ. 0/0 - 4/9 இந்த இதர மாவட்டச் சாலையில், கி.மீ. 0/0 - 1/0 வரை 1991-92 ஆம் ஆண்டும், கி.மீ. 1/6 - 9/9 வரை 1993-94 ஆம் ஆண்டிலும் மேம்படுத்தப்பட்டு உள்ளது. மீதமுள்ள 1/0 - 6 வரையுள்ள பகுதியும், மற்ற சாலை பகுதிகளும் ஒதுக்கீட்டிற்கேற்ப இனிவரும் நிதியாண்டில் படிப்படியாகச் சீரமைக்கப்படும்.

ஆ. கொடுக்காம்பாறை-கசவற்குன்று சாலை கி.மீ. 0/0 - 3/8 இந்த அரசு இதர மாவட்டச் சாலை கி.மீ. 0/0 - 2/0 வரை 1996-97 ஆம் ஆண்டிற்காக தனிப்பழுது பார்த்தலின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள கி.மீ. 2/0 - 3/8 வரை மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இ. சுரைக்காய்பட்டி-ஈராச்சி சாலை முதல் கசவன்குன்று சாலை, கி.மீ. 0/0 - 1/2 கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த இச்சாலையின் தார் தளம் நல்ல நிலையில் உள்ளது.

ஈ. கசவன்குன்று-ஈராச்சி சாலை கி.மீ. 0/0 - 2/6 இந்த இதர மாவட்டச் சாலை தற்போது நல்ல நிலையில் உள்ளது.

உ. கசவன்குன்று-வாலம்பட்டி சாலை கி.மீ.0/0 - 5/0 இந்த இதர மாவட்டச் சாலையானது வரும் நிதியாண்டின் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப

படிப்படியாக எடுத்துச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊ. செமப்புதூர்-வாலம்பட்டி சாலை கி.மீ. 5/0 - 8/4 கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த இச்சாலையின் தளம் நல்ல நிலையில் உள்ளது.

எ. கீழ ஈரால்-வாலம்பட்டி சாலை கி.மீ. 0/0 - 2/0 இந்த இதர மாவட்டச் சாலையின் தார் தளம் 1996-97 ஆம் ஆண்டிற்கான தனிப் பழுது பார்த்தலின்கீழ் மேம்படுத்தப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

7. எட்டயபுரம்-ஈராச்சி சாலை

அ. எட்டையாபுரம்-சுரைக்காய்ப்பட்டி சாலை கி.மீ. 0/0 - 4/2

ஆ. சுரைக்காய்ப்பட்டி-ஈராச்சி சாலை கி.மீ. 0/0 - 5/2

இவ்விரு சாலைகளும் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தவை. இவற்றின் தார் தளம் தற்போது நல்ல நிலையில் உள்ளது.

65—

### கிராமக் கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம்

**வினா 19638—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1997-98 ஆம் ஆண்டில் கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற கிராமப் பூசாரிகள் எவ்வளவு பேர் குறைந்தபட்சம் ஓய்வூதியம் பெற்றனர்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பேர்?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகக் கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பூசாரிகளில் 1997-98 ஆம் ஆண்டில் 622 கிராமக் கோயில் பூசாரிகளுக்கு ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்க அனுமதிக்கப்பட்டு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.





(ஆ) சேலம் மாவட்டத்தில் 9 கிராமக் கோயில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

66—

### நியாய விலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்

**வினா 16339—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் நியாய விலைக் கடைகள் எத்தனை?

(ஆ) இவைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 52 நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகின்றன.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடை கட்ட மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பகுதியைச் செலுத்திட இசைவு தெரிவிக்கும் சங்கங்களுக்கு கட்டடம் கட்டிக் கொடுக்க மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை முன்வந்துள்ளதைத் தெரிவித்து கூட்டுறவு சங்கங்களின் இசைவு கோரப்பட்டுள்ளது. சங்கங்களிடமிருந்து கோரிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அக்கோரிக்கையை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பி கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும்.

67—

### புதிய நியாய விலைக் கடை கட்டுதல்

**வினா 17216—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட கோணகாபாடி ஊராட்சிக்குட்பட்ட தொட்டியனூரில் புதிய நியாய விலைக் கடை கட்ட அரசு உதவுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட, கோணகாபாடி ஊராட்சிக்குட்பட்ட தொட்டியனூரில் புதிய நியாய விலைக் கடை கட்ட இந்நிதியாண்டில் ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. கோணகாபாடி நியாய விலைக் கடையானது வங்கியின் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

68—

**புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டுதல்**

**வினா 17219—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம் புக்கப்பட்டியிலுள்ள பள்ளக்காடு, சூரியனூர், மல்லியகுந்தம் ஆகிய இடங்களுக்கு புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட பள்ளக்காடு மற்றும் மல்லியகுந்தம் நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் இல்லை. மேற்படி நியாய விலைக் கடைகளுக்கு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கு தொகையை நியாய விலைக் கடையை நடத்தும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செலுத்தும் பட்சத்தில் கட்டடம் கட்டித்தர இயலும். மேலும் சூரியனூர் பகுதிநேர நியாய விலைக்கடை என்பதால் இலவசக் கட்டடத்தில் செயல்படுகிறது.

(ஆ) வினா எழவில்லை.





69—

**முத்திரை புதுப்பிக்கும் அலுவலகம் அமைத்தல்**

**வினா 15951—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

சோழவந்தான் தொகுதியில், வியாபாரிகளின் வசதிக்காக வாடிப்பட்டியில் முத்திரை சீல் புதுப்பிக்கும் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

குறைந்தபட்சம் 2,000 வணிகர்கள் இருக்கும் பகுதியில் வியாபாரிகள் வசதிக்காக முத்திரை புதுப்பிக்கும் அலுவலகம் அமைக்கப்படுகின்றது. சோழவந்தான் தொகுதியில் அமைந்துள்ள வாடிப்பட்டி என்ற ஊரில் எடை அளவுகள் கொண்டு வியாபாரம் செய்யும் கடை நிறுவனங்கள் 157 மட்டுமே உள்ளன. இதுவும் தவிர சோழவந்தான் தொகுதியை உள்ளடக்கிய இந்த வாடிப்பட்டி கிராமத்தையும் சேர்த்து மொத்தம் 48 கிராமங்களே உள்ளன. மேற்படி 48 கிராமங்களிலும் உள்ள எடை அளவுகள் பயன்படுத்தும் வர்த்தக நிறுவனங்களின் எண்ணிக்கை 402 மட்டுமே ஆகும். எனவே, முத்திரைப் பணிக்கேற்றாற்போல் வணிக நிறுவனங்கள் வாடிப்பட்டியில் இல்லாததால், அங்கு முத்திரை புதுப்பிக்கும் அலுவலகம் அமைக்க தற்போது இயலாது.

70—

**நீதிமன்றக் கட்டடங்கள் சகல வசதிகளுடன் கட்டுதல்**

**வினா 18000—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டும் போது நீதிபதிகளின் தேவைக்கேற்ப, நவீன கழிப்பிட வசதியுடன் தனி அறை,

வழக்கறிஞர்களுக்கு கழிப்பறை வசதியுடன் ஓய்வு அறை, பொதுமக்கள் ஓய்வு வளாகம் முதலிய வசதிகளுடன் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் தற்போது கட்டப்பட்டு வரும் அனைத்து நீதிமன்றக் கட்டடங்களிலும் நீதிபதிகளுக்கான கழிப்பிட வசதியுடன் கூடிய தனி அறை, வழக்கறிஞர்களுக்கான கழிப்பறை வசதியுடன் கூடிய ஓய்வறை மற்றும் பொதுமக்கள் ஓய்வு வளாகம் கியவை கட்டப்பட்டு வருகின்றன.

**71—**

**உற்பத்திக்குரிய பொருட்களை ஒதுக்கீடு செய்தல்**

**வினா 16562—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு மாநில அரசு உற்பத்திக்குரிய பொருட்களை ஒதுக்கீடு செய்தல் சட்டத்தை செயல்படுத்த அமலாக்கப் பிரிவு, சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர், மதுரை ஆகிய இடங்களில் செயல்படுவதைப்போல மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் ஆறு (6) அமலாக்க அலுவலகங்களும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தினைத் திவீரமாக அமலாக்க நடவடிக்கை எடுத்து வருவதால், புதிதாக அலுவலகம் தொடங்கி அமலாக்கப் பணிகளை விரிவுபடுத்தும் நிலை தற்போது எழவில்லை.



**72—**

**கோ-ஆப்டெக்ஸ் கடையை மீண்டும் திறத்தல்**

**வினா 17966—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் மூடப்பட்டுள்ள கோ-ஆப்டெக்ஸ் கடையை மீண்டும் திறக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரத்தில் செயல்பட்டு வந்த கோ-ஆப்டெக்ஸ் கடை தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததாலும், விற்பனையில் முன்னேற்றம் இல்லாததினாலும் மூடப்பட்டுவிட்டது. அதை மீண்டும் திறப்பதற்கு சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**73—**

**கைத்தறித் துணி வியாபாரம்**

**வினா 17971—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கைத்தறித் துணி வகைகளின் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதால், அதைச் சீர்செய்ய அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

நெசவாளர்களின் பிரச்சினைகளை அறிந்த அரசு, அரசாணை எண் 59, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை, நாள் 27-3-1998ன்படி கைத்தறித் துறை அரசு செயலர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், நெசவாளர் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து அக்குழுவும் மாநிலம் முழுவதும்

நெசவாளர்களையும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளையும் நேரில் சந்தித்து பிரச்சினைகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப் பேரவையில் நெசவாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் பல்வேறு சிறப்புச் சலுகைகளை அறிவித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பின்படி, நெசவாளர்கள் பயன்பெறும்வகையில் கீழ்க்கண்ட ஆணைகளை அரசு வெளியிட்டுள்ளது:-

(1) தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும்முகத்தான், 1-4-1998 முதல் ஆறு மாத காலத்திற்கு வழக்கமான சிறப்புத் தள்ளுபடி 20 சதவீதம் தவிர கூடுதலாக 10 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

(2) கோ-ஆப்டெக்ஸ் ரூ.68.11 கோடி அளவிற்கு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உற்பத்தி திட்டம் வழங்கி கொள்முதல் செய்து வருகிறது.

(3) பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மேற்கொள்ளும் மொத்த விற்பனைக்கும் 20 சதவீதம் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

(4) கைத்தறித் துணிகளை அரசுத் துறைகள், நிறுவனங்கள் நேரடியாக கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(5) கைத்தறி ரக ஒதுக்கீட்டுச் சட்டத்தை அமல்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**74—**

**நெசவாளர் சங்கங்களுக்கு மானியம்**

**வினா 19841—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1994-96 ஆம் ஆண்டுகளில் சேலம் மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசு மானியத் தொகை எவ்வளவு?





**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

1994-96 ஆம் ஆண்டுகளில் சேலம் மாவட்டத்திலுள்ள கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசு மானியத் தொகை முழுமையும் பின்வருமாறு வழங்கப்பட்டுவிட்டது.

| | |
|---|---|
| 1994-95 | ரூ.3,60,19,264 |
| 1995-96 | ரூ.3,38,31,620 |
| மொத்தம் | ரூ.6,98,50,884 |

எனவே, சேலம் சங்கத்திற்கு வழங்க வேண்டிய தள்ளுபடி மானியத் தொகை எதுவும் நிலுவையில்லை.

**75—**

**தொழில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக் குழு**

**வினா 19846—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், ஈரோடு மாவட்டங்களில் விசைத்தறித் தொழிலைப் பாதுகாக்க தொழில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவை அந்தந்த மாவட்டங்களில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

சேலம், ஈரோடு மாவட்டங்களில் விசைத்தறித் தொழிலைப் பாதுகாக்க தொழில் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவை அந்தந்த மாவட்டங்களில் அமைக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

76—

**கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்**

**வினா 19860—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பருத்தி விளைச்சல் மிகவும் குறைவாக உள்ளதன் காரணமாக பருத்தித் தேவைக்கு அண்டை மாநிலங்களை நம்பியுள்ளதாலும், பருத்தி அதிகம் விளையும் மாநிலங்களில் அதிக அளவில் நூற்பாலைகள் தொடங்கப்பட்டு நூல் உற்பத்தி செய்யப்பட்டுவருவதாலும், நமது தேவைக்குப் போக எஞ்சியுள்ள நூலை பிற மாநிலங்களில் விற்பனை செய்வது மிகவும் கடினமாக உள்ளதாலும் தற்பொழுது புதிய கூட்டுறவு நூற்பாலைகளைத் தொடங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

**மானிய விலையில் நூல் வழங்குதல்**

**வினா 19870—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரம், இடங்கணசாலை பகுதியில் விசைத்தறித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதால், மானிய விலையில் அரசு நூல் வழங்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

இத்துறையில் செயல்பட்டு வரும் 18 கூட்டுறவு நூற்பாலைகளில்



உற்பத்தி செய்யப்படும் நூலை அரசு நிர்ணயித்த விலையில் இத்துறையின்கீழ் இயங்கி வரும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கி துணி உற்பத்தி செய்து வருகின்றன. எனவே, சேலம் மாவட்டம், எடப்பாடி நகரம், இடங்கணசாலை பகுதியில் உள்ள விசைத்தறியாளர்களுக்கு மானிய விலையில் அரசு நூல் வழங்குவது சாத்தியமில்லை.

78—

**கைத்தறித் துணி வியாபாரத்தை ஊக்குவித்தல்**

**வினா 19872—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் துணி வகைகளில் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் அதனை ஊக்குவிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு, துணிச் சந்தையில் ஏற்பட்ட சுணக்கத்தின் காரணமாக விற்பனை மந்தமடைந்து ரூ.365.00 கோடி அளவிற்கு சரக்குத் தேக்கம் 1998 மார்ச் திங்களில் ஏற்பட்டிருந்த நிலையையும் மற்றும் நெசவாளர்களின் இதர பிரச்சினைகளையும் அறிந்த அரசு, கைத்தறித் துறை அரசுச் செயலர் அவர்களை அமைப்பாளராகக் கொண்டு சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், நெசவாளர் பிரதிநிதிகளை உள்ளடக்கிய உயர் மட்டக் குழுவை நியமித்தது. அக்குழு மாநிலம் முழுவதும், நெசவாளர்களையும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளையும் நேரில் சந்தித்து பிரச்சினைகளை ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, கைத்தறித் துணி வகைகளின் வியாபாரத்தை ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பின்படி கீழ்க்கண்ட ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:-

[1998 நவம்பர் 23

(1) தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் முகத்தான், 1-4-1998 முதல் ஆறு மாத காலத்திற்கு வழக்கமான சிறப்புத் தள்ளுபடி 20 சதவீதத்துடன் கூடுதலாக 10 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

(2) கோ-ஆப்டெக்ஸ் உற்பத்தித் திட்டம் வழங்கி, அதற்கிணங்க ரூ.68.11 கோடி அளவிற்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்கி கொள்முதல் செய்து வருகிறது.

(3) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மேற்கொள்ளும் மொத்த விற்பனைக்கும் 20 சதவீதம் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

(4) கைத்தறித் துணிகளை அரசுத் துறைகள்/ நிறுவனங்கள் நேரடியாக கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(5) கைத்தறி ரக ஒதுக்கீட்டுச் சட்டத்தை அமல்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(6) 23-5-1998 முதல் 17-6-1998 வரை கைத்தறிக் கண்காட்சி நடத்தப்பட்டது.

79—

## டெக்ஸ்டைல் மில் அமைத்தல்

**வினா 19883—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி டெக்ஸ்டைல் மிகுந்த பகுதி என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்கு டெக்ஸ்டைல் மில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

**(அ) ஆம்.**



1998 நவம்பர் 23]

(ஆ) சேலத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை 50,000 கதிர்களுடன் இயங்கி வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூல், தேவைக்கு அதிகமாகவே இருப்பதால் புதிய கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

80—

## தொழிற்கூடங்கள் ஏற்படுத்துதல்

**வினா 20844—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழைகளுக்கு வழங்கும் இலவச சேலைகளுக்குச் சாயம் ஏற்றுதல், பிரிண்ட் செய்தல் போன்ற தொழில்களுக்கு தொழிற்கூடங்களை அரசே ஏற்படுத்த முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இலவச வேட்டி சேலை திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் சேலைகளுக்குச் சாயம் ஏற்றி, பிரிண்ட் செய்ய செய்தித்தாள்கள் மூலம் டெண்டர் விளம்பரம் செய்து தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முறைப்படி குறைந்த விலை கொடுத்துள்ள நிறுவனங்களுக்கு மேற்படி பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன. சேலைகளுக்குச் சாயம் ஏற்றி பிரிண்ட் செய்வது என்பது, ஒரு உப தொழிலோடு மட்டுமில்லாமல் குறைந்த காலத்திற்கு அதாவது, ஓரிரு மாதத்திற்கு மட்டுமே செய்யக்கூடிய தொழிலாகும். மேலும், சாயம் ஏற்றி பிரிண்ட் செய்யும் தொழிலைச் செய்து வந்த பல தனியார் நிறுவனங்கள் நசிந்து தொழில் நடத்த இயலாமல் இருக்கின்றன. குறிப்பிட்ட சில மாதங்களுக்கு மட்டுமே பணி உள்ள நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இத்தொழிலைச் செய்வது இயலாத காரியமாகும். எனவே, இலவச சேலைகளுக்குச் சாயம் ஏற்றி பிரிண்ட் செய்யும் தொழிற் கூடங்களை அரசு ஏற்படுத்த இயலாது.

81—

**சலவைத் துறை அமைத்தல்**

**வினா 13993—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, கொலமஞ்சலூர் அருகே பெண்ணை ஆற்றங்கரையில் சலவைத் துறை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தண்டராம்பட்டு தொகுதி, கொலமஞ்சலூர் அருகே பெண்ணை ஆற்றங்கரையில் சலவைத் துறை அமைப்பது சம்பந்தமான முன்மொழிவுகள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

82—

**கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலமாக மாணவர்கள் விடுதி**

**வினா 14740—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, மன்னாடிமங்கலம் பஞ்சாயத்தில் உள்ள அய்யப்ப நாயக்கன்பட்டிக்கு கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலமாக மாணவர்கள் விடுதி கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சோழவந்தான் தொகுதி, மன்னாடிமங்கலம் பஞ்சாயத்தில் உள்ள அய்யப்ப நாயக்கன்பட்டிக்கு கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலமாக மாணவர்கள் விடுதி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.



83—

**மாணவிகள் விடுதி கட்டித் தருதல்**

**வினா 16252—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் அரசு கலைக் கல்லூரி மாணவிகள் தங்குவதற்கு தனியாக மாணவிகள் விடுதி கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் அரசு கலைக் கல்லூரி மாணவிகள் தங்குவதற்கு தனியாக மாணவிகள் விடுதி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

84—

**மாணவ, மாணவியருக்கு விடுதிகள் அமைத்தல்**

**வினா 16254—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், திசையன்விளையில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கு விடுதிகள் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், திசையன்விளையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ, மாணவியருக்கு விடுதிகள் அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

## மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 16952— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) எடப்பாடி தொகுதி, சமுத்திரம் அரசு மேல்நிலைப்பள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தனியார் கட்டடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு கட்டடத்தில் இயங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**விடை-**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இயங்கவில்லை. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி இயங்கி வருகிறது. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சமுத்திரம் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

## ஆங்கில வழிக் கல்வி பயில உதவி

**வினா 16953—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல், தர்மபுரி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் ஆங்கில வழிக் கல்வி பயில அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பினருக்கு ஆங்கில வழிக் கல்வி பயில நாமக்கல், தர்மபுரி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் இத்துறை மூலம் 1998-99 ஆம் நிதியாண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை விவரம் பின்வருமாறு:-

ஒதுக்கப்பட்ட தொகை

| மாவட்டம் | பிற்படுத்தப் பட்டோர் | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| நாமக்கல் | 1,48,000 | 50,000 |
| தர்மபுரி | 30,000 | 60,000 |
| சேலம் | 1,40,000 | 78,000 |
| ஈரோடு | 63,000 | 1,30,000 |

மேலும் நிதி ஒதுக்கீடு தேவைப்படின் திருத்திய மதிப்பீட்டிலும், இறுதி திருத்திய மதிப்பீட்டிலும் தேவைப்படும் நிதி ஒதுக்கீடு அளிக்கப்படும்.

87—

## வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 17564—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்த ஏழை மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா முன்னுரிமை அடிப்படையில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

இத்துறையின்கீழ் வறுமைக் கோட்டிற்குக்கீழ் கிராமப்புறங்களில் வாழும், ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மிகாமல் உள்ள, சொந்தமாக நிலமோ, வீட்டுமனையோ இல்லாத மிகவும் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் முன்னேறிய வகுப்பினைச் சேர்ந்த அனைத்து ஏழை மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. இதில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்த ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா முன்னுரிமை அடிப்படையில் வழங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இலவசமாக வீட்டு மனைப் பட்டா கோரி மாவட்ட ஆட்சியரை அணுகுவார்களேயானால் தகுதியின் அடிப்படையில் அனைவருக்கும் இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்க பரிசீலிக்கப்படும்.

88—

### இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா 17572—திரு.ஐ.கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நாமக்கல் மாவட்டத்தில் சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டி எத்தனை பேர் விண்ணப்பித்துள்ளார்கள்?

(ஆ) இதுவரை எத்தனை பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டத்தில் 494 சலவைத் தொழிலாளர்களும், 147 முடிதிருத்துவோர் வகுப்பைச் சேர்ந்தவர்களும் இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டி விண்ணப்பித்துள்ளார்கள்.





(ஆ) இதுவரை 242 சலவைத் தொழிலாளர்களுக்கும், 147 முடிதிருத்துவோருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

89—

### மேல்நிலைப்பள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குக் கட்டடம்

**வினா 17881—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு அரசு கட்டடம் கட்ட ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொங்கணாபுரத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இயங்கவில்லை. மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி இயங்கி வருகிறது. அவ்விடுதிக்கு அரசு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

### பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

**வினா 20523—திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1998 நவம்பர் 23

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) திருமங்கலம் தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் பெண்கள் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**91—**

**மரங்கள் வளர்க்கும் திட்டம்**

**வினா 10913—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதல்வர் பிறந்த தின விழாவை முன்னிட்டும், சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணிக் காத்திடவும் 1997 ஆம் வருடம் 1 கோடி பயன்தரும் மரங்கள் நட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

மரங்கள் வளர்க்கும் திட்டங்கள் ஏற்கெனவே உள்ளதால் ஒரு கோடி பயன்தரும் மரங்களை நடுவதற்கான தனித்திட்டம் ஏதுமில்லை. வனத் துறைத் திட்டப் பணிகளோடு 1997-98 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளான 3-6-1997 அன்று தமிழகத்தின் 29 மாவட்டத் தலைநகரங்கள், புறப்பகுதிகளின் சாலை ஓரங்களில் பல்வகை மரக் கன்றுகளை பொதுமக்கள், பள்ளிக் குழந்தைகள் மூலம் நகரப் பிரமுகர்கள், அலுவலர்கள் முன்னிலையில் நட்டு பசுமைப் புரட்சி விழாவாகக் கொண்டாடப்பட்டுள்ளது.



1998 நவம்பர் 23]

**92—**

**சந்தனக் கட்டை கடத்தியவர்கள் விவரம்**

**வினா 12775—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சந்தனக் கட்டை கடத்தியவர்களில் 1996-97 ஆகஸ்ட் முடிய எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்?

(ஆ) அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட சந்தனக் கட்டைகளின் மதிப்பு என்ன?

(இ) சந்தனக் கட்டைத் திருட்டைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் சந்தனக் கட்டை கடத்தியவர்களில் 1996-97 ஆகஸ்ட் முடிய 1419 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) 330.996 டன்கள் அளவுள்ள ரூ.1120.20 இலட்சம் மதிப்புடையவை.

(இ) சந்தனக் கட்டை கடத்தலைத் தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 408 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டதுடன், 21 வனக் காவல் நிலையங்கள் மற்றும் 11 சுழல் தணிக்கை நிலையங்கள் அமைக்கப்பட்டு, நவீன ரக ஆயுதங்கள் வாங்கவும், கம்பியில்லாத் தொடர்புச் சாதனங்கள் அமைக்கவும், கடத்தல் குறித்து தகவல் தரும் பொதுமக்களுக்கு வெகுமதி வழங்கவும் அனுமதி அளிக்கப்பட்டு, கடத்தல் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சந்தன மரங்கள் வடமாநிலங்களுக்கும் கேரளா மற்றும் பாண்டிச்சேரிக்கும் கடத்தப்படுவதைத் தடுக்க இந்திய வனச் சட்டத்தில் தக்க திருத்தம் கொண்டுவர மத்திய அரசைத் தமிழக அரசு வற்புறுத்தி வருகிறது. வனங்களை மேம்படுத்திப் பாதுகாக்க உள்ளூர் மக்களை இதில் ஈடுபடுத்தும் கூட்டு வன நிர்வாகம் (Joint Forest Management) முறையிலும் சந்தன மரக் கடத்தலைத் தடுப்பதற்கு முயற்சி செய்யப்படுகிறது.

[1998 நவம்பர் 23

93—

### வன அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல்

**வினா 14415—திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலூரில் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கட்டடத்தில் தற்காலிகமாக மாவட்ட வன அலுவலர் அலுவலகம் மற்றும் வனச்சரகர் அலுவலகம் ஆகியவை இயங்குவதால் சத்துவாச்சாரி பகுதியில் அவற்றிற்கு நிரந்திரக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*வேலூரில் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் மாவட்ட வன அலுவலர் அலுவலகம் மற்றும் வனச்சரகர் அலுவலகங்களுக்கு சத்துவாச்சாரி பகுதியில் நிரந்தரக் கட்டடம் கட்டுவது குறித்தான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை*

94—

### சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா 12647—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலம் கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார்பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*இல்லை.*



1998 நவம்பர் 23]

95—

### மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

**வினா 13678—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

96—

### காளை மாடுகள் மற்றும் பசு மாடுகள் வளர்ப்பு

**வினா 14137—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நவீன டிராக்டர் போன்றவைகள் உபயோகப்படுத்தப் படுவதால், மாடுகள் குறைந்து போவதைத் தடுக்க, காளை மாடுகள் மற்றும் பசு மாடுகளை வளர்க்க அரசு ஊக்கமளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இது போன்ற செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், விவசாயிகளுக்குக் காளை மாடுகள் மற்றும் பசு மாடுகளை வளர்த்திட மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமும், மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும், தாட்கோ மூலமும் மானியத்துடன் கூடிய கடனுதவி அளிக்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மக்களுக்கு கிடேரிக் கன்றுகள் வளர்ப்புத் திட்டம் மூலம் கன்றுகள் வளர்க்க மானியம் வழங்கப்படுகிறது. மேலும், ரூ.15 இலட்சம்

[1998 நவம்பர் 23

செலவில் 300 பொலிகாளைகள் இலவசமாக தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

97—

**இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**வினா 13995—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியத்தில் மேல்செட்டிபட்டு, மெய்யூர், பழையனூர், துருவம், காடகமான், கல்லேரி தண்டரை, அண்டம்பள்ளம், நாரையூர் ஆகிய கிராமங்களில் வாழும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட கிராமங்களில் வாழும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கத் தேவையான நில எடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி செங்கம் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

98—

**ஆதிதிராவிடர் நலத் துறையின் பள்ளிகள்**

**வினா 19877—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக இயங்கும் பள்ளிகள் எத்தனை உள்ளன?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலம் மொத்தம் 57 பள்ளிகள் பின்வரும் விவரப்படி இயங்கி வருகின்றன:

| | | |
|---|---|---|
| 1. | அரசு பழங்குடியினர் உண்டுறை ஆரம்பப் பள்ளி | 39 |
| 2. | ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளி | 8 |
| 3. | அரசு பழங்குடியினர் உண்டுறை நடுநிலைப் பள்ளி | 6 |
| 4. | ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளி | 1 |
| 5. | அரசு பழங்குடியினர் உண்டுறை உயர்நிலைப் பள்ளி | 2 |
| 6. | ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி | 1 |
| | மொத்தம் | 57 |

மேலும் சேலம் மாவட்டத்தில் இத்துறையைச் சேர்ந்த மேல்நிலைப் பள்ளிகள் ஏதுமில்லை.

99—

**கோட்டை அகழியில் படகு விடும் திட்டம்**

**வினா 14533—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் கோட்டை அகழியில் சுற்றுலாத் துறை மூலம் படகு விடும் திட்டத்தை அமல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[1998 நவம்பர் 23

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

வேலூர் கோட்டை அகழியில் சுற்றுலாத் துறை மூலம் படகு விடும் திட்டத்தை உடன் அமல்படுத்த இயலாது.

100—

**சிறிய உணவகம் கட்டுதல்**

**வினா 14535—திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூரில் சுற்றுலாத் துறை மூலம் தங்கும் வசதியுடன் கூடிய சிறிய உணவகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

வேலூரில் சுற்றுலாத் துறை மூலம் தங்கும் வசதியுடன் கூடிய சிறிய உணவகம் கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

**(ஐந்தாம் பட்டியல்)**

1—

**வெடிமருந்துத் தொழிற்சாலையின் வெடிபொருட்கள் விற்பனை**

**வினா 10519—திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கொடுங்கையூரில் கடந்த மார்ச் மாதம் பிடிபட்ட வெடிகுண்டு தீவிரவாதிகளுக்கு காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலையில் தயாரித்த வெடி பொருட்கள் விற்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வெடிபொருட்கள் விற்ற அதிகாரிகள்மீது மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?



1998 நவம்பர் 23]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கொடுங்கையூரில் கடந்த மார்ச் மாதம் பிடிபட்ட வெடிகுண்டு தீவிரவாதிகளுக்கு காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலையில் தயாரித்த வெடிபொருட்கள் விற்கப்பட்டதாக தகவல் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2—

**சுரங்கத் தொழிலாளர் பயிற்சிக் கூடம் அமைத்தல்**

**வினா 11405—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலத்தில் சுரங்கத் தொழிலாளர் பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலத்தில் சுரங்கத் தொழிலாளர் பயிற்சிக் கூடம் அமைக்கப் புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் செயற்குறிப்பு ஏதுமில்லை.

3—

**திருப்பூர் நகரில் குற்ற விவரங்கள்**

**வினா 13179—திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் நகரில் கடந்த 6 மாத காலத்தில் கும்பலாகச் சென்று தாக்கும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அப்படி எத்தனை சம்பவங்கள் நடைபெற்றுள்ளன?

(இ) சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனரா?

[1998 நவம்பர் 23

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) திருப்பூர் நகரில் கடந்த ஆறு மாத காலத்தில் கும்பலாகச் சென்று தாக்கும் நிகழ்ச்சிகள் அதிகரிக்கவில்லை.

(ஆ) 01.07.1996 முதல் 31.12.1996

| | |
|---|---|
| வரை பதிவான வழக்குகள் | 13 |
| 01.01.1997 முதல் 30.06.1997 வரை பதிவான வழக்குகள் | 14 |
| 01.07.1997 முதல் 31.12.1997 வரை பதிவான வழக்குகள் | 9 |

(இ) பெரும்பாலான வழக்குகளில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**4—**

## திருக்கோயில்களில் கோபுரக் கலசம்

**வினா 13777—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997 அக்டோபர் வரை எத்தனை திருக்கோயில்களில் கோபுரக் கலசம் களவாடப்பட்டுள்ளது என்று காவல் துறைக்கு புகார் வந்துள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1993-ம் ஆண்டு முதல் அக்டோபர் 1997 வரை திருக்கோயில்களில் 55 கோபுரக் கலச களவுகள் நிகழ்ந்துள்ளன.



1998 நவம்பர் 23]

(ஆ) மாவட்ட ரீதியாக மற்றும் ஆண்டு வாரியாக கோபுரக் கலச வழக்குகளின் விவரம் கீழ்வருமாறு

**அட்டவணை-1**

**மாவட்டவாரியாக**

| எண் | மாவட்டம் | மொத்தம் | நீதிமன்ற விசாரணை | தண்டனை | நிலுவை | விடுதலை | சங்கதியில் பிழையுள்ளவை | கண்டுபிடிக்க இயலாதவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | சென்னை மாநகரம் | 8 | 2 | .. | 1 | .. | 1 | 4 |
| 2. | திருச்சி | 1 | .. | 1 | .. | .. | .. | .. |
| 3. | தருமபுரி | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 4. | வேலூர் | 4 | 1 | .. | .. | .. | .. | 3 |
| 5. | பெரம்பலூர் | 3 | .. | 1 | 1 | 1 | .. | .. |
| 6. | ராமநாதபுரம் | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 7. | திருவாரூர் | 8 | .. | 6 | 1 | 1 | .. | .. |
| 8. | நாகப்பட்டினம் | 1 | .. | .. | 1 | .. | .. | .. |
| 9. | திண்டுக்கல் | 1 | 1 | .. | .. | .. | .. | .. |
| 10. | காஞ்சிபுரம் | 5 | .. | 1 | 2 | 1 | .. | 1 |
| 11. | தேனி | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 12. | கோவை | 1 | .. | .. | .. | .. | .. | 1 |
| 13. | கடலூர் | 10 | .. | 9 | .. | .. | .. | 1 |
| 14. | திருநெல்வேலி நகரம் | 1 | .. | .. | .. | 1 | .. | .. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15. செங்கை கிழக்கு | 2 | 2 | .. | .. | .. | .. | .. |
| 16. சேலம் | 1 | 1 | .. | .. | .. | .. | .. |
| 17. மதுரை நகரம் | 1 | .. | .. | 1 | .. | .. | .. |
| 18 தஞ்சாவூர் | 3 | .. | 1 | .. | 1 | 1 | .. |
| 19. சிவகங்கை | 2 | .. | .. | .. | .. | .. | 2 |
| | 55 | 8 | 19 | 7 | 5 | 2 | 14 |

அட்டவணை-2

**ஆண்டுவாரியான எண்ணிக்கை**

| வருடம் | பதிவானது | நீதிமன்ற விசாரணை | தண்டனை | விசாரணை நிலுவை | விடுதலை | சங்கதியில் பிழையுள்ளவை | கண்டுபிடிக்க முடியாதவை |
|---|---|---|---|---|---|---|---|
| 1993 | 10 | 1 | 4 | 1 | 3 | .. | 1 |
| 1994 | 11 | 3 | 2 | .. | .. | .. | 6 |
| 1995 | 21 | 2 | 8 | 1 | 2 | 1 | 7 |
| 1996 | 9 | 2 | 4 | 2 | .. | 1 | .. |
| 1997 (அக்டோபர்) | 4 | ... | 1 | 3 | .. | .. | .. |
| | 55 | 8 | 19 | 7 | 5 | 2 | 14 |



5—

**தீயணைப்பு நிலையத்திற்கு புதிய ஊர்தி**

**வினா 15086—திரு. டி. மணி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு கிராமத்தில் செயல்படும் தீயணைப்பு நிலையத்தில் உள்ள பழுதடைந்த ஊர்தியை மாற்றி புதிய ஊர்தி வழங்கப்படுமா?

**(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் வழங்கப்படுமா?**

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997-98-ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட 26 தீயணைப்பு நிலையங்களில் கொல்லங்கோடு தீயணைப்பு நிலையமும் ஒன்றாகும். இத்தீயணைப்பு நிலையம் 31-12-1997 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி 26 தீயணைப்பு நிலையங்களுக்கும் நீர்தாங்கி வண்டிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ரூ. 639.60 இலட்சத்திற்கு அரசினரால் நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.300.00 இலட்சத்தை பொது ஈட்டுறுதிக் கழக கடனுதவி மூலம் பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொது ஈட்டுறுதிக் கழகத்திலிருந்து பெறப்பட்ட ரூ. 300.00 இலட்சம் கடன் தொகை மூலம் 13 நீர்தாங்கி ஊர்திகள் சேரன் போக்குவரத்துக் கழகம் மூலம் கட்டுமானம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த 13 ஊர்திகளில் ஒரு ஊர்தி கொல்லங்கோடு தீயணைப்பு நிலையத்திற்கும் வழங்கப்படும்.

6—

**சர்க்கரை ஆலைச் சாலைகள் சீரமைத்தல்**

**வினா 15112—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர், வாடிப்பட்டி ஒன்றியப் பகுதிகளில் உள்ள சர்க்கரை ஆலை ரோடுகளைச் சீரமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1997-98 ஆம் ஆண்டில் தேசியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் அலங்காநல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட 16 கரும்பு சாலை வேலைகள் தனிச்சீர் முறையில் பணிகள் ரூ. 22,99,000-க்கு முடிக்கப்பட்டுள்ளன. வாடிப்பட்டி ஒன்றியப் பகுதிகளில் தனிச்சீர் முறையில் 3 சாலை வேலைப் பணிகள் ரூ. 4,01,000-க்கு முடிக்கப்பட்டுள்ளன. அலங்காநல்லூர் ஒன்றியத்தைச் சார்ந்த ஆலை மெயின் கேட் முதல் ஊமச்சிகுளம் வரை சாலை 'பேட்ச் ஒர்க்' 5 கி.மீ. வரை செய்யப்பட்டு பணி 1997-98-ல் தேசிய கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை ஒப்பந்தம் விட்டு சீரமைப்புப் பணிகளுக்கு ரூ. 28,500 செலவிடப்பட்டுள்ளது.

7—

**முட்டை பவுடர் தயாரிக்க கூட்டுறவு ஆலை**

**வினா 17616— திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல்லில் முட்டை பவுடர் தயாரிக்கும் கூட்டுறவு ஆலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நாமக்கல்லில் முட்டை பவுடர் தயாரிக்கும் கூட்டுறவு ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

8—

**ஸ்நோர்கல் நவீன தீயணைப்பு கருவி வழங்குதல்**

**வினா 18042—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் பலமாடி கட்டடங்கள் தீப்பிடிக்கும் போது 'ஸ்நோர்கல்' போன்ற நவீன தீயணைப்புக் கருவிகள் பயன்பாட்டுக்கு வழங்கப்படுமா?



(ஆ) எந்தெந்த மாநகராட்சியில் இந்தக் கருவி வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள சேலம் தீபணைப்பு நிலையம் பல ஊர்திகளை கொண்ட தீயணைப்பு நிலையமாகும். இத்தீயணைப்பு நிலையத்திற்கென ஒரு நீர்தாங்கி வண்டி, ஒரு தண்ணீர் லாரி, மற்றும் ஒரு நோயாளர் ஊர்தி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவை நல்ல நிலையில் உள்ளன. நவீன மூச்சுக் கருவிகளும் (Breathing Apparatus) நீர்தாங்கி வண்டிக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த ஊர்திகளைக் கொண்டே சேலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் ஏற்படும் தீ விபத்து, மீட்பு அழைப்புகள் மற்றும் நோயாளர் ஊர்தி அழைப்புகளைச் சமாளிக்க இயலும்.

(ஆ) தற்போது சென்னை மாநகராட்சியில் மட்டும் இக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

9—

**முட்டை பவுடர் தயாரித்தல்**

**வினா 18053—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் முட்டை பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அந்தத் தொழிற்சாலைகளில் எத்தனை டன் முட்டை பவுடர் உற்பத்தி செய்யப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் முட்டை பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று உள்ளது.

(ஆ) அந்தத் தொழிற்சாலையில் 21.7.1997 முதல் 30.6.1998 வரை 558 டன் முட்டை பவுடர் தயாரிக்கப்பட்டுள்ளது.

10—

### தீயணைப்பு நிலையங்களுக்கு அரசுக் கட்டடம்

**வினா 18065—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு அரசுக் கட்டடம் இல்லாதவை எத்தனை?

(ஆ) இந்த நிதியாண்டில் எவ்வளவு தீயணைப்பு நிலையங்களுக்கு அரசு கட்டடம் கட்ட உத்தேசித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் 163 தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்ட மத்திய அரசின் நிதியுதவி கோரி திட்ட அறிக்கை அனுப்பப்பெற்றது. ஆனால், தற்போது மத்திய அரசு தனது 3.2.1998 நாளிட்ட கடிதத்தில், மாநில தீயணைப்புத் துறையினை நவீனபடுத்துவதற்கு ஜப்பானிய நிதியுதவிபெறும் வகையில் நிதித் துறைச் செயலகத்தை அனுகியுள்ளதாகவும், இது தொடர்பாக 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையில் நிதியுதவி அளிக்கும் வகையில் திட்ட அறிக்கை கோரும்பொழுது, இம்மாநிலத்தின் தேவையினை அனுப்பி வைக்கலாம் எனவும் அறிவுறுத்தியுள்ளது. இதற்கிடையில் இந்த நிதியாண்டில் ரூ.1.50 கோடி செலவினத்தில் 5 தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

11—

### திருவரங்கம் தீயணைப்பு நிலையத்திற்கு கூடுதல் வசதி

**வினா 18080—திரு. ஜி.கே.மணி:** மாண்புமிகுமுதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

திருச்சி மாவட்டம், திருவரங்கம் தீயணைப்பு நிலையத்தில் தீயணைப்பு வாகனங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கூடுதலாக இரண்டு தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ் ஆகியவற்றை புதியதாக வழங்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருவரங்கம் தீயணைப்பு நிலையத்திலுள்ள நீர்தாங்கி வண்டி டி.எஸ்.பி. 5863, நோயாளர் வண்டி டி.எம்.எம். 5917 ஓடும் நிலையில் இருப்பதால் கூடுதலாக இரண்டு தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ் புதியதாக வழங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

12—

### தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துதல்

**வினா 18107—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணம் ஒன்றியம், திருவோணத்தில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது என்பது அரசின் கொள்கையாகும். திருவோணத்தைச் சுற்றிலும் 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, கந்தர்வக்கோட்டை மற்றும் ஆலங்குடி ஆகிய நான்கு தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், இப்பகுதியில் மக்கள் தொகை குறைவாக உள்ளது. திருவோணத்தில் ஏற்படும் தீ விபத்து நிகழ்வுகளை அருகிலுள்ள நான்கு தீயணைப்பு நிலைய ஊர்திகளைக்கொண்டு சமாளிக்க இயலும் என்பதால் அங்கே புதியதாக தீயணைப்பு நிலையம் ஒன்றினை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

13—

### தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம்

**வினா 18144—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் நகரில் உள்ள தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் 163 தீயணைப்பு நிலையங்களுக்குக் நிரந்தரக் கட்டடங்கள் கட்ட மத்திய அரசின் நிதியுதவி கோரி திட்ட அறிக்கை அனுப்பப்பெற்றது. ஆனால், தற்போது மத்திய அரசு தனது 3.2.1998 நாளிட்ட கடிதத்தில், மாநில தீயணைப்புத் துறையினை நவீனப்படுத்துவதற்கு ஜப்பானிய நிதியுதவிபெறும் வகையில் நிதித் துறைச் செயலகத்தை அணுகியுள்ளதாவும், இது தொடர்பாக 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையில் நிதியுதவி அளிக்கும் வகையில் திட்ட அறிக்கை கோரும்பொழுது, இம்மாநிலத்தின் தேவையினை அனுப்பி வைக்கலாம் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

**14—**

**சர்க்கரை ஆலையில் விடுமுறை**

**வினா 19403—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், மோகனூரில் சேலம் சர்க்கரை ஆலையில் மாநில அரசால் அறிவிக்கப்படும் விடுமுறைகளை அப்படியே பின்பற்ற அரசு உத்தரவிடுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சர்க்கரை ஆலைகள், தொழில் நிறுவனங்கள் ஆதலால் 1947 ஆம் ஆண்டின் தொழில் தகராறுகள் சட்டம் (Industrial Disputes Act, 1947) மற்றும் 1948 ஆம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டத்தின் (Factories Act, 1948) கீழ் அறிவிக்கப்படும் விடுமுறை நாட்களை மட்டுமே பின்பற்ற முடியும். அரசு அறிவிக்கும் விடுமுறைகளை தொழிற்சாலைகள் பின்பற்ற இச்சட்டங்களில் வழிவகை இல்லை. எனவே, அரசு அறிவிக்கும் விடுமுறைகளை மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை அப்படியே பின்பற்ற இயலாது.





**15—**

**தமிழ் வழியில் பயில பொறியியற் கல்லூரிகள்**

**வினா 12397—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பொறியியற் கல்லூரிகளில் தமிழ் வழியில் பயில எத்தனைக் கல்லூரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தமிழ்நாட்டில் பொறியியற் கல்லூரிகளில் தமிழ் வழியில் பயிற்றுவிக்க சென்னை அண்ணா பல்கலைக் கழகம், சென்னை, அழகப்பா பொறியியற் கல்லூரி, காரைக்குடி, தியாகராயர் பொறியியற் கல்லூரி, மதுரை மற்றும் பி.எஸ்.ஜி. காலேஜ் ஆஃப் டெக்னாலஜி, கோவை ஆகிய கல்வி நிறுவனங்கள் முன் வந்தன. அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்திடமிருந்து தமிழ் வழியில் பயிற்றுவிக்க அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. அனுமதி கிடைத்ததும் அது நடைமுறைப்படுத்தப்படும்.

**16—**

**நெசவாளர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பித்தல்**

**வினா 16063—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதியில் நெசவாளர் பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசின் நிதிநிலைமை காரணமாகத் தற்போது அரசு அளவில் கல்வி நிறுவனங்கள் எதுவும் தொடங்குவதில்லை என்றும், ஆனால், அதேசமயம் தனியார் கல்வி அறக்கட்டளைகள் ஏதேனும் சுயநிதி அடிப்படையில் தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க முன்வந்தால், விதிமுறைகளுக்குட்பட்டு, அதற்கு ஒப்புதல் வழங்க அரசு பரிசீலனை செய்யலாம் என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.

[1998 நவம்பர் 23

2. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஆண்டிமடம் தொகுதியில் அரசு நெசவாளர் பயிற்சிக் கல்லூரி திறப்பதற்கான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**17—**

**தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல்**

**வினா 16937—திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளியில் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி அமைந்துள்ள வேலூர் மாவட்டத்தில் தற்போது ஓர் அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் (பாலிடெக்னிக்), ஒரு சுயநிதி பாலிடெக்னிக்கும் இயங்கி வருகின்றன. நிதிநெருக்கடி காரணமாகத் தற்போது அரசு பாலிடெக்னிக் திறப்பதை நிறுத்தியுள்ளது. எனினும், பாலிடெக்னிக் தொடங்க தனியார் முன்வந்தால் அதை அரசு பரிசீலிக்கும்.

**18—**

**விளையாட்டு அரங்கம் அமைத்தல்**

**வினா 16942—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**19—**

**உள்விளையாட்டரங்கம் கட்டுதல்**

**வினா 18978—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்விளையாட்டரங்கம் கட்டப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் உள்விளையாட்டரங்கம் கட்டுவதற்கு இதுநாள்வரை எந்தவொரு கருத்துருவும் பெறப்படவில்லை. தற்போது, விளையாட்டு மைதானங்கள் அமைக்க மைய அரசு மானியம் வழங்கும் 9-வது திட்டம் திருத்தியமைக்கப்பட்டு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி பெறப்படும் கருத்துருக்கள் பரிசீலனை செய்யப்படும் என்றும் மைய அரசு தெரிவித்துள்ளது.

மேற்படி திருத்திய திட்டத்தை மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பள்ளிக் கல்வி இயக்குநர், முதன்மைக் கல்வி அலுவலர்கள், மண்டல உடற்பயிற்சி ஆய்வர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பள்ளிக் கல்வி இயக்குநர், முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆகியவை பள்ளியில் தேவையான இட வசதி இருந்து, உள்விளையாட்டரங்கம் மற்றும் விளையாட்டரங்கம் அமைக்க விரும்பி புதிய திட்டத்தின்படி உரிய வழியாக கருத்துரு அனுப்பினால் மாநில அரசு வழியாக மைய அரசுக்கு அனுப்பி மானியம் பெற்றுத்தர ஆவன செய்யப்படும்.

20—

**உள்விளையாட்டு அரங்கம் கட்டுதல்**

**வினா 19095—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் இன்டோர் விளையாட்டுக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மாவட்டத் தலைநகரங்களில் உள்விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டத்தை அரசு செயலாக்கி வருகிறது. பள்ளிகளில் விளையாட்டு மைதானங்களை மேம்படுத்த மத்திய அரசின் உதவி கோரப்பட்டுள்ளது. பள்ளிகளில் உள்விளையாட்டு அரங்கம் கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

21—

**கைத்தொழில் ஆசிரியர்களுக்குப் பணி கிடைக்கச் செய்தல்**

**வினா 19210—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பயிற்சி முடித்தும் பணி கிடைக்கப்பெறாத கைத்தொழில் ஆசிரியர்களுக்குப் பணி கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசின் நிதித் துறை தலைமையில் 16.12.1992-ல் நடந்த உயர்மட்டக் குழுவின் தீர்மானப்படி உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள உடற்கல்வி ஆசிரியர், ஓவிய ஆசிரியர் பணியிடங்கள் நீங்கலாக பிற சிறப்பு ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்பக் கூடாது எனத் தடை இருந்தது. அரசாணை எண் 132, பள்ளிக் கல்வி துறை, நாள் 27.4.1998-ல் தையல் மற்றும் இசை ஆசிரியர் பணியிடங்களை நிரப்பத் தடை விலக்கிக்கொள்ளப்பட்டது.



தற்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள கைத்தொழில் ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பணி வாய்ப்புப் பெற அரசு ஆவன செய்ய உள்ளது:

1. உடற்கல்வி ஆசிரியர்கள்
2. ஓவிய ஆசிரியர்கள்
3. தையலாசிரியர்கள்
4. இசையாசிரியர்கள்

ஏனைய கைத்தொழிலாசிரியர்கள் நியமனத்திற்குத் தடை தொடர்ந்து அமலில் உள்ளது.

22—

**அரசு மருத்துவமனைக்கு மேல்நிலைத் தொட்டி கட்டுதல்**

**வினா 5833—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு 1998-99 பகுதித் திட்டத்தில் மேல்நிலைத் தொட்டி கட்ட அரசாணை நிலை எண் 470 (சுகாதாரம்) நாள் 20.08.1998-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

23—

**மத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் வசதி**

**வினா 13244—திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

(அ) பர்கூர் தொகுதியில் மத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய அளவிலான மருத்துவர்களோ, அவசர விரைவு ஊர்தியோ இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) போதிய மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் அயல் பணி மூலம் பணிபுரிந்து வருகிறார்கள்.

(ஆ) அவசர விரைவு ஊர்தி வரும் நிதியாண்டில் வழங்க ஆவன செய்யப்படும்.

**24—**

**ஓமலூர் மருத்துவமனைக்குக் கூடுதல் படுக்கை வசதி**

**வினா 16702—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் படுக்கை வசதி தேவைப்படுவதன் அவசியத்தை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 42 படுக்கைகள் கொண்ட ஓமலூர் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் படுக்கை வசதி தேவைப்படுகிற அவசியம் தற்போது இல்லை.



1998 நவம்பர் 23]

**25—**

**மருந்துக் கடை நடத்த கடனுதவி**

**வினா 16762—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மருந்தாளுநர் (D.Pharm.) பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள் மருந்துக் கடை நடத்துவதற்குக் கடன் உதவி கேட்டு அரசிடம் எவ்வளவு விண்ணப்பங்கள் வந்துள்ளன?

(ஆ) அதில் எத்தனை விண்ணப்பங்களுக்குக் கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது?

(இ) இன்னும் எவ்வளவு நபருக்கு வழங்க வேண்டும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மருந்தாளுநர் (D. Pharm.) பட்டயச் சான்றிதழ் பெற்றவர்கள் மருந்துக்கடை நிறுவ வங்கிகள் பண உதவி அளிக்கின்றன. அரசாங்கம் அவர்களுக்கு எந்தவித பண உதவியும் செய்வதில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**26—**

**மேச்சேரி பகுதி நேர மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி**

**வினா 18500—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், மேச்சேரி பகுதி நேர மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாக்கி அங்கு அவசர ஊர்தி (ஆம்புலன்ஸ்), ஊடுகதிர் கருவி (எக்ஸ்-ரே) வசதி, இரத்தப் பரிசோதனை நிலையம், சித்தா பிரிவுக்குத் தனிக் கட்டடம், புதிய படுக்கை வசதி ஆகியவை செய்து தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை.

**27—**

**காலியாகவுள்ள பணியிடம் நிரப்பப்படுதல்**

**வினா 18744—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள பணியிடத்தில் கட்டில் தூக்குபவர் ஒருவரை உடனே நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1-12-1991 நாளிட்ட அரசாணை 1550-ல் ஒரு மருத்துவமனைப் பணியாளர் பணியிடம் பணியிடப் பெயர்ச்சி மூலம் பெண்ணாகரம் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதனை நிரப்ப சாத்தியமில்லை. ஏனெனில், அரசாணை எண் 1364, சுகாதாரம், நாள் 21-12-1992-ல் ஆறு படுக்கைக்கு ஒருவர் எனும் விகிதாச்சாரப்படி காலிப் பணியிடம் நிரப்ப இயலாது. மேலும், உபரிப் பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் நிரப்பிட தற்போது சாத்தியமில்லை.

**28—**

**சலவையாளர் பணியிடம் நிரப்பப்படுதல்**

**வினா 18747—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் நீண்ட காலமாக காலிப் பணியிடமாக உள்ள சலவையாளர் பணியிடத்தில் ஒருவரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

11-12-1991-ல் ஒப்பளிக்கப்பட்ட சலவையாளர் பணியிடம் பணியிடப் பெயர்ச்சி மூலம் நிரப்பிட ஆணை வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உபரிச் சலவையாளர் பணியிடம் இல்லாததால் இந்தக் காலிப் பணியிடம் நிரப்பிட சாத்தியமில்லை.

**29—**

**அலுவலக உதவியாளர் பணியிடம் நிரப்பப்படுதல்**

**வினா 18755—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் நீண்ட காலமாகக் காலிப் பணியிடமாக உள்ள பணியிடத்தில் அலுவலக உதவியாளர் ஒருவரை நடப்பாண்டில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

11-12-1991 நாளிட்ட அரசாணை எண் 1550-ல் பெண்ணாகரம் அரசு மருத்துவமனைக்கு பணியிடப் பெயர்ச்சி மூலம் நிரப்பிட ஓர் அலுவலக உதவியாளர் பணியிடம் ஒப்பளிக்கப்பட்டது. ஆணைப்படி 15 அமைச்சுப் பணியாளர்களுக்கு ஓர் அலுவலக உதவியாளர் பணியிடம் என வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளதால் இம்மருத்துவமனைக்குத் தனியாக அலுவலக உதவியாளர் பணியிடம் அனுமதிக்க விதிகளில் இடமில்லை.

[1998 நவம்பர் 23

30—

**ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர்**

**வினா 18760—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், ஆயங்குடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், ஆயங்குடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

31—

**கிராமச் சாவடி அமைத்தல்**

**வினா 19537—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சிக் கிராம நிருவாக அதிகாரிகளுக்குப் புதிய கிராமச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**



1998 நவம்பர் 23]

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் பேரூராட்சிக் கிராம நிர்வாக அதிகாரிகளுக்குப் புதிய கிராமச் சாவடி அமைத்துத் தரும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

32—

**ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் நிலங்களுக்கு பட்டா**

**வினா 20109—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுக்குச் சொந்தமான தரிசு, மேய்ச்சல், குளம் புறம்போக்கு, சமுதாயப் புறம்போக்கு போன்ற பகுதிகளில் பல ஆண்டு காலமாக வாழ்ந்துவரும் ஏழை, ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர் மக்களுக்கு அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

பொது நலனுக்குத் தேவையில்லாத மற்றும் சமுதாயத் தேவைக்கு என்று ஒதுக்கப்படாத தரிசு நிலங்களை வீட்டுமனை, விவசாயம் மற்றும் இதர பயன்களுக்காக பொது மக்கள் கோரினால் அந்நிலங்கள் ஒப்படை செய்யப்படுகின்றன. ஆனால், மேய்ச்சல், குளம் புறம்போக்கு, சமுதாயப் புறம்போக்கு என்ற வகைபாடு கொண்டுள்ள நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் உண்மையில் ஆட்சேபகரமானவைதானா மற்றும் சமூக நலனுக்கு இந்த நிலங்கள் தேவைதானா என்பது குறித்து ஆய்வு செய்யவும், உரிய நேர்வுகளில் பொதுநலன் கருதி ஒப்படை செய்வது குறித்துப் பரிந்துரை செய்யவும் அரசு ஆணை (நிலை) எண் 865, வருவாய்த் துறை, நாள் 31-8-1996 இல் சிறப்பு ஆணையர் மற்றும் நிலநிர்வாக ஆணையர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையினை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

33—

**ராஜகோபாலபுரம் ஹவுஸிங் யூனிட் சாலைகளைச் சீர்செய்தல்**

**வினா 2000—திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை, ராஜகோபாலபுரம் ஹவுஸிங் யூனிட்டில் பழுதடைந்துள்ள அனைத்துச் சாலைகளையும் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகராட்சிக்குச் சொந்தமான ராஜகோபாலபுர ஹவுஸிங் யூனிட்டில் அடங்கிய பகுதிகளில் 1996-1997 ஆம் ஆண்டில், பத்தாவது நிதிக்குழு ஒதுக்கீட்டில் ரூ. 3.10 இலட்சம் செலவில் இரு சாலைப் பணிகளும், வெள்ள நிவாரணப் பணித் திட்டத்தில் ரூ. 14.15 இலட்சத்தில் 7 சாலைப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. பழுதடைந்த அனைத்துச் சாலைகளும் 1998-99 ஆம் ஆண்டில் சீர் செய்யப்படுமென நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

34—

**நகராட்சி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா 5235—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**



(அ) மற்றும் (ஆ) கூத்தாநல்லூர் நகராட்சிக்கு ஏற்கெனவே சொந்தமாக அலுவலகக் கட்டடம் உள்ளதால், புதிய அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டிய தேவை இல்லை.

35—

**கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா 6718— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வழியோரக் கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் முதலிபாளையம், முருகம்பாளையம் ஊராட்சிப் பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளனவா?

(ஆ) இதன் பணிகள் எப்போது முடிவுறும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில், திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள குடிநீர்த் திட்டத்தில் வழியோரக் கிராமங்களான முதலிபாளையம், முருகம்பாளையம் ஆகியவை சேர்க்கப்பட்டு, பயன்பெறவுள்ளன.

(ஆ) இத்திட்டம் மூன்று ஆண்டுகளுக்குள் முடிவுறும்.

36—

**சாக்கடை வசதி செய்தல்**

**வினா 12855— திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 19-வது வார்டு ஆறுகோம்பை வீதியில் சாக்கடை வசதி செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சாக்கடை வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகராட்சி 19-வது வார்டு ஆறுகோம்பை வீதியில் சாக்கடை வசதி செய்ய மொத்தம் ரூ. 3.20 இலட்சத்திற்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு நகராட்சியால் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

37—

**திருவண்ணாமலை நகர் ஐயங்குளத்தைச் சீர்செய்தல்**

**வினா 13424—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை நகரின் மையத்தில் உள்ள ஐயங்குளம் சீர் கெட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைச் சீர்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை நகரின் மையத்திலுள்ள ஐயங்குளத்தின் சுற்றுப்புறம் தூய்மையாக வைத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி குளத்தைப் பழுதுபார்த்து மேம்பாடு செய்ய 1997-98 ஆம் ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ. 3.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி பணி செயற்பொறியாளர், வேளாண்மைத் துறை (வேளாண்மைப் பொறியியல் பிரிவு) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

38—

**சுந்தரேசசாமி கோயில் மானிய குடிசைப் பகுதியில் வசதிகள் செய்தல்**

**வினா 14420—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வேலூர் நகராட்சி, சுந்தரேசசாமி கோயில் மானிய குடிசைப் பகுதியில் கழிவுநீர் கால்வாய், சாலை, கழிப்பிட வசதி ஆகியவற்றைச் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகர சுந்தரேசசாமி கோயில் பகுதியில் 1996-97 ஆம் ஆண்டு தேசிய குடிசைப் பகுதி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ. 2.00 இலட்சம் செலவில் கால்வாய் கட்டி, சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. அதே திட்டத்தின்கீழ் ரூ.1.50 இலட்சம் செலவில் கழிப்பிட வசதி செய்யப்படுகிறது. நகராட்சிப் பொது நிதியிலிருந்து ரூ.2.00 இலட்சம் செலவில் சிமெண்ட் சாலை மற்றும் கால்வாய் வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.

39—

**மழை சேத நிவாரணப் பணிகள்**

**வினா 15249—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை மற்றும் தென்காசி நகராட்சிப் பகுதிகளில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட சேதத்திற்கு நிவாரணப் பணிகளுக்கென எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) செங்கோட்டை நகராட்சிக்கு ரூ. 10.00 இலட்சம் வெள்ள நிவாரணத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் வெள்ளச் சேத அறிக்கையில் இடம் பெறாத நகராட்சிகளில் ஒன்றான தென்காசி நகராட்சிக்கு வெள்ள நிவாரணத் தொகை ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(ஆ) செங்கோட்டை நகராட்சியில் ஆறு சாலைப் பணிகளும், மூன்று வடிகால் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

40—

**கால்வாயைச் சீரமைத்தல்**

**வினா 11159—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தோப்ப நாயகம் கிராமத்தில் கல்லணை கால்வாயிலிருந்து பிரிந்து சென்று விவசாயத்திற்கு பயன்படும் மணல் மூடியுள்ள 15 ஆம் எண் கால்வாயைச் சீரமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தோப்பநாயகம் கிராமத்தில் கல்லணை கால்வாயிலிருந்து பிரிந்து சென்று விவசாயத்திற்குப் பயன்படும் மணல் மூடியுள்ள மதகு எண் 25ஏ புல வாய்க்கால்கள் சீரமைப்புப் பணி, 1998-99 ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறையினால் பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் மூலம் மேற்கொள்ளப்படும்.

41—

**வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு மையத்திற்குக் கட்டடம்**

**வினா 13770—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு மையத்திற்கு, காலியாக உள்ள நத்தம் புறம்போக்கு இடத்தில் குத்தாலம் ஆர். எஸ். எண் 305/3 இல் சொந்தக் கட்டடம் கட்ட அரசால் அனுமதி வழங்கப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம். பரிசீலனையில் உள்ளது.

42—

**ராகி விதைகளுக்கு மானியம்**

**வினா 14102—திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எச். ஆர். 911 ராகி விதைகளுக்கு மானியம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) அவ்வாறெனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 10 ஆண்டுகளுக்குள் வெளியிடப்பட்ட, அறிவிக்கை செய்யப்பட்ட இரகங்களுக்கு மட்டுமே விதை மானியம் அளிக்க மத்திய அரசின் ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தித் திட்டத்தில் அரசு அனுமதி அளித்துள்ளது. எச்.ஆர். 911 ராகி ரக விதை அறிவிக்கை செய்யப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேல் ஆனபடியால் தற்போது மானியம் வழங்க அனுமதி இல்லை. எனினும், மேற்கண்ட ராகி ரக விதைக்கு மானியம் அளிக்கக் கோரி மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. இசைவு எதிர்பார்க்கப்படுகின்றது.

43—

**தென்னை மரங்களைப் பாதுகாத்தல்**

**வினா 14548—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் வாணியம்பாடி, குடியாத்தம்,

[1998 நவம்பர் 23

திருப்பத்தூர் தாலுகாக்களில் தென்னை மரங்கள் பூச்சியடித்து வெளுத்துப் போவதை அரசு அறியுமா?

(ஆ) அந்தப் பூச்சித் தாக்குதலைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட வட்டாரங்களில் தென்னையில் பூச்சித் தாக்குதல் ஏற்பட்டுள்ளது:

| வ. எண் மற்றும் வட்டாரம் (1) | பூச்சித் தாக்குதல் (2) | பாதிக்கப்பட்ட பரப்பு (எக்டேர்) (3) | பாதித்த கிராமங்கள் (4) |
|---|---|---|---|
| 1. குடியாத்தம் | கருந்தலைப்புழு | 66.2 | 11 |
| 2. கே.வி.குப்பம் | கருந்தலைப்புழு | | |
| | சிகப்புகூன் வண்டு | 30.6 | 47 |
| 3. ஆலங்காயம் | கருந்தலைப்புழு | 50.0 | 5 |
| 4. மானானூர் | கருந்தலைப்புழு | 10.0 | 1 |
| 5. பேர்ணாம்பட்டு | கருந்தலைப்புழு | 10.0 | 1 |
| 6. நாட்ராம்பள்ளி | கருந்தலைப்புழு | 32.0 | 4 |
| | மொத்தம் | 199.0 | 69 |

(ஆ) மேற்கண்ட கிராமங்களில் தென்னை கருந்தலைப்புழு மற்றும் சிகப்புகூன்வண்டு தாக்குதலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன:



1998 நவம்பர் 23]

(1) தண்டோரா மூலம் பூச்சித் தாக்குதல் அறிகுறிகளை அறிவித்து ஒட்டுண்ணிகளைப் பாதிக்கப்பட்ட தோப்புகளில் வெளியிட கேட்டுக்கொள்ளப்பட்டது.

(2) குடியாத்தம், வாணியம்பாடி மற்றும் திருப்பத்தூர் கோட்டங்களில் உள்ள ஒட்டுண்ணி உற்பத்தி நிலையங்களில் ஒட்டுண்ணிகள் உற்பத்தி செய்து பணியாளர் மூலம் வெளியிடப்பட்டது.

(3) தென்னை வேர் மூலம் மோனோகுரோட்டபாஸ் மருந்து இடுதல் முறை குறித்த செயல் விளக்கம் களப் பணியாளர்களால் மாலைக் கூட்டங்களின்போது செய்து காண்பிக்கப்பட்டது.

(4) தென்னையில் கருந்தலைப்புழு கட்டுப்படுத்துதல் குறித்து துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு பாதிப்பு ஏற்பட்ட கிராமங்களில் விவாயிகளுக்கு அளிக்கப்பட்டது.

(5) வேளாண்மை இணை இயக்குநர், வேலூர் அலுவலக தகவல் பிரிவு மூலம் சுவரொட்டிகள் தயாரித்து விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

(6) மேலும், வானொலிச் செய்திகள் மூலம் பயிர் பாதுகாப்பு முறைகள் விளக்கப்பட்டன.

தற்போது பூச்சித் தாக்குதல் பரவலாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

44—

## நெல் உற்பத்திக்கு உதவிகள்

**வினா 16965—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நிர்ணயிக்கப்பட்ட நெல் உற்பத்தி இலக்கு எவ்வளவு?

(ஆ) அந்த இலக்கை அடைய அரசு விவசாயிகளுக்குச் செய்யும் உதவிகளின் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) 1998-99 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நிர்ணயிக்கப்பட்ட அரிசி உற்பத்தி இலக்கு 72.00 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆகும்.

(ஆ) தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டிற்குக் குறியீடாக நிர்ணயிக்கப்பட்ட 72 இலட்சம் டன் அரிசி உற்பத்தி இலக்கினை அடைய கீழ்க்கண்டவாறு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(1) ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்(அரிசி)தின்கீழ் சான்று பெற்ற புதிய நெல் ரக விதைகள் கிலோ ஒன்றுக்கு ரூ.2/- என்ற மானியத்திலும், சான்று பெற்ற வீரிய நெல் விதைகள் கிலோ ஒன்றுக்கு ரூ. 5/- என்ற மானிய அளவிலும் விவசாயிகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் நெல் உற்பத்தி செயல் விளக்கத் தளைகள் அமைத்தும், தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டும், அதிக மகசூல் அடைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் உற்பத்தித் தொழில்நுட்ப செயல் விளக்கத் தளைகள் அமைத்தல், விவசாயிகள் பயிற்சி (இரு பருவங்களில்) ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி, வீரிய ஒட்டு நெல் செயல் விளக்கத் தளைகள், வேளாண் கருவிகள் வழங்குதல், விசை உழுவை வழங்குதல் போன்ற இனங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. இதன் மூலமாக விவசாயிகள் அதிக நெல் மகசூல் எடுப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

மேலும், நெற்பயிர் சாகுபடியில் அதிக உற்பத்தி பெறுவதற்காக தொழில் நுட்பங்களை வரையறுக்க விஞ்ஞானிகள் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் இணைந்து தொழில்நுட்ப உத்திகளை முடிவு செய்து மேற்கொள்ளப்பட உள்ளது.

கிராம அளவில், மாதாந்திர பணிமனைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டபடி, கழனி வாரியாக தேவைக்கேற்ற தொழில்நுட்பங்கள் மாலைக் கூட்டங்கள் மூலமாகவும், தொடர்பு விவசாயிகள் மூலமாகவும் இதர விவசாயிகளுக்கும் சென்றடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

(2) மேலும் எக்டருக்கு சராசரி 7 மெட்ரிக் டன் நெல் உற்பத்தி



அடையும் வகையில், கள அலுவலர்கள் மூலமாக விவசாயிகளுக்குப் பருவத்திற்கேற்ற நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் அளித்தல், சரியான தருணத்தில் தேவைக்கேற்ற தரமான இடு பொருட்களை வழங்குதல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகளை அனைத்து விவசாயிகளிடையே பரவலாக்குவதற்கான விரிவாக்க முறைகள் ஆகியவை சிறப்பான முறையில் செயல்படுத்தப்படவுள்ளன.

45—

**வேளாண்மைப் பொறியியல் மையம் அமைத்தல்**

**வினா 16998—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் ஒரு வேளாண்மை பொறியியல் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:

எடப்பாடி நகரில் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட ஆக்ரோ மையம் அதிக நட்டத்தில் இயங்கி வந்ததால் கலைக்கப்பட்டுவிட்டது. மேலும், சேலம் மாவட்டத்தில் அதிக அளவில் வட்டார மையங்கள், எட்டு உள்ளன. எடப்பாடி தொகுதி மக்கள் தேவைகளை அருகாமையில் உள்ள வட்டார மையங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம். தற்போது எடப்பாடி நகரில் மையம் அமைக்க தேவையான அளவு நிதி வசதிகள் மற்றும் வேலை வாய்ப்புகள் இல்லை.

46—

**கடலூர் மாவட்டத்தில் மல்லிகைப் பூ பயிரிடுதல்**

**வினா 18606—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி தாலுக்காக்களில் மல்லிகைப் பூ எத்தனை ஹெக்டேரில் பயிரிடப்படுகிறது?

(ஆ) அதன் மூலம் எத்தனை டன் மல்லிகைப் பூ அறுவடையாகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுகாவில் 54 ஹெக்டேரிலும், காட்டுமன்னார்குடி தாலுகாவில் 48 ஹெக்டேரிலும் மல்லிகைப் பூ பயிரிடப்படுகிறது.

(ஆ) இதன்மூலம் சிதம்பரம் தாலுகாவில் 432 மெட்ரிக் டன்கள் மல்லிகைப் பூவும், காட்டுமன்னார்குடி தாலுகாவில் 430 மெட்ரிக் டன்கள் மல்லிகைப் பூவும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

47—

**சேலம் மாவட்டத்தில் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை**

**வினா 18619—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் மல்லிகைப் பூவிலிருந்து வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் தற்போது 921 எக்டேரில் மலர் வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. இதிலிருந்து 5065 மெட்ரிக் டன் மலர்கள் உற்பத்தியாகின்றன. இம்மாவட்டத்தில் மல்லிகை, முல்லை, ஜாதிமல்லி, ரோசா, கனகாம்பரம், சாமந்தி, சம்பங்கி போன்ற மலர் வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. வாசனைத் திரவியம் தயாரிக்க அதிக வாசனை உள்ள ஜாதிமல்லி மற்றும் சம்பங்கி போன்ற மலர் வகைகள்தான் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. அப்படிப் பார்க்கும்போது ஜாதிமல்லி சுமார் 8 ஹெக்டேரிலும், சம்பங்கி சுமார் 2 எக்டேரிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. எனவே, இம்மாவட்டத்தில் மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் வாய்ப்பில்லை எனத் தெரிய வருகிறது. மேலும், வேளாண்மைத் துறையில் மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த திட்டம் ஏதும் இல்லை.



48—

**நெல் விதை பண்படுத்தும் நிலையம்**

**வினா 18674—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் நெல் விதை பண்படுத்தும் நிலையத்தைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

49—

**ஏற்காடு சுற்றுலா மலர்க் கண்காட்சி**

**வினா 19930—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு சுற்றுலா மலர்க் கண்காட்சியைக் காண ஆண்டுதோறும எவ்வளவு பேர் வருகிறார்கள் என்ற குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) அதை ஊட்டி மலர்க் கண்காட்சியைப்போல் சிறப்புடையதாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) உள்ளது.

சேலம் மாவட்டம், ஏற்காடு சுற்றுலா மலர்க் கண்காட்சியைக் காண 1995-96-ல் 28,881 நபர்களும், 1997-98 ஆம் ஆண்டு சுமார் 24,441 நபர்களும், 1997-98 ஆம் ஆண்டு 28,488 நபர்களும் வருகை புரிந்துள்ளனர். 1995-96 ஆம் ஆண்டில் 64,484 நபர்களும், 1996-97-ல் 67,879 நபர்களும், 1997-98-ல் 72,740 நபர்களும் வருடம் முழுவதும் வந்து பார்வயிட்டவர்களாவர்.

(ஆ) ஊட்டி மலையின் உயரம் கடல் மட்டத்திலிருந்து 7900 அடி முதல் 8250 அடி வரை உள்ளது. மலர்க் கண்காட்சி ஒவ்வோர் ஆண்டும் மே மாதத்தில் அரசு தாவரவியல் பூங்காவில் நடைபெறுகிறது. இச்சமயத்தில இங்கு அதிகபட்ச வெப்ப நிலையாக 28 செ. கிரேடும் மற்றும் குறைந்தபட்ச வெப்ப நிலை 2 செ. கிரேடும் நிலவுகிறது. ஆண்டுதோறும் ஊட்டி மலர்க் கண்காட்சியைக் காண சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகை புரிகின்றனர். இதுவரை ஊட்டியில் 103 ஆண்டுகளாக மலர்க் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இதற்காக ஆண்டுதோறும் சுமார் 7 இலட்சம் அளவில் அரசு நிதியுதவி கிடைக்கப்பெறுகிறது. ஊட்டியில் சுற்றுலாச் சிறப்பு வாய்ந்த இடங்களாக அரசு தாவரவியல் பூங்கா, தொட்டபெட்டா மலைச் சிகரம், லாம்ப்ஸ் ராக் (Lamps Rock), டால்ப்பின்ஸ் நோஸ் (Dolphin's Nose), குன்னூரில் சிம்ஸ் பூங்கா மற்றும் கோத்தகிரியில் உள்ள குடகுநாடு வியூ பாயிண்ட்(View Point) ஆகியவை அடங்கும். மேலும், தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் கேரளா ஆகியவற்றிலிருந்து சுற்றுலா வரும் பயணிகள் மலர்க் கண்காட்சியினைக் கண்டுகளிக்க வருவதற்கு வசதியாக சாலை வழி இணைப்புகள் ஊட்டியில் உள்ளன. ஏற்காடு மலை கடல் மட்டத்திலிருந்து சுமார் 5000 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இம்மலையில் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக ஏற்காடு ஏரி, லேடீஸ் சீட், பக்கோடா பாயிண்ட், சேர்வராயன் கோயில், இராஜராஜேஸ்வரி கோவில் மற்றும் கிளியூர் நீர்வீழ்ச்சி ஆகியவை உள்ளன. ஆண்டுதோறும் இம்மலைப் பகுதிக்குச் சுற்றுலா பயணிகள் சுமார் 2 இலட்சம் பேர் வருகை புரிகின்றனர். சுற்றுலா பயணிகள் தங்குவதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் மற்றும் உணவு விடுதி, ஸ்டெர்லிங் ரிசார்ட்ஸ் (Sterling Resorts), சேர்வராயன் ஹோட்டல், உறில் வியூ ஹோட்டல் (Hill View Hotel) மற்றும் பல தனியார் தங்கும் விடுதிகள் உள்ளன. இதுவரை 23 மலர்க் கண்காட்சிகள் ஏற்காடு மலையில் நடைபெற்றுள்ளன. இம்மலர்க் கண்காட்சியை நடத்த ஆண்டுதோறும் ரூ.2 இலட்சம் அரசு நிதியுதவி கிடைக்கிறது. ஏற்காட்டில் மலர்க் கண்காட்சி காட்சியை ஊட்டி மலர்க் கண்காட்சி அளவிற்குச் சிறப்பாக நடத்த வேண்டுமானால், சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குரிய போதிய வசதிகள் ஏற்படுத்தப்படுவதுடன் பயனுள்ள ஈர்க்கும் வகையில் கூடுதலான பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட அமைப்புகள் ஏற்படுத்துவது அவசியம். மேலும், அரசு நிதியுதவியை



அதிகப்படுத்துவதன் வாயிலாகவும், ஏற்காட்டில் நடைபெறும் மலர்க் கண்காட்சியை மேலும் சிறப்பாக நடத்த இயலும்.

50—

**சிறு அணைக் கட்டும் திட்டம்**

**வினா 2364—திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பனைமரத்துப்பட்டி தொகுதியில் கன்னிமார்ஓடை, பெரிய கவுண்டாபுரம் நாவலாறு ஆகியவற்றில் சிறு அணைக் கட்டும் திட்டம் நீண்ட காலமாக செயல்படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டங்களை இந்த ஆண்டு செயல்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நிதி இருப்பைப் பொறுத்து பரிசீலனை செய்யப்படும்.

51—

**வாய்க்கால்களை ஆழப்படுத்துதல்**

**வினா 6056—திரு. அ.வ.அப்துல் நாசர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதியிலுள்ள முரட்டு வாய்க்கால், நண்டோடை, சம்போடை வாய்க்கால், மானம்பாத்தான் வாய்க்கால், வெள்ளாறு ராசன் வாய்க்கால் ஆகியவற்றை அகலப்படுத்தி ஆழப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

புவனகிரி தொகுதியிலுள்ள முரட்டு வாய்க்கால், மானம்பாத்தான் வாய்க்கால், வெள்ளாறு ராஜன் வாய்க்கால் ஆகியவற்றை சீரமைக்கும் பணி நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு செயலாக் கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. நண்டோடை, சம்போடை ஆகியவற்றைச் சீரமைக்க இந்த நிதியாண்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**52—**

**ஓய்வு இல்லம் கட்டுதல்**

**வினா 16891—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோலையார்பேட்டை ஒன்றியம், ஏலகிரி மலையில் பொதுப்பணித் துறை மூலம் ஓய்வு இல்லம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**53—**

**மண்டகொளத்தூர் ஏரியைச் செப்பனிடல்**

**வினா 17235—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், மண்டகொளத்தூர் ஏரியை ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் எடுத்துச் செய்யக் கருதியிருக்கிற ஏரிகள் மேம்படுத்தும் திட்டத்தில் திருவள்ளூர், காஞ்சிபுரம், விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலுள்ள ஏரிகள் சேர்க்கப்பட்டுள்ளன. மண்டகொளத்தூர் ஏரி திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்துள்ளது. எனவே, ஜப்பான் நாட்டு நிதியுதவித் திட்டத்தில் இந்த ஏரி சேர்க்கப்படவில்லை.

**54—**

**பேராவூரணி-புதுக்கோட்டைக்குப் பேருந்து**

**வினா 12634—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியிலிருந்து பைங்கால், கீரமங்கலம், கொத்தமங்கலம் வழியாக புதுக்கோட்டைக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பேராவூரணி-புதுக்கோட்டை (வழி) பைங்கால், கீரமங்கலம், கொத்தமங்கலம் தடத்தின் பகுதிகள் அனைத்தும் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளன. பேராவூரணி-கொத்தமங்கலம், கொத்தமங்கலம்-புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் போதிய அளவு போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, இவ்வழித் தடத்தில் புதிதாகப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

**55—**

**அதிகப் பேருந்துகளை இயக்கும் திட்டம்**

**வினா 13518—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அகல இரயில் பாதையாக மாற்றுவதால், போக்குவரத்திற்காக அரியலூர்-செந்துறை-பெண்ணாடம் வழியாக அதிகப் பேருந்துகளை இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர்-பெண்ணாடம் (வழி) செந்துறை, ஆர் எஸ் மாத்தூர், தாமரைப்பூண்டி, செங்கமேடு, ஈச்சங்கோடு சிமெண்ட் ஆலை வழித்தடத்தில் ஒரு பேருந்தின் மூலம் 8 நடைகளும், ஜெயங்கொண்டம்-பெண்ணாடம் (வழி) இரும்புலிக்குறிச்சி, தாமரைப்பூண்டி, செங்கமேடு, ஈச்சங்கோடு சிமெண்ட் ஆலை வழித்தடத்தில் மற்றொரு பேருந்தின் மூலம் 6 நடைகளும் இயக்கப்படுகின்றன.

56—

## இரவு நேர நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 15004—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம்-தாரமங்கலம் வழித்தடத்தில் இரவு நேர நகரப் பேருந்து இயக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலத்திற்கு கடைசி இரவு நேரப் பேருந்தாக இயக்கப்படும் 10.30 மணி பேருந்திலேயே பயணிகள் போக்குவரத்து மிகவும் குறைவாக இருப்பதால், தாரமங்கலத்திற்கு இரவு நேர நகரப் பேருந்து இயக்கும் கருத்துரு ஏதுமில்லை. மேலும், அதிகாலை 01.20 மணியிலிருந்து தொடர்ந்து தாரமங்கலம் தடத்தில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் போக்குவரத்து வசதியுள்ளது.



57—

## தாரமங்கலம் தொகுதியில் பேருந்து வசதி

**வினா 15580—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட துட்டம்பட்டி-ஆயாமரத்தூர், அருந்ததியர் தெரு வழியாக லட்சுமாயூர்-சேலம் வரை புதிய பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம்-தாரமங்கலம், பாப்பம்பாடி பிரதான சாலையில் 10 நிமிடத்திற்கொருமுறை நகரப் பேருந்து வசதியுள்ளது. சேலம்-தாரமங்கலம் வரை இயக்கப்படும் தடம் எண் 6-பி யில் லட்சுமாயூருக்கு தினசரி 6 நடைகள் பேருந்து வசதியுள்ளது. அந்நடைகளிலேயே பயணிகள் போக்குவரத்து 40 சதவீதம்தான் உள்ளது. கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ள தடத்தில் லட்சுமாயூரிலிருந்து பைபாஸ் கிராஸ் வரை சுமார் 1.1 கி.மீ. தூர சாலை வண்டி பாதையாகவும், மண் சாலையாகவும் இருபுறமும் முட்புதர்களுடன் உள்ளது. பைபாஸ் கிராசிலிருந்து ஆயாமரத்தூர், அருந்ததியர் தெரு செல்லும் சாலை குண்டும் குழியுமாக பயணிகள் பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை.

மேற்கண்ட காரணங்களினால் கேட்கப்பட்டுள்ள வழித் தடத்தில் புதிய பேருந்து இயக்கும் கருத்துரு எதுவுமில்லை.

58—

## எடப்பாடி-திருப்பூர் பேருந்து இயக்குதல்

**வினா 17910—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி நகரிலிருந்து ஈரோடு வழியாக திருப்பூர் வரை செல்ல அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றை புதிதாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

[1998 நவம்பர் 23

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்து ஈரோடு வழியாக திருப்பூர் செல்ல பகுதி வாரியாக தேவையான அளவு பேருந்து வசதியுள்ளது. மேலும், இத்தடத்தில் ஒரே சமயத்தில் பல பேருந்துகள் இயக்குவதற்கான பயணிகள் போக்குவரத்து இல்லை. எனவே, கேட்கப்பட்ட வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்கும் கருத்துரு தற்சமயம் இல்லை.

**59—**

**எடப்பாடி-ராயவேலூர் பேருந்து இயக்குதல்**

**வினா 17911—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து ராயவேலூர் வரை செல்ல அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகரிலிருந்து சேலம் வழியாக ராயவேலூர் செல்ல பகுதி வாரியாக தேவையான அளவு பேருந்து வசதியுள்ளது. மேலும், இத்தடத்தில் ஒரே சமயத்தில் பல பேருந்துகள் இயக்குவதற்கான பயணிகள் போக்குவரத்து இல்லை. எனவே, கேட்கப்பட்ட வழித்தடத்தில் புதிய பேருந்து இயக்கும் கருத்துரு தற்சமயம் இல்லை.

**60—**

**எடப்பாடி-கோயம்புத்தூர் பேருந்து இயக்குதல்**

**வினா 17915—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரிலிருந்து கோயம்புத்தூர் வரை செல்ல அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றை இயக்க அரசு ஆவன செய்யுமா?



1998 நவம்பர் 23]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்து கோவை செல்ல பகுதி வாரியாக போதுமான பேருந்து வசதியுள்ளது. ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கூடுதல் பேருந்து இயக்கப்படுமளவிற்கு பயணிகள் போக்குவரத்து இல்லை. எனவே, இவ்வழித் தடத்தில் பேருந்து இயக்கும் கருத்துரு இல்லை.

**61—**

**வாளரக்குறிச்சிக்குப் பேருந்து வசதி**

**வினா 17919—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் வட்டம், வாளரக்குறிச்சி கிராம மக்கள் பேருந்து வசதி பெற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அரியலூர் வட்டம், வாளரக்குறிச்சி கிராமம் வழியாக மனகதி வரை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருச்சி மூலம் நகரப் பேருந்து 4 நடைகள் தினந்தோறும் இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழாது.

**62-**

**சாலை விதிகளை மீறிய வழக்குகள்**

**வினா 18266—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் சாலை விதிகளை மீறியவர்கள் எத்தனை பேர் மீது சேலம் மாவட்டத்தில் அரசு வழக்கு பதிவு செய்துள்ளது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் சாலை விதிகளை மீறியோர் மீது வழக்கு பதிவு செய்த விவரம்:

| | |
|---|---|
| 1996-97-ல் | 6,517 |
| 1997-98-ல் | 6,193 |

63—

**விருப்பம்போல் பயணம் செய்ய பயணச் சீட்டுகள்**

**வினா 21077—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் இயங்கும் பேருந்துகளில் விருப்பம் போல் பயணம் செய்யும் பயணச் சீட்டுகளை வழங்க போக்குவரத்துக் கழகம் முடிவு செய்துள்ளது என்பது உண்மையா?

(ஆ) அதே போன்று மற்ற மாநகராட்சிகளிலும் இத்திட்டத்தினை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) விருப்பம்போல் பயணம் செய்யும் பயணச் சீட்டுகள் சென்னை மாநகரில் இயங்கும் பேருந்துகளில் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) அத்தகைய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

64—

**தார்ச்சாலை சீரமைத்தல்**

**வினா 6069—திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தொகுதியில் முந்தல் முதல் போடிமெட்டு வரை உள்ள தார்ச் சாலைகளைச் சீரமைத்து விரிவுபடுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?



விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

முந்தல் முதல் போடிமெட்டு வரை உள்ள சாலை, தேசிய நெடுஞ்சாலை எண் 49 நீட்சியில் கி.மீ. 99/0 முதல் 119/0 வரை உள்ள சாலைப் பகுதியாகும். இப்பகுதியில் கடந்த ஆண்டுகளில் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும் இச்சாலைப் பகுதியினை அகலப்படுத்தி வலுப்படுத்தும் பணியினை 9 வது ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்துச் செயல்படுத்தும் பொருட்டு ரூ.28.50 கோடிக்கான கருத்துரு, தயாரிக்கப்பட்டு 29-6-1998 அன்று மைய அரசின் ஒப்புதலுக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

65—

**வேலூர் பாலாற்றில் பாலம்**

**வினா 14486—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் பாலாற்றில் உள்ள பழைய பாலத்தில் 3 கண்கள் இடிந்து விழுந்து ஓர் ஆண்டிற்கு மேல் ஆகியும் கட்டப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் பாலாற்றில் ஏற்கெனவே அமைந்துள்ள உயர்மட்டப்பாலம் நல்ல நிலையில் உள்ளதாலும், அரசின் நிதிப் பற்றாக்குறை காரணமாகவும் மிகப் பெருந் தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக் காலங்களில் மேற்கொள்ளும் சாத்தியக் கூறுகளோ, அவசர அவசியமோ இல்லை.

66—

## தார்ச்சாலை அமைத்தல்

**வினா 16841—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், ஜமுனா மருதூர் சாலையில் ஒரு கிலோ மீட்டர் தூரம் தார்ச் சாலை அமைக்கப்படாமல் உள்ளதை தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இப்பணி தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

67—

## பக்தர்களுக்குத் தங்கும் விடுதிகள்

**வினா 18813—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குத் தங்கும் விடுதிகள் பழனியிலுள்ளது போல் கட்டி குறைந்த வாடகைக்குக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**





(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலின் வடக்கு ராஜகோபுரத்தின் வலது பக்கம் 4 குடில்கள் உபயதாரர்கள் மூலமாக ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன. இத்திருக்கோயிலின் உட்பகுதியில் வடக்கு ராஜ கோபுரத்தின் இடது பக்கம் அப்பர் இல்லம் என்ற பெயரில் திருக்கோயில் நிதியிலிருந்து எட்டு இரட்டைப் படுக்கை அறைகளும், கிழக்கு ராஜகோபுரத்தின் வலது பக்கம் மதில் சுவரை ஒட்டி அருள்மிகு உண்ணாமுல்லையம்மன் தங்கும் விடுதியும் கட்டப்பட்டுள்ளன. மேலும் சேவார்த்திகள் தங்கும் வசதிக்காக புதிதாக திருக்கோயிலின் வடக்கு ராஜ கோபுரத்தில் இடது பகுதியில் மதில் சுவரை ஒட்டி திருக்கோயில் அனுபவத்தில் உள்ள காலி இடத்தில் ஏறத்தாழ ஐம்பது அறைகள் கொண்ட தங்கும் விடுதி கட்ட உத்தேசிக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விடுதிகளில் உள்ள அறைகளின் பரப்பளவு மற்றும் செய்யப்பட்டுள்ள வசதிகளைப் பொறுத்து நாள் வாடகை ரூ.25 முதல் ரூ.100 வரை வசூலிக்கப்படுகிறது.

68—

## திருவள்ளுவர் பிறந்த நாளை ஆண்டின் தொடக்கமாக அறிவித்தல்

**வினா 20358—டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளுவர் பிறந்த நாளை ஆண்டின் தொடக்கமாக அறிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

அரசு இது பற்றி நல்ல முடிவு எடுக்கும்.

69—

### கூட்டுறவு வங்கிகளின் கட்டடங்களைப் புதுப்பித்தல்

**வினா 9216—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதியில் அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பழைய கட்டடங்களைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பழைய கட்டடங்களைப் பழுதுபார்க்க தஞ்சாவூர் மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் அளவில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. புதிய கிடங்குகள் கட்ட தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவித் திட்டத்தின்கீழ் முன்மொழிவுகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவி பெறும் திட்டத்தின்கீழ் பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் கூனஞ்சேரி, சுவாமிமலை ஆகிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் புதிய கிடங்கு கட்டடம் கட்டும் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. ஆதனூர், அரயபுரம், தேவனாஞ்சேரி ஆகிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கட்டடம் கட்டும் கருத்துரு உள்ளது. மேலும், இன்னம்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு இரும்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சோமேஸ்வரம், அய்யம்பேட்டை, கபிஸ்தலம் ஆகிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கட்டடங்கள் பழுதடைந்துள்ளதால் அவை பழுது பார்க்கப்பட்டு வருகின்றன. கணபதி அக்ரஹாரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் கட்ட அடிமனை வாங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.





70—

### கூட்டுறவு வங்கிகளைச் சீர்ப்படுத்துதல்

**வினா 13261—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியிலுள்ள அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன. அப்படிப்பட்ட வங்கிகளைச் சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியிலுள்ள அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் நஷ்டத்தில் இயங்கிவில்லை. 1996-97 ஆம் ஆண்டில் ஓமலூர் தொகுதியிலுள்ள 30 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், 13 வங்கிகள் ரூ.8.70 இலட்சம் உத்தேச இலாபம் ஈட்டும் என எதிர்பாக்கப்படுகிறது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நஷ்டத்தில் இயங்கினால் அவைகள் நஷ்டத்தில் இயங்குவதற்கான காரணங்களை ஆராய்ந்து அவைகளைச் சீர்ப்படுத்தி இலாபத்தில் செயல்பட வைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும்.

71—

### ஆந்திர அரசிடமிருந்து நெல் வாங்குதல்

**வினா 13630—திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு ஆந்திர அரசிடமிருந்து நெல் வாங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

[1998 நவம்பர் 23

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் கடந்த குறுவை 1997 மற்றும் சம்பா 1998 பருவ காலங்களில் இணைக் கொள்முதல் திட்டத்தில் சுமார் 18 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு ஆந்திர அரசிடமிருந்து கடந்த ஆண்டு நெல் ஏதும் வாங்கவேண்டிய அவசியம் எழவில்லை.

72—

**புதிய நியாய விலைக் கடை கட்டடம் அமைத்தல்**

**வினா 16917—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட அரியாம்பட்டி ஊராட்சியிலுள்ள வெண்ணம்பட்டி மற்றும் எம். காணிப்பட்டி, மூர்க்குப்பட்டி மற்றும் சித்திக்குள்ளூர் ஆகிய இடங்களில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட அரியம்பட்டி ஊராட்சியிலுள்ள வெண்ணம்பட்டி கடை, பகுதி நேரக் கடை என்பதால் இலவசக் கட்டடத்திலும், இதன் தாய்க் கடையான அரியாம்பட்டிக் கடை ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றது. வெண்ணம்பட்டி பகுதி நேர கடை செலவடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் நடத்தப்பட்டு வருகிறது. வங்கி நட்டத்தில் இயங்கி வருவதால் வெண்ணம்பட்டி நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டும் வாய்ப்பு இல்லை. எம். காணிப்பட்டி மற்றும் மூக்குப்பட்டி ஆகிய இடங்களில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடை கட்ட மொத்த மதிப்பீட்டில் 1/3 பகுதி தொகையைச் செலுத்த வங்கியில் தற்போது நிதி வசதி இல்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 1/3 பகுதி தொகையைச் செலுத்த முன்வரும் பட்சத்தில் அரசால் கட்டடம் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படும். மேலும், சித்திக்குள்ளூர் பகுதி நேர நியாய விலைக் கடை என்பதால் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது.



1998 நவம்பர் 23]

(ஆ) வினா எழவில்லை.

73—

**நியாய விலைக் கடைக்குக் கட்டடம்**

**வினா 16918—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட செலவடை ஊராட்சி, செலவடையில் நியாய விலைக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட செலவடை நியாய விலைக் கடை தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. 1998-99 ஆம் அண்டிற்கான ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் இக்கடைக்கு அரசுக் கட்டடம் கட்ட ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. செலவடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நட்டத்தில் இயங்கி வருவதாலும், நமக்கு நாமே திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடை கட்ட மொத்த மதிப்பீட்டில் 1/3 பகுதி நிதி செலுத்த போதிய நிதி ஆதாரம் இல்லாததாலும் கடை கட்ட வாய்ப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

74—

**நியாய விலைக் கடைக்குக் கட்டடம்**

**வினா 16919—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, ஆடையூர், பக்கநாடு, கண்டாகுலமாணிக்கம் ஆகிய பகுதிகளுக்கான நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருவதால், அவற்றுக்கு ஒரு கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில், ஆடையூர் பகுதியில் இரு நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன. அவற்றில் ஆடையூர் முழு நேர நியாய விலைக் கடை வங்கியின் சொந்தக் கட்டடத்திலும், கிழக்கு நாடு பகுதி நேர நியாய விலைக் கடை இலவசக் கட்டடத்திலும் செயல்படுகின்றன. பக்கநாடு பகுதியில் முழு நேர நியாய விலைக் கடை வங்கியின் சொந்தக் கட்டடத்தில் செயல்படுகிறது. மேட்டுத் தெரு நியாய விலைக் கடையானது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. இக்கடைக்கு நமக்கு நாமே திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடை கட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மொத்த மதிப்பீட்டில் 1/3 பகுதியை வங்கி செலுத்தும் பட்சத்தில் அரசால் நியாய விலைக் கடை கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். கண்டாகுலமாணிக்கம் நியாய விலைக் கடைக்குத் தற்போது அரசால் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்படும் நிலையில் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

75—

**நியாய விலைக் கடை திறத்தல்**

**வினா 16923—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகம் ஊராட்சியிலுள்ள குப்பதாசன் காடுவளவில் ஒரு நியாய விலைக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆவணிப்பேரூர் கீழ்முகம் பகுதியில், குப்பதாசன் காட்டுவளவில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை தொடங்க சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் மூ.மு.120841/96 ஜே.4, நாள் 14-11-1997ல் ஆணையிடப்பட்டுள்ளது. விரைவில் கடை திறக்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

76—

**நியாய விலைக் கடைக்குப் பண்டங்கள் வழங்கல்**

**வினா 16926—திரு .ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி முழுமைக்கும் நியாய விலைக் கடைகளுக்கான பண்டங்களை கொங்கணாபுரத்திலிருந்து டி.சி.எம்.எஸ். மூலம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கான கட்டுப்பாட்டுப் பொருட்கள் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கொங்கணாபுரம் கிளை மூலமே நுகர்வு செய்யப்பட்டு வருகின்றன.

77—

**வேடப்பட்டியில் புதிய ரேஷன் கடை**

**வினா 16927—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட பெரியேரிப்பட்டி ஊராட்சியில் உள்ள வேடப்பட்டியில் புதிய ரேஷன் கடை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட பச்சனம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் பெரியேரிப்பட்டி ஊராட்சியிலுள்ள வேடப்பட்டி நியாய விலைக் கடைக்கு ஏற்கெனவே 1996-97 ஆம் ஆண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**78—**

**புதிய நியாய விலைக் கடை கட்டடம் அமைத்தல்**

**வினா 16928—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட பாப்பம்பட்டி ஊராட்சியிலுள்ள கொண்டக்காரனூரில் புதிய நியாய விலைக் கடைக்கு கட்டடம் அமைத்துத்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட பாப்பம்பட்டி ஊராட்சியிலுள்ள கொண்டக்காரனூரில் புதிய நியாய விலைக் கடை கட்டடம் இலவசமாக கட்ட 1998-99 ஆம் நிதியாண்டில் அரசு ஒதுக்கீடு ஏதும் இல்லை. நமக்கு நாமே திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடை கட்ட மொத்த மதிப்பீட்டில் 1/3 பகுதித் தொகையைச் செலுத்த அதனை



நடத்தும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி முன்வரவில்லை. மேற்படி தொகையைச் செலுத்த முன்வரும் பட்சத்தில் நியாய விலைக் கடை கட்ட ஏற்பாடு அரசால் செய்யப்படும்.

**79—**

**புதிதாக நியாய விலைக் கடை கட்டுதல்**

**வினா 17177—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பள்ளக்காடு, மல்லியகுந்தம், சோல்வேப்பி நாயக்கனூர், சின்ன அரக்கனூர் ஆகிய இடங்களில் புதிதாக நியாய விலைக் கடைகளைக் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பள்ளக்காடு, மல்லியகுந்தம், சொல்லிவேப்பி நாயக்கனூர் ஆகிய நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் இல்லை. மேற்படி நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்ட நமக்கு நாமே திட்டத்தின்கீழ் மொத்த மதிப்பீட்டில் 1/3 பகுதி செலுத்திட வங்கி அறிவுறுத்தப்பட்டதில் அந்நியாயவிலைக் கடைகளை நடத்தும் வங்கிகள் தற்போது நிதி வசதி சரியில்லை எனத் தெரிவித்துள்ளன. எனவே, வங்கி நியாய விலைக் கடை கட்ட செலவாகும் மொத்த மதிப்பீட்டில் 1/3 பகுதி செலுத்த முன்வருமேயானால் நியாய விலைக் கடை கட்டித்தர இயலும். மேலும் சின்ன அரக்கனூர், பகுதிநேர நியாய விலைக் கடை என்பதால் இலவசக் கட்டடத்தில் தற்போது செயல்படுகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**80—**

**நியாய விலைக் கடைக்கு கட்டடம்**

**வினா 17180—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம் கணக்கப்பட்டி, பொட்டனேரி மற்றும் குன்னமுடையானூர் நியாய விலைக் கடைக்கு புதிதாகக் கட்டடம் கட்டித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம் கணக்குப்பட்டி மற்றும் குன்னமுடையானூர் நியாய விலைக் கடைகளுக்கு 1998-99 ஆம் ஆண்டில் இலவசமாகக் கட்டடம் கட்ட அரசு ஒதுக்கீடு ஏதும் இல்லை. இக்கடைகள் நடத்தும் தாரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மற்றும் பொட்டனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நட்டத்தில் செயல்படுவதால் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்புகள் இல்லை. பொட்டனேரி நியாய விலைக் கடைக்கு வங்கியின் சொந்தக் கட்டடம் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**81—**

**எலவம்பட்டிக்கு நியாய விலைக் கடை**

**வினா 17217—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட தாரமங்கலம் ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி ஊராட்சியிலுள்ள எலவம்பட்டிக்கு புதிய நியாய விலைக் கடை கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**



1998 நவம்பர் 23]

(அ) நமக்கு நாமே திட்டத்தின்கீழ் தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட எலவம்பட்டி நியாய விலைக் கடைக்கு அரசு கட்டடம் கட்ட மொத்த மதிப்பீட்டில் 1/3 பகுதித் தொகையைச் செலுத்த சின்னப்பம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி முன்வரவில்லை. எனவே, மேற்படி தொகையைச் செலுத்தும் பட்சத்தில் அரசால் நியாய விலைக் கடை கட்ட ஏற்பாடு செய்யப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**82—**

**நியாய விலைக் கடை அமைத்தல்**

**வினா 17824—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கணக்கப்பட்டி நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து சேடப்பட்டியில் நியாய விலைக் கடை இயங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் கணக்கப்பட்டி நியாய விலைக் கடையில் மொத்தம் 694 குடும்ப அட்டைகள் உள்ளன. இவற்றில் சேடப்பட்டிக்கு சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைகள் 15 மட்டுமே உள்ளன. எனவே, அங்கு புதிய நியாய விலைக் கடை திறக்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

**83—**

**விபத்தில் இறந்த கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உதவி**

**வினா 19728—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 23

1997-98 ஆம் ஆண்டு கட்டுமானத் தொழிலாளர் விபத்தில் இறந்தால் அளிக்கப்படக் கூடிய காப்பீட்டுத் தொகை எத்தனை பேருக்கு அளிக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் 6 பேர் விபத்தில் இறந்ததால் அவர்களின் நியமனதாரர்கள் 6 பேருக்கு தலா ரூ.50,000 காப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டது.

காப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்ட விவரம் கீழ்வருமாறு:

| வ. எண் | விபத்தில் இறந்த பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளியின் பெயர் | விபத்து நடந்த இடம் | காப்பீட்டுத் தொகை வழங்கிய நாள் | வழங்கப் பட்ட காப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | திரு. ஆ. பூங்காவனம் | மதுரை | 25-9-97 | 50,000 |
| 2 | திரு. ஆ. நாகப்பன் | சென்னை | 8-11-97 | 50,000 |
| 3 | திரு. எ.பாண்டுரங்கன் | சென்னை | 23-1-98 | 50,000 |
| 4 | திரு. எஸ். எஸ்.மணி | பொன்னேரி (காஞ்சிபுரம் மாவட்டம்) | 27-1-98 | 50,000 |
| 5 | திரு. சேட்டு | சென்னை | 10-3-98 | 50,000 |
| 6 | திரு. எம். பாபு | சென்னை | 10-3-98 | 50,000 |

**84—**

### கட்டுமானத் தொழிலாளர்களுக்கு காப்பீட்டுத் தொகை

**வினா 19729—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் கட்டுமானத் தொழிலாளர் விபத்தில் இறந்ததன் காரணமாக எத்தனை பேருக்கு காப்பீட்டுத் தொகை அளிக்கப்பட்டது?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தில் இறந்ததாகத் தெரிவித்து கோரிக்கை மனு (claim petition) ஏதும் பெறப்படாததால் காப்பீட்டுத் தொகை யாருக்கும் அளிக்கப்படவில்லை. ஏனெனில் சேலம், மாவட்டத்தைச் சார்ந்த பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் யாரும் விபத்தில் இறந்ததாகத் தகவல் பெறப்படவில்லை.

**85—**

### தொழிலாளர்களுக்கு உதவி செய்தல்

**வினா 10328 —திரு.எஸ்.என்.பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி தொகுதியில் 1996-97ல் சலவைத் தொழிலாளர்கள் எத்தனை பேருக்கு சலவைப் பெட்டிகளும், சவரத் தொழிலாளர்களுக்கு சவரப் பெட்டிகளும் இலவசமாகக் கொடுக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பவானி சட்டமன்றத் தொகுதியில் அத்தொகுதியினைச் சார்ந்த 41 சலவைத் தொழிலாளர்களுக்கு 41 பித்தளை சலவைப் பெட்டிகளும், சவரத் தொழிலாளர் ஒருவருக்கு ஒரு செட் சவரக் கருவியும் வழங்கப்பட்டது.

**86—**

### சீர்மரபினர் மாணவர் விடுதி கட்டுதல்

**வினா 15510—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு சீர்மரபினர் மாணவர் விடுதி கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டையில் புதிய சீர்மரபினர் மாணவர் விடுதி தொடங்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

**சேலம் மாவட்டத்தில் மாணவ மாணவியர் விடுதிகள்**

**வினா 20524—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் மாணவியர் விடுதிகள் எத்தனை உள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 19 மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகளும், 2 மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிகளும் இயங்கி வருகின்றன.

88—

**மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

**வினா 20525—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணத்தில்பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, திருவோணத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

89—

**தொழிற் பயிற்சி நிலையம் தொடங்குதல்**

**வினா 20529—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாகத் தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை மூலமாகத் தொழிற் பயிற்சி மையம் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

90—

**பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியர் விடுதி கட்டுதல்**

**வினா 20532—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998 ஆம் நிதியாண்டில் தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகள் எத்தனை புதிதாகக் கட்ட அரசு உத்தேசித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*1998-99 ஆம் நிதியாண்டில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ மாணவியர் விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்ட இடங்கள் தெரிவு செய்து வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் தருமபுரி மாவட்டத்தில் ஜருகு மற்றும் கோபிநாதம்பட்டி ஆகிய இடங்களில் இயங்கும் பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களின் பட்டியலில் சேலம் மாவட்டம் இடம் பெறவில்லை.*

**91—**

**இரசாயன ஆய்வுக் கூடம் அமைத்தல்**

**வினா 17543—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக கனிமங்களின் மூலக்கூறுகளைப் பரிசோதனை செய்ய இரசாயன ஆய்வுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*தொழில் வணிகத் துறையைச் சார்ந்த மண்டல பரிசோதனை ஆய்வகம் ஒன்று சேலத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. தகுந்த வசதிகளுடன் கனிமங்கள், உலோகங்கள், ஸ்டார்ச் மற்றும் எல்லா தொழில் மூலப் பொருட்களும் இந்த ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்பட்டு தகுந்த சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அதனால் சேலம் மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக கனிமங்களின் மூலக் கூறுகளைப் பரிசோதனை செய்ய இரசாயன ஆய்வுக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.*





**92—**

**கைவினைப் பொருள் விற்பனை நிலையம் தொடங்குதல்**

**வினா 17818—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு அரசு ஏற்காடு சுற்றுலா மையத்தில் கைவினைப் பொருள் விற்பனை நிலையம் தொடங்க நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*ஏற்காட்டில் தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால் நிரந்தரமாகக் காட்சி மற்றும் விற்பனை நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லாததால், ஏற்காட்டில் பருவ காலங்களில் மட்டும், அக்கழகம் சேலம் காட்சியறைகள் மூலம் பொருட்காட்சி நடத்தும்.*

**93—**

**சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கணினி வழங்குதல்**

**வினா 19655—திரு. ஐ. கணேசன் :** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு இந்த நிதியாண்டில் கணினி வழங்க ஏற்பாடு செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இந்த நிதியாண்டில் கணினி வழங்க அரசால் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.*

**94—**

**சமூகக் காப்பீட்டுத் திட்டங்கள்**

**வினா 9094—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-97 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சமூகப் காப்பீட்டுத் திட்டங்களினால் பயனடைந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) சேலம் மாவட்டத்திற்கு இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கிய தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) 1996-97 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் சமூகக் காப்பீட்டுத் திட்டங்களினால் பயனடைந்தவர்கள் 14,167 நபர்கள்.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கிய தொகை ரூ.1,01,37,280 ஆகும்.

**95—**

**மேல்மலையனூரரை சுற்றுலா மையமாக்குதல்**

**வினா 14634—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் அலயம் உள்ள மேல்மலையனூரரை சுற்றுலா மையமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு என். சுரேஷ்ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயம் உள்ள மேல்மலையனூரரை சுற்றுலா மையமாக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.





**96—**

**பவானியை சுற்றுலாத் தலமாக்குதல்**

**வினா 17821—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானியை சுற்றுலாத் தலமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ்ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பவானியை சுற்றுலாத் தலமாக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், இவ்விடம் ஏற்கெனவே மாவட்ட உலாத்தலமாக அரசால் அறிவிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்குச் சில அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**97—**

**இளைஞர் தங்கும் விடுதி கட்டுதல்**

**வினா 19932—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் சுற்றுலாத் துறை மூலமாக இளைஞர் தங்கும் விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ்ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் சுற்றுலாத் துறை மூலமாக இளைஞர் தங்கும் விடுதி கட்டுவது பற்றிய பிரேரணை தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[1998 நவம்பர் 23

98—

## பனைப் பண்ணை தொழிலாளர்கள்

**வினா 15643—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மாதவரம், குமரப்பாபுரம் பனைப் பண்ணையில் பணிபுரியும் தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு சட்டரீதியான அனைத்து உரிமைகளையும் அரசு வழங்குகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) சென்னை, மாதவரம், குமரப்பாபுரம் பனைப் பண்ணையில் தினக் கூலி ஊழியர்கள் 19 நபர்கள் மற்றும் வேலைக்கேற்ப ஊதியம் பெறும் ஊழியர்கள் (பீஸ் ரேட்) 23 நபர்கள் ஆக மொத்தம் 42 நபர்கள் பணிபுரிகின்றனர்.

(ஆ) அவர்களுக்கு ஊழியர் வருங்கால வைப்பு நிதி, மாநில தொழிலாளர் காப்பீட்டுத் திட்டம், தொழிலாளர் நல நிதி, அரசு விடுமுறை நாட்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு, பூரிப்பூதியம் மற்றும் பண்டிகை முன்பணம் ஆகிய சட்டரீதியான சலுகைகள் வழங்கப்படுகின்றன. மேலும், பணிமூப்பு அடிப்படையில் குடியிருப்பு வசதி, நியாயமான வாடகையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

99—

## சேலம் மாவட்டத்தில் கிராமத் தொழில்

**வினா 19844—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் கதர் மற்றும் கிராமத் தொழில் அடிப்படையில் எத்தனை கிராமத் தொழில்கள் உருவாகியுள்ளன?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1998 நவம்பர் 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் கதர் அங்காடி செயல்பட்டு வருகிறது. இருப்பாளி, சித்தூர் மற்றும் சமுத்திரம் ஆகிய இடங்களில் கிராமிய நூற்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நூற்பாளர்கள் இப்பணியில் கிடைக்கும் தினக் கூலி கட்டுப்படியாகாத நிலையில், கூலி அதிகம் கிடைக்கக்கூடிய வயல் வேலைக்குச் சென்றுவிடுகின்றனர். நூற்பாளர்கள் இப்பணிக்கு வராத காரணத்தினால் இருப்பாளி மற்றும் சித்தூர் கிராமிய நூற்பு நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன. ஆனால், சமுத்திரம் கிராமிய நூற்பு நிலையம் மட்டும் 14 நூற்பாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

100—

## எடப்பாடி தொகுதியில் வேலை வாய்ப்பு

**வினா 19868—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியிலுள்ள மக்களுக்கு கதர் கிராமத் தொழில்கள் உருவாக்கி வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதிக்குட்பட்ட இடங்களில் விவசாயப் பணிகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன. நூற்புப் பணியில் மக்களுக்கு தினக்கூலி ரூ.20 மட்டுமே கிடைக்கிறது. கூலி வேலைக்குச் சென்றால் ரூ.50 வரை தினக்கூலி கிடைக்க வாய்ப்புள்ளதால் அப்பகுதி மக்கள் நூற்புப் பணியில் ஆர்வம் காட்டுவது இல்லை. எனவே, எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கிராமிய நூற்பு நிலையம் தொடங்க சாத்தியக் கூறுகள் இல்லை. மேலும் இதர கிராமத் தொழில் அலகுகள் தொடங்கவும் சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆறாம் பட்டியல்)

1—

**பேருந்துகளில் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம்**

**வினா 11977— திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டில் பேருந்துகளில் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அந்தக் குடும்பங்களுக்கு தமிழக அரசு கொடுத்துள்ள நிவாரணம் என்ன?

(இ) இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்களில் பிடிபட்டவர்கள் எத்தனை பேர்?

(ஈ) இன்னும் பிடிபடாத கும்பலைப் பிடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) உயிரிழந்தவர்கள் இரண்டு பேர்.

(ஆ) உயிரிழந்த இரு நபர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.15,000-மும் காயமடைந்த 12 நபர்களுக்குத் தலா ரூ.5000-ம் வீதம் மொத்தம் ரூ. 90,000 வழங்கப்பட்டுள்ளது.

(இ) ஒரு சம்பவத்தில் குற்றவாளியே இறந்துவிட்டார், மற்ற சம்பவங்களில் பிடிபட்டவர்கள் ஒருவருமில்லை.

(ஈ) காவல் துறை மூலம் தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2—

**பேரையூரில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளரின் அலுவலகம்**

**வினா 13897—திரு. கோ. தளபதி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேடப்பட்டி தொகுதி, பேரையூரில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

**வேலூர் மாவட்டத்தில் காவலர் குடியிருப்புகள்**

**வினா 14462—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் பணிபுரியும் காவலர்களுக்குக் குடியிருப்புகள் போதிய அளவு இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) அனைத்துக் காவலர்களுக்கும் குடியிருப்புகள் எப்போது கட்டித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவலர்களுக்கு வீடுகள் படிப்படியாகக் கட்டப்பட்டு வருகின்றன. வேலூர் மாவட்டத்தில் பணிபுரியும் காவலர்களில் 39 சதவீதம் காவலர்களுக்கு தற்போது குடியிருப்புகள் உள்ளன.

எஞ்சியுள்ள அனைத்துக் காவலர்களுக்கும் வரும் ஆண்டுகளில் குடியிருப்புகள் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

4—

**காவல் நிலையக் கட்டடங்கள் கட்டுதல்**

**வினா 14495—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் காவல் துறை துணைத் தலைவர் (டி.ஐ.ஜி.), கண்காணிப்பாளர் (எஸ்.பி.) அலுவலகங்கள், வேலூர் வடக்குக் காவல் நிலையமீ, சத்துவாச்சாரி காவல் நிலையக் கட்டடங்கள் எப்போது கட்டி முடிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

வேலூரில் காவல் துறை துணைத் தலைவர் (டி.ஐ.ஜி.), காவல் கண்காணிப்பாளர் (எஸ்.பி.) அலுவலகங்கள் மற்றும் வேலூர் வடக்குக் காவல் நிலையம் மற்றும் சத்துவாச்சாரி காவல் நிலையம் முதலியவைகளுக்குக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அவை விரைவில் கட்டி முடிக்கப்படும்.

5—

**தொளசம்பட்டியில் காவலர் குடியிருப்பு**

**வினா 15094—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டியில் காவலர் குடியிருப்பு கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண். 332, உள் (காவல் 10) துறை, நாள் 21-3-1998-இல் பகுதித் திட்டம் 7இல் (Phase vii), 1998-99 ஆம் நிதியாண்டில் 2,500 காவலர் குடியிருப்புகள் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதில் தாரமங்கலம் தொகுதி, தொளசம்பட்டியில் 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 14 தலைமைக் காவலர் குடியிருப்புகள் கட்டுவதும் அடங்கும். மேற்கண்ட குடியிருப்புகள் 31-3-1999-க்குள் கட்டி முடிக்கப்படும்.



6—

**திருக்கோயில்களில் கோபுரக் கலசம்**

**வினா 18024—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு (1998 மார்ச் வரை) எத்தனை திருக்கோயில்களில் கோபுரக் கலசம் களவாடப்பட்டுள்ளன என்பது பற்றி காவல் துறைக்குப் புகார் எதுவும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய கோபுரக் கலசம் தொடர்பாக களவு நிகழவில்லை. களவு சம்பந்தமாக புகார்கள் எதுவும் காவல் துறைக்கு வரவில்லை. சேலம் மாநகரில் 1997-98 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிய ஒரு வழக்கு பதிவாகியுள்ளது. 26-10-1997 அன்று செவ்வாய்பேட்டை கபிலர் தெருவில் உள்ள அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் ரூ. 5,000 மதிப்புள்ள தங்க முலாம் பூச்சப்பட்ட செப்புக் கலசம் களவாடப்பட்டதாகக் கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் செவ்வாய்பேட்டை காவல் நிலையக் குற்ற எண். 1215/97-இல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை நிலுவையில் உள்ளது.

7—

**காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 18040—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமார்பாளையம், பள்ளிப்பாளையம் பேரூராட்சிப் பகுதியில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

8—

**போக்குவரத்துக் காவல் நிலையம்**

**வினா 18041—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் போக்குவரத்துக் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

9—

**காவல் நிலையம் அமைத்தல்**

**வினா 18083—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், நல்லூரில் காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இதுகுறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.



10—

**ஆயுதப் படைக் காவலர்களுக்குக் குடியிருப்புகள்**

**வினா 18141—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் நகரில் ஆயுதப் படைக் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் நகரில் ஆயுதப் படைக் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட போதிய நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப் பட்டவுடன் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

11—

**திருமானூரில் காவலர் குடியிருப்புகள்**

**வினா 18143—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, திருமானூரில் காவலர் குடியிருப்புக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரியலூர் தொகுதி, திருமானூரில் காவலர் குடியிருப்புக் கட்ட நிலம் உள்ளது. இங்கு காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட பகுதித் திட்ட முறையில் (Phased manner) வரும் நிதியாண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும்.

12—

## காவலர் குடியிருப்பு கட்டுதல்

**வினா 18152—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி பகுதியில் காவலர்களுக்கு காவலர் குடியிருப்பு கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகராட்சி பகுதியில் காவலர்களுக்கு குடியிருப்பு கட்ட போதிய நிலம் காவல் துறை கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

## தமிழ் அகதிகளுக்கு உதவி

**வினா 18452—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர்?

(ஆ) அவர்கட்கு அரசு செய்யும் உதவிகள் என்னென்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 131 அகதிகள் முகாம்களில், 31-7-1998 அன்று உள்ள நிலவரப்படி 17,183 குடும்பங்களைச் சேர்ந்த 62,928 நபர்கள் தங்கி உள்ளனர். இதைத் தவிர, விமானம் மூலமும், தனியாக குறுகிய கால விசா பெற்றும் இந்தியாவிற்கு வந்த இலங்கைத் தமிழர்கள் தங்களது நண்பர்களுடனோ/ உறவினர்களுடனோ அல்லது தனிப்பட்ட முறையிலோ தமிழகத்தில் ஆங்காங்கே தங்கியுள்ளனர்.



(ஆ) இலங்கையிலிருந்து படகுகள் மூலம் தமிழகம் வரும் இலங்கை அகதிகள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கொட்டப்பட்டு ஆகிய இடைத்தங்கல் முகாம்களில் மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள 131 அகதிகள் முகாம்களில் தங்குவதற்கு இடவசதி செய்யப்பட்டு அரசால் உரிய மருத்துவ வசதி, சுகாதார வசதி, குடிநீர் வசதி, மின் வசதி, உரிய பாதுகாப்பு வசதி ஆகியவைகளும் அளிக்கப்படுகின்றன.

முகாம்களில் தங்கியுள்ள அகதிகளின் ஒவ்வொரு குடும்பத் தலைவருக்கு ரூ.180-ம், பெரியவர்களுக்கு தலா ரூ.144-ம் 12 வயதிற்குட்பட்ட சிறியவர்களுக்கு ரூ. 90-ம் மற்ற சிறியவர்களுக்கு ரூ.45-ம் மைய அரசு ஆணைப்படி மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. ஆயினம், தமிழக அரசு குடும்பத் தலைவருக்கு வழங்கப்படும் ரூ.180-ஐ ரூ.200 ஆக உயர்த்தி வழங்குகிறது. மேலும், மானிய விலையில் அரிசி 1 கிலோவிற்கு 57 பைசா வீதம் பெரியவர்களுக்கு நாளொன்றுக்கு 400 கிராம் (Grams) அளவிலும், சிறியவர்களுக்கு நாளொன்றுக்கு 200 கிராம் (Grams) அளவிலும் கணக்கிட்டு, இரு வாரங்களுக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது. இதர அத்தியாவசிய பொருட்களும் உணவுப் பொருள் பங்கீட்டு கடைகள் மூலமாக இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், ஒரு போர்வையும் சமையல் செய்வதற்கு வேண்டிய பாத்திரங்களும் (ரூ.150 மதிப்புள்ளது). இரண்டாண்டுகளுக்கு ஒரு முறையும், துணிமணிகள், பாய் முதலியவை ஆண்டுக்கு ஒருமுறையும் அகதிகளுக்கு வழங்கப்படுகின்றன. இது தவிர, பொங்கல் திருநாளின் போது பெரியவர்கள் அனைவருக்கும் வேட்டி/ சேலை வழங்கப்படுகிறது.

முகாம்களில் வசிக்கும் அகதிகளின் குழந்தைகள் இலங்கையில் கல்வி கற்றதற்கான, பள்ளி மாறும் சான்றிதழ் கேட்கப்படாமல், அவர்களின் தகுதியின் அடிப்படையில் அருகிலுள்ள கல்வி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில வசதிகள் செய்து தரப்படுகின்றன. மேலும், தொழிற்கல்வி நிலையங்களிலும், பொறியியல், மருத்துவம் மற்றும் விவசாயம் போன்ற பட்டப் படிப்புகளுக்கான கல்லூரிகளிலும் அகதிகளின் பிள்ளைகளுக்கு சிறப்பு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. மாணவ, மாணவிகளுக்கு இலவச பாடப் புத்தகங்கள், சீருடை, பேருந்து அனுமதி மற்றும் சத்துணவு போன்றவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

14—

**விடுதலைப் போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு உதவி**

**வினா 18560—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்ட தியாகிகள் மறைவுக்குப்பின் அவர்களின் துணைவியர் அல்லது அவர்களது வாரிசுகள் எத்தனை பேர் உதவித் தொகை பெறுகிறார்கள்?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எத்தனை பேர் உதவித் தொகை பெறுகிறார்கள்?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 2090 நபர்கள்.

(ஆ) 44 நபர்கள்.

15—

**சர்க்கரை ஆலை தொடங்குதல்**

**வினா 19422—திரு. செ. மதிவாணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுபாக்கம் தொகுதியில் சர்க்கரை ஆலை தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுபாக்கம் தொகுதியிலுள்ள கரும்புப் பகுதி மதுராந்தகம் சர்க்கரை ஆலை மற்றும் எஸ்.வி.சுகர்ஸ், சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுவிட்டது. எனவே இத்தொகுதியில் இன்னொரு புதிய சர்க்கரை ஆலை நிறுவ சாத்தியக்கூறுகள் இல்லை.



16—

**முந்திரியிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை**

**வினா 19761—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எங்கெங்கு முந்திரியிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டில் முந்திரியிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைகள் 23 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | தொழிற்சாலையின் பெயர் | இருக்கும் இடம் |
|---|---|---|
| 1. | சபரிகிரி இண்டஸ்ட்ரிஸ் | பண்ருட்டி |
| 2. | என்.எஸ். பாண்டியா | பண்ருட்டி |
| 3. | சுதர்ஸன் கேஷ்யூ இண்டஸ்ட்ரிஸ் | பண்ருட்டி |
| 4. | மோகினி எண்டர்பிரைஸஸ் | மறைமலைநகர் |
| 5. | கேரளா நட் புட் கம்பெனி | மாங்காடு |
| 6. | விக்டர் ஆலீ வ் கார்பொரேஷன் | கோவில்விளை வல்வசகோஸ்டம் |
| 7. | பி.கே.எஸ். ஆண்டவர் | விருதுநகர் |
| 8. | ஏ.கே.எஸ்.என். பிரபாகரன் & பிரதர்ஸ் | விருதுநகர் |
| 9. | ஸ்ரீ தில்லையம்மாள் & கோ | விருதுநகர் |
| 10. | பி.ஏ.எம். ஐயம் பெருமாள் நாடார் & பிரதர்ஸ் | ஆலம்பட்டி |
| 11. | பிரிமியர் கெமிகல் இண்டஸ்ட்ரிஸ் | சைதாப்பேட்டை |

| | | |
|---|---|---|
| 12. | சித்ரா கேஷ்யூ ஆயில் மெர்சண்ட் | ஏ.மேலம்பட்டி |
| 13. | வைத்யலிங்க படையாச்சி | பண்ருட்டி |
| 14. | சங்கர் இண்டஸ்ட்ரிஸ் | கீழகுப்பம் |
| 15. | ஆர். ராஜாங்க படையாச்சி | கீழகுப்பம் |
| 16. | ராதாகிருஷ்ணன் கேஷ்யூ & ஆயில் | பண்ருட்டி |
| 17. | ஸ்ரீ நாராயண இண்டஸ்ட்ரிஸ் | ஏ.மேலம்பட்டு |
| 18. | ஸ்ரீ சுகன்யா இண்டஸ்ட்ரிஸ் | ஏ.மேலம்பட்டு |
| 19. | டி. சரோஜா கிருஷ்ணமூர்த்தி | பண்ருட்டி |
| 20. | விஸ்வம் கான்டினன்டல் ப்ராடக்ட்ஸ் | அழகர்கோயில் |
| 21. | அன்னபூரானி கெமிகல்ஸ் | திட்டக்குடி |
| 22. | பாரி கேஷ்யூ ஷெல் ஆயில் இண்டஸ்ட்ரிஸ் | பண்ருட்டி |
| 23. | இளங்கோ கேஷ்யூ ஷெல் லிக்குவுட் | கடம்புலியூர் |

**17—**

## தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துதல்

**வினா 20033—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதியில் உள்ள கண்ணமங்கலத்தில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை, 25 கிலோமீட்டர் சுற்றளவிற்குள் ஒரு தீயணைப்பு நிலையம் அமைப்பது அரசின் கொள்கையாகும். ஆனால் கண்ணமங்கலத்தைச் சுற்றிலும் 25 கிலோமீட்டருக்குள் ஆரணி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இரண்டு தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. கண்ணமங்கலத்தில் ஏற்படும் தீ நிகழ்வுகளை



இந்த இரண்டு தீயணைப்பு நிலைய ஊர்திகளைக் கொண்டே சமாளிக்க இயலும் என்பதால் இங்கே புதிதாக ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துவதற்கு அவசியம் எழவில்லை.

**18—**

## ஆரணி தொகுதியில் காவல் நிலையம்

**வினா 20034—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதியிலுள்ள முள்ளன்புரம்-பாட்டைக்குளம் கிராமத்தில் ஒரு காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இல்லை.

**19—**

## கண்ணாடித் தொழிற்சாலை விவரம்

**வினா 20099—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கண்ணாடித் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன? எந்தெந்த இடத்தில் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் மொத்தம் 99 கண்ணாடித் தொழிற்சாலைகள் உள்ளன. அவை எந்தெந்த இடங்களில் உள்ளன என்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

[1998 நவம்பர் 23

| வரிசை எண் | தொழிற்சாலையின் பெயர் | இருக்கும் இடம் |
|---|---|---|
| 1. | சுந்தர் கிளாஸ் | ஆற்காடு |
| 2. | மெட்ரோமிரர் இண்டஸ்ட்ரிஸ் | அம்பத்தூர் |
| 3. | ஆனந்த் இண்டஸ்ட்ரிஸ் | அம்பத்தூர் |
| 4. | ஓம் கணேஷ் மிரர் இண்டஸ்ட்ரிஸ் | அம்பத்தூர் |
| 5. | விஜயா கிளாஸ் ஒர்க்ஸ் | மாதவரம் |
| 6. | மொரோபின் மிரர் இண்டஸ்ட்ரிஸ் | மதுரை |
| 7. | விஜயா காட்டேஜ் இண்டஸ்ட்ரிஸ் | சின்ன சொக்கிக்குளம் |
| 8. | பாத்திமா கிளாஸ் ஹவுஸ் | கோரிபாளையம் |
| 9. | லலிதா பிக்சர் மார்ட் | கோரிபாளையம் |
| 10. | கார்த்திக் மிரர் ஒர்க்ஸ் | மதுரை |
| 11. | கமல் கிளாஸ் இண்டஸ்ட்ரிஸ் | இராஜபாளையம் |
| 12. | குளோப் மிரர் இண்டஸ்ட்ரிஸ் | கிண்டி, |
| 13. | செல்லப்பா & கம்பெனி | சென்னை-79. |
| 14. | ஆர் ஆர். இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-1 |
| 15. | கிருஷ்ணா கிளாஸ் ஒர்க்ஸ் | சென்னை-3. |
| 16. | பில்கோ மிரர் இண்டஸ்ட்ரிஸ் | கிண்டி, |
| 17. | முருகன் மிரர் ஒர்க்ஸ் | சென்னை-1. |
| 18. | சுவாமி மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-3. |
| 19. | பிளாமிங்கோ மிரர் ஒர்க்ஸ் | கோடம்பாக்கம். |
| 20. | ஸ்ரீ முருகன் மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-79. |
| 21. | கணபதி கிளாஸ் ஒர்க்ஸ் | சென்னை-3. |
| 22. | குமார் கிளாஸ் ஒர்க்ஸ் | சென்னை-3. |
| 23 | எஸ். கண்ணப்பன். | பார்க் டிவுன் சென்னை-3. |
| 24. | நில்கோ மிரர். | மடுவன்கரை, சென்னை-32. |
| 25. | சி.எஸ். கிளாஸ் ஒர்க்ஸ் | சென்னை-3. |
| 26. | ஸ்ரீ பாலாஜி மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-3. |
| 27. | கணேஷ் எண்டர்பிரைஸஸ் | சென்னை-79. |
| 28. | ஜெய் மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-112. |
| 29. | ஸ்ரீ பாலாஜி பைபர் அண்டு மிரர் இண்டஸ்ட்ரிஸ் | தூளை, சென்னை-112. |
| 30. | பினிஸ் மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-3. |
| 31. | வேல் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-79. |
| 32. | ஸ்ரீ ராம் பிரேம் ஒர்க்ஸ் | பாளையம்கோட்டை |
| 33. | லதா மிரர் இண்டஸ்ட்ரிஸ் | பல்லாவரம். |
| 34. | சல்ப்க்ஸ் சேப்டி கிளாஸ் அண்டு மிரர் ஒர்க்டஸ் | பூந்தமல்லி, சென்னை-56. |
| 35. | எஸ்கேஸி மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சாலிகிராமம், |
| 36. | ஸ்ரீ காசிலியம்மமாள் மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-19. |
| 37. | கே. நடராஜன் அண்டு கோ | கிண்டி |
| 38. | லஷ்மி மிரர் இண்டஸ்ட்ரிஸ் | கிண்டி, சென்னை-97 |
| 39. | பல்லவி மிரர் ஒர்க்ஸ் | வெஸ்ட் மாம்பலம். |
| 40. | கார்த்திக் மிரர் இண்டஸ்ட்ரிஸ் | கிண்டி, சென்னை-97 |
| 41. | திருமலை பைபர் ஒர்க்ஸ் | சைதாப்பேட்டை. |
| 42. | நரசு மிரர் இண்டஸ்ட்ரிஸ் | ஈக்காட்டுத் தாங்கல், சென்னை-97. |
| 43. | சூரியா மிரர் இண்டஸ்ட்ரிஸ் | தூளை, சென்னை-112. |

1998 நவம்பர் 23]

[1998 நவம்பர் 23

| | | |
|---|---|---|
| 44. | மகாலஷ்மி மிரர் இண்டஸ்ட்ரிஸ் | இராயப்பேட்டை |
| 45. | ஸ்ரீ வளர்மதி கிளாஸ் ஓர்க்ஸ் | ஓட்டேரி,சென்னை-12. |
| 46. | ஸ்ரீ லஷ்மி கிளாஸ் ஓர்க்-1 | சென்னை-12. |
| 47. | யூனிவர்செல் மிரர் பிராடக்ட்ஸ் | சைதாப்பேட்டை |
| 48. | கவிதா மிரர் இண்டஸ்ட்ரிஸ் | மடுவன்கரை. |
| 49. | ஓம்சக்தி மிரர் இண்டஸ்ட்ரிஸ் | அண்ணாநகர், சென்னை-40. |
| 50. | அர்ஜூன் மூவி இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-38. |
| 51. | ஜெகதீஷ் மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-1. |
| 52. | எம். சுதர்சனம் அண்டு கோ | பார்க் டவுன். |
| 53. | எம்.எஸ்.ரத்தினம் அண்டு கோ | சென்னை. |
| 54. | ஸ்ரீ வினாயகா எண்டர்பிரைசஸ் | சென்னை-79. |
| 55. | பாபா கிளாஸ் ஓர்க்ஸ் | மதுரை-16. |
| 56. | அமந்த் சில்வரிங் ஓர்க்ஸ் | சென்னை-3. |
| 57. | ஸ்ரீ சீனிவாசா மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-79. |
| 58. | ஸ்ரீ மாருதி கிளாஸ் ஓர்க்ஸ் | சென்னை-32. |
| 59. | ரூபினி மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-3. |
| 60. | கார்த்திகேயன் கிளாஸ் கட்டிங் ஓர்க்ஸ் | நாமக்கல். |
| 61. | ஓம் துர்க்கா மிரர் இண்டஸ்ட்ரிஸ் | சென்னை-44. |
| 62. | முருகன் அண்டு கோ. | திருநெல்வேலி |
| 63. | சிவினிக் இண்டர்போ பி. லிட். | பொன்னேரி |
| 64. | வெங்கடேஷ்வரா மிரர் இண்டஸ்ட்ரீஸ் | சென்னை 3 |
| 65. | பாரத் மிரர் இன்டஸ்ட்ரீஸ் | சென்னை 33 |
| 66. | விவி கிளாஸ் ஓர்க்ஸ் பி. லிட். | மாதவரம் |
| 67. | ஸ்ரீ கிளாஸ் ஓர்க்ஸ் | சென்னை 26 |



1998 நவம்பர் 23]

| | | |
|---|---|---|
| 68 | தமிழ்நாடு கிளாஸ் இண்டஸ்ட்ரீஸ் | சென்னை 19 |
| 69. | சரஸ்வதி சயின்டிபிக்ஸ் | காங்கேயநல்லூர் |
| 70. | பாபா சயின்டிபிக் கிளாஸ் ஓர்க்ஸ் | ஆலந்தூர், சென்னை-16 |
| 71. | தாஸ் இண்டஸ்ட்ரீஸ் | ஆலந்தூர் |
| 72. | ஆஞ்சநேயா சயிண்டிபிக் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் | கிழக்கு தாம்பரம் |
| 73. | டெக்னிகோ லேபரட்டரி ப்ராடக்ட்ஸ் | கிண்டி, சென்னை. |
| 74. | பாரத் கிளாஸ் இண்டஸ்ட்ரீஸ் | மேற்கு தாம்பரம் |
| 75. | ரேமண்ட் கிளாஸ் | பழவந்தாங்கல் |
| 76. | இம்பீரியல் சயிண்டிபிக் ஓர்க்ஸ் | ஆர்.எஸ்.புரம் கோயம்புத்தூர் |
| 77. | சபையர் சயிண்டிபிக் கம்பெனி | ஆர்.எஸ்.புரம் |
| 78. | அர்வின் கிளாஸ் ஓர்க்ஸ் | ஆர்.எஸ்.புரம் |
| 79. | பாஸந்தி சயிண்டிபிக் ஓர்க்ஸ் | கே.புதூர், மதுரை |
| 80. | ஆன்டன் சயிண்டிபிக் கிளாஸ் ஓர்க்ஸ் | மதுரை-17 |
| 81. | செமிகோ கிளாஸ் ஓர்க்ஸ் | பெருந்தலையூர், கோபி |
| 82. | பிராங்லஸ் சயிண்டிபிக் எக்யூப்மெண்ட்ஸ் | தூத்துக்குடி |
| 83. | இந்தியா பயோலாஜிக்கல் ப்ராடக்ட்ஸ் | சைதாப்பேட்டை |
| 84. | சதர்ன் சயிண்டிபிக் சர்வீஸஸ் | மேற்கு மாம்பலம் |
| 85. | சதர்ன் சயிண்டிபிக் சர்வீஸஸ் | மேற்கு மாம்பலம் |
| 86. | டெக்னோ கிளாஸ் ஓர்க்ஸ் | ஈக்காட்டுத்தாங்கல் |
| 87. | சக்தி சயிண்டிபிக் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் | தி.நகர்,சென்னை |
| 88. | டால்டன் சயிண்டிபிக் கோ | பள்ளிப்பாளையம் |
| 89. | ராஜன் சயிண்டிபிக் கிளாஸ் ஓர்க்ஸ் | உறையூர், திருச்சிராப்பள்ளி |

| | | |
|---|---|---|
| 90. | ஜெயம் செண்ட்டர் | கடலூர் |
| 91. | ஸ்ரீ கிருஷ்ணா சயினிட்டிபிக் ஒர்க்ஸ் | சென்னை 98 |
| 92. | ஷாலிமார் சயின்ட்டிபிக் சப்ளையர்ஸ் | கோயம்புத்தூர் |
| 93. | இம்பிரியல் சயின்ட்டிபிக் ஒர்க்ஸ் | ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் |
| 94. | தி ஸ்வான் சயின்ட்டிபிக் கோ | மேற்கு மாம்பலம் |
| 95. | கோபி சயின்ட்டிபிக் ஒர்க்ஸ் | சென்னை 82 |
| 96. | ஏ.டட் அண்டு கோ. | சென்னை 1 |
| 97. | எஸ்.எஸ். சயின்ட்டிபிக் சர்வீஸ் | கொண்டித்தோப்பு சென்னை 79 |
| 98. | ஓம் சக்தி சயின்ட்டிபிக் ஒர்க்ஸ் | அமைந்தகரை சென்னை 29 |
| 99. | சன்சில் கிளாஸ் ஒர்க்ஸ் | ஆதம்பாக்கம் சென்னை 83 |

**20—**

**உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம்**

**வினா 12625—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்** : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 278, பள்ளிக் கல்வி, நாள் 24-7-1998-ல் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு ரூ.4.4 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு ஆணையிட்டுள்ளது.



**21—**

**அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு கொண்டு வருதல்**

**வினா 14098—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புகளாக எம்.ஏ., எம்.காம்., எம்.எல்.சி., கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**22—**

**நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா 14166—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

நூலகங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு முதற்கண் அக்கட்டடம் கட்டுவதற்கான காலிமனையினை அவ்வூர் பொதுமக்கள் நூலகத் துறையின் பெயருக்குத் தானமாக வழங்க வேண்டும். அதன்படி சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொங்கணாபுரம் கிளை நூலகத்திற்கு இதுவரை காலிமனை ஏதும் பெறப்படவில்லை. எனவே, அந்நூலகத்திற்கு தற்சமயம் சொந்தக் கட்டடம் கட்ட இயலாமல் உள்ளது. காலிமனை பெறப்பட்டவுடன் நூலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

23—

## நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

**வினா 17708—திரு. வெ. கோவிந்தன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பேரணாம்பட்டு தொகுதி, பல்லவகுப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*அரசாணை (நிலை) எண் 269, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-7-1998-ல் வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியம், பல்லவகுப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை 1998-99 ஆம் கல்வி ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.*

24—

## வாக்காளர்கள் புகைப்படம்

**வினா 20535—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் வாக்காளர்களைப் புகைப்படம் எடுக்கும் பணியில் விடுபட்ட வாக்காளர்களைப் புகைப்படம் எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வாக்காளர் அடையாள அட்டை வழங்க, விடுபட்ட வாக்காளர்களைப் புகைப்படமெடுக்க நிர்ணயம் செய்யப்பட்ட மூன்று சுற்றுப் பணிகள் 7-10-1998 அன்று முடிவடைந்துள்ளது. சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 72.11 சதவீதம் வாக்காளர்கள் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளனர்.*



25—

## பெண்கள் வார்டுக்கு கழிப்பறை வசதி

**வினா 13807—திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் பெண்கள் வார்டுக்கு கழிப்பறை வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்ட மருத்துவமனையில் பெண்கள் வார்டுக்கு உரிய கழிப்பறைகள் வார்டிலிருந்து சுமார் 250 அடிகள் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.*

*(ஆ) வார்டுக்கும் கழிப்பறைக்குமிடையே கட்டடங்கள் எதுவும் இல்லாததால் இரவு நேரங்களில் நோயாளிகள் உபயோகத்திற்கு இடைஞ்சலாக உள்ளது. இதைத் தவிர்க்க பெண்கள் வார்டுக்குத் தனியாகக் கழிப்பறை கட்ட பொதுப் பணித் துறையின் மூலம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

26—

## எய்ட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை

**வினா 14215—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?*

*(ஆ) எத்தனை நோயாளிகளுக்கு அரசு சிகிச்சை அளித்து வருகிறது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியிலுள்ள விவரத்தின்படி சேலம் மாவட்டத்தில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 36 ஆகும்.

| | |
|---|---|
| (ஆ) இவர்களில் சிகிச்சை அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | 11 |
| இறந்தவர்களின் எண்ணிக்கை | 4 |
| மருத்துவமனையை விட்டு ஓரிரு நாட்களில் சொந்த விருப்பத்தின்பேரில் சென்றவர்கள் | 10 |
| அனுமதியின்றி மருத்துவமனையை விட்டு சென்றவர்கள் | 11 |
| மொத்தம் | 36 |

27—

**புதிய கட்டடங்கள் கட்டுதல்**

**வினா 14900—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள பழமையான கட்டங்களை அகற்றி புதிய கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்புஅரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்ள பழைய பிணவறைக் கட்டடம், முடநீக்குச் சிகிச்சைப் பிரிவு கட்டடம், தொழுநோய் பிரிவு கட்டடம் ஆகியவை பழுதடைந்துள்ளதால் அவற்றை இடித்து புதிய கட்டடம் கட்ட வேண்டும் என்று பொதுப் பணித் துறையினரின் பரிந்துரையுடன் திண்டுக்கல் நலப் பணிகள் இணை இயக்குநர் தெரிவித்துள்ளார். அரசின் நிதி நிலைக்கேற்ப இனிவரும் பகுதி 2 திட்டங்களில் மேற்கூறிய பழைய கட்டடங்களை இடித்துவிட்டு புதிய கட்டடங்களைக் கட்ட பரிசீலிக்கப்படும்.



28—

**தாய் சேய் நல விடுதி அமைத்தல்**

**வினா 16613—திரு.. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி பள்ளிப்பட்டி ஊராட்சி மன்றத்திலுள்ள நாகோசிப்பட்டியில் தாய்சேய் நல விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) நாகோசிப்பட்டி கிராமம், எலவம்பட்டி துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய ஒரு கிராமம் ஆகும். நாகோசிப்பட்டி கிராம மக்கள் தொகை 456 ஆகும். எலவம்பட்டி கிராம மக்கள் தொகை 3,399 ஆகும். அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளின்படி 5,000 மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, நாகோசிப்பட்டி கிராமத்தில் தனியாக ஒரு தணை சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

29—

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர்

**வினா 16724—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்துாரில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் இல்லாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் சுற்றுச் சுவர் அமைத்துத்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சி ஒன்றியம் சித்துாரில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் எழுப்பப்படவில்லை.

(ஆ) இந்த நிதியாண்டில் மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்கும் திட்டம் எதுவுமில்லை.

30—

### புது ஊடுகதிர் கருவி வழங்குதல்

**வினா 16910—திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் உள்ள (எக்ஸ்ரே) ஊடுகதிர் கருவி பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புது ஊடுகதிர் கருவி எப்பொழுது வழங்கப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடையநல்லூர்அரசு மருத்துவமனயிலுள்ள (எக்ஸ்ரே) ஊடுகதிர் கருவி தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது எனினும், இதன் நீண்ட கால உபயோகத்தினைக் கருத்திற்கொண்டு இதற்குப் பதிலாக புதிய ஊடுகதில் கருவி இம்மருத்துவமனைக்குத் தேவையா என்பதை ஆராய்ந்து உரிய முடிவு மேற்கொள்ளப்படும்.

31—

### ஹீட்டர் மெஷின் அமைத்தல்

**வினா 18753—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் 24 மணி நேரமும் இயங்கும் ஹீட்டர் மெஷின் (HeaterMachine) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு சுடுநீர் வழங்குவதைப் பொறுத்தமட்டில் தற்போது 4 சுடுநீர் இயந்திரங்கள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. நோயாளிகளுக்கு 24 மணி நேரமும் சுடுநீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகள் உள்நோயாளிகள் பிரிவில் (Paediatric Ward)வெப்ப சீராக்கும் (Warmer) கருவி நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

32—

### அரசு தலைமை மருத்துவமனையில் கணிப்பொறி வசதி

**வினா 18761—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் கணிப்பொறி வசதிகள் உள்ளன?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) தமிழ்நாட்டில் எற்கெனவே 15 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் கணிப்பொறி வசதிகள் உள்ளன.

(ஆ) கணிப்பொறி வழங்கப்பட்ட மாவட்ட அரசு தலைமையிட மருத்துவமனைகள் விவரம் பின்வருமாறு.

1. காஞ்சிபுரம்
2. வேலூர்
3. திருப்பூர்
4. ஈரோடு
5. கடலூர்
6. பெரியகுளம்
7. தருமபுரி
8. உதகமண்டலம்
9. திருச்சி
10. புதுக்கோட்டை
11. இராமநாதபுரம்
12. திண்டுக்கல்
13. தூத்துக்குடி
14. நாகர்கோவில்
15. நாகப்பட்டினம்

மீதமுள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கும் கணிப்பொறி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



33—

### அரசு மருத்துவமனையில் படுக்கை வசதி

**வினா 18789—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு மருத்துவமனையில் கட்டில்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாததால் நோயாளிகளைத் தரையில் படுக்க வைப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தவிர்க்க தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) வேலூர் அரசு மருத்துவமனையில் தற்போதுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை விட கட்டில்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பினும் சில சமயங்களில் உள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்போது சில நோயாளிகளுக்குத் தரையில் படுக்கை விரிப்புகள் அளித்து படுக்கவைப்பது தவிர்க்கமுடியாததாக உள்ளது. மேலும், இம்மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையைவிட கட்டில்கள் அதிகமாகவே வழங்கப்பட்டுள்ளன.

34—

### மீதேன் வாயு தயாரிக்கும் கலன்கள்

**வினா 19457—திரு. கு. மனோசரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விலங்கின கழிவுகள், வேளாண் கழிவுகள் மூலம் மீதேன் வாயு தயாரிக்கும் கலன்கள் 1997-98 ஆம் ஆண்டில் எத்தனை நிறுவப்பட்டுள்ளன?

(ஆ) தருமபுரி மாவட்டத்தில் எத்தனை நிறுவப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) 1997-98 ஆம் ஆண்டில் விலங்கின மற்றும் வேளாண் கழிவுகள் மூலம் மீதேன் வாயு தயாரிக்கும் மூன்று கலன்கள் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் நிறுவப்பட்டன.

(ஆ) தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 1 x 60 க.மீ. அளவு கலன் அமைக்கப்பட்டுள்ளது.

35—

## சூரிய ஒளி லாந்தர்கள்

**வினா 19469—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளி லாந்தர்கள் விலை அதிகமாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை அதிக எண்ணிக்கையில் தயாரித்து விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) 1997-98-ல் தமிழகத்தில் எத்தனை லாந்தர்கள் வழங்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ அறியும்.

(ஆ) அதிக எண்ணிக்கையில் சூரிய ஒளி லாந்தர்கள் தயாரிப்பதை ஊக்குவிப்பதன் மூலம் அதன் விலையை ஓரளவிற்குக் குறைக்கமுடியும். இருப்பினும், அதற்கேற்றவாறு தேவையும் அதிகரிக்கப்படவேண்டும். மக்களிடையே சூரிய ஒளி லாந்தர்களை பிரபலப்படுத்த மத்திய அரசு சூரிய ஒளி லாந்தர்களுக்கு மானியம் வழங்கி வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் பொது வகையைச் சார்ந்தவர்களுக்கு ரூ.1,500 மானியமும், ஆதிதிராவிடர், பழங்குடியினர், வறுமைக் கோட்டிற்குக் கீழ்





உள்ளவர்களுக்கு ரூ.2,000 வீதமும், மானியம் வழங்க அரசு ஆணை பிறப்பித்தது. மானியத் திட்டத்தின் மூலம் சூரிய ஒளி லாந்தர்களை விநியோகிப்பதன் மூலம் இதன் தேவை கணிசமாக அதிகரித்து வருகிறது. எனவே, வருங்காலத்தில் சூரிய ஒளி லாந்தர்களின் விலை குறைய வாய்ப்புண்டு.

(இ) 1997-98-ல் 880 லாந்தர்கள் விற்கப்பட்டுள்ளன.

36—

## சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு

**வினா 19472—திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத் தலைமை மருத்துவமனையில் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு நிறுவுவதற்குத் தேவையான நிழல் விழாத இடவசதியும் மென்னீர் வசதியும் இருப்பின், சென்னை, மருத்துவ வசதி மற்றும் ஊரகப் பணிகள் துறை இயக்குநரைக் கலந்தாலோசித்து சூரிய ஒளி சுடுநீர் அமைப்பை நிறுவ உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

## துணை மின் நிலையம் நிறுவுதல்

**வினா 19482—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், திருக்கானூர்பட்டியில் 230 கே.வி.ஏ. துணை மின் நிலையம் நிறுவும் பணி ஆரம்பிக்கப்பட்டு

சுமார் 25 சதவீதத்திற்கு மேல் வேலைகள் முடிக்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) திருக்கானூர்பட்டி கிராமத்தில் நிறுவப்பெறும் 230 கே.வி.ஏ. துணை மின் நிலையம் (தஞ்சாவூர் 230 கே.வி.ஏ. துணை மின் நிலையம்) பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

(ஆ) பணிகள் முழுவதுமாக முடிக்கப்பெற்று, தஞ்சாவூர் 230 கே.வி.ஏ. துணை மின் நிலையம் டிசம்பர் 1998 வாக்கில் இயக்கி வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**38—**

### மின் இணைப்பு வழங்குதல்

**வினா 19485—திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயில் மடங்கள், நிலங்களை விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு கிராம நிர்வாக அலுவலர் சான்று வழங்கி கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வழங்வதைப்போல் மின்சார பம்புசெட்டுகள் அமைக்க, குத்தகைப் பதிவேடு இருந்தால் மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கோயில் மடங்களின் நிலங்களை விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு பம்புசெட்டுகள் அமைக்க, பதிவு செய்யப்பட்ட (Registered lease deed) குத்தகைப் பதிவேடு இருந்தால் மின் இணைப்பு வழங்கப்படும். குத்தகைப் பதிவேடு பதிவு செய்யப்படாவிட்டால், கோயில் நிர்வாகத் துறையின் தகுதி வாய்ந்த அலுவலரிடமிருந்து மின் இணைப்பு வழங்குவதற்கு தடையில்லாச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.



**39—**

### தரணி சர்க்கரை ஆலை

**வினா 19504—திரு. ஏ. இராசேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர், தரணி சர்க்கரை ஆலையில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை போளூர் வட்டத்திற்கு விநியோகம் செய்த பின்பு மற்ற இடங்களுக்கு மின்சாரம் அனுப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) போளூர், தரணி சர்க்கரை ஆலையில் உற்பத்தி செய்யப்படும் உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்வாரிய கட்டமைப்பில் 110 கி.வோ. (110 K.V.) மட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. பொது மின்சார கட்டமைப்பில் பெறப்பட்டு தேவையான இடங்களில் உபயோகத்திற்குப் பெறப்படுவதால், போளூர் வட்டத்திற்கு இதே மின்சாரத்தை விநியோகிப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனாலும், மேற்கண்ட நிலையத்திலிருந்து பெறப்படும் மின்சாரம் அருகிலுள்ள மின் விநியோக அமைப்பின் மின் அழுத்தத்தை சீராகப் பராமரிக்க பெரிதும் உதவுகிறது.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

**40—**

### தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு

**வினா 19506—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 150 கே.வி.ஏ.க்கு அதிகமான அளவில் உயர் அழுத்த மின் சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக

நிறுவனங்களுக்கு 30 சதவீத மின்வெட்டு எத்தனை தொழிற்சாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 150 கே.வி.ஏ.க்கு அதிகமான அளவில் உயர் அழுத்த மின்சக்தியைப் பயன்படுத்தும் 2,641 தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு 30 சதவீத மின்வெட்டு அறிவிக்கப்பட்டது. இந்த 30 சதவீத மின்வெட்டு 10-7-1998 முதல் விலக்கப்பட்டது.

**41—**

**துணை மின் நிலையத்தை மாற்றி அமைத்தல்**

**வினா 19523—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு எடப்பாடி 110 கே.வி. துணை மின் நிலையத்தை 230 கே.வி. துணை மின் நிலையமாக மாற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரு பகுதியிலுள்ள பல 110 கி.வோ. துணை மின் நிலையங்களின் தேவையைப் பூர்த்தி செய்யவே ஒரு 230 கி.வோ. துணை மின் நிலையம் நிறுவப்படுகிறது. தவிர, ஒரு 230 கி.வோ துணை மின் நிலையத்தை நிறுவுவதற்கு சுமார் ரூ.20 கோடி அளவுக்குக் கணிசமான தொகை தேவைப்படுகிறது. எடப்பாடியிலிருந்து சுமார் 35 கி.மீ. தொலைவில் சேலத்தில் ஒரு 230/110 கி.வோ. துணை மின் நிலையமும் சுமார் 24 கி.மீ. தொலைவில் உள்ள திருச்செங்கோட்டில் (ஊஞ்சனையில்) ஒரு 230/110 கி.வோ. துணை மின் நிலையமும், சுமார் 26 கி.மீ. தொலைவில் மேட்டூரில் ஒரு 230/110 கி.வோ. துணை மின்



நிலையமும் ஏற்கெனவே உள்ளன. எடப்பாடியில் உள்ள 110 கி.வோ. துணை மின் நிலையத்தின் தேவையை சேலத்தில் உள்ள 230/110 கி.வோ. துணை மின் நிலையமும், மேட்டூர் மற்றும் கீழ் மேட்டூரில் உள்ள புனல் மின் நிலையங்களும் பூர்த்தி செய்கின்றன. ஆகவே, எடப்பாடி 110 கி.வோ. துணை மின் நிலையத்தை 230 கி.வோ. துணை மின் நிலையமாக உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**42—**

**சூரிய சக்தியால் மின்சாரம் உற்பத்தி செய்தல்**

**வினா 19530—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள மின் பற்றாக்குறையைப் போக்க தமிழ்நாட்டில் உள்ள அரசுக் கட்டடங்களில் சூரிய சக்தியால் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மின்பற்றாக்குறையை எதிர்கொள்ள சூரியஒளி மின் நிலையங்கள் மூலம் அரசு கட்டடங்களுக்கு மின்சார வசதி செய்து தர முடியும்.

இருப்பினும், வழக்கத்திலுள்ள அனல் மின் திட்டங்களை ஒப்பிடும்போது சூரிய ஒளி மின் நிலையங்கள் அதிக விலையுள்ளவை. உதாரணத்திற்கு சூரிய ஒளி மின்நிலையம் மூலம் 1 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க ரூ.30 கோடி செலவாகும். அதே நேரத்தில் அனல் மின் திட்டம் மூலம் 1 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க சுமார் ரூ.5 கோடிதான் செலவாகும். தமிழ்நாட்டு மின்சாரக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள சூரிய ஒளியால் இயங்கும் கீழ்க்கண்ட மின் நிலையங்கள் சோதனை முறையில் இயங்கி வருகின்றன:

| | |
|---|---|
| 1. தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு காற்றாலை பண்ணை | 15 கி.வாட் |
| 2. கோவை மாவட்டம், பல்லடம் தாலுகாவில் உள்ள செங்காளிபாளையம் | 25 கி.வாட் |

3. கோவை மாவட்டம், பல்லடம் வட்டம்,
சித்தநாயக்கன்பாளையம் 25 கி.வாட்
4. கோவை மாவட்டம், பல்லடம் வட்டம்,
நல்லூர்பாளையம் 100 கி.வாட்.

சூரிய ஒளி மின் திட்டத்தைப்பற்றி மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த தமிழ்நாடு அரசு ரூ.3.25 இலட்சம் விலை கொண்ட ஒரு கிலோ வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் நிலையத்தை கட்டடங்களில் அமைக்கும் பயனாளிகளுக்கு ரூ.75,000 வீதம் மானியம் வழங்கி வருகிறது. மேலும், 4 கிலோ வாட் திறன் கொண்ட முன்னோடி நிலையம் ஒன்று தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டு வருகிறது. இது தங்குதடையில்லாத மின்சாரம் மிக அவசியமாகத் தேவைப்படும் அரசுக் கட்டடங்களில் சூரிய ஒளி மின் நிலையங்கள் அதிக அளவில் நிறுவ வழி வகுக்கும்.

**43—**

**கண் சிகிச்சைக்குத் தனிப் பிரிவு அமைத்தல்**

**வினா 19617—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு பொது மருத்துவமனையில் கண் சிகிச்சைக்காக ஒரு தனிப்பிரிவு அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

இல்லை. எடப்பாடிக்கு அருகில் 1. ராசிபுரம், 2. நாமக்கல், 3. மேட்டூர் அணை ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் ஏற்கெனவே கண் சிகிச்சைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இந்நிலையில் எடப்பாடி அரசு மருத்துவமனையில் தனியாக ஒரு கண் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் அவசியம் தற்போது ஏற்படவில்லை.



**44—**

**சித்த மருத்துவப் பிரிவு**

**வினா 19636—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் எத்தனை ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவு இயங்கி வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில், 14 ஆரம்ப சுகாதார நிலையங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்கி வரும் ஊர்கள் பின்வருமாறு:

ஆரம்ப சுகாதார நிலையம்:

| | |
|---|---|
| 1. சித்தூர் | 8. நங்கவெள்ளி |
| 2. கொளத்தூர் | 9. தாரமங்கலம் |
| 3. காரியப்பட்டி | 10. அரியபாளையம் |
| 4. மல்லிக்கரை | 11. மேலூர் |
| 5. மீனலோடுசத்திரம் | 12. தலைவாசல் |
| 6. மேச்சேரி | 13. வேழவேந்தி |
| 7. சரகபள்ளையூர் | 14. கண்ணன்குறிச்சி |

**45—**

**புறம்போக்கில் குடியிருப்பவர்களுக்கு பட்டா**

**வினா 12446—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொட்டிபாளையம் கிராமம், பிச்சம்பாளையம்புதூர் கிருஸ்தவக் காலனியிலுள்ள க.எ. எண். 4 நத்தம் புறம்போக்கில் குடியிருந்து வருபவர்களுக்கு எப்போது பட்டா வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*பரிசீலனையில் உள்ளது.*

**46—**

**நிருவாக வசதிக்காக கிராமங்களைப் பிரித்தல்**

**வினா 15968—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரிய கிராமங்களை நிர்வாக வசதிக்காகப் பிரிக்கும்போது நிலப்பரப்பு, மக்கள் தொகை அல்லது வருமானத்தின் அடிப்படையில் பிரிக்கப்படுகிறதா என்பதை அரசு அறிவிக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எடப்பாடி தொகுதியில் எத்தனை கிராமங்கள் பிரிக்கப்பட வேண்டியிருக்கும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர்:**

*(அ) தற்போது முழுநேர கிராம நிர்வாக அதிகாரிகள் மற்றும் கிராம உதவியாளர்களை நியமித்திருப்பதால், தற்போதுள்ள கிராமங்களை நிர்வாக வசதிக்காக மீண்டும் பிரிப்பதற்கான அவசியம் தற்போது இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**47—**

**ஓமலூர் தொகுதியில் வீட்டுமனைப் பட்டா**

**வினா 15974—திரு. ஆர். ஆர். சேகரன்:** *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-*

*ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வட்டம், நடுப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த காமராஜ் நகர், அண்ணா நகர், எலத்தூர் பகுதிகளில் அரசு புறம்போக்கு நிலங்களில் நீண்டகாலமாக வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*



**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த்துறை அமைச்சர்:**

*இவ்வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலம் தீர்வை ஏற்பட்ட தரிசு என்ற வகைப்பாடு கொண்டிருப்பினும் ஒதுக்கப்பட்ட காட்டிற்கு 20 மீட்டர் பகுதிக்குட்பட்டு தடையாணை புத்தகத்தில் பதிவாகியுள்ளது. எனினும், நிலவகை மாறுதல் செய்து ஒப்படை வழங்குவது குறித்து வனத் துறையினரின் சம்மதம் கோரப்பட்டுள்ளது. சம்மதம் கிடைக்கப் பெற்றவுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**48—**

**சேலம் மாவட்டத்தில் வீட்டுமனைப் பட்டா**

**வினா 17589—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்திலுள்ள வட்டாச்சியர் அலுவலகங்கள் மூலமாக 1996, 1997, 1998 ஆம் ஆண்டுகளில் வீட்டுமனைப்பட்டா கோரி கொடுத்த மனுக்களின் எண்ணிக்கை எவ்வளவு?*

*(ஆ) எத்தனை பேருக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் வீட்டுமனைப் பட்டா அளித்த விவரம் பின்வருமாறு:*

| ஆண்டு | வீட்டுமனைப் பட்டா கோரி வரப்பெற்ற மனுக்கள் | வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டவை |
|---|---|---|
| 1. 1996 | 4,036 | 4,004 |
| 2. 1997 | 25,521 | 24,651 |
| 3. 1998 (ஆகஸ்ட் 98 வரை) | 5,810 | 5,411 |

49—

### விவசாயிகளுக்குப் பட்டா வழங்குதல்

**வினா 17611—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஏற்காடு, கல்வராயன்மலை, களியல், வலிய குலா ஆகிய இடங்களில் வனச் சட்டம் வரும் முன்னரே குடியிருந்து வரும் விவசாயிகளுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 1168, வருவாய்த் துறை, நாள் 25.7.1989ல் இம்மாநிலத்திலுள்ள அனைத்து மலைப் பகுதிகளிலும் ஒப்படை வழங்குவதற்கும், ஆக்கிரமங்களை வரன்முறைப்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதால், சேலம் மாவட்டம், ஏற்காடு, கல்வராயன்மலைப் பகுதிகளில் ஒப்படை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் கிராமத்திற்கு உட்பட்ட வலிய குலா என்னும் இடம் வன நிலத்தைத் தொட்டு உள்ளதாலும், நில அளவிற்கு உட்படாத காட்டுப் புறம்போக்கு ஆனதினாலும், ஆக்கிரமிப்பாளர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

50—

### சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்படுதல்

**வினா 4805— திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சிகளில் சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (1) நகராட்சிகள்— 30.4.1997 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அரசாணை(நிலை) எண் 101-ல் திருத்தப்பட்ட அளவுகோலின்படி நகராட்சிகளில் 40 துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு துப்புரவு ஆய்வாளர் பணியிடம் எனக் கணக்கிட்டு அதன்படி பொது மாறுதலின்போது காலியாக உள்ள துப்புரவு ஆய்வாளர் பணி இடங்களை நிரப்ப நகராட்சி நிர்வாக ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(2) பேரூராட்சிகள்—அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் பேரூராட்சிகளில் சுகாதார ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கான நியமன அலுவலர்கள் ஆவர். மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இது தொடர்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(3) மாநகராட்சிகள்—சென்னை மாநகராட்சி நலத் துறையில் காலியாக உள்ள சுகாதார ஆய்வாளர் பதவிகளை நிரப்புவதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து பட்டியல் பெறப்பட்டு சென்னை மாநகராட்சி ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சி—மதுரை மாநகராட்சியில் நிரப்பப்பட வேண்டிய துப்புரவு ஆய்வாளர் பணியிடம் ஏதும் இல்லை.

திருநெல்வேலி மாநகராட்சி—திருநெல்வேலி மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் பணியிடம் ஏதும் காலியில்லை.

கோவை மாநகராட்சி—கோவை மாநகராட்சியில் தற்சமயம் சுகாதார ஆய்வாளர்கள் பணியிடம் ஏதும் காலியாக இல்லை.

திருச்சி மாநகராட்சி— திருச்சி மாநகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இதுநாள் வரை இருந்து வந்த கன்சர்வன்சி பணிகள் அனைத்தும் பொறியியல் பிரிவுக்கு மாற்றப்பட்டு அதன்படி செயல்பட்டு வருகின்றது. மேற்படி துப்புரவுப் பணிகள் பொறியியல் பிரிவுக்கு மாற்றப்பட்டுவிட்டதால் இதுநாள் வரை துப்புரவு ஆய்வாளர்கள் பார்த்து வந்த கன்சர்வன்சி பணிகளை, கன்சர்வன்சி இன்ஸ்பெக்டர்கள் என்ற

பணியிடத்தை புதிதாக ஏற்படுத்தி அவர்களின் மேற்பார்வையில் அப்பணிகளை பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தேவையிருப்பின் துப்புரவு ஆய்வாளர் பணியிடங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சேலம் மாநகராட்சி– சேலம் மாநகராட்சியில் சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள் ஏதும் காலியில்லை.

51—

### தண்டராம்பட்டு தொகுதியில் குடிநீர் வழங்குதல்

**வினா 13957—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியத்திலுள்ள தண்டரை ஊராட்சி காலனி பகுதி, அண்டம்பள்ளம் ஊராட்சி காலனி பகுதி, சுவாலப்பட்டி ஊராட்சி உயர்நிலைப் பள்ளி அருகில் உள்ள குலக்குடி ஊராட்சி, லட்சுமிபுரம் ஆகிய குடியிருப்புப் பகுதிகளுக்கு மேல் நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தண்டரை, அண்டம்பள்ளம், அவாலவெட்டி கொள்க்குடி, லட்சுமிபுரம் ஆகிய குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க 1998-99 நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ள தக்க பரிசீலனை செய்யப்படும்.

52—

### பெரியார் பூங்காவைப் புதுப்பித்தல்

**வினா 14586—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

வேலூரில் உள்ள பெரியார் பூங்கா மிகவும் சீர் அழிந்த நிலையில் உள்ளதால் அதனைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூரில் உள்ள பெரியார் பூங்கா, நகராட்சி கட்டுப்பாட்டிலிருந்து பத்து வருடங்களுக்கு முன்னதாக இந்தியத் தொல் பொருள் இலாகாவிற்கு ஒப்படைக்கப்பட்டது. எனவே, இப்பூங்கா தற்போது நகராட்சியின் கட்டுப்பாட்டில் இல்லை.

53—

### விவசாயம் செய்வதற்கு உதவி

**வினா 18591—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

ஓமலூர் தொகுதியில் குறைந்த அளவு மழை பெறும் பகுதிகளில் நவீன முறையில் விவசாயம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி அடங்கும் சேலம் மாவட்டத்தின் இயல்பான வருட மழை அளவு 841.5 மி.மீட்டராகும். இம்மழை அளவானது மாநிலத்தின் சராசரி வருட மழை அளவான 925 மி.மீட்டரைவிட 10 சதம் குறைவாகும்.

பொதுவாக, மானாவாரி நிலங்களில் மட்டுமே பருவ மழையை எதிர்பார்த்து சாகுபடி செய்யப்படுவதால், குறைந்த அளவு மழை பெறும் பகுதிகள் பருவ மழை பொய்த்துவிட்டால் பாதிப்படைகின்றன. இருப்பினும், தமிழ்நாட்டில் குறைந்த அளவு மழை பெறும் மானாவாரி பகுதிகளில் கீழ்க்கண்ட தொழில் நுட்பங்கள் கடைபிடிக்கப்படுவதற்கு இத்துறையினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

1. கோடை உழவு செய்தல்.

2. விதை கடினப்படுத்துதல்.

3. வறட்சியைத் தாங்கும் ரக விதைகளைத் தேர்வு செய்து விதை நேர்த்தி செய்தல்

4. ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்து விதைப்பதற்கு முன் இடுதல்

5. ஆழச்சால் அகலப் பாத்திகள் அமைத்து மண் ஈரத்தைப் பாதுகாத்தல்

மேலும், குறைந்த அளவு மழை பெரும் பகுதிகளுக்கு மைய அரசு ஆதரவோடு தேசிய மானாவாரி நீர்ப்பிரிமுகடு மேம்பாட்டுத் திட்டம், 1990-91 ஆம் ஆண்டு முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நீர்ப்பிரிமுகடுகள் ஐந்து தட்பவெட்ப நிலைப் பகுதிகளின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நிலம் மற்றும் ஈரப்பதத்தை நிர்வகித்தல் மற்றும் பாதுகாத்தல், இருக்கும் வளங்களைக் கொண்டு உணவு மற்றும் இதர தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியனவாகும். இத்திட்டத்தின்கீழ் சாகுபடி நிலச் செயல்பாடுகளுக்கு 1998-99 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு பெற்று செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, ஓமலூர் தொகுதியில் தாரமங்கலம் மற்றும் காடையாம்பட்டி வட்டாரங்களில் தேசிய மானாவாரி நீர்ப்பிரிமுகடு மேம்பாடு திட்டம் நடப்பு ஆண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

54—

**உணவு தானியங்களின் உற்பத்தி**

**வினா 18600—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் 1997-98 ஆம் ஆண்டு உணவு தானியங்களின் உற்பத்தி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்பட்ட உணவு தானியப் பயிர்களின் விவரம் பின்வருமாறு:



| | பரப்பு (எக்டர்) | உற்பத்தி (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1. நெல் அரிசி | 23,61,367 | 70,51,595 |
| 2. சோளம் | 5,29,866 | 3,88,060 |
| 3. கம்பு | 2,17,625 | 2,62,993 |
| 4. கேழ்வரகு | 1,44,465 | 3,04,653 |
| 5. மக்காச்சோளம் | 81,803 | 1,32,941 |
| 6. இதர சிறு தானியங்கள் | 89,844 | 76,730 |
| 7. பயறு வகைகள் | 10,39,000 | 4,52,000 |
| மொத்தம் | | 86,68,972 |

எனவே, மேற்கண்ட உணவுப் பயிர்கள் மூலம் 1997-98 ஆம் ஆண்டு 86,68,972 மெட்ரிக் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் 1997-98 ஆம் ஆண்டுக்கான பொருளியல் மற்றும் புள்ளியல் இயக்குநர் அவர்களது இறுதி முன் மதிப்பீட்டறிக்கையின்படி அளிக்கப்படுகிறது.

55—

**மரக்கன்று நடும் திட்டம்**

**வினா 18621—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மரக்கன்று நடும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அந்தத் திட்டத்திற்கு ஒதுக்கிய தொகையில் எவ்வளவு செலவிடப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டம் தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டு மக்கள் நலத்தைக் காக்கவும், மழை வளத்தைப் பெருக்கவும் மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாளன்று மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 ஊராட்சி ஒன்றியங்களைத் தேர்வு செய்து மொத்தம்

75 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படத் தொடங்கியது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், 25 கி.மீ. வீதம் 75 ஊராட்சி ஒன்றியங்களில் சாலையின் இரு ஓரங்களில் 1875 கி.மீ. தூரத்திற்கு புளி, வேம்பு ஆகிய மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. மேலும், மரக் கன்றுகள் நல்ல தரமுள்ளவையாகவும் சரியான பருவத்தில் உள்ளதாகவும் தேர்வு செய்யப்பட்டு, தேசிய நெடுஞ்சாலை மாநிலப் பெருவழிகளோடு இணையும் பஞ்சாயத்து சாலைகளில் நடப்பட்டன. இத்திட்டத்தின் சிறப்பு சென்ற ஆண்டு மரக்கன்றுகள் நடப்பட்டதோடு மட்டுமல்லாமல் மேலும் தொடர்ந்து இரண்டாண்டுகள் நல்ல முறையில் பராமரித்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு வருவாய் பெற்றுத் தருவதாகும். 1997-98 ஆம் ஆண்டு நடப்பட்ட மரக் கன்றுகளுக்கு 1998-99இல் நீர் ஊற்றுவதற்குக் கூலி, காவலர் கூலி மற்றும் தழைக்காத மரக் கன்றுகளை அகற்றி மீண்டும் வேறு புதிய மரக்கன்றுகளை நட்டு பராமரிப்பதற்கு என ரூ.299.531 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக பெரம்பலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய இரு மாவட்டங்களில் இத்திட்டச் செயல்பாட்டிற்காக ரூ.58.50 இலட்சம் செலவுக்கும் ஆகஸ்டு மாதம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டு 26 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு 5 ஊராட்சி ஒன்றியங்கள் வீதம் 130 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டத்தை ரூ.7.39 கோடி செலவில் விரிவுபடுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மாண்புமிகு முதலமைச்சர் மரம் வளர்ப்புத் திட்டத்தில் 1997-98 இல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.735.00 இலட்சத்தில் ரூ.537.972 இலட்சம் 31-3-1998 வரை செலவிடப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டு நடப்பட்ட மரக் கன்றுகளுக்கு 1998-99 ஆம் ஆண்டு பராமரிப்பிற்கென ரூ.299.531 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ஜுன் மாதம் வரை ரூ.57.369 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**56—**

**செங்கோட்டை குளக்கரைகளைப் பலப்படுத்துதல்**

**வினா 13907—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகராட்சிப் பகுதியில் உள்ள செங்கோட்டை குளக்கரைகளைப் பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை குளக்கரைகளைப் பலப்படுத்தவும், தடுப்புச் சுவர் கட்டவும் சம்பந்தப்பட்ட பணிகள் நிதி நிலைமைக்கேற்ப எடுத்துக்கொள்ளப்படும்.

**57—**

**பரமக்குடியில் விருந்தினர் இல்லம்**

**வினா 15906—திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடியில் புதிய விருந்தினர் இல்லம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

பரமக்குடியில் புதிய விருந்தினர் இல்லம் கட்டித்தருவதற்கான செயற்குறிப்பு அரசின் நிதிநிலைமைக்கேற்ப 1999-2000 வருடத்திய பகுதி-2 திட்டத்தின்கீழ் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**58—**

**உசிலம்பட்டித் தொகுதியில் கால்வாய்களில் தண்ணீர் விடுதல்**

**வினா 16870—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டித் தொகுதி, முதலைக்குளம் கண்மாயில் மேற்கு மடைகளுக்கு திருமங்கலம் பிரதானக் கால்வாய் உடன்காட்டுப்பட்டி பிரிவிலிருந்து தண்ணீர் விடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

59—

**பேருந்து கட்டும் தொழிற்சாலை நிறுவுதல்**

**வினா 15548—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை அல்லது தென்காசியில் பேருந்து கட்டும் தொழிற்சாலை நிறுவும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

60—

**தனியார் பேருந்துகளுக்கு நேரம் நிர்ணயம் செய்தல்**

**வினா 15850—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு முதல் காஞ்சிக் கோயில், திங்களூர், கவுந்தப்பாடி ஆகிய இடங்களுக்கு நசியனூர் வழியாக இயங்கும் தனியார் பேருந்துகளுக்கு நேரம் நிர்ணயம் செய்ய அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு பேருந்து நிலையத்திலிருந்து நசியனூர், காஞ்சிக்கோயில் வழியாக கவுந்தப்பாடி மற்றும் திங்களூர் ஆகிய பகுதிகளுக்கு வழித்தடம் எண் 8, வரிசையில் 14 பேருந்துகள் (அரசு மற்றும் தனியார்) இயங்கி வருகின்றன. மேற்படி பேருந்துகள் அனைத்துமே ஒரே நேரத்தில் புறப்படுவதால் பொது மக்களுக்கு உகந்ததாக இல்லை. கால அட்டவணையை மாற்றியமைக்க வேண்டும் என வேண்டுகோள்கள் வரப்பெற்றன.

(ஆ) மேற்படி பேருந்துகளுக்கு கால நிர்ணயம் செய்யும் பொருட்டு 21-8-1998 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கும் திருவாளர்கள் கௌரி மோட்டார் பஸ் சர்வீஸ் ஆகியோர்களின் பேருந்துகளுக்கும் கால நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற தனியார் பேருந்துகளக்கு எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை.

61—

**பேருந்துகள் இயக்குதல்**

**வினா 17921—திரு. ஜி.கே.மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி அம்மா மண்டபம் ரோடு வழியாக திருச்சி ஜங்ஷன் பேருந்து நிலையத்திலிருந்து நகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி ஜங்ஷன் பேருந்து நிலையத்திலிருந்து நகரப் பேருந்து அம்மா மண்டபம் சாலை வழியாக இயக்கப்பட்டு வருகிறது.

62—

**மீன்பாடி வாகனங்களுக்கு உரிமம்**

**வினா 20386—திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூன்று சக்கர மோட்டார் பொருத்தப்பட்ட மீன்பாடி வாகனங்களுக்கு தகுந்த உரிமம் வழங்கி, முறையாக ஓட்ட தகுந்த ஆலோசனைகளை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 25 சி.சி.க்குக் குறைவான சக்தியுள்ள இன்ஜின் பொருத்தப்பட்ட மூன்று சக்கர சைக்கிள் ரிக்ஷாக்களை தமிழ்நாடு வாடகை வண்டிகள் சட்டம் 1911(Hackney Carriage Act, 1911)-ன்கீழ் கொண்டு வரவும், 25 சி.சி.க்கு மேல் சக்தியுள்ள என்ஜினுடன் இயக்கப்படும் இத்தகைய வண்டிகளை மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கும் அரசாணை எண் 1183, உள் துறை, நாள் 31-8-1998 இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இதுபோன்ற வண்டிகள் தகுந்த உரிமம் இன்றி 1-10-1998 முதல் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் இதனை போக்குவரத்துத் துறையும், காவல் துறையும் இணைந்து அமல்படுத்தும் என்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

63—

**பேருந்து பணிமனை அமைத்தல்**

**வினா 21098—திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திரும்பெரும்புதூரில் தமிழ்நாடு அரசப் போக்குவரத்துக் கழகம் (காஞ்சிபுரம்) மூலம் அவசியம் கருதி பேருந்துப் பணிமனை



அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமை**

(அ) ஆம்.

(ஆ) திருப்பெரும்புதூரின் முக்கியத்துவத்தைக் கருதி தமிழ்நாடு அரசப் போக்குவரத்துக் கழக (விழுப்புரம் கோட்டம் 3) சார்பில் பணிமனை அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான சுமார் 2.77 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு, இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அவர்களுக்கு நிலக் கிரயத்திற்குக் கோரிக்கை அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

64—

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா 11998— திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கோபி-தாராபுரம் சாலையிலிருந்து செங்காளிப்பாளையம் வரை செல்லும் பாதையை தார்ச்சாலையாக அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோபி-தாராபுரம் சாலையிலிருந்து செங்காளிப்பாளையம் செல்வதற்குக் கீழ்க்கண்ட இரண்டு சாலை வழிகள் உள்ளன.

1. ஊமரிச்சீவலக-செங்காளிப்பாளையம் சாலை கி.மீ.0/0-4/8

2. தாளப்பதியிலிருந்து திருப்பூர்-ஜெயமங்கலம் சாலை கி.மீ. 0/0-10/2..

மேற்கூறிய இரண்டு சாலைகளும் தார்ச் சாலைகளாக போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளன. செங்காளிப்பாளையம் கிராமம், தாளப்பதியிலிருந்து திருப்பூர்-ஜெயமங்கலம் செல்லும் சாலையில் கி.மீ. 3/4 இல் அமைந்துள்ளது. இச்சாலையும் தார்ச் சாலையாக போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளது.

65—

## சின்ன திருப்பதி கோயிலில் அடிப்படை வசதிகள்

**வினா 3738—திரு. ஆர். ஆர்.சேகரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூரில் பிரசித்திபெற்ற தலமான சின்ன திருப்பதி கோயிலில் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை வசதிகள் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) இந்த அடிப்படைத் தேவைகள் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ)மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூரில் பிரசித்தி பெற்ற தலமான சின்னதிருப்பதி கோயிலில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்கும் பணி தொடங்கப்பட்டு, கடந்த 15-7-1998 அன்று நிறைவேற்றப்பட்டது. பக்தர்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. மேலும், மத்திய சுகாதாரத் திட்டத்தின்கீழ் 10 கழிவறைகளும் கட்டி முடிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளன.



66—

## பவானி நகரில் அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயிலுக்கு வருமானம்

**வினா 10004—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகரில் அமைந்துள்ள அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயிலுக்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை பூமிகள் எத்தனை ஏக்கர்?

(ஆ) அதன் மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு?

(இ) கட்டடங்களின் வாடகை மூலம் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) பவானி அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக உள்ள நிலங்கள் மற்றும் அவற்றின் வருமானம்:

| | ச.எண் | நஞ்சை ஏ.செ. | புஞ்சை ஏ.செ. | ஆண்டு வருமானம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. பவானி நகர் | 772-2 | - | 9.07 (5.085 சாகுபடி மற்றும் 3.995 தரிசு) | 10,000 |
| 2. தொட்டி பாளையம் | 217 221-2 | 1.73 (இரு குத்தகைதாரர்கள் தலா ரூ.500 வீதம்) | - | 1,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. ஒரத்தநல்லூர் | 243-5 | - (குத்தகை 1 நபர்) | 4.64 | 2,000 |
| 4. பவானி நகர் | 736-2<br>736-4 | - (இதில் 66 நபர்கள் அடிமனை வாடகையில் வீடுகட்டி மனை வாடகை செலுத்தி வருகிறார்கள்) | 4.86 | 2,620 |

இது தவிர சர்வே எண் 784-8இல் 0.05 சென்ட் நிலத்தில் கோயில் அமைந்துள்ளது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் கோயில் அருகில் உள்ள 0.40 சென்ட் நிலத்தை திருவிழா சமயங்களில் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு மேற்படி கோயிலுக்கு 1935-ல் கொடுத்துள்ளார். இந்நிலம் தொடர்பாக உயர்நீதிமன்ற மேல் முறையீடு வழக்கொன்று நிலுவையில் உள்ளது. திருக்கோயில் பெயரில் தற்போது ரூ.13,15,180 வைப்புத் தொகையாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

67—

## மொழிபெயர்ப்புக் குழு அமைத்தல்

**வினா 13020—திரு. கே. சுப்பராயன்:**

**திரு.இரா. மணிமாறன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற நாட்டு நல்லறிஞர் இலக்கியப் படைப்புகளைத் தமிழில் கொண்டுவர மொழிபெயர்ப்புக் குழு ஒன்றை நிரந்தரமாக அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) நிரந்தரமாக மொழிபெயர்ப்புக் குழு அமைக்கும் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



68—

## கோயிலின் சிறப்பு பற்றிய கையேட்டினைத் தமிழில் அச்சிடுதல்

**வினா 15948—திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் அருள்மிகு கோதண்டராமர் கோயிலின் சிறப்பு பற்றிய கையேட்டினைத் தமிழில் அச்சிட்டு வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயிலின் சிறப்பு பற்றிய கையேடு தமிழில் அச்சிடப்பட்டு, இலவச வெளியீடாக வழங்கப்பட்டு வருகிறது.

69—

## நிலங்களைக் குத்தகைக்கு விடுதல்

**வினா 16016—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாட்டில் இருக்கும் சத்திரத்திற்குச் சொந்தமான நிலங்களைக் கல்வி மற்றும் பொது நலன்களுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு நகரத்தில் சத்திரம் நிருவாகத்திற்குச் சொந்தமான 34.93 ஏக்கர் நிலம் முழுவதும் பயன்பாட்டில்

உள்ளதால் நீண்டகாலக் குத்தகைக்கு விடுவதற்கு ஏதுவாக காலியிடங்கள் இல்லை.

70—

### திருக்கோயில் கோபுரக் கலசங்கள்

**வினா 18026—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டு (1998 மார்ச் வரை) எத்தனை திருக்கோயில்களில் கோபுரக் கலசங்கள் களவாடப்பட்டுள்ளன என்பது குறித்துக் காவல் துறைக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளனவா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். 1997-98 ஆம் ஆண்டு (1998 மார்ச் வரை) கீழே குறிப்பிட்டுள்ள 3 திருக்கோயில்களில் 4 கோபுரக் கலசங்கள் களவாடப்பட்டுள்ளன:

1. மயிலாடுதுறை வட்டம், ஆத்தூர் அருள்மிகு சுவர்ணபுரீஸ்வரர் மற்றும் சகுவாசி நாராயணப் பெருமாள் திருக்கோயில் கோபுரத்தின் ரூ.500 மதிப்புள்ள விமானக் கலசங்கள் இரண்டு 25-6-1997 அன்று களவாடப்பட்டன.

2. சேலம் மாவட்டம், செவ்வாய்பேட்டை அருள்மிகு மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருக்கோயில் கோபுரத்தில் ரூ.5000 மதிப்புள்ள ஒரு கலசம் 26-10-1997 அன்று களவாடப்பட்டது.

3. காட்டுமன்னார்குடி வட்டம், சிரகிழந்தநல்லூர் அருள்மிகு ஞானபுரீஸ்வரர் திருக்கோயில் ரூ.250 மதிப்புள்ள விமானக் கலசம் ஒன்று 16-12-1997 அன்று களவாடப்பட்டது.

மேற்படி களவுகள் குறித்து சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் புகார் செய்யப்பட்டு, வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.



71—

### இந்து சமய அறநிலையத் துறை மாவட்ட அலுவலகங்கள் தொடங்குதல்

**வினா 18844—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மதுரை மாவட்டத்திலிருந்து திண்டுக்கல் மாவட்டம் பிரிந்தும், இந்து சமய அறநிலையத் துறை மாவட்ட அலுவலகங்கள் தொடங்கப்படாமல் உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர் அலுவலகம் ஏற்படுத்துவது தொடர்பாக, கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

72—

### அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்தில் திருமண மண்டபம்

**வினா 19663—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்தில் திருமண மண்டபம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயிலில் இராஜ கோபுரம் கட்டும் பணி தற்போது உபயத் திருப்பணியாக நடைபெற்று வருகிறது.

திருமண மண்டபம் கட்டுவதற்குப் போதிய இடவசதி உள்ளது. ஆனால், போதிய நிதி வசதி இல்லை. எனவே, தற்போது நடைபெற்று வரும் இராஜ கோபுரத் திருப்பணி வேலை முடிவடைந்ததும் உபயதாரரை அணுகியோ அல்லது திருப்பணிக் குழு அமைத்து நிதி திரட்டியோ திருமண மண்டபம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**73—**

**உபகரணங்களை கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கொள்முதல்**

**வினா 16964—திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக விவசாயிகளுக்குத் தேவையான விவசாய உபகரணங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேவையான பொறியியல் உபகரணங்களையும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கொள்முதல் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு இணையம், கூட்டுறவுச் சங்கம் மற்றும் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் ஆகிய நிறுவனங்கள் விவசாயிகளுக்குத் தேவையான உபகரணங்களை, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் விநியோகம் செய்து வருகின்றன.

**74—**

**வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கக் கிளையின் விற்பனை விவரம்**

**வினா 18614—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு,



திருச்செங்கோடு கிளையில் மட்டும் விற்பனைக்கு வந்த பொருட்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதில் அந்தச் சங்கத்திற்கு எவ்வளவு இலாபம் கிடைத்தது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் திருச்செங்கோடு கிளையில் மட்டும் விற்பனைக்கு வந்த பொருட்களின் மதிப்பு ரூ.1,124.68 இலட்சம் ஆகும். (விவசாய விளைபொருள் விற்பனை மதிப்பு மட்டும்)

(ஆ) இதில், அந்தச் சங்கத்திற்கு ரூ.21.19 இலட்சம் இலாபம் கிடைத்துள்ளது. (விவசாய விளைபொருள் விற்பனையில் மட்டும்)

**75—**

**திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம்**

**வினா 18625—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு மொத்தம் எவ்வளவு சொத்துக்கள் உள்ளன?

(ஆ) அதில் அசையும் சொத்துக்கள் எவ்வளவு? அசையாச் சொத்துக்கள் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு மொத்தம் ரூ. 310.51 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) |
| திருச்செங்கோடு தலைமை அலுவலகம் | 132.09 |
| மல்லசமுத்திரம் கிளை | 39.40 |
| கொங்கணாபுரம் கிளை | 139.02 |
| மொத்தம் | 310.51 |

(ஆ) இதில் அசையும் சொத்துக்களின் மதிப்பு ரூ.85,71 இலட்சம்.

| | |
|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) |
| திருச்செங்கோடு | 53.35 |
| மல்லசமுத்திரம் கிளை | 5.19 |
| கொங்கணாபுரம் கிளை | 27.17 |
| மொத்தம் | 85.71 |
| அசையாச் சொத்துக்களின் மதிப்பு | 224.80 |
| திருச்செங்கோடு | 78.74 |
| மல்லசமுத்திரம் கிளை | 34.21 |
| கொங்கணாபுரம் கிளை | 111.85 |
| மொத்தம் | 224.80 |

76—

**மல்லசமுத்திரம் கூட்டுறவு விற்பனைச் சங்கம்**

**வினா 18616—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் மல்லசமுத்திரம் கிளையில் மட்டும் விற்பனைக்கு வந்த பொருட்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதில் அந்தச் சங்கத்திற்கு எவ்வளவு இலாபம் கிடைத்தது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ)1997-98 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் மல்லசமுத்திரம் கிளையில் மட்டும் விற்பனைக்கு வந்த பொருட்களின் மதிப்பு ரூ.643.22 இலட்சம் ஆகும்.

(ஆ)இதில் சங்கத்திற்கு ரூ.11.96 இலட்சம் இலாபம் கிடைத்துள்ளது.

77—

**கூட்டுறவு விற்பனைச் சங்க உறுப்பினர்கள்**

**வினா 18617—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் கிளை, நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் கிளை, நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டைத் தலைமையிடமாகக் கொண்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மொத்த உறுப்பினர்கள் எத்தனை பேர்?

(ஆ) தனித்தனியாக உள்ள சங்கத்தில் உறுப்பினர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் கிளை, நாமக்கல் மாவட்டம், மல்லசமுத்திரம் கிளை, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டைத் தலைமையிடமாகக் கொண்ட வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் மொத்தம் 40,445 உறுப்பினர்கள் உள்ளனர்.

(ஆ) இதில் தனித்தனியாக சங்கத்தில் உள்ள உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

| | உறுப்பினர்கள் |
|---|---|
| 1. திருச்செங்கோடு (திருச்செங்கோடு வட்டம்) | 15,086 |
| 2. கொங்கணாபுரம் (எடப்பாடி வட்டம்) | 23,176 |
| 3. மல்லசமுத்திரம் (திருச்செங்கோடு வட்டம்) | 2,183 |
| மொத்தம் | 40,445 |

78—

**அரிசி வெளிமாநிலங்களிலிருந்து வாங்கும் விவரம்**

**வினா 20480—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு மத்திய அரசு அனுமதி பெற்று பொது மக்களுக்கு விநியோகம் செய்ய தமிழக அரசு எத்தனை டன் அரிசி வெளிமாநிலங்களிலிருந்து வாங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டு தமிழக அரசு, மத்திய அரசின் அனுமதி பெற்று, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை வெளி மாநிலங்களிலிருந்து அரிசி கொள்முதல் செய்ய ஆணையிட்டதன்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வெளிமாநிலங்களிலிருந்து மொத்தமாக 3,81,841 மெட்ரிக் டன் (பஞ்சாப் மாநில நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமிருந்து 79,980 மெட்ரிக் டன் மற்றும் ஆந்திர மாநிலத்திலிருந்து 3,01,861 மெட்ரிக் டன்) அரிசி வாங்கியுள்ளது.



79—

**கூட்டுறவு வங்கி மூலம் கடன் வழங்குதல்**

**வினா 20428—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1998-99 ஆம் ஆண்டு மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் தொழில் தொடங்க எவ்வளவு கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(ஆ) சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டத்தில் தொழில் தொடங்க எவ்வளவு கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பொதுவாக, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் தொழில் தொடங்கவும், தொடங்கப்பட்ட தொழிலை மேம்படுத்தவும் வழங்கப்பட்டு வரும் கடன்கள் பண்ணை சாராக் கடன்களாகும்.

1998-99 ஆம் ஆண்டில் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.35 கோடி ரூபாய் அளவிற்கு பண்ணை சாராக் கடன்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி, 1998-99 ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ரூ.4 கோடியும், நாமக்கல் மாவட்டத்தில் ரூ.4 கோடியும் ஆக மொத்தம் ரூ.8 கோடி ரூபாய் அளவிற்கு பண்ணை சாராக் கடன்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 1998 திங்கள் வரை (சேலம் மாவட்டம் மற்றும் நாமக்கல் மாவட்டமுமாக சேர்ந்து) சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி பண்ணை சாராக் கடனாக 0.75 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கியுள்ளது.

80—

**கூட்டுறவுக் கடன்கள் விவரம்**

**வினா 20791—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன்களுக்கு அபராத வட்டித் தொகை எத்தனை கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

1998-99 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுக் கடன்களுக்கு அபராத வட்டி ஏதும் தள்ளுபடி செய்யப்படவில்லை. நபார்டின் கடன் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றி நபார்டு விதித்துள்ள அறிவுரைகளை கடன் வழங்குதல் மற்றும் திருப்பிச் செலுத்துதல், அதுபோல் வட்டி விகிதம், திருப்பிச் செலுத்தும் காலம், இடர்ப்பாடு நிவாரணம் போன்றவற்றில் கடன் உதவிபெறும் நிறுவனங்கள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என நாபார்டு உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்பு வலியுறுத்துகிறது. மேற்கண்ட விதிமுறைகளை மீறும் பட்சத்தில் மறுநிதியுதவி அளிக்கப்படமாட்டாது எனவும் கூறப்பட்டுள்ளது. மேலும் வட்டி, அபராத வட்டி, மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் முக்கிய வருவாய் இனம் என்பதாலும், வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வழிவகை இல்லை. 1997-98 ஆம் ஆண்டு பெரும் மழை காரணமாக தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டது. இதில் நாமக்கல் மாவட்டத்தில் 165 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும், சேலம் மாவட்டத்தில் 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் சேர்த்து ரூ.651.08 இலட்சத்திற்குக் குறுகிய கால பயிர்க் கடனை மத்தியக் கால கடனாக மாற்ற பதிவாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் அடுத்த பருவத்திற்கான பயிர்க் கடன் பெறத் தகுதியுடையவராகின்றனர்.

**81—**

## தனியார் பண்ணைக்கு பால் விற்பதைத் தடுத்தல்

**வினா 13499—டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக



உற்பத்தியாகும் பாலை தனியார் பால் பண்ணைக்கு விற்பனை செய்வதைத் தடை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

மத்திய அரசால் வழங்கப்பட்ட பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை 92-ன்படி பத்தி 11(2)-க்குத் திருத்தம் செய்து, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக உற்பத்தியாகும் பாலை தனியார் பால் பண்ணைக்கு விற்பனை செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**82—**

## விபத்து நிதி வழங்கும் திட்டம்

**வினா 13107—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மரம் ஏறும் தொழிலாளர் மற்றும் கட்டடத் தொழிலாளர்களுக்கு விபத்து நிதி வழங்குவது போல் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கும் விபத்து நிதி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு விபத்து நிதி வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் தோல்பதனிடும் தொழிற்சாலைகள், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வருவதால் தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டம் பொருந்தும். அதனால், அத்தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட அனைத்து நலத் திட்டங்களும் கிடைக்கப்பெறுகின்றன. இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் வராத தொழிலாளர்கள் வேலையாள் இழப்பீட்டுத் தொகை பெறத் தகுதியுடைவராவர். வேலையாள் இழப்பீட்டுச் சட்டத்தின்கீழ் உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகையை வேலையளிப்பவர்களிடமிருந்து பெற முடியாத தருணத்தில், அத்தொழிலாளர்களுக்கு அரசால் பராமரிக்கப்பட்டு வரும் தொழில் விபத்துத் துயர் துடைப்பு நிதியிலிருந்து இழப்பீட்டுத் தொகையில் 50 விழுக்காடு வரை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

83—

## சுயதொழில் தொடங்க கடனுதவி

**வினா 19400—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிவில் பட்டயம் படித்துள்ள பட்டயச் சான்று உடையவர்களுக்கு சுயமாகத் தொழில் தொடங்க, சுலபத் தவணைக் கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் வேலைவாய்ப்புப் பிரிவினைப் பொறுத்தமட்டில் சுய தொழில் தொடங்க, கடனுதவி வழங்கும் எவ்விதத் திட்டமும் தற்போது நடைமுறையில் இல்லை.

84—

## உலமா ஓய்வூதியம் பெற்றவர்கள் விவரம்

**வினா 20526—திரு. அ.வ. அப்துல் நாசர்** : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1997-98 ஆம் ஆண்டில் உலமா ஓய்வூதியம் பெறுவதற்காக விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் ஓய்வூதியம பெற்றவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**



(அ) மற்றும் (ஆ)

| | |
|---|---|
| சனவரி 1997 முதல் டிசம்பர் 1997 முடிய உலமா ஓய்வூதியம் வழங்கக் கோரிப் பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை | .. 69 |
| சனவரி 1998 முதல் செப்டம்பர் 1998 முடிய உலமா ஓய்வூதியம் வழங்கக் கோரிப் பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை | .. 66 |
| மொத்தம் பெறப்பட்ட தகுதியான விண்ணப்பங்கள் | 135 |
| 30-9-1998 அன்று வரை உலமா ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | 130 |
| நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் உலமா ஓய்வூதியம் விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 5 |

85—

## பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா 17563—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஆகிய ஒன்றியப் பகுதிகளில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எத்தனை மனுக்கள் நிலுவையில் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி ஒன்றியப் பகுதியான எடங்கணசாலை கிராமத்தில் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த 30

பயனாளிகளுக்கும், சித்தூர்பிட் கிராமத்தைச் சேர்ந்த 47 பயனாளிகளுக்கும். சித்தூர்பிட் 1 கிராமத்தைச் சேர்ந்த 50 பயனாளிகளுக்கும் வீட்டுமனை வழங்கப்பட நடவடிக்கையில் உள்ளது. கொங்கணாபுரம் மற்றும் மகுடஞ்சாவடி ஒன்றியப் பகுதிகளில் பிற்பட்ட இன மக்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி விண்ணப்பம் ஏதும் சேலம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் பெறப்படவில்லை.

(ஆ) எடப்பாடி ஒன்றியத்தில் 150 நபர்கள் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

**86—**

**மாணவர்கள் தங்கும் விடுதி கட்டுதல்**

**வினா 20592—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கும் விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஏற்கெனவே அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது.

**87—**

**தொழில் முதலீட்டுக் கழகம் நிறுவுவதல்**

**வினா 20876—திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளர் சீரமைப்புத் துறையில் தொழில் ரீதியான முன்னேற்றம் காண தொழில் முதலீட்டுக் கழகம் நிறுவும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிறப்டுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இத்துறையின்கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சீர்மரபினர் வகுப்பினர் பட்டியலில் இடம் பெற்றுள்ள பிரமலைக் கள்ளர் உள்ளிட்ட அனைத்து பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கும், சிறுபான்மையினருக்கும் சுய தொழில் செய்ய கடனுதவி வழங்கி வருகிறது. எனவே, கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் தனியாக வேறு தொழில் முதலீட்டுக் கழகம் அமைக்கும் அவசியமோ, உத்தேசமோ அரசுக்கு இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**88—**

**கண்காணிப்புக் குழு அமைத்தல்**

**வினா 18652—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகள் தரத்துடன் கட்டப்படுவதை உறுதி செய்ய கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகள் தரத்துடன் கட்டப்படுவதை உறுதி செய்ய ஏற்கெனவே தரக் கட்டுப்பாடு பிரிவு ஒன்று இயங்கி வருவதால் இக்கேள்வி எழாது.

89—

**சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்**

**வினா 18799—திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெள்ளக்கோயில் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) வெள்ளக்கோயில் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்டும் செயற்திட்டம் ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

90—

**தேயிலைத் தொழிற்சாலைகள் அமைத்தல்**

**வினா 19412—திரு. எம். ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை எத்தனை உள்ளது?

(ஆ) புதிய தொழிற்சாலைகள் அமைக்க அரசிடம் கோரிக்கை வந்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டத்தில் 18 கூட்டறவு தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன.

(ஆ) இல்லை.



91—

**மேலூர் விவசாயிகளுக்கு உதவி**

**வினா 11728—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள வறட்சிப் பகுதிகளில் கால்நடைப் பராமரிப்பு உலக வங்கித் திட்டத்தின்கீழ் இயங்கி வரும் தீவிர கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தீவன பயிர் விதைகளான சோளம் மற்றும் மக்காச் சோளம், கொழுக்கட்டை புல் விதைகள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேலூர் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு உலக வங்கித் திட்டத்தின்கீழ் இயங்கிவரும் தீவிர கால்நடை பெருக்கம் மற்றம் தீவன அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தீவனப் பயிர் விதைகளில் ஒன்றான கொழுக்கட்டை புல் விதைகளை விவசாயிகளுக்கு 1996-97 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 1997-98 ஆம் ஆண்டில் சோளம் மற்றும் மக்காச்சோளம் ஆகிய தீவனப் பயிர் விதைகளை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

92—

**கால்நடை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா 14609—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் தொகுதி. அலமலுமங்காபுரத்தில் கால்நடை

மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் பணி எப்போது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

வேலூர் தொகுதி, அலமேலுமங்காபுரத்தில் கால்நடை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட்டு கட்டடத்தின் அடித்தளப் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**93—**

### கால்நடைத் துறை நிலங்களை ஒதுக்குதல்

**வினா 15629—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் இருக்கும் கால்நடைத் துறைக்குச் சம்பந்தப்பட்ட நிலங்களை கல்வி, பொது சுகாதாரம் மற்றும் பொது நலன்களுக்கு குத்தகை அல்லது விலைக்கு விற்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையில் சில கட்டடங்கள் மற்றும் சாலைகளுக்கு 69.50 ஏக்கர், தீவனப் பயிர் சாகுபடிப் பரப்பு 135.25 ஏக்கர் மற்றும் மேய்ச்சல் நிலம் 24.52 ஏக்கர் ஆக மொத்தம் 229.34 ஏக்கர் நிலம் தற்போது ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையில் உள்ளது. இங்குள்ள 320 கால்நடைகளுக்கு ஒரு கால்நடை யூனிட்டிற்கு 1.5 ஏக்கர் நிலம் வீதம் மொத்துமுள்ள 251.33 கால்நடை யூனிட்டுக்கு 377 ஏக்கர் மேய்ச்சல் நிலம் தேவைப்படுகிறது. ஆனால் தற்போதைய மேய்ச்சல் நிலப் பரப்பு 24.52 ஏக்கர் மட்டுமே. இந்நிலையில் ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையில் நிலம் ஏதும் உபரியாக இல்லை. எனவே, இந்நிலங்களை கல்வி, பொது சுகாதாரம் மற்றும் பொது நலன்களுக்கு குத்தகை அல்லது விலைக்கு விற்கும் வாய்ப்பு எழவில்லை.



**94—**

### ஓய்வு விடுதியைப் புதுப்பித்தல்

**வினா 16162—திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ)தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் கால்நடைத்துறைக்குச் சொந்தமான ஓய்வு விடுதியைப் புதியதாகக் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ)ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒரத்தநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில் உள்ள கால்நடைப் பராமரிப்புத் துறைக்குச் சொந்தமான ஓய்வு விடுதியைப் புதியதாக கட்டுவதற்கோ அல்லது புதுப்பிப்பதற்கோ செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**95—**

### கால்நடை கிளை மருத்துவமனை ஆரம்பித்தல்

**வினா 20028—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், மாரமங்கலம் ஊராட்சியிலுள்ள பாலிக்கடை என்னுமிடத்தில் கால்நடை கிளை மருத்துவமனை ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இதுகுறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.

96—

## ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு பாதை வசதி

**வினா 12690—திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெருந்துறை வட்டம், நல்லிகாடு ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு பாதை வசதி கேட்டு அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நல்லிக்காடு அரிசனப் பொதுமக்களிடமிருந்து பாதை வசதி கேட்டு விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது.

மேற்படி மனுவின் பேரில் அரிசனக் குடியிருப்பு பகுதி மற்றும் சுற்றியுள்ள இடங்களை புலத்தணிக்கை மேற்கொண்டு, பாதை வசதிக்காக நிலங்களை தேர்வு செய்து நிலம் கையகப்படுத்த காங்கம் ஆதிதிராவிட நல தனி வட்டாட்சியர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

97—

## திண்டுக்கல்லில் தங்கும் விடுதி

**வினா 10412—திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு உணவு விடுதியுடன் கூடிய தங்கும் விடுதி கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)திண்டுக்கல் நகரில் இத்துறையின் மூலம் பயணிகள் தங்கும் வசதியுடன் கூடிய உணவு விடுதி கட்டும் செயற்குறிப்பு தற்போது பரிசீலனையில் இல்லை.

98—

## இறால் மீன் ஏற்றுமதி

**வினா 1726—திரு. துரை சந்திரசேகரன்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழக மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இறால் மீன் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் 1994 முதல் 1996 வரையுள்ள ஆண்டுகளில் ஈட்டிய வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழக மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இறால் மீன் ஏற்றுமதி செய்யப்படவில்லை.

(ஆ) வினா எழாது

99—

## அண்டை மாநிலங்களுக்குக் காய்ந்த மீன் அனுப்புதல்

**வினா 17036—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அண்டை மாநிலங்களுக்கு அரசு காய்ந்த மீன் (கருவாடு) அனுப்பி வைக்கிறதா என்பதை அரசு தெரிவிக்குமா?

(ஆ) 1997-98-ல் எவ்வளவு டன் அனுப்பப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) அண்டை மாநிலங்களுக்கு அரசு காய்ந்த மீன் (கருவாடு) எதையும் அனுப்புவதில்லை.

(ஆ) 1997-98இல் காய்ந்த மீன் (கருவாடு) எதையும் அண்டை மாநிலங்களுக்கு அரசு மூலம் அனுப்பவில்லை. ஆனால், தனியார், அண்டை மாநில எல்லைப் பகுதிகளுக்கு அனுப்பியிருக்கலாம். அது பற்றிய புள்ளிவிவரம் இல்லை. இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய அந்நிய நாடுகளுக்கு உலர்ந்த மீன் தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்படுகிறது. இவ்வாறு 1996-97ல் 510 டன் ரூ.10.97 கோடி அந்நிய செலாவணியில் அனுப்பப்பட்டது.

100—

**மீனவர்களுக்கு இலவச வீடு கட்டுதல்**

**வினா 21036—திரு. ப. கோவிந்தன்:**

**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நடைபெறுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின்கீழ் 1998-99 ஆம் ஆண்டில் 240 உள்நாட்டு மீனவர்களுக்கு ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக இலவசமாக வீடு கட்டித் தருவதற்கு கருத்துரு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு அனுப்பப்பட்டது. அவற்றுள் காவேரிபுரம் ஊராட்சிக்கு 10 வீடுகளும் அரசெட்டிப்பட்டு ஊராட்சிக்கு 10 வீடுகளும் ஆக மொத்தம் 20 இலவச வீடுகள் மீனவர்களுக்கு கட்டித் தருவதற்கு சேலம் மாவட்ட ஆட்சியரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



(ஆ) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 20 வீடுகளை 1998-99 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கவும் மீனவர்களுக்கு இலவசமாக கூடுதல் வீடுகள் ஒதுக்கீடு செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.......(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராயன், கொஞ்சம் உட்காருங்கள். திரு. சுந்தரம், என்ன வேண்டும்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். நான் பரிசீலனை செய்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். நான் பரிசீலனை செய்கிறேன். உட்காருங்கள்.

### (ஆ) காஞ்சிபுரம் இரயில்வே விழாவில் காஞ்சி சங்கராச்சாரியார் அவர்கள் முன்னிலை வகிப்பதாக அழைப்பிதழ் தந்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து மாநில அரசினுடைய விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். இன்று ஓர் அழைப்பிதழைக் காண நேரிட்டது. வருகிற 25 ஆம் தேதி, புதன் கிழமை காலை 11.00 மணிக்கு செங்கற்பட்டு-அரக்கோணம் மீட்டர் கேஜ் இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றும் பணிக்கு, காஞ்சிபுரம் இரயில் நிலையத்திலே அடிக்கல் நாட்டும் விழா நடைபெறுவதாக ஓர் அழைப்பிதழ் அனுப்பப்பட்டிருக்கிறது. நிதிஷ்குமார் அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார்கள். அந்த அழைப்பிதழிலே ஓர் அதிர்ச்சியான விஷயம் என்னவென்றால், அதற்கு முன்னிலை வகிக்கின்றவர்கள் யார் என்று அந்த அழைப்பிதழிலே போடப்பட்டிருக்கிறது என்றால், ஜகத்குரு திரு. ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மற்றும் ஜகத்குரு திரு. விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் முன்னிலை வகிக்க இசைந்துள்ளார்கள் என்று போடப்பட்டிருக்கிறது. எனக்குத் தனிப்பட்ட முறையில் சங்கராச்சாரியார் பற்றி எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், சங்கரமட விழாவாக இருந்தால், அவர்கள் முன்னிலை வகிக்கலாம். ஆனால், இங்கே நடைபெறுவது சங்கரமட விழாவும் அல்ல அல்லது இந்து மதம் சம்பந்தப்பட்ட விழாவும் அல்ல. இது இந்திய அரசு சம்பந்தப்பட்ட ஒரு விழா. இந்திய அரசு என்பது, இந்துக்களை மட்டுமே கொண்டது அல்ல. இந்திய அரசு என்பது இந்துக்களையும், இசுலாமியர்களையும், கிருத்துவர்களையும், பார்சிகளையும், பௌத்தர்களையும், சமணர்களையும், சீக்கியர்களையும் கொண்ட ஒரு கூட்டுக் கலவையின் மொத்த வடிவம்தான். அதுதான் இந்தியா. இந்தியாவினுடைய ஒட்டுமொத்தப் பிரதிநிதியாகச் செயல்பட வேண்டிய மத்திய அரசே, ஒரு குறிப்பிட்ட மதாச்சாரியார்களை மட்டுமே முன்னிலைப்படுத்த அனுமதித்திருப்பது என்பதில் இரண்டு மிகப் பெரிய தவறுகளைச் செய்திருக்கிறது. ஒன்று, இந்திய அரசியல் சட்டத்தினுடைய சாரமான சமயச்சார்பின்மையை அது மீறியிருக்கிறது. இன்னொன்று, அரசியல் நாகரீகமற்ற முறையில் இந்த அழைப்பிதழை வெளியிட்டிருக்கிறது. ஒரு மாநிலத்தில் விழா நடைபெறுகிறபோது அரசியல் பண்பாட்டோடு





மாநில முதலமைச்சரை முன்னிலை வகிக்க அழைத்திருக்கலாம். மாநில முதலமைச்சரை நிராகரித்துவிட்டு, ஒரு குறிப்பிட்ட சமயத்தைச் சார்ந்தவர்களை மட்டுமே முன்னிலைபடுத்த அனுமதித்திருப்பதன் மூலம் இரட்டைத் தவறுகளை மத்திய அரசு புரிந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

முற்பகல் 10-55

அதுமட்டுமல்ல, சமயச்சார்பின்மை என்பது அவ்வளவு எளிதில் மீறிவிட்டுப் போகிற விஷயமல்ல. சமயச்சார்பின்மைக்கு நாம் கொடுத்த விலை பணமல்ல. மகாத்மா காந்தியடிகளின் உயிரை விலையாகக் கொடுத்து பெறப்பட்டதுதான் சமயச்சார்பின்மை. அந்தச் சமயச்சார்பின்மையை இவர்கள் தொடர்ந்து மீறி வருகிறார்கள். கல்வித் துறையிலே சரஸ்வதி வந்தனம் பாடி மீறினார்கள். கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் மீறினார்கள். அதில் நான் குறிப்பிட விரும்புவது சரஸ்வதி வந்தனம் பாடக் கூடாது என்பதல்ல. சரஸ்வதி பூஜையின்போது சரஸ்வதி வந்தனம் பாடலாம். ஆனால், சமயச்சார்பற்ற அரசு விழாவில் ஒரு குறிப்பிட்ட சமயம் சார்ந்த பாடலைப் பாட அனுமதிப்பது என்பது அடிப்படை சாரத்தின்மீது கடப்பாறையால் அடிப்பதாகும். எனவே, அடிப்படை சாரத்தைத் தகர்க்கின்ற இந்த மத்திய அரசினுடைய அருவறுப்பான வெளியீடுதான் இந்த அழைப்பிதழாகும். இந்த விழாவில் மாநில அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பங்குபெறப்போவதாக இந்த அழைப்பிதழில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, மாநில அரசு இந்த விழாவை பகிஷ்கரிக்க வேண்டும். மத்திய அரசாங்கம், குறிப்பாக தெற்கு இரயில்வே இப்படி ஓர் அழைப்பிதழைப் போட்டதற்காக இந்தப் பேரவையில் கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும். இல்லையென்றால், இது ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிப்பதைப் போல, ஒவ்வொரு இடத்திலேயும் இந்த பாரதிய ஜனதா அரசு—மத்திய அரசு— இத்தகைய தீங்குகளை செய்துகொண்டிருக்கும். இத்தகைய தீங்குகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க, கண்டனத்தை வெளியிட மாநில அரசு முன்வருமா என்பதை மாநில முதலமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டினுடைய பண்பாடு, நம்மை வளர்க்கக்கூடிய அனைத்தையும் தாயாக மதிப்பது. கல்வித் தாய் என்று சரஸ்வதியைப் புகழ்வது, அதுபோல பாரதத் தாய் என்று புகழ்வது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்த அழைப்பிதழைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** எந்த இடத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தாலும், அந்த இடத்தில் இருக்கக்கூடிய பெரியவர்கள், அதாவது ஜாதி மதத்திற்கு அப்பாற்பட்டு அந்த ஊரில் மதிக்கக்கூடிய பெரியவர்கள் நிகழ்ச்சிக்கு அழைக்கப்படுவதை வழக்காகக் கருதி அழைத்திருக்கக்கூடும். எனவே, இது தவறாகத் தெரியவில்லை. வேறு யாராவது விடுபட்டிருந்தால் சேர்த்திருக்க வேண்டும் என்று சொல்வதுதான் முறை என்று கருதுகிறேன்.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அழைப்பிதழைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். தமிழக அரசு நடத்துகிற விழாக்களில் எந்த அரசுப் பணியிலும் இல்லாத திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர் ஒருவரின் பெயரைப் போடுகிறீர்களே, அது என்ன நியாயம்?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி கொடுத்தால் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினைக்குரிய விஷயத்திற்கு மட்டுமே பதில் சொல்ல வேண்டும். இது மாண்புமிகு முதலமைச்சர், தமிழக மாநிலம் உட்பட்டிருக்கின்ற பிரச்சினை. தமிழ்நாட்டு மக்கள் பயனடையக்கூடிய இரயில்வே போக்குவரத்து குறித்தது. இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அழைத்திருக்கலாம். அழைக்காததற்கான காரணங்களைச் சொல்ல வேண்டுமே தவிர, ஒட்டுமொத்தாக வேறு எங்கோ பிரச்சினையைத் திசைதிருப்புவது சரியல்ல.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சிக்கு ஒருவரைத்தான் பேச விடுவேன். நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அழைப்பிதழைப் பார்க்கிறபோது, பி.ஜே.பி. அரசாங்கம், ஒவ்வொன்றாக, இது ஒரு மத நாடு என்கின்ற மாதிரி கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஓர் இரண்டாவது உதாரணம். நம்முடைய சங்கராச்சாரியார் மீது நாங்கள் எல்லாம் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறோம். நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னதைப்போல, இந்த நாட்டில் மிக மரியாதைக்குரிய சங்கராச்சாரியார் மீது எங்களுக்கு எந்தவிதான வெறுப்பும் கிடையாது. அதேநேரத்தில், இது ஒரு மத்திய அரசு விழா என்கிற முறையில், நம்முடைய மத்திய அமைச்சர் கலந்துகொள்கிறார்கள், நம்முடைய மாநில அமைச்சர் அவர்களும் இதிலே கலந்துகொள்கிறார்கள். இதில் அனாவசியமாக இந்த, மதத் தலைவரை அனுமதித்தது மிகப் பெரிய தவறு என்பதை எங்களுடைய கட்சி சார்பாகவும் நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். தாமரைக்கனி பேசிவிட்டார், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர்.சுந்தரம்:** பேசியவர்கள் இரண்டு பேரும் எந்தக் கட்சி..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருவர் தீர்மானம் கொண்டு வந்தவர். மற்றொருவர் கட்சித் தலைவர். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

**திரு. பி. ஆர். சுந்தரம்:** கட்சிக்கு ஒருவர் என்று கூறினீர்கள். ஆனால் இருவரும் பேசினார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது. நீங்கள் தீர்மானம் கொண்டு வரவில்லை. (குறுக்கீடு) நீங்கள் உட்காரப் போகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) திரு. சுப்பராயன் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர். திரு. பழனிசாமி கட்சித் தலைவர். இதேமாதிரி கட்சித் தலைவர் என்ற முறையில்

திரு. தாமரைக்கனி பேசிவிட்டார். (குறுக்கீடு) நீங்கள் ஒழுங்காக உட்காரப் போகிறீர்களா? வெளியேற்றவா? மாண்புமிகு முதலமைச்சர்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 ஆம் தேதி நடைபெற இருக்கின்ற ஒரு இரயில்வே துறை நிகழ்ச்சிக்காக அளிக்கப்பட்டுள்ள அழைப்பிதழ் குறித்து மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பி, அதைத் தொடர்ந்து நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், சுப்பராயன் அவர்களும் கருத்தை ஏற்று இங்கே பேசியிருக்கின்றார்கள். இடையில் பாரதிய ஜனதா கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் வேறு ஒரு கருத்தை இங்கே குறிப்பிட்டு அந்த அழைப்பிதழில் எந்தத் தவறும் இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். சுப்பராயன் எழுப்பிய பிரச்சினை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டிய அந்தக் கருத்து இவையெல்லாம் இந்திய நாட்டை ஒரு மதச்சார்பற்ற நிலையிலே காண வேண்டும், அவ்வாறு இயங்க வேண்டும். எந்த ஆட்சியானாலும் அந்த ஒரு நிலையிலிருந்து மாறுபடக்கூடிய ஒரு நிலை இப்போது ஏற்படுகிறதோ என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் இப்போது கோலப்படுகின்றன என்ற அந்த உண்மையையும் விளக்குவனவாகத் தென்படுகின்றன. இதை ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு மதச்சார்பற்ற நிலையை இந்தத் துணைக் கண்டத்திலே உருவாக்க வேண்டும் என்று எண்ணுகின்ற ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும். அந்தக் கடமையை நாம் நிறைவேற்றத் தவறினால் எதிர்காலத்திற்கு நாம் பதில் அளிக்க வேண்டியது மாத்திரமல்ல, எதிர்காலச் சந்ததியனரின் கோபத்திற்கும், சாபத்திற்கும்கூட ஆளாக வேண்டியவர்களாக ஆகி விடுவோம்.

இது இரயில்வே விழாவினுடைய அழைப்பிதழில் சங்கராச்சாரியார் அவர்களுடைய பெயர் குறிப்பிட்டிருப்பது பற்றிய பிரச்சினை. எதிர்க்கட்சித் தலைவரும், சுப்பராயன் அவர்களும் இங்கே அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்டியது போல் சங்கராச்சாரியாரிடத்திலே நமக்கு எந்தவிதமான பகையும் கிடையாது; வெறுப்பும் கிடையாது. எல்லா மதங்களிலேயும் இருக்கின்ற குருமார்கள், பெரியவர்கள் ஆகியோரிடத்திலே என்ன மதிப்பு வைத்திருக்கின்றோமோ, அதே மதிப்பு சங்கராச்சாரியாரிடத்திலும்





அவருடைய அடுத்த நிலையிலே உள்ளவரிடத்திலும் நமக்கு உண்டு. ஆனால் அப்படி மதிப்பது என்பது வேறு; அதேநேரத்தில் ஒரு அரசு நிகழ்ச்சியில் மதத்தைக் கொண்டு வந்து புகுத்துவது என்பதை ஏற்பதா, இல்லையா என்பது வேறு. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், அந்தக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற இந்த அரசைப் பொறுத்தவரையில் ஒருக்காலும் மதச்சார்பற்ற நிலைக்கு மாறாக எந்த நடவடிக்கையாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் திட்டவட்டாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மதச்சார்புடையவர்கள் அதிலே கலந்துகொள்ள வேண்டுமென்று ஒருவேளை இரயில்வே துறையினர், டெல்லியிலே இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் அல்லது இங்கேயிருக்கின்ற இரயில்வே துறை அதிகாரிகள் விரும்பியிருந்தால் அதிலே ஒரு இஸ்லாமிய மார்க்கத்தினுடைய பெரியவரையும் கலந்துகொள்ளச் செய்திருக்கலாம். ஒரு கிருத்துவ பேராயரையும், ஆர்ச் பிஷப்பையும் அழைத்து அதிலே கலந்துகொள்கின்ற வாய்ப்பினை அவர்களுக்கு அளித்திருக்கலாம். அப்போது மதச்சார்பற்ற முறையிலே எல்லா மதத்தினரும் கலந்து, வேலாயுதன் சொல்வதைப் போல மதகுருமார்களுடைய அருளும் இரயில்வேக்கு வேண்டும் என்பதற்காக, அப்போதுதான் விபத்துக்கள் எதுவும் நடக்காமல் இருக்கும் என்ற முறையிலே (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா மதகுருமார்களையும் கலந்துகொள்ளச் செய்திருக்கலாம். அப்படி இல்லாமல் சங்கராச்சாரியாரை மாத்திரம் அழைப்பது என்பது இன்றைக்கு பா.ஜ.க. மீது தொடர்ந்து சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுக்கு அவர்கள் தங்களை இலக்காக்கிக் கொள்கிறார்கள் என்பதைத் தவிர வேறு இல்லை. இதிலே நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் பொன்முடி பெயர் இருக்கிறது என்று சுப்பராயன் குறிப்பிட்டார். இந்த அவையிலேயே அதற்கு ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார், சங்கராச்சாரியார் பெயர் போட்டிருப்பதற்காக. தீர்மானம் தேவையில்லை. இந்த அவையினுடைய ஒட்டுமொத்தக் கருத்தாக நான் சொல்கின்றேன். யாராவது இதிலே தவறு இருந்தால், அந்தக் கருத்திற்கு உடன்பாடு இல்லையென்று கூறலாம் - ஒட்டுமொத்தக் கருத்தாகச் சொல்லுகின்றேன்- நாளைக்குள்ளாக திருத்தப்படாவிட்டால், நம்முடைய அமைச்சர் பொன்முடி அந்த விழாவில் கலந்துகொள்ள மாட்டார் என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு விழாக்களில் இப்படி அந்தப் பொறுப்பிலே இல்லாத சங்கராச்சாரியார் பெயர் போடப்பட்டிருக்கிறது என்று சுப்பராயன் அவர்கள் அந்த இன்விடேஷன் கார்டைக் காட்டி, இதிலே பொறுப்பில் இல்லாதவர் பெயர் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் தமிழக அரசு நடத்துகின்ற நிகழ்ச்சிகளில் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்களுக்கு முன்னிலை கொடுத்து, மற்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி, அந்தப் பகுதியிலுள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைப் புறக்கணித்து நிகழ்ச்சி நிரல், இன்விடேஷன் கார்டு கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக, கூட்டுறவுத் துறை அமைச்சர் விருதுநகர் மாவட்டத்தில் கலந்துகொண்டபோது ...

**திரு. கே. சுப்பராயன்:** இது சம்பந்தமில்லாத விஷயம். நான் பேசியது மிக முக்கியமான விஷயம். உறுப்பினர் பேசுவது பிரச்சினையைத் திசைதிருப்புவது போல் இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** அரசு நிகழ்ச்சியை அரசியல் நிகழ்ச்சியாக்குகிறார்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். அதற்கு முதலமைச்சர் பதில் சொல்லிக்கொள்வார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நிகழ்ச்சி நிரலில் எந்தப் பொறுப்பிலும் இல்லாத மாவட்டச் செயலாளரின் பெயரைப் போடுவதைத் தடுத்து நிறுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை இந்த அவையிலே வேறு பிரச்சினைகளைப் பேசுகிற நேரத்தில், அதுகுறித்து தாமரைக்கனி எழுப்பலாம். அதைப் பற்றிய பதிலை அப்போது சொல்லலாம். இப்போது மிக முக்கியமான, சூடான நிலையிலே இங்கு விவாதிக்கப்பட்டு, முடிவுற்றிருக்கின்ற பிரச்சினை, நாளை மறுநாள் நடைபெறுகின்ற இரயில்வே விழா பற்றிய பிரச்சினையாகும். அதுபற்றி



இந்த அவையின் சார்பாக நான் கருத்தைச் சொல்லியிருக்கின்றேன். அதைத் திசைதிருப்புகின்ற வகையில் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் தாமரைக்கனி அவர்களுடைய பேச்சு அமைந்துவிடக் கூடாது என்பதற்காக அதுபற்றி பிறகு தனியாக விவாதிக்கலாம் என்று, இந்த அளவில் அதை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்படி கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஆறாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-10

**(ஈ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அசைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



**(உ) தமிழ்நாடு ஊராட்சிகள் ஐந்தாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் ஐந்தாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் ஐந்தாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஊ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப் படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக

(முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. 1998-99 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை-அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மான்றத்தின்முன் வைக்கிறேன். @ மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவான அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 848 கோடியே 56 இலட்சம் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில், ரூபாய் 703 கோடியே 32 இலட்சம் வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூபாய் 145 கோடியே 24 இலட்சம் மூலதனம் மற்றும் கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. 1998-99 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கை தாக்கல் செய்த பின்னர் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்காக ஏற்படும்

**@ 483 முதல் 486 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பெற்றுள்ளன.**



செலவினங்களுக்கும் மற்றும் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்ட செலவினங்களுக்கும் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெற்று, ஈடுசெய்வதற்கு இத்துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டங்கள், திட்டப் பணிகள் குறித்துச் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

முற்பகல் 11-15

3. பாலின் கொள்முதல் விலையை உயர்த்தி விற்பனை விலையைக் குறைத்ததால் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு ஏற்படவுள்ள இழப்பை ஈடுசெய்வதற்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அரசு உதவித் தொகையாக ரூபாய் 5 கோடியே 70 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 10-பால் வழங்கு செயல் திட்டங்கள்" என்ற தலைப்பின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

4. கோயம்புத்தூர் வெடிகுண்டு சம்பவத்தைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் வெடிகுண்டு சோதனை நடத்தி, அவற்றை அழிப்பதற்கு அரசு ஒரு சிறப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. இதில் ஓய்வு உறக்கமின்றிப் பணிபுரிந்ததற்காக அனைத்துக் காவலர்களுக்கும் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கும் ரொக்கப் பரிசுத் தொகையாக ஒவ்வொருவருக்கும் ரூபாய் 1000/- வழங்க அரசு அனுமதித்துள்ளது. இதற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை 15-காவல் துறை" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. மதுவிலக்கு அமலாக்கப் பணியைக் கவனிப்பதற்கென்றே மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஒன்றை உருவாக்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இதற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக அரசு ரூபாய் 3 கோடியே 70 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை 15-காவல் துறை" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. தீயணைப்பு நிலையங்களுக்குத் தண்ணீர் வண்டிகள் (Water tenders), தொலைபேசி, இதர சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக, அரசு ரூபாய் 3 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை,

துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை 16- தீயணைப்புப் பணிகள்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கிய உற்பத்தி ஊக்கத் தொகைச் செலவை ஈடுசெய்வதற்காக அரசு ரூபாய் 6 கோடியே 86 இலட்சம் அனுமதித்து உள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை 20 - வேளாண்மை" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

8. மானாவாரிப் பகுதிகளுக்கான தேசிய நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, அரசு கூடுதலாக ரூபாய் 9 கோடியே 40 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 20 - வேளாண்மை" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

9. விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதற்காக, அரசுக்குச் சேரவேண்டிய வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையிலிருந்து ரூபாய் 320 கோடியே ஒரு இலட்சம் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அளிக்க வேண்டிய கூடுதல் மானியமாகக் கருதப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 20 - வேளாண்மை" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

10. 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளுக்கு நெசவாளர்கள் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் கோரியிருந்த தள்ளுபடி மானியத் தொகைகளை வழங்குவதற்காக அரசு ரூபாய் 43 கோடியே 26 இலட்சம் அனுமதித்துள்ளது. இதற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 30 கோடியே 76 இலட்சம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான மீதச் செலவு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது இத்தொகை, "மானியக் கோரிக்கை 25-கைத்தறியும் துணித் தொழிலும்" என்ற தலைப்பின்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

11. நான் கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் அறிவித்திருந்ததன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதிக்கும் வழங்கப்படும் தொகையை ரூபாய் 25 இலட்சத்திலிருந்து ரூபாய் 35 இலட்சமாக அரசு உயர்த்தியுள்ளது. இதற்காக, "மானியக்



கோரிக்கை 27-ஊரக வளர்ச்சி" என்ற தலைப்பின்கீழ் துணை மதிப்பீட்டில் ரூபாய் 23 கோடியே 50 இலட்சம் சேர்க்கப்பட்டுள்ளது.

12. மாநில குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு நல நிதிக்கு, அரசு ரூபாய் 4 கோடியே 75 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 28-தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

13. முதியோர் உதவித் தொகை பெறும் அனைத்து வகையினருக்கும் 1998 ஏப்ரலிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.100-லிருந்து ரூ.150 ஆக உதவித் தொகையை அரசு உயர்த்தியுள்ளது. இதற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ.22 கோடியே 25 இலட்சம் முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 29-சமூக நலன்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

14. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு 1997-98 ஆம் ஆண்டிற்குக் கூடுதலாக 1000 குடியிருப்புகள் கட்டியதற்கும் மற்றும் 1998-99 ஆம் ஆண்டிற்கு 3000 குடியிருப்புகள் கட்டுவதற்கும் அரசு ரூபாய் 9 கோடி கூடுதல் செலவிற்கு அனுமதியளித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 32-வீட்டுவசதி" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

15. 50,025 குடிசைகளுக்குத் தற்போதுள்ள ஓலைக் கூரைகளுக்குப் பதிலாக கல்நார் (Asbestos) கூரை போடுவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அரசு ரூபாய் 5 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 32-வீட்டு வசதி" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

16. கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் பகுதிகளிலேயுள்ள ஆறுகள், கால்வாய்கள், வடிகால்கள், ஏரிகள் ஆகியவற்றில் தூர் வாருவதற்காக, அரசு ரூபாய் 3 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 35-பாசனம்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப் பட்டுள்ளது.

17. நடப்பாண்டில் 200 ஏரிகளில் தூர் வாருவதற்காக, அரசு ரூபாய் 5 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 35-பாசனம்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

18. சந்தன மரத்திற்கான ஈட்டுறுதி பிரிமியம் செலுத்துவதற்காக அரசு ரூபாய் 2 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்டு, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 44-காட்டுவளத் துறை" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

19. பதினெட்டு கூட்டுறவு நூற்பாலைகளின் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் அந்த ஆலைகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகைகளை, பங்கு மூலதனமாக மாற்றுகின்ற வகையில், அரசு ரூபாய் 21 கோடியே 9 இலட்சம் அனுமதித்துள்ளது. இதுதவிர கூட்டுறவு நூற்பாலைகளுக்கு ரூபாய் 14 கோடியே 6 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இவை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 53-தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு" மற்றும் "மானியக் கோரிக்கை 61-மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்" என்ற தலைப்புகளின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

20. 1998-99 ஆம் ஆண்டில் சாத்தனூர், வீடூர் மற்றும் சோலையார் அணைகளில், அணைப் பாதுகாப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம் தொடர்பாக அரசு ரூபாய் 9 கோடியே 80 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, "மானிய கோரிக்கை 54-பாசனம் குறித்த மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

21. திருவாரூர், நாகப்பட்டினம், தேனி, திருவள்ளூர் ஆகிய இடங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகம் (Master Plan Complex) அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்டு வரும் நிலங்களின் உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்காக, அரசு ரூபாய் 8 கோடியே 57 இலட்சம் அனுமதித்துள்ளது. இதற்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூபாய் 1 கோடியே 20 இலட்சம் முன்பணமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 55-பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

22. வடக்கு பக்கிங்ஹாம் கால்வாயில் தூர் வாருவதற்காக அரசு ரூபாய் 5 கோடியே 72 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 60-பல்வகை மூலதனச் செலவு" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

23. தமிழ்நாடு உருக்கு நிறுவனப் பணியாளர்கள் தாமாகவே



பணியிலிருந்து ஓய்வு பெறும் திட்டத்திற்காக அரசு ரூபாய் 16 கோடியே 73 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 61-மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்" என்ற தலைப்பின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

24. இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நான் இங்கே மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும் மற்றும் ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழு விவரங்கள் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன.

25. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கம்.

(478 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**1998-99 ஆம் ஆண்டு 'கூடுதல் செலவுக்கான' மானியக் கோரிக்கைகள்**

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு | |
| 2. மாநில ஆயத்தீர்வைத் துறை— | 38,88 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம்— | 29,50 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம்— | 2,22,61 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள்— | 2,54,86 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள்— | 5,70,00 |
| 11. மாவட்ட நிருவாகம்— | 52,55 |
| 12. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்— | 30,00 |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி | |
| 13. நீதி நிருவாகம்— | 13,80 |
| 14. சிறைச்சாலைகள்— | 80,47 |
| 15. காவல் துறை— | 7,82,23 |
| 16. தீயணைப்புப் பணிகள்— | 3,00,00 |
| 17. கல்வி— | 30,56,40 |
| 18. மருத்துவம்— | 10,01,00 |
| 20. வேளாண்மை— | 3,52,36,64 |
| 21. மீனளம்— | 6,18,75 |
| 22. கால்நடை வளர்ப்பு— | 27,82 |
| 23. கூட்டுறவு— | 2,50 |
| 24. தொழில்கள்— | 15,17,56 |
| 25. கைத்தறியும் துணித் தொழிலும்— | 33,48,93 |
| 27. ஊரக வளர்ச்சி— | 39,00,14 |
| 28. தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்— | 4,77,90 |
| 29. சமூக நலன்— | 54,43,68 |
| 30. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்— | 6,43,09 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்— | 3,00,80 |
| 32. வீட்டு வசதி— | 72,00,00 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி— | 1,50,00 |
| 35. பாசனம்— | 8,00,00 |



| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி | |
| 36. பொதுப் பணிகள்-கட்டடங்கள்— | 19,42 |
| 37. சுற்றுச் சூழல்— | 5,72,25 |
| 38. சாலைகளும், பாலங்களும்— | 58,42 |
| 42. பல்வகை— | 3 |
| 44. காட்டுவளத் துறை— | 6,36,90 |
| 46. செய்தி திரைபடத் தொழில் நுட்பவியல்— | 1,65,25 |
| 47. ஊரகத் தொழில்கள்— | 18,10 |
| 48. குடிநீர் வழங்கல்— | 14,36,75 |
| 49. நகராட்சி நிருவாகம்— | 13,05,00 |
| 50. சுற்றுலா— | 20,00 |
| **மொத்தம் - அ. வருவாய்க் கணக்கில் செலவு** | 703,32,23 |
| **ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு** | |
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு— | 55,18 |
| 53. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு— | 21,09,01 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு— | 15,60,00 |
| 55. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு— | 8,07,39 |
| 56. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு— | 2,84,10 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு— | 3,95,84 |

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| **ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு**—தொடர்ச்சி | |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு— | 36,12 |
| 60. பல்வகை மூலதனச் செலவு— | 54,45,92 |
| மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | 1,06,93,56 |
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் | 38,29,96 |
| **பெருமொத்தம்** | 8,48,55,75 |

முற்பகல் 11-20

## 4. அறிவிப்புகள் - தொடர்ச்சி

### (ஆ) 1998-99 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மானியக் கோரிக்கைகள்மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998-99 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்படும் மானியக் கோரிக்கைகள்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கிணங்க 24-11-1998, செவ்வாய்க் கிழமை மாலை 3.00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



### (இ) அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. இன்னும் சிறிது நேரத்தில் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் என்னுடைய அறையிலேயே நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவை மீண்டும் நாளை (24-11-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11-24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1986-87 ஆம் ஆண்டுக்கான முத்தானந்தல் M/s சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் கூடுதல் விற்பனை வரியினைக் கைவிடுதல் குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 19-2-1998-ஆம் நாளிட்ட 56-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1970ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

2. கோயில் நிருவாக வாரியம் மற்றும் மாவட்ட குழுக்கள் நீக்குதல் குறித்தும் மற்றும் 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின்கீழ் சில விதிகளை வகுப்பது குறித்தும் வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 16-7-1997 ஆம் நாளிட்ட 275ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

3. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள் மற்றும் 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் ( மொத்தமாக வழங்குதல்) விதிகள் ஆகியவற்றில் திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 23-4-1998ஆம் நாளிட்ட 104ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1937ஆம் ஆண்டு

தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

4. 1954ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987ஆம் ஆண்டு தமிழ்நாடு பணி நடைமுறை நூல் தொகுதி-1)-ல் திருத்தமொன்று செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 13-3-1998ஆம் நாளிட்ட 52ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

5. 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணி நடைமுறை நூல் தொகுதி-1)-ல் திருத்தமொன்று செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 9-2-1998 ஆம் நாளிட்ட 27 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

6. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 28-4-1998 ஆம் நாளிட்ட 106 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

7. 1987 ஆம் ஆண்டு குடும்ப நீதிமன்றங்கள் (தமிழ்நாடு) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து உள் (நீதிமன்றங்கள்-II) துறையின் 23-1-1998 ஆம் நாளிட்ட 87ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1984 ஆம் ஆண்டு குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1984) 23(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

8. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 27-11-1997 ஆம் நாளிட்ட 278 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)





9. வேப்பம் விதையை பொறுத்தமட்டில் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989)-ன்கீழ் தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 23-12-1997 ஆம் நாளிட்ட 554 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (C) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

10. ஈரோடு அங்காடிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள 23 அங்காடிகளின் அறிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிக்குள், அனைத்து வடிவங்களிலுமுள்ள பனை வெல்லம், ஆமணக்கு (விதைகளுடன் கூடியதோடு அல்லது விதைகள்) மற்றும் சூரியகாந்தி விதை அல்லது பருப்பு ஆகிய விளை பொருட்களின் விற்பனையை முறைப்படுத்துவது குறித்து வேளாண்மைத் துறையின் 23-12-1997 ஆம் நாளிட்ட 555 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (C) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

11. 1986-87 முதல் 1989-90 வரையிலான ஆண்டுகளில் நன்னாரி சிரப் விற்பனை செய்ததின் பேரில் செலுத்த வேண்டிய வரி, மேல்வரி மற்றும் தண்டத்தொகை வித்தியாசத்தினை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநியைத் துறையின் 23-3-1998ஆம் நாளிட்ட 105-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவு மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7 (3) பிரிவு ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

12. 1957-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள்துறையின் 29-7-1998-ஆம் நாளிட்ட 991-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின்

[1998 நவம்பர் 23

(தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

13. சென்னை-81, திருவாளர்கள் தமிழ்நாடு பார்வையற்றோர் கழகத்தினர் உறை ஆக்கப் பிரிவு, பிரஸ் ஆக்கப் பிரிவு மற்றும் டெய்லரிங் பிரிவு ஆகிய பிரிவுகளுக்கு வாங்கப்படும் மூலப் பொருள்கள் மற்றும் இந்தப் பிரிவுகள் தயாரித்து, விற்கப்படும் பொருள்களுக்கு செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 4-8-1997-ஆம் நாளிட்ட 294-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

14. யாதொரு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் யாதொரு மோட்டார் வண்டியைப் பயன்படுத்துவதற்காக அல்லது விற்பனை செய்வதற்காக அப்பகுதிக்குள் அவ்வண்டி நுழையும்போது மோட்டார் வண்டிகளின் வணிகரான இறக்குமதியாளரைப் பொறுத்தமட்டில், மோட்டார் வண்டி கொள்முதல் மதிப்பீட்டின் பேரில் நுழைவு வரி வீதங்களை 15-4-1998-ஆம் நாளன்றும், அந்நாள் முதற்கொண்டும் விதித்து, வசூலிக்கப்படுவது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 15-4-1998-ஆம் நாளிட்ட 114-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

15. கோயம்புத்தூர், சென்னை, மதுரை ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றங்களில் கூடுதல் உறுப்பினர்களை நியமனம் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 26-3-1998-ஆம் நாளிட்ட 7 (3D) -ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

16. புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை அங்காடிக் குழுவின் கீழ் செயல்படும் எட்டு விற்பனைக் கூடங்களை வேளாண் விளை பொருட்களின் விற்பனையை முறைப்படுத்துவதற்காக அறிவிக்கையிடப்பட்ட விற்பனைக் கூடங்களாக அறிவிப்பது குறித்து



1998 நவம்பர் 23]

வேளாண்மைத் துறையின் 28-10-1997-ஆம் நாளிட்ட 469-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

17. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 10-3-1995-ஆம் நாளிட்ட 46-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

18. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் விதிகளின் திருத்தமொன்று செய்தது குறித்து உள்துறையின் 24-8-1998-ஆம் நாளிட்ட 1158-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1988-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

19. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 10-10-1994-ஆம் நாளிட்ட 331-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

20.அனைத்து வடிவிலுமான மக்காச்சோளத்தைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், காமராஜர் மாவட்டம் ஆகிய மாவட்டங்கள் அறிவிக்கையிடப்பட்ட பகுதிகளாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 22-8-1996 ஆம் நாளிட்ட 308 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

21. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள், தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகளுக்கான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு

சட்டம் 6/1981) கீழ் இத்தாலிய தூதரகம், புதுடெல்லி மற்றும் இத்தாலிய உதவித் தூதர் அலுவலகம், சென்னை ஆகியவை ஆடம்பர வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 29-6-1998 ஆம் நாளிட்ட 192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகளுக்கு வரி விதித்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

22. 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 8-7-1998-ஆம் நாளிட்ட 122-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

23. சூரியகாந்தி விதைகள் மற்றும் பருப்புகளைப் பொறுத்தவரையில், 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, தருமபுரி மாவட்டம், அறிவிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 22-8-1996 ஆம் நாளிட்ட 307 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

24. கால்நடைகள், வெள்ளாடு மற்றும் செம்மறியாடு ஆகியவற்றின் விற்பனையைப் பொறுத்தவரையில் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள் அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 16-7-1998 ஆம் நாளிட்ட 233 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52 (4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)





25. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துல்) விதிகள் வகுப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 5-11-1997 ஆம் நாளிட்ட 268 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1997) 19 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

26. சென்னை மாநகராட்சி, கூடுதல் நலவாழ்வு அலுவலர் (சுற்றுப்புற மற்றும் துப்புரவு) அவர்களை சென்னை மாநகராட்சியின் மேல் முறையீட்டு அதிகாரியாகவும், சென்னை மாநகராட்சி, உதவி நலவாழ்வு அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சியின் உரிமம் வழங்குகின்ற அலுவலராகவும் 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1997) கீழ் நியமனம் செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 1-7-1998 ஆம் நாளிட்ட 114 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1997) 19 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

27. கால்நடைகள், எருமைகள் மற்றும் பன்றிகள் போன்றவற்றை சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சில இடங்களில் வைத்திருப்பதற்கு தடை விதித்திருப்பது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 25-8-1998 ஆம் நாளிட்ட 157 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 46/1997) 19 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

28. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்றத் தலைவர்கள் (தனியார் இல்லங்கள் பராமரிப்பு) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து பொதுத் (பணியாளர் தொகுதி-I

மற்றும் சட்டமன்றம்) துறையின் 18-9-1997 ஆம் நாளிட்ட 1151 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

29. தேங்காயைப் (மட்டை உரிக்கப்படாத, மட்டை உரிக்கப்பட்ட அல்லது கொப்பரைத் தேங்காய்) பொறுத்தவரையில் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக பெரியார் மாவட்டம் அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 16-10-1996 ஆம் நாளிட்ட 414 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

30. வடஆற்காடு மாவட்ட அங்காடிக் குழுவின் அறிக்கையிடப்பட்ட பகுதியிலிருந்து சில அறிக்கையிடப்பட்ட பகுதிகளை நீக்குவது குறித்தும், 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின்கீழ் திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் தனியாக மாவட்ட அங்காடிக் குழுக்கள் அமைக்கப்படுவது குறித்தும் வேளாண்மைத் துறையின் 15-4-1997 ஆம் நாளிட்ட 168 ஆம் எண் அரசாணை மற்றும் கடித எண் 17894/வே.வி.2/2/97-1, நாள் 12-5-1997 ஆகியவற்றில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

31. மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்ட அங்காடி குழுக்களின் கட்டுப்பாட்டிலுள்ள 20 அங்காடிகளின் அறிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளில் சில வேளாண் பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தவை முறைப்படுத்தப்படுவது குறித்து வேளாண்மைத் துறையின் 8-1-1998 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).





32. வாழைக்காய், வாழைப்பழம் ஆகியவற்றைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக ஈரோடு மாவட்டத்தை அறிவிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 11-5-1998 ஆம் நாளிட்ட 124 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

33 மாம்பழம், கொய்யா, மாதுளை, பலா, திராட்சை (கொடி முந்திரி) எலுமிச்சை வகை (சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் திராட்சை), சப்போட்டா, தர்பூசணி, பப்பாளி, வெள்ளரி ஆகியவற்றைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக கோயம்புத்தூர் மாவட்டம் அறிக்கையிடப்பட்ட ஒரு பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 11-5-1998 ஆம் நாளிட்ட 126 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

34. கால்நடைகளை விற்பனை செய்வதைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் செயல் நோக்கங்களுக்காக மதுரை, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்களை அறிக்கையிடப்பட்ட பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 4-6-1998 ஆம் நாளிட்ட 155 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனைச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4)(சி) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

35. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 20-4-1998 ஆம் நாளிட்ட 103 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

36. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 8-6-1998 ஆம் நாளிட்ட 174 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

37. 9-8-1991 முதல் 12-7-1994 வரையிலான கால அளவிற்கு நாட்குறிப்பேடுகளின் விற்பனை மீது செலுத்தத்தக்க விற்பனை வரி, மேல் வரி, கூடுதல் வரி, அபராதத் தொகை ஆகியவற்றை தள்ளுபடி செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 10-11-1997-ஆம் நாளிட்ட 504-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

38. மெஸ்சர்ஸ் ஸ்பேன் கார்ப்பரேஷன் லிமிடெட், சென்னை மெஸ்சர்ஸ் ஸ்பேன் மற்றும் கம்பெனி லிமிடெட் சென்னை, ஆகியவை 20-1-1990 முதல் 31-3-1990 வரை சிண்டெக்ஸ் வாட்டர் ஸ்டோரேஜ் டேங்குகள் விற்பனை செய்ததின்பேரில் செலுத்த வேண்டி வரி, மேல் வரி மற்றும் கூடுதல் மேல் வரி வித்தியாசத்தினை தள்ளுபடி செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 3-3-1998 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவு ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

39. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திடமற்ற சாராவி மற்றும் வார்னீஷ் (பிரெஞ்சு பாலீஷ்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 20-5-1998 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).



40. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் (இருபத்தைந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

41. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் முப்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

42. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

1. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1998).

2. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/1998).

3. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்யும் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1998).

4. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 5/1998).

5. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/1998)

6. 1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1998)

7. காஞ்சிபுரம் மாவட்டம், இருங்காட்டுக்கோட்டை, திருவாளர்கள்

ஹுண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தினர் தயாரிக்கும் வாகனங்கள் மற்றும் பாகங்கள் விற்பனை செய்வதின்பேரில் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்த வேண்டிய வரியில் ஒரு விழுக்காடு சலுகை அளிப்பது குறித்து, வணிகவரிகள் துறையின் 29-8-1998 ஆம் நாளிட்ட 255 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

8. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/1998)

9. 1993-94 ஆம் ஆண்டிற்கான மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்)

10. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (முதல் பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

11. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

12. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

13. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

14. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

15. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

V21\3\N98 N98.60-1
221798

இந்நாளைய நடவடிக்கைக் குறிப்புகள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலக நிருபர் பிரிவால் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தால் அச்சிடப்பட்டது.